
10746




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா 'உள்ளம்' அமைப்பின்

அனுசரணையுடன்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACC.NO 10746
CLASS.NO 900
DATE 3.10.2017

பொது நூலகம் உப்புவெளி

# இராவண தேசம்

திருகோணமலை மண்ணின் வரலாற்றுப் பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவண தேசம்

திருகோணமலை மண்ணின் வரலாற்றுப் பதிவுகள்

பொது நூலகம்
உப்புவெளி
10746

திருமலை நவம்

'தாகம்' பதிப்பகம்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவண தேசம்

திருகோணமலை மண்ணின் வரலாற்று பதிவுகள்

தாகம் வெளியீடு - 6

**ஆசிரியர்**

திரு.சி.நவரத்தினம் (திருமலை நவம்)

**வெளியீட்டு அனுசரணை**

உள்ளம் (கனடா)

**வெளியீடு**

தாகம் பதிப்பகம் - திருகோணமலை.

தொடர்பு - 077 433 88 78

E-Mail : w.michaelcollin@gmail.com

**வெளியீட்டு உரிமை**

தாகம்

**முதல் பதிப்பு**

ஆகஸ்ட் - 2017

**அச்சு**

வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி. மட்டக்களப்பு.

**பக்கங்கள்**

xvi + 160 = 176

**விலை : 500/-**

ISBN: 978-955-4044-00-5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்

திருகோணமலை

மண்ணுக்கும்

மக்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

## திருகோணமலையும் திருமலை நவமும்

திருகோணமலை மண்ணின் கலை இலக்கிய வரலாற்றில் 1985-1995 வரை ஒரு தசாப்த காலம் வெளிவந்த 'தாகம்' கலை இலக்கிய சஞ்சிகைக்கு தவிர்க்கவியலாத வரலாற்றுச் சாதனை உண்டு.

நாட்டின் போராட்ட சூழ்நிலைகளுக்கு மத்தியில் மனித வாழ்வே கேள்விக்குறியாகியிருந்த நாட்களில் திருகோணமலை மண்ணின் கலை இலக்கிய செயற்பாடுகள் என்பதே ஒரு கட்டத்தில் அடியோடு இல்லாதிருந்த நிலையில் 'இலக்கியம் வளர்ப்போம் இலட்சியத்தோடு' என்ற மகுட வாசகத்தினைத் தாங்கி வந்த தாகம் கலை இலக்கிய புரட்சிகர முற்போக்கு இதழ் தனக்கென ஒரு படைப்பாளி குழுமத்தினை உருவாக்கும் அளவிற்கு அது திருகோணமலை மண்ணின் கலை இலக்கிய முயற்சிகளுக்கு பாரிய பங்களிப்பை நல்கியுள்ளது.

'தாகம்' தனது இலக்கிய முயற்சிகளை அகலிக்கும் முகமாக 'தாகம் வெளியீட்டகம்' சார்பில் ஈழத்துப் படைப்பாளிகளின் நூல்களை வெளியிடும் முயற்சியிலும் வெற்றி கண்டது. அது இதுவரை வெளியிட்டிருந்த ஐந்து வெளியீடுகளில் மூன்று வெளியீடுகள் வட கிழக்கு மாகாண சாகித்ய பரிசு உட்பட, உள்ளூர், வெளியூர் மற்றும் சர்வதேச பரிசுகளையும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

வெளியீட்டு முயற்சிகளைப் போலவே அது 'தாகம் கலை இலக்கிய வட்டம்' என்ற அமைப்பின் மூலமாக இலக்கிய விழாக்களை ஏற்பாடு செய்து திருகோணமலையின் மூத்த படைப்பாளிகளை கௌரவித்து, பல இலக்கிய நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்திருந்தது.

1995 உடன் தனது செயற்பாடுகளை 'தாகம்' இடைநிறுத்திக் கொண்டது. 1985களைப் போலவே 2015களில் திருகோணமலையின் இலக்கியப் பரப்பில் ஒரு வரட்சி நிலைமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னர் சந்தித்த பள்ளித் தோழனும் தாகம் கலை இலக்கிய பண்ணையில் வளர்ந்தவனுமாகிய நண்பன் கனடா லிங்கேஸ்வரனுடன் (கடந்த வருட இறுதியில் 2015) எமது ஆசான் திருமலை நவம் அவர்களை சந்திக்கச் சென்ற வேளை, திருகோணமலை மண்ணின் கலை, இலக்கிய, சமூக செயற்பாடுகள் பற்றியும் திருகோணமலையின் இலக்கிய வளர்ச்சிக்கும் அதன் தொடர்ச்சியான இருப்புக்கும், என்ன செய்யலாம் என்ற கலந்துரையாடலில் எழுந்ததே, மீண்டும் தாகம் வெளியீட்டகத்தினை ஆரம்பித்து, அதன் மூலம் திருகோணமலையின் வரலாற்றினை ஆவணப்படுத்தும் முயற்சியினை முன்னெடுக்கலாம் என்பதாகும். இதனால் எமது அடுத்த தலைமுறைக்கு எமது மண் பற்றிய தெளிவான ஒரு பதிவை விட்டுச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையில் இந்த எண்ணத்திற்கு வித்திட்ட எமது ஆசான் திருமலை நவம் அவர்களின் நூலையே முதல் நூலாக வெளியிட முடிவெடுத்தோம்.

திருமலை நவம் திருகோணமலை மண்ணின் கலை, இலக்கியத்துறையில் மட்டுமல்ல, கல்வித் துறையிலும் மிகவும் பிரபல்யமான பெயர். ஆசிரியர் - அதிபர் என்ற தொழில்சார் சேவைகளுக்கு அப்பால் திருகோணமலை மண்ணின் கலை இலக்கிய வளர்ச்சிக்கும், ஈழத்து இலக்கியப்பரப்பில் அதன் பங்களிப்பை முன்னிறுத்தி செயற்படுவதிலும் நீண்டகாலமாக உழைத்து வருபவர்.

கவிஞர், சிறுகதையாளர், விமர்சகர், நாடக நெறியாளர், ஆய்வாளர், ஊடகவியலாளர் என பன்முக ஆளுமை கொண்ட ஒரு கலைஞராக விளங்குவதால் தான் சார்ந்த அத்தனை துறையிலும் தனது தேடலை விசாலித்துள்ளார். முப்பது வருடகால ஆய்வின் மூலம் திருகோணமலை மண்ணின் கலை இலக்கியம் தொடர்பான நூலை வெளியிட்ட திருமலை நவத்தின் இரண்டாவது ஆய்வுநூல் இதுவாகும்.

வரலாற்றைப் பேசுதலில், ஒருவகையினதான தொன்மங்களுக்கூடாக பயணித்தல், புராண இதிகாசங்களுக்கூடாக வரலாற்றை பதிதல் என்ற நிலைகளுடன் சேர்த்து வரலாற்று தகவல்களையும் ஆதார - பூர்வமாக கொண்டு இவ்வாய்வைச் செய்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமனே ஆலயங்கள் என்பவை வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல. அவை ஒரு இனத்தின் வரலாற்றை தம்முள் புதைத்து வைத்திருப்பவை. இன்று ஆலயங்களின் சிதைவுகளே எம் தமிழ் இனத்தின் அடையாளங்களை நிரூபித்துக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில் திருகோணமலையின் புகழ்மிக்க மூன்று ஆலயங்களின் சிதைவுகளுக்குள்ளால் எம் தமிழ் இனத்தின் இருப்பை நிலைநிறுத்த முயற்சிக்கிறார் ஆய்வாளர்.

இந்த ஆய்வு நூலை எல்லோராலும் எழுதிவிட முடியாது. இது முழுக்க முழுக்க இந்த மண்ணின் மணத்தையே இரத்தமும் சதையுமாக ஏன் உயிர் மூச்சாகவும் கொண்ட ஒருவரால்தான் முடியும். அந்த வகையில், தன் பெயரோடு மண்ணின் பெயரையும் இணைத்துக் கொண்ட ஓர் உன்னத படைப்பாளி திருமலை நவத்தால் மட்டுமே இது முடிந்திருக்கிறது.

வருடத்திற்கு இரண்டு வெளியீடுகள் என்ற ரீதியில் 'தாகம்' தன் பணியை மீண்டும் தொடங்கியுள்ளது. தாகம் முற்றுமுழுதாக திருகோணமலை படைப்பாளிகளின், அதுவும் வரலாறு தொடர்பான நூல் வெளியீடுகளுக்கே முன்னுரிமை அளிக்கும். புனைவு சாரா, வரலாற்று ஆய்வுகளை தம் கைவசம் வைத்திருப்பவர்கள் தாகத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

இருபத்து இரண்டு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் திருகோணமலை மண்ணின் இலக்கிய வெளிக்கு வந்துள்ளோம். இனிவரும் காலங்களில் இந்த மண்ணுடன் நாம் கைகோர்த்து நிற்போம் என்பது உண்மை.

**தாகம் வி.மைக்கல் கொலின்**
(ஆசிரியர் தாகம் – மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வரலாற்றுப் பெருமையும் புராணப்புகழும் கொண்ட திருக்கோணேஷ்வரம் மற்றும் அதே பெருமை கொண்ட கன்னியா வெந்நீருற்று, கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம் ஆகிய திருகோணமலையின் தொன்மை சார்ந்த அடையாளங்கள் பற்றிய மூன்று கட்டுரைகள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. இவை மூன்றும் தனித்தனி கட்டுரையாக அமைந்திருப்பினும் அதன் வரலாற்றுப் பின்புலத்தில் மூன்றுக்கும் தவிர்க்கவியலாத ஒரு ஒற்றுமை உண்டு. திருகோணமலை மண்ணின் வரலாற்றுடன் இவை பின்னிப் பிணைந்தவை. இராவணதேசத்து எச்சங்கள் இவை.

இதில் திருக்கோணேஷ்வரம் பற்றிய கட்டுரையை நான் எழுதுவதற்கு மூலகர்த்தாவாக இருந்தவர் என் மதிப்புக்குரிய பேராசிரியர் இராமகிருஷ்ணன். திருகோணமலைக்கு அடிக்கடி வருகைதரும் பேராசிரியர் அவர்கள் தனது அந்திம காலத்தை திருகோணமலையில் கழிக்கவேண்டுமென ஆசைகொண்டிருந்தார். ஆனால் அவருடைய உடல் அவுஸ்திரேலிய மண்ணுக்கு உரமாகிவிட்டது. அவ்வாறு வந்த ஒருவேளையில்தான் என்னிடம் ஒரு கருத்தைத் தெரிவித்தார். "திருக்கோணேஷ்வரத்தின் வரலாற்றுப் பெருமையை நவீன வடிவில் காணொளியில் பதிவுசெய்து ஆவணப்படுத்த வேண்டும். அதற்குரிய பிரதியை தயாரித்துத் தா. நாம் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து புலம் பெயர்ந்தவர்களுடைய உதவியைப்பெற்று காணொளியைத் தயாரிப்போம்" எனக் கூறினார்.இதில் இன்னொருவிடயத்தையும் அவர் என்னிடம் வலியுறுத்திக் கூறினார். கோணேஸ்வரத்தின் தொடர் வரலாறு கோர்க்கப்பட்டிருக்க வேண்டும். சாதாரண ஒரு மனிதனுக்கும் புரியும்படி அது தயாரிக்கப்பட வேண்டுமென ஆலோசனை நல்கினார். அவர் அடியெடுத்துக் கொடுத்ததன் காரணமாகவே இக்கட்டுரையை யான் வீரகேசரி நாளிதழில் தொடர் கட்டுரையாக எழுதினேன். துர்ப்பாக்கிய வசமாக பேராசிரியருடைய மரணம் எனது முயற்சியை கைகூட வைக்க வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட பிறிதொரு சூழ்நிலையில் எழுதப்பட்டதுதான் கன்னியா வெந்நீருற்றுக்கட்டுரை.

வன்னிப் போரின் பின் திருகோணமலையின் தொன்மைசார் அடையாளங்கள் அழிக்கப்பட்டன. இது காலாகாலமாக நடைபெற்று வந்தாலும் கன்னியா வெந்நீருற்று எனும் தொன்மைக்கு அரச அதிகாரத்தைப் பாவித்து இழைக்கப்பட்ட கெடுதி தமிழ் மக்களின் பாரம்பரியங்களுக்கு அடிக்கப்பட்ட சாவுமணி. 2010ம் ஆண்டு மாவட்டத்தின் உயர் அரச அதிகாரியொருவர் தனது அதிகாரத்தையும் படைபல செல்வாக்கையும் கொண்டு கன்னியாவை கையகப்படுத்தியது மாத்திர மன்றி, அதன் பூர்வீகமான அடையாளங்களையும் சின்னாபின்னப்படுத்தி 60 வருடங்களுக்கு மேலாக உப்புவெளி பிரதேச சபையினால் பராமரிக்கப் பட்டு வந்த கன்னியா வெந்நீருற்றின் நிர்வாகத்தை தொல்பொருள் திணைக்களத்திடம் கையளித்ததுடன் அப்பிரதேசத்தை சிங்கள மயப்படுத்தும் எல்லா அட்டூழியங்களையும் செய்தார். இதற்கு சில தமிழ் அதிகாரிகளும் உடந்தையாக இருந்தார்கள் என்பது பச்சைத்தனமான உண்மை.

இக்கொடுமைகளை தாங்க முடியாத நிலையில்தான் கன்னியா பற்றிய புராண இதிகாச சான்றுகளுக்கப்பால் வரலாற்று ஆதாரங்களைத் தேடி அலைந்தேன். பலர் உதவாவிட்டாலும் உப்புவெளி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் விஜேந்திரன், செயலாளர் திருமதி மாலினி, மடத்தடி மாரியம்மன் ஆலய அறங்காவலர் இரத்தினம்மாவின் மகள் மற்றும் முன்னாள் உப்புவெளி பிரதேச சபையின் செயலாளராக கடமையாற்றிய ஸ்ரீ ஆகியோர் பல ஆதாரங்களைத் தந்துதவியதுடன் திருகோணமலை பொது நூல் நிலைய ஆதாரங்களும் என் ஆய்வுக்கு பெரிதளவு உதவின. இதனை ஞாயிறு வீரகேசரியில் ஆர்வத்துடன் பிரசுரித்து உதவியவர் என் அன்புக்குரிய வீரகேசரி வாரவெளியீட்டு பிரதம ஆசிரியர் ஆர்.பிரபாகரன். இக்கட்டுரை கோணேஷ்வரம் மலர் இரண்டாவது பதிப்பில் இடம்பெற உதவியவர் என் அன்புக்குரிய அண்ணன் க.அருள்சுப்பிரமணியம்.

கங்குவேலி அகத்தியர் ஸ்தாபன கட்டுரை ஒரு விபத்தைப்போல் எழுதப்பட்டதாகும். டாக்டர் ஹேமச்சந்திராவின் மகன் அருணிடமிருந்து எனக்கொரு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. நானும் திருகோண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை அரசாங்க அதிபர் ரியல் அட்மிரல் ரி. ரி.ஆர்.டி சில்வாவும் மூதறிஞர் மூர்த்தி ஐயாவும் இன்று அகத்தியர் ஸ்தாபனத்துக்குப் போகிறோம் நீங்கள் அப்பயணத்தில் கட்டாயம் கலந்துகொள்ளவேண்டுமென்ற கட்டாய அழைப்பொன்றை விட்டிருந்தார்.

மூதூருக்கோ அதன் அயல்கிராமங்களுக்கோ செல்ல முடியாத கெடுபிடிகள் சூழ்ந்திருந்த காலம். புராணப் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட அகத்தியர் ஸ்தாபனத்தின் தொன்மைசான்ற சின்னங்கள் விஷமிகளால் அழிக்கப்பட்டிருந்தன. அயல் கிராமத்தைச் சேர்ந்த வேற்றுமத குருமாரால் பழமைவாய்ந்த ஸ்ரீ சின்னங்கள் திருடப்பட்டு விகாரைகளுக்கு வரலாற்று சின்னங்கள் ஆக்கப்பட்டுள்ளன என்ற தகவல்களும் அக்கிராமத்தவரால் எமக்கு தெரிவிக்கப்பட்டன.

இதில் ஆச்சரியப்படக்கூடிய விடயம் என்னவென்றால் இவ்வால -யத்தைப் பார்த்தவுடன் ஆச்சரியமடைந்த அரச அதிபர் மூல விக்கிரகம் இருந்த இடத்தை கண்டுபிடித்தது மாத்திரமல்ல, "இவ்வாலயத்தைப் புனரமைக்க நிதி ஒதுக்கித்தருவேன், மக்கள் தரிசிக்கும் இடமாக இது மாறவேண்டும். என்ன தடைவந்தாலும் என்னிடம் கூறுங்கள் கோயிலை புனரமைத்து கும்பாபிஷேகம் செய்யுங்கள்" என வழிமொழிந்தவர் அரச அதிபர். இந்தவார்த்தையின் ரிஷிமூலகர்த்தாவாக இருந்தவர் மூதறிஞர் மூர்த்தி ஐயாவாகும். அரசியல் மாற்றங்கள் நிலமைகளை மாறவைத்தன.

இச்சம்பவத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட கட்டுரைதான் அகத்தியர் ஸ்தாபனக் கட்டுரை. ஊறுகாய் போடப்பட்டிருந்த இக் கட்டுரைகளை நூல் வடிவமாக்கும் பொருளாதார பலம் என்னிடம் இல்லாத நிலையில் சுமார் 30 வருடங்களுக்குப் பிறகு என்னைக் காணவந்த என்னுடைய மாணவன் கனடாவைச்சேர்ந்த S.லிங்கேஷ்வரன் குருதட்சனையாக நல்கிய உதவியே இந்நூல் வெளிவரக் காரணம் என்பதை பெருமையுடன் கூறக் கடமைப்பட்டவன் யான். எல்லாவற்றுக்கும் மேலாக இந்நூல் வெளிவர எல்லாவகையிலும் பின்புலமாகவிருந்தவர் என் மானசீகமான மாணவனும் 'தாகம்' மற்றும் 'மகுடம்' சஞ்சிகைகளின் ஆசிரியருமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் மைக்கல் கொலின். என் மாணவர் இருவரது உதவியும் காலம் காலமாக நினைவுகொள்ளப்படவேண்டியது.

கட்டுரைகளை வெளியிட்டுதவிய வீரகேசரி ஆசிரியர்களான ஆர்.பிரபாகரன், ஸ்ரீகஜன் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் என்றும் நன்றி கொண்டவனாக இந்நூலை மிக அழகிய வடிவில் வெளியிடுவதன் மூலம் மீண்டும் திருகோணமலை மண்ணின் இலக்கிய விடியலுக்கு பூபாளம் பாடப்போகும் தாகம் பதிப்பகத்திற்கும் எனது நன்றிகள்.


**திருமலை நவம்**
301/18, விகாரை வீதி,
திருக்கோணமலை
05.05.2016
தொ.பேசி : 0773674875




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


திருக்கோணேஸ்வரம் 01



கன்னியா வெந்நீரூற்றுக்கள் 79



கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம் 145





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம்




செந்திருப் பொலி மேருவின்
சிகரத்தின் ஒன்றை
வந்து எடுத்து உவந்து
ஈழத்தின் உய்த்திட வயங்கு
முந்து சீர்த் திரிகோண
மாமலை முழு முதலைச்
சிந்தை செய்திடில்
செப்பிய யாவையும் சயமே
(திரிகோணாசல புராணம்)

**கோ**ணேஸ்வரம் என்னும் புகழ்பூத்த ஆலயத்தினைச் சுற்றியே திருகோணமலையின் பண்பாடு, இலக்கியம், கலை, வரலாறு என்பன பின்னப்பட்டுள்ளன என்பதனை இதிகாசங்களும், புராணங்களும், கர்ண பரம்பரைக் கதைகளும் ஆய்வுகளும், வரலாறுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

பொதுவாகவே ஒரு பிரதேசம் அல்லது நாட்டின் வரலாறு அங்கு அதிகாரம் செலுத்திய மன்னர்கள் வழிபட்டதாகவோ அல்லது ஆட்சியாளர் நெறிப்பட்டதாகவோ காணப்படும். இதுவே உலக வரலாறுகளும் இலக்கியச் சான்றுகளும் எமக்கு கற்பிக்கும் பாடம். ஆனால் இந்த வழக்கத்துக்கு மாறுபட்ட முறையில் திருகோணமலையின் வரலாறும் வாழ்க்கை முறைகளும் மரபுகளும் விழுமியங்களும் கோணேஸ்வரம் என்னும் ஆலயத்தின் பின்னணியில் சொல்லப்பட்டதும் சொல்லப்படுவதும் ஆச்சரியந் தருகின்ற விடயமாகும்.

இத்தகைய பெருமைமிகு ஆலயம் அமைந்திருக்கும் திருகோணமலை பற்றி முதலில் தெரிந்துகொள்வது இவ்வாலயத்தின் வரலாற்று முக்கியத்து - வத்தை அறிய உதவியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய துணைக்கண்டத்துக்கு மிகவும் அண்மையிலும் இந்து சமுத்திரத்தின் நடுநாயகமாகவும் ஈழம் விளங்கி வந்ததாலே திருமலை சிறந்த அரணாக பன்னெடுங்காலமாக விளங்குகிறது.

வரலாற்றுக்கு முந்திய காலம் என்று கூறப்படுகின்ற கிறிஸ்துவுக்கு முன்பே புகழ்பெற்ற ஒரு நகரமாக திருமலை விளங்கியுள்ளதை புராணங்களும் இதிகாசங்களும் மாத்திரமல்ல ஈழத்து வரலாறும் திருமலை -யுடன் தொடர்புபட்ட மேலைத்தேய வரலாறுகளும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.



இராவணன்வெட்டு



தலவிருட்ஷம்

திருகோணமலை என்பது தெய்வீகத்தன்மை வாய்ந்தது என்று பொருள்படும். இதற்கு கோகண்ணம், கோகர்ணம், திரிகோணமலை, திருக்குன்றாமலை, திருக்கோணமலை, கோணமலை, மச்சேந்திரபர்வதம், மச்சேஸ்வரம், தெக்கண கைலாசம், தென்கைலாசம் எனப் பல பெயர்கள் வழங்கி வந்தாலும், குறிப்பாக 12 ஆம் நூற்றாண்டில் இருந்து திருக்கோணமலை என்ற பெயரே நிலைபெற்று வந்திருக்கிறது.

மூன்று மலைகள் கொண்டு முக்கோண வடிவில் அமைந்திருப்பதனால் திரிகோணமலை என்ற பெயர் வந்தது என்றும் கூறப்படுகின்றது. ஒருபுறம் கடலும் மற்றைய மூன்று பக்கங்களிலும் மலைகள் சூழ்ந்திருப்பதால் திரிகோணமலை எனப்பட்டது. இம் மலைத்தொடரானது கோணேசர்மலை, கந்தசாமிமலை, வெள்ளாட்டிமலை, மத்தளமலை, பாதாள மலை, புறாமலை, களனிமலை முதலிய மலைகளால் தொடுக்கப்பட்டிருக்கின்றது. கோணேசர் மலையானது முக்கோண வடிவில் கடலினுள் நீண்டு கிடப்பதால் சிறப்புப் பெயரால் இது திரிகோணமலை எனப்பட்டது என்பர். திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகமும், மொஹஞ்சதாரோ நாகரிகமும் ஏறக்குறைய ஒரே காலத்தவை என திருகோணமலை திருவுருவங்கள் என்ற நூலில் குலசபாநாதன் (பக் 9-10) குறிப்பிட்டுள்ளார்.


இன்றைய ஆலயத்தின் முன்பக்கத் தோற்றம்

மஹாவம்சத்தில் உள்ளபடி இதன்பூர்வீக நாமம் கோகர்ணம் என இருந்தபோதும் இலங்கை வரலாற்று ஆசிரியர் பி.ஜி. பெரேரா திருகோணமலை என்ற பெயரின் தோற்றத்தை பின்வருமாறு விளக்குகின்றார். *"The Name Trincomalee Consist of Three different Words Tirumalai in Tamil Meaning Holy and Hill Respectively and Kona is non other than Tamil Rendering of the Sinhalese (Vol 1 No 2 1952)*

திருகோணமலையின் புகழ்பாடும் தொன்மையான புராணங்களில் காலத்தால் முந்தியது தட்ஷண கைலாசபுராணமும் திருக்கோணாசல புராணமும் ஆகும். இவ்விரு புராணங்களிலும் கூறப்படும் கர்ண பரம்பரைக் கதையில் உள்ளபடி கி.மு. ஆறாயிரம் ஆண்டளவில் இலங்கையை இராவணேஸ்வரன் என்று அழைக்கப்படும் இலங்காநேசன் ஆண்டான் என இவ்விரு புராணங்களும் கூறுவதோடு இராவணன் வழிபட்ட தலம் கோணேஸ்வரம் என குறிப்பிடுகின்றது. இதனை இராமாயண காவியம் இராவணன் தனது தாயாரின் வழிபாட்டுக்காக இலிங்கத்தை பெறுவதற்கு இங்கு தவம் செய்தான் என்று கூறுகின்ற கர்ண பரம்பரைக் கதை மூலம் இது மிகப் பழமை வாய்ந்த ஆலயம் என அறிய முடிகின்றது.

பண்டைய காலத்திலேயே தமிழர்கள் குடியேறிய ஒரு பிரதேசம் என இது புகழப்படுகின்றது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் விஜயன் ஈழ நாட்டிற்கு வருவதற்கு முன்னர் இங்கு சைவம் செழிப்புற்றிருந்தது என்பதை வல் பொல ராகுல என்பவர் எழுதிய 'இலங்கையின் பௌத்த வரலாறு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பக்கம் 44 மூலம்) அறியலாம். இந்நகர் ஈழநாட்டில் தமிழர்கள் ஆதியில் குடியேறிய முதன்மையான இடங்களில் ஒன்றாகும். *(The Town was one of the first Tamil Settelements in Ceylon Encyclopaedia Britan ic vol 22 Pg 477)*

பாண்டு வாசுதேவன் என்பவன் இந்தியாவிலிருந்து உடன் சுற்றத்துடன் (32 பேருடன்) கோகர்ணம் என்ற துறைமுகத்தில் இறங்கியதாக மகாவம்சம் கூறுகின்றது. மகாவம்சத்தின்படி கோகர்ணம் என்ற துறைமுகம் மகா சுந்தர ஆறு கடலுடன் கலக்கும் இடத்தில் அமைந்திருக்கிறது. இதுவே திருமலைத் துறைமுகம் என்று கூறப்பட்டுள்ளது. வரலாற்று ரீதியாக நோக்கின் கி.மு. 1236 ஆம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றிய வீரபாண்டியன் என்ற மன்னன் திருகோணமலையிலுள்ள கோணேசர் கோவிலில் மீன் இலட்சினையை பொறித்துச் சென்றதாக வரலாறு கூறுகின்றது.

மகாசேனன் என்ற மன்னன் கி.பி. (276-303) ஆட்சி செய்த காலத்தில் கிழக்குக்கரையில் இந்துமத வழிபாடு கூடியளவு இருந்த காரணத்தினால் கோகர்ணம் என்ற விகாரையை இடித்து அதற்கருகில் பௌத்த விகாரையைக் கட்டினான் என்று மஹாவம்சம் தரும் தகவலுக்கு இணங்க திருகோணமலையில் பிராமணக் கடவுளுக்கான கோவில் ஒன்று மகாசேனனால் இடிக்கப்பட்டதென தெரிய வருகின்றது.

மஹாவம்சத்தின் மீது எழுதப்பட்ட உரை நூலான மகாவங்ஸதீக இதுபற்றிக் குறிப்பிடுகையில், "மகாசேனனால் இடிக்கப்பட்ட கோவில்களுள் ஒன்று திருகோணமலையிலிருந்த சிவலிங்க கோவில் ஆகும்" எனக் குறிப்பிடப்படுகிறது. இதனை *GP Malala Sekara* தான் பதிப்பித்த *Vamsatthappakasini Commentary on the Mahavamsa* என்ற நூலில் *(PTs Vol II London 1935* பக்கம் 685 இல்*)* குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் திருகோணமலை புகழ்பெற்ற பிரதேசமாக இருந்திருக்கிறது என்பதை ஞானசம்பந்தர் பாடிய பின்வரும் பதிகம் மூலம் அறியலாம்.

**நிரைகழலரவஞ்சிலம் பொலியலம்பு நிமலர் நீறணி திருமேனி**
**வரைகெழுமகளோர் பாகமாய்ப்புணர்ந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடிவினர்கொடியணிவிடையர்**


**கரைகெழுசந்துங் காரகிற்பிளவும்**

**அளப்பருங்கனமணிவரன்றிக்**

**குரைகடலோதநித்திலங் கொழிக்கும்**

**கோணமாமலையமர்ந்தாரே**

ஞானசம்பந்தர் பாடுவதற்கு முன்பே வாயுபுராணத்தில் (கி.பி. 4-5 நூற்றாண்டு) இலங்கைத் தீவின் கிழக்குக் கரையில் மலயதீவு என்ற ஒரு தீவு உண்டு. அத்தீவில் குன்று ஒன்று உண்டு. இக்குன்றில் விலை உயர்ந்த கற்கள், பொன் சந்தனம் கடல்படு திரவியங்கள் இருக்கின்றன. இங்கு மிலேச்சர்கள் எனப்பட் -டோர் வாழ்கின்றனர். பல ஆறுகளும் கடலும் கொண்ட இக்குன்று மகாமலய எனவும் அழைக்கப்படுகின்றது.



கந்தளாய் சிவன் ஆலயத்தில் சோழர்கால கல்வெட்டு

இரண்டாவது மலை மந்திரமலை என அழைக்கப்படுகிறது. இம் மலையில் பழங்கள், பூக்கள் கிடக்கின்றன. தேவர்களும் அசுரர்களும் வழிபடுகின்ற அகஸ்தியருக்கான இடமும் காஞ்சனபாத என்ற ஆச்சிரமமும் உண்டு. மூன்றாவது மலை திரிகூடமலை என்றழைக்கப்படுகின்றது. இம்மலை கவர்ச்சியான குகைகளையும் உச்சியையும் கொண்டது. அதன் உச்சியில் பெரிய கட்டடங்களுடன் கூடிய எப்போதும் செழிப்பாக இருக்கும் லங்கா நகர் இருக்கின்றது. இந் நகரின் அளவு 100 யோசனை x *30* யோசனையாகும். இதில் பொன்னால் ஆன வாசல்கள் பாதுகாப்பு அரண்கள் , அரண்மனைகள், வசிப்பிடங்கள், கிராமங்கள் என்பன நிறைய உள்ளன.

இந்நகர் சாதாரண மனிதருக்கு உரியதல்ல. இத்தீவின் கிழக்குக் கரையில் கோகர்ணம் என்னும் பெயர் கொண்ட சங்கரருக்கான பெரிய கோவில் இருக்கிறது. எனவே, வாயுபுராணம் தரும் மலயதீவு கூறும் கோகர்ணம் உள்ள ஊர் திருகோணமலை என்று கூறப்படுகின்றது. இக்கருத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஈழத்து இந்து சமய வரலாறு பக்கம் (153 இல்) பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றார். இலங்கையின் கிழக்குக் கரையிலுள்ள கோணேஸ்வரர் கோவிலுடன் அடையாளங் காணலாம் என்பது பொருத்தமாகத் தோன்றுகிறது. பேராசிரியர் சிற்றம்பலத்தின் கருத்துப்படி இவ்விபரங்கள் இலங்கையிலுள்ள இலங்கை பற்றிய மரபு வழியான வர்ணனைகளை பெரிதும் ஒத்திருப்பதால் வாயு புராணத்திலே குறிப்பிடப்பட்டுள்ள பெரும் சிவாலயம் இலங்கையிலுள்ள கோணேஸ்வரம் என்று கொள்வது எல்லா வகையிலும் பொருந்துமென பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். (இலங்கை இந்து கலாசாரம் பக்கம் 32) இவ்வாறு புராணங்களும் இதிகாசங்களும் கர்ண பரம்பரைக் கதைகளும் கூறுகின்ற செய்திகளை வரலாறு ஏற்றுக்கொள்ளுமா? என்று வினாவுகிறவர்களுக்குச் சொல்லக்கூடிய பதில், கர்ண பரம்பரைக் கதைகளைக் கொண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் வரலாற்று நூல்களான மஹாவம்சத்தையும், சூளவம்சத்தையும் ஏற்றுக்கொள்ளும் வரலாற்று ஆசிரியர்கள் இதை ஏற்றுக்கொள்வதில் இடர்பாடு இருக்க முடியாது.

வரலாற்றுக்கால திருகோணமலையை நாம் நோக்குவோமாயின், பல்லவர் காலத்தில் இலங்கையின் வேறெந்தப் பகுதியிலும் இல்லாத அளவிற்கு திருகோணமலைப் பகுதியில் கல்வெட்டுக்கள் கூடுதலாகக் காணப்பட்டது என கலாநிதி செ.குணசிங்கம் (கோணேஸ்வரம் பக்கம் 70) இல் குறிப்பிட்டுள்ளார்.

சோழர் ஆட்சிக் காலமான (கி.பி. 10-12) முன் திருகோணமலை பற்றி அறியக்கிடந்த ஆதாரங்களை விட கூடுதலான ஆதாரங்கள் சோழர் காலத்தில் கிடைத்துள்ளன. இதற்கு ஆதாரமாக,

- பெரியகுளக் கல்வெட்டு
- மாங்கனாய்க் கல்வெட்டு
- பளமோட்டைக் கல்வெட்டு
- கந்தளாய்க் கல்வெட்டு
- நிஷங்கமல்லனின் கந்தளாய்க் கல்வெட்டு
- திருகோணமலை சமஸ்கிருத கல்வெட்டு

**மற்றும்,**

- 1ம் ராஜராஜனுக்குரிய கல்வெட்டு மானாங்கேணி வில்பபத்திரர் கோவில் கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பத்திரகாளி அம்மன் கோவில் கல்வெட்டு
- விஸ்வநாத சிவன்கோவில் கல்வெட்டு
- கந்தளாய் சிவன்கோவில் கல்வெட்டு
- நிலாவெளி பிள்ளையார் கல்வெட்டு
- மாரியம்மன் கோவில் கல்வெட்டு
- வில்லூன்றி கந்தசாமி கோவில் கல்வெட்டு
- தம்பலகமம் ஐயனார் திடல் கல்வெட்டு
- கிளிவெட்டிக் கல்வெட்டு


இலங்கையின் கூடியளவு சோழர் காலக் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்ட மாவட்டம் திருகோணமலை என கலாநிதி செ.குணசிங்கம் குறிப்பிட்டுள்ளார். (கோணேஸ்வரம் பக். 82)

சோழர் பொலநறுவையை தமது தலை நகராகக் கொண்டு ஆண்டபோதிலும் அவர்கள் தமது தலைமைத்தளமாக திருகோணமலை மாவட்டத்தையே கொண்டிருந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக வில்பபத்திரர் கோவில் கல்வெட்டும், கந்தளாய் சிவன் கோவில் கல்வெட்டும் சான்று பகர்கின்றன. (செ.குணசிங்கம் கோணேஸ்வரர் பக்கம் 83)


16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் கீழைத்தேசங்களில் வர்த்தகம்



சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கந்தளாய் சிவன்கோவில்



மின்சார நிலைய வீதியிலுள்ள வெள்ளை வில்வ பத்திரர் கோவில்



மின்சார நிலைய வீதியிலுள்ள வெள்ளை வில்வ பத்திரர் கோவில் கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மின்சார நிலைய வீதியிலுள்ள வெள்ளை வில்வ பத்திரர் கோவிலில் உள்ள சிதைக்கப்பட்ட சின்னம்



1840 ஆம் ஆண்டு பிரசித்தி பெற்றிருந்த திருகோணமலைத் துறைமுகம்

செய்த ஐரோப்பியக் கப்பலோட்டி - கள் வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றினின்று புகலிடம் பெறுவதற்கு திருகோணமலை மிகவும் வாய்ப் - பான இடத்தில் அமைந்திருப்பதை நன்கு உணர்ந்திருந்தனர். இக் காரணத்தினாலேயே போர்த்துக் - கீசர் (1505), ஒல்லாந்தர் (1639), பிரான்சியர், ஆங்கிலேயர் எனும் வல்லரசுகள், திருகோணமலை துறைமுகத்தைக் கைப்பற்றினர்.

1959 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி *Ann* என்னும் ஆங்கிலக் கப்பலின் தளபதி றொபட் நொக்ஸும் அவனது மகனும் திருமலையில் வந்து இறங்கினார்கள். றொபேட் 18 ஆம் நூற்றாண்டில் இலங்கை பற்றி எழுதிய நூல் இங்கிலாந்தில் பிரபல்யம் பெற்றது. *(Robert Knox - An Historical Relation of the Island of Ceylon 1681)* ஜேம்ஸ் கோடினர் என்ற வரலாற்று ஆசிரியர் *James cordiner - A - Description on Ceylon)* தான் எழுதிய நூலில் திருகோணமலை பற்றிக் குறிப்பிடுகையில்,


"எமது இந்திய வியாபாரத்தைப் பாதுகாப்பதற்கு திருகோணமலைத் துறைமுகம் ஒன்று மாத்திரமே இலங்கைத் தீவில் முக்கியத்துவம் வாய்ந்ததை நன்கு உணர்த்துகின்றது. எல்லாக் காலங்களிலும் உள்வெளிச் செல்வதற்கு இலகுவான வசதிகளை உடைய திருமலைத் துறைமுகம் இந்தியாவில் உள்ள எமது எந்தப் கப்பல் தளத்திலும் பார்க்க கீழைத்தேசக் கடற்படையின் பொருட்சாலையாகவும் தங்கு நிலையமாகவும் இடம்பெற மிகவும் வாய்ப்பான அமைப்புக்களை கொண்ட மத்திய கேந்திர நிலையமாக உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் இங்கிலாந்தின் பிரதமராக இருந்த வில்லியம் பிற் *(William Pitt)* **"திருகோணமலையே உலகத்தின் அதி சிறந்த குடியேற்ற உடமை"** என வர்ணித்துள்ளார். 17 ஆம் நூற்றாண்டுக்குரியவரான போர்த்துக்கீச பாதிரியார் குவைறோஸ் திருகோணமலை பற்றிக் குறிப்பிடுகை - யில் **"கீழைத் தேசத்திலுள்ள கிறிஸ்தவர் அல்லாத மக்களின் உரோமாபுரி, திருகோணமலை"** என வர்ணித்துள்ளார்.

இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதன் பின் இங்கிலாந்தில் நடந்த ஓர் விருந்து உபசாரத்தில் பிரித்தானியப் பிரதமர் வின்சன் சேர்ஷிலிடம் பத்திரிகையாளர்கள் "நீங்கள் இரண்டாம் உலகப் போரில் சந்தித்த பயங்கர அனுபவம் என்னவென வினவியபோது அவர் அளித்த பதில் "ஜப்பான் விமானங்களின் திருகோணமலைத் தாக்குதல்" எனப் பதிலளித்தார். இவ்வாறு வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு இன்றுவரை புகழ்பெற்று விளங்கும் திருகோணமலை மகாவலி கங்கை வளம் பெருக்கும் கொட்டியாரப்பற்று தெற்கே, செந் நெல்லும் செழுங்கனியும் தீம்பாலும், தர குளக்கோட்டன் குளம் நீர்ப்பாய்ச்சும் வளம் நிறைந்த தம்பலகமம் மேற்கு ஈன்ற தாய்க்கு ஈமக் கடன் செய்யும் இலங்காநேசன் தொட்ட வெந்நீர்க் கிணறு கன்னியா, வடமேற்கே உப்பு விளையும் நிலாவெளி, வடக்கே முத்து விளையும் கிண்ணியா தென்மேற்கே செழுங்கடல் தரளமும் சிப்பியும் கொழிக்கும் திரைகடல் கிழக்கே நீலத்திரைக்கடல் நெடுங்கடல ஓடும் பரதவர் தமக்கு வரும் வழிகாட்டும் (கூனித் தீவு கலங்கரை விளக்கம்) சற்றும் எட்ட நின்று பார்க்கையில் வடக்கே முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களையும் மேற்கே அனுராதபுரம் மாவட்டத்தையும் தெற்கே மட்டக்களப்பு மாவட்டத்தையும் கிழக்கே வங்காள விரிகுடாவையும் அரவணைத்த பிரதேசம் திருகோணமலை.


ஆங்கிலேயர் கால திருகோணமலை கச்சேரி

பதினொரு பிரதேச செயலகப் பிரிவைக் கொண்டு 2030 சதுரமைல் பரப்பும் கொக்கிளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் வெருகல் வரை 50 மைல் சுமார் பிரதேசத்தையும் கொண்ட மொத்த நிலப்பரப்பு 588 000 ஏக்கராகும். 230 கிராம சேவையாளர் பிரிவு கொண்டு விவசாய நிலம் 42.7 வீதத்தையும் ஈரலிப்பு நிலம் 5.8 வீதத்தையும் திறந்த நிலம் 12.3 வீதத்தையும் கொண்டு 24 7550 ஹெக்டர் நிலப்பரப்புக் கொண்ட திருகோணமலை மாவட்டம் 427 கிராமங்களைக் கொண்ட 33 வட்டாரங்களை உள்ளடக்கியது.

விவசாய, மீன்பிடி மற்றும் குடிசைத் தொழில்களான சட்டிபானை வனைதல், பிரம்பு பின்னல் என நானாவித தொழில்களை தமது ஜீவனோபாயமாகக் கொண்ட இந்த மாவட்டத்தில் தமிழர், முஸ்லிம், சிங்களவர், மலாயர், பறங்கியர், இந்தியத் தமிழர் என பல்வேறு பிரஜைகள் வாழும் பிரதேசமிது.

இந்த மாவட்டத்தின் சனத்தொகை கணக்கெடுப்பு 1827 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டபோது இனரீதியான பரம்பல் பின்வருமாறு இருந்தது.

| ஆண்டு | மொத்தம் | தமிழ் | முஸ்லிம் | சிங்களம் |
|---|---|---|---|---|
| 1827 | 46641 | 34758 | 11533 | 250 |
| 1846 | 279112 | 136059 | 109024 | 27556 |
| 1971 | 717571 | 315560 | 248567 | 148572 |
| 1981 | 976475 | 411451 | 315121 | 243358 |
| 2010 | 440872 | 144613 | 184529 | 110679 |

2007 ஆம் ஆண்டின் அரச உத்தியோகபூர்வ கணக்கெடுப்பின்படி, தமிழர்கள் 40.39%, முஸ்லிம் 37.64%, சிங்களவர் 21.64%.

**2008 தேர்தல் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை**
**தேர்தல் தொகுதி ரீதியாக**

| திருமலை | மூதூர் | சேருவில |
|---|---|---|
| 86685 | 85410 | 69047 |

இதில், திருகோணமலை தமிழர்கள் செறிந்து வாழும் இடமாகவும், மூதூர் முஸ்லிம்கங்களும், தமிழர்களும் செறிந்து வாழும் இடமாகவும், சேருவில சிங்களவர்கள் செறிந்து வாழும் இடமாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு வரலாற்றுப் பின்னணி கொண்ட திருகோணமலை பிரதேசத்தில் தொன்மை மிகு காலந்தொடக்கம் இந்து மதத்தை பின்பற்றுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அதன் தலைமைப்பீடமாக கோணேஸ்வரம் எனும் உலகப் புகழ்பெற்ற ஆலயத்தைச் சுற்றியே இப்பிரதேசத்தின் வரலாறு பின்னப்பட்டிருக்கின்றது.

7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தர் கோயிலும், சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை என்றும், தெக்காரும் மாகோணத்தானே என நாவுக்கரசரும், மாகோணத்தானே என்று சுந்தரரும், ஈழந்தண்ணில் மண்ணு திருகோணமலை என சேக்கிழாரும், திருகோணமலை தலத்தாரு கோபுரம் என அருணகிரிநாதரும், தென்கையிலை என முத்துராசகவிராயரும் கோகர்ணம் என வாயு புராணமும், பிரமாண்டத்தின் இடைநாடியென சாந்தோக்கிய உபநிடதமும், சிவபூமியென திருமூலரும் விதந்துரைக்கின்றன. அதேபோன்று அனுக்கிரகத் தலமென திருவாதவூரடிகளும் பல்வாரம் நிறைந்த பழம்பதியெனக் கந்தபுராணமும் எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி பாய்ந்த இணையிலா நகரம் என இராமாயணமும் புகழ்ந்துரைக்கும் திருக்கோணேஸ்வரத்தின் பெருமைகளைப் பல்வேறு நூல்கள் எடுத்தியம்புகின்றன.

பண்டிதராசர் இயற்றிய தட்ஷிணகைலாய புராணம், கவிராஜ வரோதயர் பாடிய கோணேசர் கல்வெட்டு, யாழ்ப்பாண வைபவ மாலை, மட்டக்களப்பு மான்மியம், கைலாயமாலை, வையாபாடல், திருக்கோணேசல வைபவம் திருக்கரசைபுராணம், வாயு புராணம், திருக்கோணாசலபுராணம், கோணமலை அந்தாதி ஆகியன கோணேஸ்வரத்தின் பெருமை கூறும் நூல்களாகும். மேற்கூறிய நூல்களின் வருணனைப் படி கோணேஸ்வரத்தின் தோற்றம், அதன் வரலாறு, மூர்த்தி தலப் பெருமைகளை இந்நூல்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகாலத்துக்கு முன்பே ஈழத்தில் ஐந்து சிவாலயங்கள் இருந்தன. அவை திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முனீஸ்வரம் தண்டேஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகியவை அவ்வாலயங்களாகும். இதில் கோணேஸ்வரம் கி.மு. 3541 ஆண்டு நிறுவப்பட்டது என்பர் குலசபாநாதன். கோணேஸ்வரத்தின் பழைமையையும் தொன்மையையும் எடுத்துக் கூறும் நூல்களில் காலத்தால் முந்தியது தட்ஷண கைலாசபுராணம் ஆகும். இப்புராணமானது கோணேஷ் -வரம் சிறப்புடன் விளங்கிய காலத்தில் எழுதப்பட்டதாகும். காப்பிய அம்சங்களைக் கொண்ட இத்தலபுராணம் ஏழு சருக்கங்களையும் அந்தாதித் தொடை கொண்ட 634 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது. இப்புராணத்தில் வரும் இரண்டாவது சருக்கமாகிய திருமலைச் சருக்கத்தில் தட்ஷண கைலாசம் (கோணேஸ்வரம்) தோன்றிய வரலாறும், அதன் புகழும் விதந்துரைக்கப் படுகிறது. இப்புராணம் கூறும் விவரணத்தை நோக்குவதற்கு முன் இந் நூலாசிரியர் பற்றி சிறிது நோக்குவோம்.

கா.சிவசிதம்பரஐயர் பதிப்பித்த (1887) நூலில் இது யாழ்ப்பாணத்து மகா வித்துவான் சிங்கை செகராஜசேகரன் இயற்றியது என்றும், (1380-1414) பு.பொ.வைத்திலிங்கதேசிகர் பதிப்பில் (1916) இந்நூல் பண்டிதராசர் என்னும் புலவரால் பாடப்பெற்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகச்சான்று புறச்சான்றுகளை கொண்டு பார்க்கையில் தட்ஷண கைலாசம் என்ற புராணத்தை இயற்றியவர் பண்டிதராசர் என்ற புலவராகவே இருக்க வேண்டும் என தீர்மானிக்க முடிகிறது. ஆலயத்தோடு தொடர்புடைய சம கால வாழ்க்கையையும் சென்றகால சிறப்புக்களையும் காட்சியாலும் கேள்வியாலும் ஏடு - கள் வாயிலாகவும் பிற ஆவணங்கள் மூலமாகவும் அறிந் - திருந்த மகாவித்து - வான் பண்டிதராசா அவர்களால் பாடப் பெற்றது என அறியக் கூடியதாகவுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திலிங்கதேசிகர் பதிப்புக்கு சாற்றுக்கவிகளைப் பாடியோரில் சி.கணேஷ் ஐயர், மு.தம்பையாக் குருக்கள், வ.குமாரசாமிப்புலவர், சாமிநாத மயில்வாகனனார், க.வேற்பிள்ளை, மற்றும் வயாவிளான் சுதேச நாட்டிய அச்சு இயந்திரசாலையார் ஆகியோர் இப்புராணத்துக்கு பண்டிதராசன் என்னும் பெயர்கொண்ட புலவரே ஆசிரியர் என குறிப்பிட்டுள்ளனர். இவர் பற்றி ஈழத்து தமிழ் கவிதைக் களஞ்சியம் பின்வருமாறு கூறுகிறது. இவரது ஊர் திருகோண மலை. தென் மொழி, வடமொழி ஆகிய இரண்டையும் அறிந்தவர் கோணேசர் ஆலயத்தில் அர்ச்சகராக இருந்தவர் என்று அது குறிப்பிடுகிறது.

10746

இதேவேளை கலாநிதி ஆ.சதாசிவம் தொகுத்த அதே ஈழத்து தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தில் (1966) சிங்கை செகராஜசேகரனின் வேண்டுகோளுக்கு இணங்க, பண்டிதராசர் தட்ஷணகைலாச புராணத்தைப் பாடினார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதுபற்றி கருத்துத் தெரிவித்துள்ள பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன் அவர்கள் உண்மையை திரித்து பொறுப்பற்ற முறையில் கூறப்பட்ட கருத்து என தெரிவித்துள்ளார். (ஆதாரம் கோணேசர் கல்வெட்டு - 1993 சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள் பக்.18).

பேராசிரியர் சி.பத்மநாதன் இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில் "கைலாச புராணத்தில் பண்டிதராசர் என்ற பெயர் காணப்படுவதில்லை. சைவராச பண்டிதர் ஒருவர் பற்றியே அந்நூல் குறிப்பிடுகிறது" என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

கோணேஸ்வர ஆலயம் தோன்றிய ஆதிகால வரலாற்றை புராணங்கள் எவ்வாறு விபரிக்கின்றது என நோக்கலாம். வடமொழியில் எழுதப்பட்ட செவ்வந்திப் புராணத்திலும், குப்தப் பேரரசு காலத்திலே எழுதப்பட்ட புராணங்களில் ஒன்றான வாயு புராணத்திலும் (கி.பி. 4-5) கோணேஸ்வர ஆலயத்தின் தொன்மை வரலாறு பின்வருமாறு கூறப்படுகிறது.

சிவபெருமான் உமா தேவியோடு திருக் கைலாயமலையில் வீற்றிருக்கின்றார். மும்மூர்த்திகளும், தேவர்களும், கண நாதர்களும் வணங்கி நிற்க, ஈசன் திரு விழிக்கடை பரப்பி தேவர்களை நோக்கி பிரம்மாவுக்கு படைத்தல் தொழிலையும், திருமாலுக்கு காத்தல் தொழிலை -யும் உருத்திரனுக்கு அழித்தல் தொழிலையும் ஆதி சேடனுக்கு பூமியைத் தாங்கும் தொழிலையும் கொடுத்தோம் என திருவாய் மலர்ந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை செவியுற்ற வாயுபகவான் கோபங்கொண்டு "என்னிலும் நீ வலிமையுடையவனா?" என்று ஆதிசேடனுடன் தர்க்கித்தான். இருவருக்கும் போர் மூண்டது. தேவர்களின் ஆலோசனைக்கிணங்க நடந்த பலப் பரீட்சையில் ஆதிசேடன் தனது ஆயிரந்தலைகளால் வெள்ளிமயமாகிய திருக்கைலாய மலையின் சிகரங்களை அதன் அடியிலிருந்து முடிவரை மறைத்துக் கொண்டிருந்தான்.

அப்போது, வாயுபகவான் மிகுந்த பாரக்கிரமத்துடன் பிரசண்டமாக வீசினான். வாயுபகவானுக்கும் ஆதிசேடனுக்கும் நடந்த இப்போரினால் அண்டகோளங்கள் அசைந்தன. தேவர்கள் அஞ்சி நடுங்கி, இறைவன் திருவடியை தொழுது "ஆதிசேடனுக்கும் வாயு பகவானுக்கும் இடையே நடைபெறும் கொடிய யுத்தத்தை நிறுத்தி காத்தருள வேண்டும்" எனக் கோரினர். அவர்கள் கோரிக்கையை செவிமடுத்த சிவன் பிரமாவை அழைத்து, "உத்தரகைலாய பருவத்தின் தெற்குப் பக்கத்திலுள்ள திரிகோண சிகரத்தில் உத்தர கைலாய பீடம் ஒன்றை அமைக்கும்படி பிரம்மாவுக்கு பணிக்க கோடி சூரியர்கள் போல் மிளிர்கின்றதும், கோடி சந்திரர்களைப் போல் குளிர்ச்சி ஆனதுமான நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற சிங்காசனமொன்றை திரிகோண வடிவான மலையுச்சியில் படைத்தார் பிரம்மா. கைலாய பீடத்தை பிரம்மா அமைத்த -தன் பின் சிவன் அனந்த கோடி சூரியர்களது ஒளியைப் போலும் சொர்ணமயமான இலிங்க ரூபியாகி உமை அம்மை சகிதம் சிருஷ்டிக் கப்பட்ட திரிகோண கைலாச பீடத்தில் சிவன் அம்பிகை யோடு பிரம்மன், விஷ்ணு, மகேந்திரன் முதலிய தேவர் புடைசூழ எழுந்தருளினார். சிவன் ஆதிசேடனை நோக்கி "குமரி கண்டமானது மற்றைய கண்டங்களைப் பார்க்கிலும் மிகச் சிறப்புடையது. தென்திசையில் உள்ளவர்களைக் காப்பாற்ற உள்ளங் கொண்டேன் குமரிக்கண்டத்தின் தென்பாகத்தில் என் மனம் ஈடுபடுகிறது. உங்கள் விரோதம் போதும்.

"நீங்கள் இருவரும் சமபலம் உடையவர்களே! உலகின் நன்மையை விரும்பி சர்ப்பராஜா உனது படங்களில் ஒன்றை விலக்குவாயாக" என்று இறைவன் இரகசியமாக ஆதிசேடன் காதில் ஓதினார்.

ஆதிசேடனும் "அவ்வாறேயாகுக" என்று கூறி, தனது ஆயிரந் தலைகளில் ஒன்றைச் சாய்த்து இறைவன் திருமொழியைச் செவிகொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தருணத்திலே வாயுபகவான் சிவபெருமான் எழுந்தருளியிருந்த திரிகோண சிகரத்தையும், அதன் அருகிலுள்ள வேறு இரண்டு சிகரங்களையும் பறித்தெடுத்தான். அதுகண்ட சிவன், வாயுபகவானை நோக்கி, "வாயுவே நீ பறித்தெடுத்த சிகரங்களிலே திரிகோணசிகரத்தை விடுத்து மற்றைய இரண்டு சிகரங்களில் ஒன்றை தொண்டை நாட்டிலும், ஒன்றை சோழ நாட்டிலும் கொண்டுபோய் வைத்து வருவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாறே வாயுபகவான் ஒன்றை தொண்டை மண்டலத்திலும் மற்றையதை சோழ நாட்டிலும் காவிச் சென்று வைத்தான். வாயுபகவானால் தொண்டை மண்டலத்தில் வைக்கப்பட்ட சிகரம் திருக்காளத்தி எனவும் சோழநாட்டில் வைக்கப்பட்ட சிகரம் திருச்சிராப்பள்ளி எனவும் பெயர் கொண்டன.

இதன் பின் சிவன் வாயுபகவானை நோக்கி, "நாம் எழுந்தருளி இருக்கும் திரிகோண சிகரத்தை ஈழநாட்டிலேயுள்ள கிழக்கு சமுத்திரக் கரையிலே வைப்பாயாக" என திருவாய் மலர்ந்தருளினார். அம்மூன்று மலைகளில் நடுச்சிகரமாக விளங்கிய திருக்கோணாசலம் ஆகிய சிகரத்தை வசந்த ருதுவில் சித்திரை மாதத்தில் ஞாயிற்றுக்கிழமையும், அத்த நட்சத்திரமும் விருத்தியோகமும் கூடிய பௌர்ணமி திதியில் குருவோரையில் சனி மகர ராசியில் பிரவேசித்த காலமான ரிஷப லக்கின சுபமுகூர்த்தத்தில் திரிகூட மலையின் வடபாகத்தில் 30 யோசனை தூரத்தில் அம்மலையை வாயுபகவான் வைத்தார். அன்று முதல் இம்மலை தட்ஷணகைலாசம் எனப் பெயர்பெற்றது. இதற்கு வெள்ளிமை, திரிகூடம், திரிகோண மலையென மூன்று பெயர்கள் உண்டாகின. கோணேஸ்வரமலை பூமிக்கு கீழாக ஒரு யோசனை ஆழமும் (கூப்பிடுதூரம்) பூமியின் மேலாக ஆறு தண்டம் உயரமும் 15 தண்டம் அகலமும் கொண்டது.

இத்திரிகோண பீடத்திலே ஒன்பது வீதிகள் அமைந்திருக்கின்றன. முதலாவது நவரத்தின வீதியில் பரமானந்தம் எனும் ஆலயம் உண்டு. இவ் ஆலயம் கற்பக விருஷ மூலத்திலே ஆயிரம் இரத்தினத் தூண்களும், நூறு பொற்தூண்களும், ஆறு மண்டபங்கள், நாலு கோபுர வாசல்கள், சிகரங்கள், சாளர வாசல்களையும் கொண்டதாக அமைந்திருந்தது. சிந்தாமணியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்ட இந்த இரகசிய ஆலயம் 'பரமா னந்தம்' என்னும் பெயரால் அழைக் கப்பட்டது.

இரண்டாவது, மரகத வீதியில் சக்தியோடு கூடிய மகேஸ்வரன் கோயில் கொண் டுள்ளான். மூன் றாவதான சூரிய காந்த வீதியிலே பதினொரு உருத் திரர்கள் வசிப்பர். எட்டாவது வீதி யிலே சிந்தாமணி, சூடாமணி, சங்க நிதி, பதுமநிதி, 27 நட்சத்திரங்களும், 12 ராசிகளும், 4 வேதங்களும், 28 ஆகமங்களும், 18 ஸ்மிருதிகளும், 18 புரா ணங்களும், 6 சாத்திரங்கள், கலைஞர்களும் நவக்கிரகங்களும் வசிக்கின்றது என தட்ஷணகைலாச புராணம் விதந்துரைக்கிறது.

இராவணேஸ்வரன் தோற்றம்



அகஸ்தியர் ஸ்தாபனம் புராதன லிங்கம்



இக் கோயிலுக்கு அப்பால் நந்தவனங்களும், பொற்றாமரை தடாகமும் நதிகளும் உண்டு. இங்கு ஏழு குகைகள் உண்டு. வடக்கு குகையில் அகஸ்தியர் புலஸ்தியர், வாமதேவர், வசிட்டர் முதலிய ரிஷிகள் வாழ்ந்தார்கள். வடமேற்கு குகையிலே நாகலோகத்துக்கு வழியுண்டு. வடகிழக்கு குகை மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குக் குகையில் மகாவலிகங்கை வந்து பிரவாகிக்கும் என வர்ணிக்கப்பட்-டுள்ளது. தட்ஷண கைலாசத்தால் வர்ணிக்கப்படும் இச் செய்திகள் கற்பனை கொண்டதாக எண்ணப்பட்டாலும் இக் கற்பனைகள் வரலாற்றுக்கு உதவ முடியாது என்பது உண்மையே. மேற்கூறப்பட்ட புராணக்கதை போலவே மச்சேந்திரபருவத சரித்திரத்தில் வரும் இரணியன் கதை, மகாவலி கங்கை சரித்திரத்தில் வரும் கங்கைக் கதை, அகத்திய முனிவர் சரித்திரத்தில் வரும் அகஸ்தியர் தாபனம் என்ற கதைகள் ஸ்ரீமான், வெ.அகிலேசபிள்ளை அவர்களால் எழுதப்பட்ட திருக்கோணாசலவைபவம் என்ற நூலில் கூறப்படுகிறது. கட்டுரைச் சுருக்கம் கருதி அதை தவிர்த்துள்ளேன்.

இலங்கை வேந்தன் இராவணேசனையும் திருகோணமலையையும் தொடர்புபடுத்தி பல புராணங்களும் இதிகாசங்களும் வரலாறுகளும் எழுதப்பட்டிருக்கின்றன.

கி.மு. 6000 ஆம் ஆண்டளவில் இலங்கையை இராவணன் ஆண்டான் என இராமாயண காவியத்தில் கூறப்படுகிறது. இதுபற்றிய வரலாற்று ஆதாரங்களை முதலில் நோக்குவோமாயின், இராவணன் காலம் கி.மு. 6000 ஆம் ஆண்டு எனவும் கி.மு. 3544 இல் கடல்கோள் ஏற்பட்டது எனவும் இக்கடல் கோளினால் இலங்கையின் பெரும் பகுதி அழிவுற்றபோது கோணேசர் ஆலயமும் அழிவுற்றதென கலாநிதி டபிள்யு. பாலேந்திரா திருகோணமலை திருவுருவங்கள் (1954) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இராமாயண காலத்துக்குப் பின்னர் பெருங்கடல்கோள் ஏற்பட்டு இலங்கையின் பெரும்பகுதி கடல் கொண்டது என ராஜவலிய என்னும் பாளி மொழி வரலாறு கூறுகிறது. பாலேந்திராவின் மேற்படி கருத்தை இச்செய்தி ஊர்ஜிதப்படுத்துகிறது. (ஆதாரம் கோணேசர் ஆலய வரலாறும் அதன் புராதன நிலையும் இன்றைய நிலையும். வீரகேசரி 17, 24, 31 மார்ச் 1963) இவ்விரு கருத்துக்களிலுமிருந்து இலங்கையில் ஏற்பட்ட கடல்கோள் கோணேசர் ஆலயத்தை அழித்துள்ளது என்ற உண்மை வலியுறுத்தப்படுகிறது. ஆய்வாளர்களின் கருத்துப்படி சுமார் 12000 ஆம் ஆண்டுகளுக்கு முன் ஒரு கடல்கோளும் 7000 ஆம் ஆண்டுகளுக்கு முன் இன்னொரு கடல்கோளும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5000 ஆம் ஆண்டுகளுக்கு முன் மற்றொரு கடல்கோளும் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஆதாரம் வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும் பரமானந்தசிவம் பக் - 29) ஐந்து கடல்கோள் ஏற்பட்டது என வெசினர் என்பவரும், மூன்று கடல்கோள்கள் ஏற்பட்டது என டெனற் என்பவரும் ஆதாரங்களுடன் நிறுவியுள்ளனர். இதில், *(Tennet)* என்பவரின் கூற்றுப்படி. *(History of Ceylon by tenet pg.10)* முதலாவது கடல்கோள் கி.மு. 2378 இலும் இரண்டாவது கடல்கோள் கி.மு. 504 ஆம் ஆண்டிலும், மூன்றாவது கடல்கோள் கி.மு. 306 ஆம் ஆண்டிலும் ஏற் பட்டன என்பர். இவற்றுள் முதலாவது கடல்கோளில் இலங்கை இந்தியாவிலிருந்து பிரிந்தது என்றும், இரண்டாவது கடல்கோளினால் இலங்கைக்கு அதிக அழிவு ஏற்படவில்லை என்றும், மூன்றாவது கடல்கோளின் போது இலங்கைக்குப் பேரழிவு ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார். மூன்றாவது கடல்கோள் ஏற்பட்டபோதே கோணேசர் ஆலயமும் அழிந்திருக்க வேண்டுமென ஊகிக்கப் படுகிறது. காரணம், டெனற்றின் கருத்துப்படி மூன்றாவது கடல்கோளின் போது பெரியதொரு ஆலயமும் கடலில் மூழ்கியது எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆலயம் கோணேஷர் ஆலயமாகவேயிருக்க வேண்டும். மூழ்கிய ஆலயம் கோணேஷர் கோவிலில் தற்போது பூஜை நடைபெற்றுவரும் மலைப் பூசைப் பாறைக்கு எதிர்ப்



ஆதி ஆலயம் இருந்த இடத்தின் அண்மைய தோற்றம்



ஆதிகோணேஷர் ஆலயம் இருந்ததாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டும் இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறமுள்ள பாறைக்கு அடியில் தொன்மையான ஆலயத்தின் மூலஸ்தானமும், சுவடுகளும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இக்கருத்துக்கு ஆதாரமாக 1961 ஆம் ஆண்டு மைக்வில்சன், றொட்னி ஜெங்க் லஸ்கிளாஸ் ஆகியோர் ஆங்கிலத் திரைப்படம் ஒன்று எடுப்பதற்காக கோயில் சூழ்ந்த மலைக் கடலிலே சுழியோடியபோது அங்கு கோயிற் தளங்கள், தூண்கள், பிரமாண்ட மான மணி மற்றும் விளக்குகள்" இருப்பதைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தெரிவித்த தகவல் அடிப்படையில் ஆதர்சிகிளாக் என்ற விஞ்ஞானி பண்டைய கோவில் பற்றிய சில கருத்துக்களைக் கூறியிருந்தார். அவர் கருத்துப்படி கோணேசர் ஆலயம் கடலில் மூழ்கி இருக்க வேண்டும் என்பது ஊர்ஜிதமாகிறது.

எனவே போர்த்துக்கீசர் கோணேசர் ஆலயத்தை இடிப்பதற்கு முன்னே பழமையான ஆலயமொன்று கடல்கோளினால் அழிந்திருக்கின்றது என்பதை அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன. மூன்றாவது கடல்கோள் ஏற்பட்டு ஆலயம் அழிந்ததன்பின் மூன்று கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அக்கோயில்கள் மலையடி வாரம், மலையுச்சி, மலையின் நடுப்பக்கம் ஆகிய இடங்களிலேயே அமைக் கப்பட்டன என பிற்கால வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. அமைக்கப்பட்ட இம் மூன்று கோயில்களும் கிறிஸ்து பிறப்பதற்கு 1300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டன. (சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் எனக் கருதமுடியும்.)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மூன்று கோவில் களையுமே குளக்கோட்டன் திருப்பணி செய்தான் என அறிய முடிவதுடன் இக் கோவில்களையே பின்னர் போர்த்துக்கீசத் தளபதி இடித்திருக்க வேண்டும். இதுபற்றி பின்னர் நோக்கு வோம்.

இராவணனோடு தொடர்புபடுத்தி கூறப்படும் புராண இதிகாச கதைகளை நோக்குவோம். தட்ஷண கைலாசம், கோணாசல வைபவம், மட்டக்களப்பு மான்மியம், திருக்கரசை புராணம், சிவராத்திரி புராணம், பார்க்கதுபுராணம் போன்றவை இராவணனுக்கும் கோணேசர் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பை பின்வரும் சம்பவக் கோவைகள் மூலம் எடுத்துக்காட்டுகின்றன.

சிவராத்திரி புராணம் கன்மாடபாதச்சுருக்கம் (52-70) பிரமோத்தர காண்டம் சிவதானமகிமை (49-60) பார்க்கவ புராணத்திலும் இராவணனுக்கும், கோணேஷர் கோவிலுக்கும் உள்ள தொடர்பு எடுத்துக் கூறப்படுகிறது.

விச்சிரவசு என்ற இலங்காபுரியின் மன்னனின் மகனான தசக்கிரீவன் இராவணன் பதினாறு வருடங்கள் தவஞ்செய்து மிகுந்த வரங்களைப் பெற்று தனது தமையனாகிய குபேரனிடமிருந்து இலங்காபுரியின் அரசுரிமையைக் கைக் கொண்டான். (இன்று களனி என்று அழைக்கப்படும்) கல்யாணியை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தான். அவன் அன்னை கைகேசி ஒருநாள் நெல்குற்றிக் கொண்டு நிற்பதைக் கண்டு, "அன்னையே மூவுலகுக்கும் அரசனான என்தாய் நீ. இவ்வாறு உடல் வருத்தலாமா?" என்று கேட்ட பொழுது, அதற்கு அவன் தாய், "மகனே, தினந்தோறும் மாவினால் ஆயிரம் சிவலிங்கங்களைச் செய்து மகாவலி கங்கைக்கரையில் வைத்து வழிபட்டதன் பின் அந்த சிவலிங்கங்களைக் கங்கையில் கரைத்துவிடுவது என் வழக்கம். நாளைக்கு மாவில்லை ஆகையால், நெல் குற்றுகின்றேன்" என்று தாய் கூறினாள். அதற்கு இராவணன், "இலிங்கத்தை பூசிப்பதற்கு நீ ஏன் மாவினால் உருவம் செய்ய வேண்டும். நான் திருக்கைலாய மலைக்குச் சென்று சிவனிடம் ஓர் இலிங்கத்தைப் பெற்று வருகிறேன்" என தாயிடம் கூறிவிட்டு இராவணன் இரதத்தில் ஏறி கைலயங்கிரியை அடைந்தான்.

இராவணன், உள்ளங்குழைந்து உருகி சிவனை வழிபட்டான். அவனது பக்தி கண்டு சிவன் ஒரு வயோதிப பிராமண வடிவங்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்முன் தோன்றி, கையில் சிவலிங்கத்தைக் கொடுத்து, "இந்த லிங்கத்தை எக்காரணங் கொண்டும் பூமியில் வைத்து விடாதே. வைத்தால் அதனை மீண்டும் எடுக்க முடியாது. லிங்கத்தை நீ பிரதிஷ்டை செய்து வைத்தால் பூமியில் உன்னை வெல்ல யாராலும் முடியாது" என்று கூறி மறைந்தார். அதன்படி சிவலிங்கத்துடன் இராவணன் இலங்காபுரியை நோக்கி வந்துகொண்டிருந்தபோது லிங்கத்தை அவன் பிரதிஷ்டை செய்தால் அவனை வெல்ல யாராலும் முடியாது என்பதால் ஏற்கனவே இராவணனால் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த தேவர்கள் விநாயகர், விஷ்ணுமூர்த்தி ஆகியோரிடம் உதவி பெற்று சூழ்ச்சி செய்து அவன் கரத்தில் உள்ள சிவலிங்கத்தை பூமியில் வைக்க வைத்தார்கள்.

சிவலிங்கத்தை இழந்த இராவணேசன் மீண்டும் கைலயங்கிரி சென்று மீண்டுமொரு லிங்கத்தை பெற்றுவரும் வழியில் மீண்டும் தேவர்களின் சூழ்ச்சிக்கு ஆளாகி இரண்டாவது சிவலிங்கத்தையும் இழந்தான். இராவணனால் இழக்கப்பட்ட முதலாவது இலிங்கம் பிரதிஷ்டை செய்த இடம் காசிக்கு அப்பாலுள்ள வைத்திய நாதம் என்ற ஆலயம் என்றும் இரண்டாவது இலிங்கம் வைக்கப்பட்ட தலம் துளுவ நாட்டிலுள்ள கோகர்ணம் என்றும் அழைக்கப் படுகிறது.

முயற்சியைக் கைவிடாத இராவணன் மூன்றாவது முறையாகவும் லிங்கம் பெறும் பொருட்டு கைலாசத்துக்கு போகும் வழியில் விஷ்ணு மூர்த்தி கிழப் பிராமண வடிவங் கொண்டு அவனை வழிமறித்து "அரசனே! நீ ஆட்சி புரியும் இலங்காபுரிக்கு உத்தரபாகத்தில் தட்ஷண கைலாயம் (கோணேஷ்வரம்) என்ற ஆலயம் இருக்கிறது. அங்குள்ள இலிங்கங்கள்



இராவணன் வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்துவம் கொண்டவை. அதில் ஒரு இலிங்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வளவு பிரயாசைப்பட்டு கைலாயம் வருவான் ஏன்" என்று கூறியது கேட்டு மிகுந்த பேரானந்தம் கொண்ட இராவணன் தேரேறி தட்ஷண கைலாயம் வந்தான். வடக்கு திக்கில் ரதத்தை நிறுத்தி கோணேஷப்பெருமான் எழுந்தருளி இருக்கும் ஆலய வாசலில் நின்று இறைவனை வேண்டினான். இறைவன் காட்சி அளிக்காததால் கடுங் கோபம் கொண்ட தசக் கிரீவன் கோணேஷர் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் மலையின்கீழ் இறங்கி தனது இருபது கைகளாலும் கோணேஷமலையை கட்டிப்பிடித்து மாறும்படி அசைத்தான். மலை சிறிதும் அசையவில்லை. அதைக்கண்ட தசக்கிரீவன் உக்கிர கோபங் கொண்டு மலையின் அடியிலிருந்து வெளியே வந்து கையிலிருந்த வாளினால் மலையின் தெற்குப்பகுதியில் வெட்டினான். மலையின் ஒரு துண்டு உடைந்து மேற்குப்பக்கமாகப் போய் விழுந்தது. வாளும் இரண்டு துண்டாக உடைந் தது. ஆவேசத்துடன் மலையின் கீழாக இறங்கி, தனது இருபது தோள்களாலும் மலையைத் தூக்கினான். மலை அசைந்தது. அந்த அதிர்ச்சியினால் சப்தகுல பருவதங்களும் (மலை கள்), அட்ட நாகங்களும், அட்ட கசங்களும், அட்டதிக்கு பாலகர்க ளும் தங்கள் இருப்பிடம்விட்டு அசைந்து கொண்டார்கள்.



இராவணேஸ்வரனின் தோற்றம்

சமுத்திரங்களும், உலகங்களும் நடுங்கின. தேவர்கள் அச்சமுற்றனர். உமையானவள் அச்சங்கொண்டு கோண நாயகரை தழுவிக்கொண்டாள். நாயகர் புன்சிரிப் புக் கொண்டு உமையம்மையைப் பார்த்து, "உமையே அஞ்சாதிருக்க" என திருவாய் மலர்ந்தருளி வீராசன முறையாக இருந்து கொண்டு தனது திருப் பாதத்தின் பெருவிரலால் மலையை ஊன்றினார். மலையானது இராவணனை நசுக்கியது. அதனால் அவனது பத்து வாயிலும் இருந்தும் இரத்தம் கொப்பளிக்க உரத்து சத்தமிட்டுக்கொண்டு கடலினுள் அமிழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் இறந்தான் என்று எண்ணிய தேவர்கள் அவன் தேரையும் கடலினுள் அமிழ்த்தி ஆனந்தக் கூத்தாடினார்கள். இத்தகைய ஒரு கர்ண பரம்பரைக் கதையை வைத்துக்கொண்டே பல்லவர் காலத்தில் வாழ்ந்தவரான திருஞான சம்பந்தர் திருக்கோணேஸ்வரத்தின் மகிமையை பதிகமாக பாடும் போது,

எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு தொடுத்தவர்
செல்வம் தோன்றிய பிறப்பு இறப்பு அறியாதவர்
வேள்வி தடுத்தவர் வனப்பால் வைத்ததோர்
கருணை தன்னருள் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமாமலை அமர்ந்தாரே (கோணேஸ்வர பதிகம் 8)

சிலகாலம் சென்றதன் பின் தசக்கிரீவன் ஆழியில் இருந்து வெளியே வந்து கோபுர வாசலில் நின்றுகொண்டு கோண நாதரை நோக்கி, "சுவாமி, நாயினுங்கடையேனாகிய யான் ஆணவமிகுதியினால் செய்த குற்றங்களைப் பொறுத்தருள வேண்டும்" என்று இறைஞ்சிய வண்ணம் தனது பத்து தலைகளில் ஒன்றை திருகி அதை ஒரு சுரைப்பத்தரையாகவும், இருபது கரங்களில் ஒன்றை முறித்து அதிலுள்ள எலும்புகளை தடியாகவும், விரல்களை முறுக்கு ஆணிகளாகவும், நரம்புகளை தந்திகளாகவும் சேர்த்து, வீணையைச் செய்து அவ்வீணையைக் கையில் ஏந்திக்கொண்டு நான்கு வேதங்களில் ஒன்றான சாம வேதத்தை இன்னிசையாகப் பாடினான் என்றும், கோணை நாயகர் திருவுளம் இரங்கி, குறைந்த அவயவங்களை உண்டாக்கும்படி அருளி சந்திரஹாசம் என்னும் வாளையும், புஸ்ப விமானம் எனும் தேரையும் இலிங்கத்தையும் ஈந்து அவனுக்கு பலவரங்களை நல்கி விடை கொடுத்தார். என புராணங்கள் உரைக்கின்றன. இராவணன் சாமகானம் பாடி வரம் பெற்றதனால் இவ்வாலயம் சாமகானபுரம், வீணாகானபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த கர்ணபரம்பரைக் கதையில் வரும் இரு செய்திகள் இங்கு நோக்கப்பட வேண்டியவை. இராவணன் மலையெடுத்த கதை மேற்கண்டவாறு இருக்க இன்னுமொரு கதையும் செவிவழியாக உரைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் சிறந்த சிவபக்தன். அவனது அன்னை கைகேசியும் சிவனிடம் எல்லையற்ற பக்தி கொண்டவள். தினமும் நெடுந்தூரம் நடந்து கோணேஷர் ஆலயம் வந்து பூஜை செய்துபோவது அவளது நாளாந்த வழக்கம். தள்ளாத வயதிலும் நோயினால் பீடிக்கப்பட்ட தாயின் நிலை அறிந்து கோயிலை தன் தாய் இருக்கும் இடத்துக்குக் கொண்டுவர எத்தனித்த இராவணன் தனது பெரிய வாளி னால் கோயிலைப் பெயர்க்கும் எண்ணங் கொண்டு மலையை வெட்டினான். (அதுவே இராவணன் வெட்டு என்று அழைக்கப்படுகிறது). இதனை அறிந்த விஷ்ணு இராவணனிடமிருந்து கோயிலை காப்பாற்ற எண்ணி கிழப்பிராமண வடிவத்தில் வந்து இராவணனிடம் "உனது தாயார் இலங்காபுரியில் இறந்துவிட்டார்" என்று கூறியது கேட்டு, அதிர்ச்சி அடைந்த தஷக்கிரீவன் மலையைப் பிளக்கும் தனது முயற்சியைக் கைவிட்டு



கன்னியா வெந்நீர் ஊற்று

பெருந்துயரங்கொண்டு அப்பிராமணரிடம் தாய்க்குரிய ஈமக்கிரியைகளை செய்துதரும்படி இறைஞ்சி நின்றான். பிராமண வேடத்தில் வந்த விஷ்ணு இராவணனைக் கன்னியா எனுமிடத்திற்கு அழைத்துச் சென்று ஈமக் கிரியைகள் செய்யும் பொருட்டு, தான் வைத்திருந்த தண்டினால் ஏழு இடங்களில் ஊன்றினார். ஊன்றிய இடத்தில் வெந்நீர் ஊற்றுக்கள் உருவாகின. இது கன்னியா என்று அழைக்கப்பட்டது. (பிராமண வடிவில் வந்த மகா விஷ்ணு இராவணனின் அன்னைக்கு கிரியைகள் செய்த அடுத்த கணமே இராவணனின் தாய் இறந்துவிடுகிறாள். என மேற்படி கதையில் கூறப்படுகிறது.)

மேற்படி கதையில் வெந்நீர் ஊற்றுக்கள் விஷ்ணுவால் உருவாக்கப் -பட்டன என்றிருக்க இன்னொரு வரலாற்றில் தாயார் இறந்த செய்தி கேட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் கன்னியா என்னுமிடம் சென்று கிரியைகள் செய்வதற்காக தன் கூரிய வாளினால் ஏழு இடங்களில் குத்தினார். என்றும் அதனால் ஏழுவித வெந்நீரூற்றுக்கள் உருவாகின என்றும் அப்புனித நீரைக் கொண்டு தாயாருக்கு இறுதிக் கிரியைகள் செய்தான் என்றும் கூறப்படுகிறது. (ஆதாரம் கும்பாபிஷேக மலர் 03.04.1963).

இவ்விரு கதைகள் மூலம் கூறப்பட்ட இராவணன் வெட்டுப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை நோக்குவோம். கோணேஷர் குன்றின் கிழக்குப் பக்கமாக கடல் மட்டத்திலிருந்து நானூறு அடி உயரமான குன்றில் இந்த இராவணன்வெட்டு காணப்படுகிறது. இலங்கா நேசனின் பக்தி வைராக்கியத்தின் சின்னமாக விளங்குவது இராவணன் வெட்டு இராவணனின் சிவபக்திக்கும், தவவலிமைக்கும், வீரத்திற்கும் எடுத்துக் காட்டாயுள்ள அழியாத முத்திரை இதுவாகும். ஆராய்ச்சியாளர்களது கருத்துப்படி இராவணன்வெட்டு என்று அழைக்கப்படும் மலைப்பிளவும் தற்போது மலைப் பூசை நடைபெறும் பாறையின் பிளவுகளும் ஒரு கடல்கோளின்போது இவ்வாறு பிளவுபட்டிருக்க வேண்டும் என்ற கருத்து கூறப்படுகிறது. (ஆதாரம் குளக்கோட்டன் தரிசனம் க.தங்கேஸ்வரி பக்.13)

இதுவரை புராண இதிகாசங்களில் கூறப்பட்ட கோணேஸ்வரம் பற்றிய தொன்மையையும், புகழையும் பார்த்தோம். இனி, கவிராஜவரோதயன் எனும் புலவரால் இயற்றப்பட்ட **கோணேசர் கல்வெட்டு** என்னும் சாசனத்தின் மூலம் இவ்வாலயம் பற்றிக் கூறப்படும் தொன்மையையும், புகழையும் அறியலாம்.

கவிராஜவரோதயன் எனும் புலவரால் இயற்றப்பட்டது கோணேசர் கல்வெட்டு எனும் சாசனம். இலங்கைத் தமிழர்களின் வரலாற்று அம்சங்களைக் கூறும் நூல்களில் மிக முக்கியம் பெற்று நிற்பது போலவே கோணேசர் கல்வெட்டு, வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, பெரிய வளமை பத்ததி, குளக்கோட்டன் கம்பசாஸ்திரம், மட்டக்களப்பு மான்மியம் ஆகிய நூல்களும் முக்கியம் பெற்ற நூல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் சாசனம் என வழங்கப்படும் இதனை பு.போ.வைத்திய லிங்க தேசியர் என்பார் 1916 ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளபோதும், வல்வை க.சின்னத்தம்பிப்பிள்ளை என்பவர் 1887லும், அகிலேச பிள்ளை அழகக்கோன் 1960லும், பண்டிதர் இ.வடிவேலு அவர்கள் 1993லும் இச்சாசனத்தை பதிப்பித்துள்ளனர். சென்ற காலத்து நிகழ்ச்சிகளையும் சமகால வழமைக ளையும் அவற்றுக்கு அடிப்படையாக இருந்த வரலாறுகளையும் தொகுத்துக் கூறும் நூலாகவே கோணேசர் கல்வெட்டு காணப்படுகிறது.

குளக்கோட்ட மன்னன் கோணேஸ்வரத்தில் நிறைவேற்றிய திருப் பணிகளையும் அம்மன்னன் திட்டம் பண்ணிய நியமங்களையும் தீர்க்க தரிசனங்களையும் உள்ளடக்கியது கோணேஸர் கோவில் பற்றியும் அதன் நிர்வாகம் செய்யும் சட்டதிட்டங்கள் பற்றி விரிவாகக் கூறியுள்ள விடயங்கள் செப்பேட்டுப் பெரியவளமைப் பத்ததியில் பொறித்து வைக்கப்பட்டிருந்தன. அந்த பத்ததியிலுள்ள விஷயங்களை தொகுத்தும், விரித்தும் பாடியுள்ள பாடல்களும் உரைநடையுமே கோணேசர் கல்வெட்டாகும். திருப்பணி செய்த குளக்கோட்டன் ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகளும் ஆலய நிர்வாகம் ஒழுங்கு முறை தவறாது நடைபெற சட்ட திட்டங்களை உண்டாக்கி, அதன் செப்பேட்டு பெரிய வளமைப்பத்ததியில்-எழுதுவித்தான். இச்செப்பேட்டுச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு குளக் கோட்ட மன்னனின் திருப்பணி வரலாறுகளையும், ஆலய நிர்வாக சட்ட திட்டங்களையும் உள்ளடக்கிய கல்வெட்டை கவிராஜவரோதயர் பாடியுள்ளார். தட்ஷணகைலாசபுராணம் கூறும் கோணேசர் செய்திக்கும் கோணேஷர் கல்வெட்டுக் கூறும் செய்திகளுக்கு மிடையிலான கால இடைவெளி மிகப்பெரியது. தட்ஷணகைலாசபுராணம் கோணேஸ்வரம் சிறப்புடன் விளங்கிய காலத்தில் எழுதப்பட்டது. கோணேசர் கல்வெட்டு எழுதப்பட்ட காலத்தில் ஆலயம் பறங்கியர் கோட்டையாகி விட்டது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கோணேசர் கல்வெட்டு செய்யுள் உரைநடை ஆகிய இருவித நடையில் எழுதப்பட்டிருக்கிறது. செய்யுள் நடையில் அமைந்த முதலாவது பகுதியிலும் இருபகுதிகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) கோணேஸர் தொடர்பான குளக்கோட்ட மன்னன் புரிந்த திருப்பணிகள்.

(2) கயபாகு மன்னன் கோவிலுக்குச் செய்த திருப்பணிகள்

உரைநடையில் உள்ள பகுதியில் 29 தலைப்புக்களில் விபரங்கள் கூறப்பட்டன. அதாவது ,

**மாணிக்கங்கள் வரவு**
**வரிப்பத்தார்,**
**கலியாணத்துக்கு செய்தொழும்பு**
**தீமைக்கு செய்தொழும்பு**

என வருகிறது. இதில் முதலாவது செய்யுள் நடையில் அமைந்த பகுதியில், குளக்கோட்ட மன்னன்புரிந்த தொண்டு திருப்பணிகள் பற்றிக் கூறப்படுகையில், கோணேஸ்வரத்தின் கோட்டம், கோபுரம், மதில், தீர்த்தம், குளம் என்பவற்றை அமைத்த குளக் கோட்ட மன்ன னுடைய ஆற்ற லையும் அரும் பணியையும் கீர்த் தியையும் இந்நூல் முன்னளிக்கின்றது. இக்கல்வெட்டில் வரும் குளக்கோட்டன் யார்? அவனது திருப்பணிகள் என்ன என்பதை இனி சுருக்கமாகப் பார்ப்போம்.

குளக்கோட்டன் வரலாறு தொடர்பாக கலாநிதி செ.குணசிங்கம், கலாநிதி இந்திரபாலா பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை, கலாநிதி பாலேந்திரா, க.தங்கேஸ்வரி ஆகியோர் ஆய்வு செய்துள்ளனர்.

குளக்கோட்டன் திருப்பணிகள் சம்பந்தமாக கோணேஷர் கல்வெட்டில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

**திருந்து கலிபிறந்து**
**ஐநூற்றொருபதுடன்**
**இரண்டாண்டு**
**சென்ற பின்னர்**
**புரிந்திடபமாதமதில் ஈரைந்தாந்தேதி**
**புணர் நன்னாளில் தெரிந்தபுகழ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆலயமும்**
**சினகரமும் கோபுரமும் தேரூர்வீதி**
**பரிந்துரத்ன மணிமதிலும்**
**பாபநாசசுனையும்**
**பருத்தான் மேலான்.**



அஃதாவது, குளக்கோட்டன் (சோழ கங்கன்) விமானம், எழில்மிகு மண்டபம், கோபுரம் ஆகியன பொருந்திய மகத்தான ஈஸ்வரத்தையும், அழகிய பெருமாள் கோட்டத்தையும் மழைநீரை தேக்கும் திருக்குளத்தையும் பாவநாசம் எனும் சுனையையும் அமைத்தான் என தட்ஷண கைலாச புராணம் கூறுகிறது.

கல்வெட்டில் குறிப்பிடப்படும் குளக்கோட்டனுடைய தொண்டு திருகோணமலையிலிருந்து திருக்கோவில்வரை பரந்துகிடக்கின்றது. தம்பலகமம், கந்தளாய், வெருகல், கொக்கட்டிச்சோலை, சங்கமங்கண்டி திருக்கோவில் வரை இவன் புகழ் பேசப்படுகின்ற காரணத்தினால் இவனைப்பற்றி வரலாற்று ரீதியான கவனத்தை செலுத்தவேண்டியுள்ளது. கவிராஜ வரோதயன் இயற்றிய கோணேஷர் கல்வெட்டு தவிர்ந்த மட்டக்களப்பு மான்மியம், தட்ஷண கைலாச புராணம், யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல், திருகோணாசல வைபவம், திருக்கரசை புராணம், கோணமலை அந்தாதி மற்றும் கல்வெட்டுக்களான : கந்தளாய் கல்வெட்டு, குச்சவெளி கல்வெட்டு, திரியாய் கல்வெட்டு, கங்குவேலி கல்வெட்டு, பளமோட்டைச் சாசனம், தென் இந்திய கோவில் சாசனம் ஆகியவற்றினால் புகழ்ந்துரைக்கப்படும் அந்த மன்னன் யார்?

தட்ஷண கைலாச புராணத்தில் குளக்கோட்டன் பற்றிக் கூறும் செய்தியை நோக்கின், இப்புராணத்தில் கோணேசர் ஆலய திருப்பணிகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்கள் இருவரின் காலங்களுக்குரிய செய்திகள் சொல்லப்பட்டிருக் கின்றது. அதில் வரராமதேவன் என்பவன் பற்றிய புராணக் கதையில் கூறப்பட்டிருக்கிற விடயமாவது தனது புரோகிதர்கள் மூலம் ஆலயங்களின் பெருமைகளை கேட்டறியும் வழக்கம் கொண்ட வரராம தேவன் என்னும் சோழ மன்னன் தட்ஷண கைலாய (கோணேஷர்) மான்மீயத்தைக் கேட்டதும், கோகர்ணம் மீது அபிமானம் உண்டாகி, தரிசிக்க உள்ளம் கொண்டு தனது மகன் சோடங்கனிடம் அரச பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, செம்பியா கோள்கடல் வழியாக மந்திரி பரிசனங்களுடன் கோணேஷ்வரத்தை தரிசித்து திருப்பணி செய்தான் என தட்ஷணகைலாச புராணம் கூறுகிறது.

"ஆனால் கோணேஷர் கல்வெட்டில் கூறப்பட்ட செய்தியின்படி மனுநீதிகண்ட சோழன் மரபில் வந்த வரராமதேவன் எனும் மன்னனுடைய மகனான குளக்கோட்டன் தென்னிந்தியாவிலுள்ள மருங்கூரிலிருந்து குடிகளை மரக்கலத்தில் ஏற்றி வந்து திருகோணமலை நகரில் குடியேற்றி பல்வேறு திருப்பணிகளை செய்து வந்தானென்றும், உன்னரசகிரியில் (திருக்கோவில்) ஆட்சிபுரிந்த ஆடக சௌந்தரியை மணம் புரிந்து, அவளின் உதவியுடன் அவளிடம் ஏவல் புரிந்த பூதங்களைக் கொண்டு கந்தளாய்க் குளத்தைக் கட்டி கோணேஷர் கோவிலுக்கு தானியமாக வயல்களை (நிவந்தமாக) வழங்கியதோடு தென்னிந்தியாவிலிருந்து தொழும்பர்களைத் தருவித்துக் குடியமர்த்தினான் என கல்வெட்டு செய்தி கூறுகிறது.

இதே கதையை மச்சேந்திர புராணம் பின்வருமாறு கூறுகிறது. வரராம தேவன் என்னும் தென்னிந்திய மன்னன் கோணேஷ்வரத்தின் பெருமையைக் கேள்வியுற்று திருமலை வந்து தூபியுடன் கோவில் கட்டி பூசை முதலியவற்றை நடத்தி, திருப்பணிக்கு கொண்டுவந்த விலைமதிப்பற்ற பொன்னை கிணற்றுக்குள் புதைத்து வைத்துவிட்டு மகனுக்கு இச்செய்தியை அறிவிக்கும்படி தனது மந்திரி பிரதானிகளுக்கு கூறிவிட்டு திருமலயைில் சிவபதம் அடைந்தான் என்றும், இதைக் கேள்வியுற்ற, மகன் குளக்கோட்டன் இலங்கை வந்து கோணேஷர் ஆலய திருப்பணிகளை செய்தான் என்று மச்சேந்திர புராணம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணாசல வைபவம் எனும் நூல் பின்வருமாறு கூறுகிறது. சோழ மனுவம்ஷத்தில் பிறந்த வரராமதேவன் என்பவன் திருகோணமலை வந்து கோணேஸ்வர ஆலயத்துக்கு திருப்பணி செய்தான் என்றும், தாய்நாடு திரும்பும் வேளையில் அதிக திரவியங்களை திருப்பணிக்காக விட்டுச் சென்றான் என்றும், இவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு நெற்றியில் கொம்பு காணப்பட்ட காரணத்தினால் குளக்கோட்டன் என நாமம் சூட்டினான் என்றும் தந்தை வரராமதேவன் ஆலயத்திற்குச் செய்த திருப் பணியையும், அவன் வைத்துச் சென்ற திரவியம் பற்றியும் கேள்வியுற்ற குளக்கோட்டன் திருமலை வைந்து உன்னரசு கிரியை (திருக்கோவில்) ஆட்சி செய்த மனுநேய கயவாகுவின் வளர்ப்புமகள் ஆடகசௌந்தரியை மணம்புரிந்து திருமலை தொடக்கம் திருக்கோவில்வரை பல்வேறு திருப்பணிகள் செய்தான் என்று திருக்கோணாஷல வைபவம் கூறுகிறது.

மட்டக்களப்பு மான்மியம் இதே கதையை இவ்வாறு கூறப்படுகிறது. மனுநேய கயவாகு (மேகவர்ணன்) கலி வருடம் 3150 கி.பி. 48 உன்னரசு கிரி ராச்சியத்தை ஆண்டான். பேழையில் வந்த குழந்தையைக் கண்டு எடுத்து ஆடகசௌந்தரி எனப் பெயர் இட்டு வளர்த்து வந்த வேளையில், திருப்பணி பல செய்து வந்தான். அவனை இவள் மணம்முடித்து கந்தளாய்க் குளத்தை அவளின் உதவியுடன் கட்டினான். (இந்து ஆலயங்களை அழித்த மகாசேனன் இவனல்லன்) என மட்டக்கப்பு மான்மியம் கூறுகிறது.

யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூல் இவ் வரலாற்றை பின்வருமாறு கூறுகிறது. மனுநீதிகண்டசோழன் பரம்பரையில வந்த சோழன் மகன் குளக்கோட்டன் சாலி வாகன சகாப்தம் 358ல் (கி.பி. 436 இல்) திருகோணமலை வந்து திருப்பணிகள் செய்து கோணேஷர் ஆலய நித்திய கிரியைகள் தடங்கலின்றி நடைபெற ஏழு கிராமங்களில் வயல்களை நிவந்தம் அளித்து கணக்கு வழக்குகளை மேற்பார்வை செய்ய வன்னியரை நியமித்து நாடு திரும்பினான். இவன் சோழ நாட்டவன் என்று அந்நூல் கூறுகிறது.


மேற்கூறப்பட்ட விவரணங்கள் கற்பனைகள் கொண்டவையா உண்மையானவையா என்ற சந்தேகங்கள் எழுகின்றபோதும், இக் கதைகளுக்கிடையே ஒருமித்த தன்மை காணப்படுவது உண்மை. எனவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தளாய் குளத்தின் இன்றைய தோற்றம்



தம்பலகமம் ஆதி கோணேஸ்வரர் ஆலயம்

சோழங்கன் என்ற புனைப்பெயர் கொண்ட குளக்கோட்டன் சோழ வம்சத்தை சேர்ந்தவன். தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வந்த ஆற்றல்மிக்க மன்னன் என்ற உண்மை புலனாகிறது. இவன் குளமும் கோட்டமும் கொண்ட காரணத்தினால் குளக்கோட்டன் என்ற காரணப்பெயர் இவனுக்கு நிலைத்திருக்கலாம்.

இவ்வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு பார்க்கின்ற போது மட்டக்களப்பு மான்மியத்தில் வரும் மகாசேன மன்னனே குளக்கோட்டன் என்ற சிறப்புப் பெயர் பெற்றவன் என்பது பொருத்தமாகக் காணப்படுகிறது. ஆனால் தட்ஷண சைலாச புராணத்தில் மகாசேனன் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை. குளக்கோட்டன் என்ற பெயரே இடம்பெறுகிறது. இப்புராணத்தில் புவனேகுபாகு மனுநேயகயவாகு ஆகிய இரு மன்னர்களும் திருக்கோணேஷ்வரத்திற்குச் செய்த தானதர்மங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இவ்விரு மன்னர்கள் பற்றி மட்டக்களப்பு மான்மியம் கோணேஷர் கல்வெட்டு தட்ஷணகைலாசபுராணம் ஆகிய மூன்று நூல்களும் ஒரே மாதிரியாக கூறுவதனால் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளலாம். இவ்வாறான ஆதாரங்களின்படி, பாலசிருங்க மகராஜா ஆகிய குளக்கோட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியப்தம் 512 நிகழுங் காலத்தில் இலங்காபுரியின் கிழக் குக் கரையில் அமைந் திருக்கும் திருக்கோ ணேஸ்வரர் ஆலயத்தை வந்தடைந்து அவ்வாலய திருப்பணிகளை ஆற்றி முடித்ததுடன் தம்பலகாமம், கந்தளாய்க் குளம் , வெருகல் ஆலயம், கொக்கட்டிச்சோலை, சங்கமங்கண்டி, திருக்கோவில் ஆகிய இடங்களில் பல்வேறு திருப்பணிகளை செய்து முடித்தான் என வரலாறுகள் கூறுகின்றன.

கோணேஸ்வர ஆலய திருப்பணிகளை செய்து முடித்த குளக்கோட்டன், அவ்வாலயத்தின் நித்திய நைமித்திய , பூசைகளும் ஆலய நிர்வாகமும், ஒழுங்குமுறை தவறாது நடைபெற பல நியதிகளை உருவாக்கி, அதனை செப்பேட்டு பெரிய வளமைப் பத்தியல் எழுதி வைத்தான். இந்த செப்பேட்டுச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டே ஆலயத் திருப்பணி அதன் வரலாறு சட்டதிட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய கல்வெட்டை கவிராஜ வரோதயர் பாடினார். இதுவே கோணேஷர் கல்வெட்டாகும்.

கோணேஸர் கல்வெட்டில் குறிப்பிட்டபடி அவனாற்றிய பணிகள் பின்வருமாறு,

1) ஆலய திருப்பணி
2) நிலபுலங்கள் தானம் பண்ணியமை
3) குளம் அமைத்தமை
4) குடிமக்களைக் குடியேற்றியமை
5) மக்களின் கடமைகளை வரையறுத்தமை

**ஆலயத் திருப்பணி :**

இக்கட்டுரையில் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல், (கி.மு.5000 ஆண்டுகளுக்கு முன்னர்) மூன்றாவது கடல்கோளின் போது கோணேஷர் கோவில் அழிந்தது. இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகையில், டெனட் என்ற ஆராய்ச்சியாளர் கூற்றுப்படி, "மூன்றாவது கடல்கோளின் போது பெரியதொரு ஆலயம் கடலில் மூழ்கியுள்ளதென" குறிப்பிட்டுள்ளார். அது கோணேஷர் ஆலயமே என சான்றுகள் கூறுகின்றன. கடல்கோள் ஏற்பட்டதன் பின் மூன்று ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மலையடி வாரம், மலையுச்சி, மலையின் நடுப்பக்கம். இம் மூன்று ஆலயங்களையும் நிர்மாணித்தவன் குளக் கோட்ட மன்னாகவே இருக்க வேண்டும். கிறிஸ்து பிறப்பதற்கு 1300 வருடங்களுக்கு முன் இவ்வாலயம் இவனால் கட்டப்பட்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு ஆதாரமாக குவரோஸ் என்னும் பாதிரியார் தான் எழுதிய *The temporal and spiritual conquest of Ceylon (fr. De.queyroz)* குறிப்பின்படி, மனுராஜா என்னும் இலங்கைச் சக்கரவர்த்தி கோணேஷர் கோவிலைக் கட்டியதாகவும், அவனது காலம் கி.மு. 1300 எனவும், பிற்காலத்தில் பறங்கியர் இக்கோவிலை அழிப்பார்கள். அதன் பின்பு இக்கோவிலை எவருமே கட்டியெழுப்பமாட்டார்கள் என்றும் குளக்கோட்டனை மனுவேந்தன், அல்லது மனுநீதிகண்ட சோழன் என்று குறிப்பிட்டுள்ளார்.

குளக்கோட்ட மன்னனால் நிறுவப்பட்ட கோணேசர் ஆலயம் 1000 தூண்கள் கொண்ட ஒரு மாபெரும் ஆலயமாகும். அக்கோயில் கோட்டம், கோபுரம், மதில் தீர்த்தக் குளம் என்ற அமைப்புக் கொண்டு ஆகம விதிப்படி குளக்கோட்டனால் அமைக்கப்பட்டதென்றும் அமைக்கப்பட்ட கோவில் 1200 யார் நீளமும் 80 யார் அகலமும் கொண்டது. ஆதிமூலத்தில் சிறந்த சிற்ப வேலை செய்யப்பட்ட ஒரு விமானம் அத்துடன் கருங்கற்களால் நிர்மாணிக்கப் பட்ட அர்த்த மண்டபம் , மஹா மண்டபம் ஆகியன அமைக்கப்பட்டிருந்தன. ஆலய முன்றலில் ஆயிரங்கால் மண்டபமும் மண்டபத்துக்கு முன்பக்கம் ஒருபக்கம் அழகிய 500 கற்தூண்களும் மறுபக்கம் அழகிய 500 கற் தூண்களும் ஒவ்வொரு தூண்களின் தலைக்கு மேலாக ஒவ்வொரு விளக்குகளும் அமைக்கப்பட்டிருந்தன. இவ் விளக்குகள் 7 அடி உயரமும், 11 மூக்குத் தலையையும் கொண்டவை. மண்டபத்தின் வாயில் நடுவே விசித்திர வேலை செய்யப்பட்ட 5 அடி உயரமுள்ள ஒரு வெள்ளி விளக்கு. அதற்கு தாமரை மொட்டுப் போன்ற நுனி . அத்தாமரை மொட்டில் சூரிய பிரகாசமுள்ள ஒரு பெரிய வைரம். (கயபாகு அரசனால் கொடுக்கப்பட்டது) தென் மேற்குப் பகுதியில் பாவநாசச்சுனை அமைந்திருந்தது. இச்சுனைக்கு 24 அடி நீளமும், 17 அடி அகலமும், 2 அடி உயரமும் கொண்ட சுவர் கட்டப்பட்டிருந்தது.

முதலாம் பிரகாரத்தில் ஏழுவகைக் கிணறுகள் வடக்குப் பக்கத்தில் கட்டப்பட்டிருந்தன. இக் கிணறுகளில் தேங்காய், இலுப்பெண்ணை, பசு நெய் எருமை நெய் ஆகியன நிரப்பப்பட்டிருக்கும். கோபுரம் மிக உயரமாக இருந்தது. 500 மைல்களுக்கு அப்பால் வரும் கப்பல் பிரயாணிகளுக்கு தெரியும் வண்ணம் அதன் மேல் பொன்னால் செய்யப்பட்ட 5 கலசம் பொருத்தப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கோட்டன் கோணேஷருக்கு தெப்பத்திருவிழா நடத்துவதற்கு ஒரு தெப்பக்குளத்தைக் கட்டினான். அதற்கு தெற்குப்புறமாக கோணேசரின் தலவிருட்சமாகிய (சுவேதகூவிளம்) வெள்ளை வில்வமரம் இருந்தது. இது ஐந்து இலைகள் கொண்டது. சிவனின் ஐந்து தொழிலை ஆதாரமாக உணர்த்துகின்றது.

வெள்ளை வில்வ விருச்சத்தின் கீழ் தெப்பத் திருவிழா நடைபெறும் காலத்தில் கோணேசர் ஆலயத்திலிருந்து எழுந்தருளி வந்து வீற்றிருக்க ஒரு மண்டபம் கட்டினான் என்றும், பின் அம் மண்டபத்தை இலிங்கப்பிரதிஸ்டை செய்து வெள்ளை வில்வத்து கோணேசர் கோவில் எனப் பெய -ரிட்டு அழைத்தான். அக்கோவிலே தற்போது மின்சார நிலைய வீதியில் அமைந்திருக்கும் ஆலயம் ஆகும்.



திருகோணமலை மின்சார நிலைய வீதியில் உள்ள வெள்ளை வில்வ பத்திர கோவில்

வெள்ளை வில்வபத்திர கோணேசர் ஆலயம் பற்றிய ஒரு கர்ண பரம்பரைக் கதையுண்டு. மலை எடுக்க முயன்ற இராவணனை தனது பெரு விரலால் சிவன் அமிழ்த்தியதும், கடலில் அமிழ்ந்த அவன் மீண்டும் எழுந்து வந்து சாமபேதம் பாடி இலிங்கம் பெற்றுவரும் போது, இலிங்கத்தைப் பறிக்க பிராமண வடிவம் கொண்டு வந்த விஷ்ணுவிடம் "நீர் யார் ?" என இராவணன் வினவ, "நான் ஒரு பிராமணன். இலங்காபுரி சென்று வருகிறேன்" என்று கூறினான். இராவணேசன் அப் பிராமணனிடம் இலங்காபுரியில் என்ன விசேடம் என வினவ, "இலங்கா நேசன் என்ற மன்னன் சமுத்திரத்தில் அமிழ்ந்து இறந்தான் என்ற செய்தியை அவன் தாய் கேள்வியுற்று அவனது தாயார் இறந்துவிட்டாள்" என பிராமண வடிவம் கொண்ட விஷ்ணு கூற, தானே இலங்கா நேசன் எனக் கூறி இராவணன் புலம்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமண வடிவில் வந்த விஷ்ணு இராவணனிடம் "கையில் இலிங்கத்தை வைத்துக்கொண்டு புலம்பலாகாது. அதை என்னிடம் தாருங்கள்" என்று கேட்க, இராவணன் லிங்கத்தை விஷ்ணுவிடம் கொடுக்க, அதை வாங்கிய விஷ்ணு கோணேஷ்வரத்தின் இறுதிக் திக்கில் வெள்ளை வில்வத்தின் கீழ் அந்த லிங்கத்தை வைத்தார். பௌர்ணமி தினம் ஒளிவீச, தேவர்கள் ஓத சாயங்காலம் பிரதோஷ காலத்தில் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த இலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட இடமே வெள்ளை வில்வபத்திர கோணேஷ்வரமாகும்.

அந்நகரில் அமர்ந்தங்கன் இனிதுமேலி
ஆழி புடைசூழ்ந்து ஒலிக்கும்
ஈழுந்தன்னில்மன்னு
திருகோணமலை மகிழ்ந்து
செங்கண் மழவிடையர் தமைப்
போற்றி - வணங்கிப்பாடி

சேக்கிழார் பாட்டு.

குளக்கோட்டன் கோணேஸ்வர கோவில் திருப்பணி முடித்து மகோற்சவ விழா நடத்தினான். அத்துடன் மஹா சிவராத்திரி காலத்தில் கோணேஸர் உலா வந்து போகும் வேளையில் குளக்கோட்டன் இவ்வாலயத்தில் ஒரு நாள் தங்கிப் போனான் என்றும் ஐதீகம் கூறுகிறது.

இவ்வாலயத்துக்கு அருகிலுள்ள தெப்பக் குளத்தில் (மாங்கனாய்) தெப்பத் திருவிழாவின் போது குளக்கோட்டன் கலந்து கொண்டதாக வும், இன்னொரு கதை கூறுகின்றது. போர்த்துக் -கீசர் திரவியம் எடுப்ப -தற்காக இவ்வாலயத்



வில்ப பத்திரர் ஆலயத்திலுள்ள போத்துகீசரால் சிதைக்கப்பட்ட சிவன் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-தையும் அழித்திருக் கலாம் என்று கூறப்படுவதற்கு ஏற்ற முறையில் மின்சார நிலைய வீதியில் அமைந்திருக்கும் வெள்ளை வில்வபத்திர ஆலயத்தில் அழிவு கொண்ட உடைந்த நிலையிலுள்ள உருவச் சிலைகளும் தூணின் பாகமும் கொண்டு ஊகிக்க முடிகிறது.

இவ்வாலயத்திற்கு அருகிலிருந்த தெப்பக்குளம் பிற்காலத்தில் ஆங்கில வீரர்கள் தமது குதிரைகளை குளிப்பாட்டும் இடமாக பாவிக்கப்பட்ட -தாகவும் பிற்காலத்தில் இது தூர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (1960 ஆம் ஆண்டுக்குப் பின் இக்குளம் நகர சபையால் முழுமையாக தூர்க்கப்பட்டு விட்டது.)

கோவில் திருப்பணியைச் செய்து கொண்டிருந்த குளக்கோட்ட மன்னன் இத்திருப்பணிக்காக இந்தியாவிலுள்ள காரைக்கால், மருங்கூர் சிந்து நாடு ஆகிய இடங்களிலிருந்து குடிகளை வரவழைத்து, திருமலையில் குடி அமர்த்தினான். இக்குடிகளை பராமரிக்க வன்னிமைகளை கட்டுக்குளம் பற்று, கொட்டியாரப்பற்று, தம்பலகாமம் பற்று ஆகிய இடங்களில் நியமித்துக் கொண்டான்.

ஆலயத் திருப்பணிக்கென குளக்கோட்டனால் கொண்டுவரப்பட்ட தொழும்பர்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் தொண்டுகளையும் வரையறை செய்தான். அதன் நிமித்தம் 1) தானதத்தர் - ஆலயவரவு, செலவுகளைக் கவனித்தல், 2) வரிப்பத்தார் - பட்டாடை செய்தல் புஸ்பம் எடுத்தல், மெழுகுதல், 3) இவ்வாறே குயவன், நாவிதன், ஏகாலி, வள்ளுவன் முதலியோரை நியமித்து அவர்கள் செய்ய வேண்டிய பணிகள் அவனால் வரையறை செய்யப்பட்டிருந்தது. இவர்களுக்கென நிவந்தங்கள் (காணிகள்) வழங்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க, கோணேஷர் ஆலயத் திருப்பணியைத் தொடர்ந்து மூதூர், கந்தளாய், திரியாய் முதலிய பழம்பெரும் கோவில்களிலும் திருப்பணியை செய்து முடித்தான் என வரலாறுகள் கூறுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரில் உள்ள ஆலயங்களான மூதூர் பிள்ளையார் கோயில், பள்ளிக்குடியிருப்பு பிள்ளையார் கோயில், சம்பூர் பத்திரகாளி அம்மன் கோயில், பிள்ளையார் கோயில், கூனித்தீவு பிள்ளையார் கோயில், சேனையூர் வருணகுல பிள்ளையார் கோயில், நாகதம்பிரான் கோயில், வீரபத்திரன் கோயில், மல்லிகைத்தீவு சித்தி விநாயகர் கோயில் என வரலாறுகள் கூறுகின்ற போதும் குளக்கோட்டனின் திருப்பணி இவ் ஆலயத்திற்கென அடையாளம் காணுவது கடினமாகவுள்ளது. (இதேபோன்றே கந்தளாய் கட்டளைப் பிள்ளையார் கோயில் போட்டங்காடு கந்தளாய் சிவன் கோயில் (கந்தளாய் சோழீஸ்வரம்) திரியாய் வரதவிநாயகர் கோயில் என பல்வேறு ஆலயங்கள் இருக்கின்றன)

## நிலபுலங்கள் தானம் பண்ணியமை :

ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்த குளக்கோட்ட மன்னன் 2700 அவண் நெல் விளைவிப்பதற்கு ஏற்ற முறையில் அல்லைக்குளம், வெண்டரசன் குளம் என்பவற்றைச் சூழவுள்ள காடுகளை அழித்து நல்விளைச்சல் தரக் கூடிய பெரிய ஏழு வயல்வெளிகளை உண்டாக்கினான் என யாழ்ப்பாண வைபவ மாலை (1879) கூறுகிறது *(C.BRITO. P 6.7)*. இந்த வயல்வெளிகளில் இந்தியாவில் இருந்து வரவழைத்த வன்னியர்களைக் குடி அமர்த்தி வருமானங் - கள் கோயிலுக்கு கொடுக்கப்பட வேண்டுமென கடுமையான கட்டளையிட்டான் என யாழ்ப்பாண வைபவ மாலை கூறுகின்றது.



அல்லைக்குளம் (தோப்பூர்)

அதன் நிமித்தம் தம்பலகமம்பற்று, கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளம் பற்று ஆகிய இடங்களிலிருந்து நெல் விளைவிக்கப்பட்டு அவை கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைத் தீவில் இருந்து மல்லிகைப் பூவும் நெய்த்தீவிலிருந்து நெய்யும் கட்டைபறிச்சானிலிருந்து சந்தனக் கட்டையும் அனுப்பியும், சேனையூரிலிருந்து வாழைப்பழமும் வெற்றிலையும், திரியாயில் இருந்து தாமரை மலர்களும் தாமரைத் திரியும், குச்சவெளியிலிருந்து யாகக் குச்சுக்கள் தருப்பைகள் ஆகியவை கொண்டுவரப்பட்டன. யாகசாம்பர் கொட்டிய இடம் சாம்பல்தீவு என்றும் பல்வேறு கிராமங்கள் குளக்கோட்ட மன்னனால் உருவாக்கப்பட்டுள்ளன என்பது புராண வரலாறு.

## குளம் அமைத்தமை :

குளக்கோட்ட மன்னன் செய்த பணிகளில் விவசாயத்தை மையப்படுத்தி அவனால் அமைக்கப்பட்ட குளங்கள் அவனை இன்றுவரை நினைவு கொள்ள வைக்கின்றன. மூதூர் பிரதேசத்தை சேர்ந்த அல்லை, கந்தளாய், கிளிவெட்டி, சேருவில, அலிஒலுவ ஆகிய கிராமங்களை ஒன்றிணைக்கும் வகையில் பாரிய விவசாய நிலங்களை உருவாக்கிய குளக்கோட்ட மன்னன் அந்த நிலங்களை நீரோட்ட நிலங்களாக மாற்ற பாரிய குளங்களை நிர்மாணித்தான் என புராண வரலாறுகள் கூறுகின்றன. 2700 அவண் நெல் விளைவிக்க பல காடுகளை அழித்து தரிசு நிலங்களைப் பயன்படுத்தி நெல்விளைவிக்க ஆவன செய்ய மன்னன் இந்த நெல் விளைநிலங்களுக்கு நீர்ப்பாய்ச்ச பின்வரும் குளங்களை வெட்டுவித்தான்.

## அல்லைக் குளம் (தோப்பூர்) :

குளக்கோட்ட மன்னனால் அமைக்கப்பட்ட நீர்ப்பாசன குளமே அல்லைக் குளம் என அழைக்கப்பட்டது. கிளிவெட்டி, சேருவில, அலி ஒலுவ, இலங்கைத்துறை ஆகிய இடங்களுக்கு நடுவே அமைக்கப்பட்ட குளமே அல்லைக்குளமாகும். சுமார் 8 சதுர கிலோமீற்றர் நீளம் கொண்ட வடிச்சற் குளம் இது. 15,000 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சக்கூடிய அளவிற்கு நீர் வளம் கொண்டதாக இதனை நிர்மாணித்திருந்தான். மாவிலாறு எனும் ஆறு வந்து விழும் இந்தக் குளத்தை அவன் வடிவமைத்தமை மிக தீர்க்கதரிசனமான பொருளாதார திட்டமென தற்காலத்தவர் வியக்கும் அளவிற்கு அது அவனால் உருவாக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லைக் குளத்தைச் சுற்றி தற்போது அமைந்துள்ள கிராமங்களான தோப்பூர் கிராமத்தில் முஸ்லிம் மக்களும் கிளிவெட்டி பகுதியில் தமிழ் மக்களும் செல்வநகர் பிரதேசத்தில் முஸ்லிம்களும் சேருவில பகுதியில் சிங்களவரும் சுமார் 5000 குடும்பங்கள் இக்குளத்தின் நீர்வளத்தைப் பயன்படுத்தக்கூடிய அளவு விஸ்தீரணம் கொண்டது.

## வெண்டரசன் குளம் :

குளக்கோட்ட மன்னன் உருவாக்கிய இன்னொரு குளம் வெண்டரசன் குளமாகும். இது கந்தளாய் குளத்திற்கு அருகே அக்குளத்தை அணைகட்டி அமைந்திருக்கும் வடிச்சல் நிலம் ஆகும். வெண்டரசன் குளத்தையும் அல்லைக் குளத்தையும் நிர்மாணித்ததும், தன்னால் உண்டாக்கப்பட்ட வயல்களுக்கும் அதன் நீர்ப்பாசனத்திற்கும் நீர் போதாமையினால் மிகப் பெரிய குளம் ஒன்றை அமைக்க வேண்டும் எனக் கனவு கண்டான். அக் குளமே கந்தளாய்க் குளமாகும்.

## கந்தளாய்க்குளம்

கோணேசர் கோவில் திருப்பணி முடிந்தபின், கோவிலின் நித்திய, நைமித்திய பணிகளைச் செய்ய வேண்டுமானால் வயல் நிலங்களை உருவாக்கி, அதிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானங்களை கொண்டு கோவில் பணிகளை செய்ய முடியுமென கனவுகண்ட மன்னன் தரிசு நிலங்களாக இருந்தவையை வயல் நிலங்களாக மாற்றிய போதும் அவற்றுக்கு நீர் பாய்ச்ச ஏலவே நிறுவப்பட்ட அல்லைக்குளம், வெண்டரசன் குளங்களின் நீரளவு மட்டம் போதாத நிலையில் பாரிய குளம் ஒன்றை நிறுவவேண்டுமென எண்ணியுள்ளான்.


கந்தளாய் குளத்தின் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது கனவின் வெளிப்பாடாக திருமலை, வெருகல், தம்பை நகர், கொட்டியாபுரம், தட்சணகிரி, திரியாய் முதலிய தனது இராட்சியத்திற்குட்பட்ட கந்தளாயில் அதாவது ஏலவே வெண்டரசன் குளத்தை நிறுவிய இடத்தருகே இயற்கையாக மலைகள் சூழ்ந்த கந்தளாய் பிரதேசத்தை குளங்கட்ட குளக்கோட்ட மன்னன் தேர்ந்தெடுத்தான். அதற்குரிய பூர்வாங்க வேலைகளை மன்னன் தனது மந்திரி பிரதானிகளைக் கொண்டு ஆரம்பித்த வேளையில்தான் எதிர்பாராத சம்பவமொன்று நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

திருக்கோவில், உகந்தை, பாணமை, தம்பிலுவில், பொத்துவில் முதலான இடங்களை உள்ளடக்கிய உன்னரசுகிரியில் இருந்து கொண்டு மட்டக்களப்பு இராட்சியத்தை மனுநேயபாகு என்ற பெயர்கொண்ட மன்னன் அக்காலத்தில் ஆண்டு வந்துள்ளான். இவனுடைய ராட்சியம் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது எனக் கூறப்படுகின்றது.

அவனுடைய வளர்ப்பு மகளாகிய ஆடக சவுந்தரி உன்னரசுகிரியில் இருந்து கொண்டு மூன்று பெரும் மாநிலங்களையும் ஆண்டுவந்த வேளையில் தான் குளக்கோட்ட மன்னன் கோணேஸ்வர ஆலயத்தின் திருப்பணிகள் முடித்தபின் குளங்கட்டும் திருப்பணிகளை மேற்கொண்ட செய்தியை தனது தூதுவர்கள் மூலம் ஆடகசவுந்தரி கேள்வியுறுகிறாள். இச்செய்தியை கேள்வியுற்ற அவள், தனது முதல் மந்திரியை அழைத்து பின்வருமாறு கட்டளை இடுகிறாள். "மந்திரியாரே! வைதுலிக சைவன் ஒருவன் தட்சணகிரியில் (திருகோணமலை) சிவாலயங்களைக் கட்டி, அங்கு ஆட்சிக்கு அடிகோலுகிறான். நமது அனுமதியின்றி கட்டிய அக்கோவில்களை இடித்துக் கடலில் தள்ளி விட்டு அவனையும், அவனது துணைவரையும் துரத்திவிட்டு வாருங்கள்" எனக் கட்டளையிடுகிறாள்.

## ஆடகசவுந்தரி வரலாறு :

ஆடகசவுந்தரியின் படைகள் திருகோணமலைக்கு வந்தனவா? என்ன நடந்தது என்பதை அறிவதற்கு முன் இந்த ஆடகசவுந்தரி யார்? என்பதை சுருக்கமாக பார்ப்போம். ஆடகசவுந்தரி கலிங்கதேசத்தை ஆண்ட அசோக சுந்தரன் எனும் அரசனுக்கும், மனோன்மணி சுந்தரிக்கும் மகளாகப் பிறந்தவள். அவள் பிறந்தபோது சோதிடர்கள் அரசனை பின்வருமாறு எச்சரித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இக்குழந்தை பெண் குழந்தையாகப் பிறந்தாலும் நாட்டை ஆளக் கூடிய இராஜயோகத்துடன் பிறந்துள்ளது. இக்குழந்தையை இந்த மாளி - கையில் வைத்திருந்தால் அரசனிற்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டு இராட்சியமும் அழிந்துபோய்விடும்" என எச்சரித்ததைக் கேட்டுப் பயந்த மன்னன் அக் குழந்தையை பேழை ஒன்றில் வைத்துக் கடலில் விட்டான். அப்பேழை இலங்கையின் தென்கிழக்கு கரையில் ஒதுங்கியது. உன்னரசு கிரியை ஆட்சிபுரிந்து கொண்டிருந்த குழந்தைப் பாக்கியமற்ற மனுநேயபாகு பேழையில் கண்டெடுத்த அக்குழந்தைக்கு "ஆடகசவுந்தரி" எனப் பெயர் சூட்டி மிகச் செல்வத்துடன் வளர்த்து வந்தான். அவள் பருவமடைந்தவுடன் தனது இராட்சியத்தை ஒப்படைத்து **"மனுநீதி தவறாமல் ஆள்வாய்"** என நீதி புகட்டியதுடன் ராட்சிய பரிபாலனங்களைச் செய்யும்போது தேவை ஏற்படின் பூதங்களை அழைத்து உதவிபெற அவளுக்கு பூதங்களை அழைக்கும் மந்திரங்களையும் உபதேசித்தான். "ஆடக சவுந்தரி ஆட்சி ஏற்ற சில காலங்களின் பின் மன்னன் மரித்தவுடன் விசித்திர யூகி என்னும் மந்திரியின் உதவியுடன் அவள் அரசாட்சி புரிந்து வந்தாள். இவ்வேளையில் தான் குளக்கோட்ட மன்னன் கந்தளாய்க் குளத்தையும் கட்டிக்கொண்டிருக்கின்றான் என்ற செய்தி கேட்டு, தனது மந்திரி விசித்திர யூகி தலைமையில் படைகளை அனுப்பி குளக்கோட்ட மன்னனை கைது செய்து வரும்படி அனுப்புகின்றாள் ஆடகசவுந்தரி.

தனது படை பலத்தையும் ஆளணிப் பலத்தையும் பயன்படுத்தி குளக்கோட்டன் கந்தளாய் குளத்தை நிர்மாணித்துக் கொண்டிருந்த வேளையில் விசித்திரயூகி தலைமையில் வந்த படையினர் குளக்கோட்ட மன்னனால் திருப்பணி செய்யப்பட்ட கோணேசர் கோவிலையும் மற்றும் சிறப்புக்களையும் கண்டு ஆச்சரியமடைந்து அவன் வீற்றிருக்கும் மணி மண்டபம் அடைந்து ஆடகசவுந்தரி தன்னை அனுப்பியதன் காரணத்தைக் கூறிவிடாது மாறுபட்ட முறையில் "அரசே தாங்கள் இவ்விடத்தில் எவரும் செய்ய முடியாத கோயிற் திருப்பணிகளைச் செய்து முடித்துள்ளீர்கள் என்று கேள்வியுற்று எங்கள் அரசி ஆடகசவுந்தரி தாங்கள் செய்து முடிக்கவேண்டிய வேலைகளுக்கு எவ்வித உதவி வேண்டுமென தாங்களை வினாவிவரும்படி என்னை அனுப்பி உள்ளாள்" எனக் கூறியது கேட்டு குளக்கோட்ட மன்னன் மிகுந்த சந்தோஷம் அடைந்தான். தனது விருப்பத்தையும், திருப்பணியையும் பின்வருமாறு உரைக்கும்படி மந்திரியிடம் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோணைநாயகருக்கு எக்காலத்திலும் நித்திய நைமித்தியங்களும் குறைவு வராமல் செய்ய வேண்டுமென்பதற்காக சில குளங்களையும், வயல் வெளிகளையும் அமைத்தேன்.

நான் அமைத்த குளங்களின் நீர் போதாமையால் எப்போதும் நீர் குறையாக் குளம் ஒன்று கட்டவேண்டுமென்பதற்காக கந்தளாய் யென்னும் பிரதேசத்தில் குளத்தை நிர்மாணித்துக் கொள்ள எண்ணம் கொண்டேன். எண்ணத்தை நிறைவு செய்யவே முயற்சி செய்கிறேன்" என மன்னன் குளக்கோட்டன் கூறியது கேட்டு மனம் மகிழ்ந்த மதியூகியாகிய மந்திரி "மன்னா நீர் சொல்லிய வண்ணம் திருகோணமலைக்கு தெற்குப் புறமாக கந்தளாயில் இரண்டு பெரிய மலைகள் உண்டு. அவ்விரு மலைகளையும் ஒன்றாகப் பொருத்தும்படி இடையிலோர் அணை கட்டவேண்டும். அவ்வாறு செய்யுமிடத்து பாரிய குளமொன்றை நிர்மாணம் செய்ய முடியும்" என தனது ஆலோசனையை நல்கினான் மந்திரி விசித்திரயூகி . இதுகேட்டு, ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்த குளக்கோட்ட மகாராஜா "அவ்வாறான -தொரு பாரிய குளத்தை மனிதகுலம் கொண்டு அமைப்பது என்பது ஆகாத காரியமென" தனது சந்தேகத்தை மந்திரியிடம் தெரிவித்த வேளையில் மந்திரி மீண்டும் தனது ஆலோசனையொன்றை மன்னனுக்கு நல்கினான்.

"இளவரசியின் தந்தை மனுநேய கயபாகு மன்னன் இயற்கை எய்தும் தறுவாயில் ஆடகசவுந்தரிக்கு பாரிய வேலைகளை உனது இராட்சியத்தில் செய்யும் வேளை நான் கூறும் மந்திரங்களை உச்சரித்து பூதங்களை வரவழைத்து, அவ் வேலைகளை முடிக்கமுடியுமென பூதங்களை அழைக்கும் மந்திரத்தை சொல்லிச் சென்றுள்ளார். நீவிர் எமது இளவரசியை மணம் முடிப்பீர்களானால் உங்கள் கனவு நனவாகும்" என ஆலோசனை கூறியது கேட்டு மகிழ்ந்த மகாராஜா, அவ்வாறு ஆடகசவுந்தரி குளத்தைக் கட்டி, அக்குளத்தால் நீர் பாய்ந்து நெல் விளையக் கூடிய வயல்களையும் திருத்தித் தரும் பட்சத்தில் அரச குமாரியை மணம் முடிப்பேன் என வாக்குப்பண்ணி தனது கணையாழியையும் கொடுத்து அனுப்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதை திருகோணமலை வைபவம் எனும் நூல் கூறும் வரலா - றாகும். ஆனால் மட்டக்களப்பு மான்மியம் கூறும் சரித்திரம் சிறிது வேறுபடுகிறது. மனுநேயபாகுவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த திருக்கோவில், உகந்தை, பாணமை. தம்பிலுவில், பொத்துவில் முதலான இடங்களை உள்ளடக்கிய உன்னரசகிரி இராட்சியத்தை ஆண்டுகொண்டு இருந்த ஆடகசவுந்தரி வைதுலிக சைவன் ஒருவன் (குளக்கோட்டன்) தெட்சணகிரியில் (திருகோணமலை) சிவாலயங்களை கட்டி, அங்கு ஆட்சிக்கு அடிகோலுகின்றான் என்பதையறிந்து மந்திரிகளையும், படைகளையும் அழைத்து குளக்கோட்டன் கட்டிய சிவாலயங்களை அனுமதி இன்றி கட்டியமையால் இடித்து கடலில் தள்ளி, அவனை சிறை செய்து வரும்படி கட்ளையிட அதையறிந்த குளக்கோட்டன் உன்னரசகிரிக்குச் சென்று தனது குல வரலாறு, கோவில் திருப்பணிகளை உரைத்து சமாதானமடைந்து ஆடகசவுந்தரியை மணம் முடித்தான் என்கிறது.

அடிப்படையில் இரு கதைகளும் ஒன்றாகவே உள்ளதால் மணம் முடித்தபின் ஆடகசவுந்தரியின் துணையோடு குளக்கோட்டன் கந்தளாய்க் குளத்தை பூதங்களைக் கொண்டு நிறுவினான் என்பது ஐதீகமாகவும் விரவிவரும் கதையுமாகவும் இருக்கின்றது.

இக்குளத்தை அமைத்த குளக்கோட்டன் மகாவலிகங்கை நீர் பாய்ச்சுவதற்காக அமைத்த மதகு **(sluice)** அமைப்புக்கள் இக்காலப் பொறியியல் நிபுணர்களையே ஆச்சரியத்துக்குள்ளாக்கும் கட்டுமானமாகக் காணப்படுகின்றன. இக்குளம் அமைப்புக் காலத்தில் தமிழர் குடியேற்றம் சிறப்புற்றிருந்தமைக்கு பல தொல்லியல் தடயங்கள் உண்டு. அதில் கந்தளாய் கல்வெட்டு, பழமோட்டை கல்வெட்டு ஆகியன சான்றாகவுள்ளன. இதனடி யொற்றி, கி.பி. 1010 இல் பொலநறுவையை தலைநகராகக் கொண்டு தனது பிரதானியைக் கொண்டு ஆட்சிசெய்த இராஜேந்திர சோழன் கந்தளாய் சிவன் கோவிலை நிர்மாணித்தமை {சோழர் ஆட்சியினை வலியுறுத்தும் சின்னங்க ளாக இக்கோவில் காணப்படுகின்றது}. குளத்தைக் கட்டி முடித்த குளக்கோட்ட மன்னன், பின்வரும் காப்பு முறைகளையும் செய்தான். அவை,

1) ஆலய பரிகாரங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) வன்னிமைகளை நியமித்தமை.

3) குடிகளை குடியேற்றியமை

4) ஆலய சட்டதிட்டங்களை வகுத்து, தொகுத்து நிறைவேற்றியமை.



சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கந்தளாய் சிவன் ஆலயம்

**ஆலய பரிகாரங்கள் :**

கந்தளாய்க் குளத்தைக் கட்டி முடித்த குளக்கோட்ட மன்னன் குளத்துக்கு காவலாக விநாயகர், காளமா முனி, புலத்தியர், மங்கலர், வீரபத்திரன், வதனமார், வைரவர், பூதங்கள், ஐயனார், சக்திகாவலர்கள், கன்னிமார், பத்தினி, காளி ஆகிய தெய்வங்களை இக்குளக்கட்டில் பிரதிஷ்டை செய்து வைத்தான். இக்காவல் தெய்வங்களுக்கு ஒரு வருடத்தில் மடையும் மறு வருடத்தில் பொங்கலுமாக வேள்வி செய்யும்படி ஆணை இட்டுள்ளான். இவ்வகை வழமைகள் கந்தளாய்க் கிராமத்தில் அண்மைக் காலம் வரை இருந்துள்ளது என்பதை கந்தளாயின் பூர்வீகக்குடிகளான தமிழ் மக்கள் இன்றும் கூறிவருகின்றார்கள்.

இதுபோன்றே கங்குவேலி அகஸ்தியர் ஸ்தாபனம் ஆலயத்திற்கு நிவந்தமாக சில வயல்கள் அளிக்கப்பட்ட செய்தி காணப்படுவதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்த பூஜை தடையின்றி நடைபெறுவதற்காக ஏற்பாடுகளைச் செய்யும் சம்பிரதாயம் கங்குவேலி கல்வெட்டிலிருந்து பெறப்படுகிறது. இதுபோலவே மூதூர், கந்தளாய், திரியாய் ஆகிய ஊர்களிலுள்ள பழம்பெரும்கோவில்களிலும் திருப்பணி செய்துள்ளமையை குளக்கோட்டன் வரலாறு கூறுகிறது.

## குடிகளை குடியமர்த்தியமை :

குளக்கோட்டன் கோணேசர் கோவில் திருப்பணி தொடக்கம் அவ் வாலயத்தை நிர்வகிக்க வேண்டிய வயல்கள், அவைக்கு நீர் பாய்ச்ச வேண்டிய குளங்களை அமைத்தபின் இப்பணிகளுக்கு ஆளணி போதாத நிலையில் இரு வகையான குடிமக்களை இந்தியாவிலிருந்து கொண்டுவர வேண்டியிருந்தது.

(அ) வயல்களுக்கு கூலி வேலை செய்ய மக்கள்

(ஆ) ஆலய திருப்பணிகளைச் செய்ய மக்கள்

(இ) இவர்களை நிர்வகிக்க வன்னிமைகள்

## வயல்களும் கூலிகளும் :

கந்தளாய்க் குளத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்தபோதும் தான் உண்டாக்கிய சுமார் 2700 அவணநெல் விளைவிக்கக்கூடிய வயல் நிலங்களை இவன் அமைக்க தரிசு நிலங்களாக இருந்த காடுகளான அல்லைக்குளக் காடுகள் வெண்டரசன் குளத்தைசூழவிருந்த பெரிய ஏழு வயல்வெளிகளை உருவாக்கினான். (யாழ்ப்பாண வைபவமாலை 1879) என எடுத்துக்காட்டுகிறது. எனவே, மன்னன் மருங்கூர், காரைக்கால், சிந்துநாடு ஆகிய ஊர்களிலுள்ள குடிகளை கொண்டுவந்து கட்டுக்குளப் பற்று, கொட்டியாரப்பற்று, தம்பலகாமப்பற்று ஆகிய இடங்களில் குடியேற்றினான். இதுபோலவே கங்குவேலி அகஸ்தியர் ஸ்தாபனம் ஆலயத்திற்கு நிவந்தமாக சில வயல்களை அளித்தான் என்ற செய்தி காணப்படுகிறது.

2700 அவணத்துறையில் செந்நெல் விளைவிப்பதற்காக சிந்து நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மக்கள் கிழக்கே கொட்டியாரப்பற்று பகுதியின் இலங்கைத் துறை என்னும் பகுதியில் வந்திறங்கினர். இவர்கள் வரும்போது அம்மன் சிலைகளுடன் வந்து இறங்கினர் என்றும், ஏழு குடி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களாக வந்து இறங்கியவர்கள் ஏழு சிலைகளுடன் வந்து இறங்கியதாக சான்றுகள் கூறப்படுகின்றன.


கெவுளியா முனை (சூடைக்குடா) கலங்கரை விளக்கம்

இந்த ஏழு குடிகளும் வந்து இறங்கியதற்குச் சான்றாக இலங்கைத்துறை என்னும் இடத்தில் ஏழு தாமரைக் குளங்கள் கடலை அண்மித்திருந்த பகுதியில் இருப்பதும் அக்கடற்கரையை அண்மித்துள்ள குளங்களில் நன்னீர் காணப்படுவதும் மேற்படி சம்பவத்தை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. இறங்கிய ஏழு குடிகளும் இலங்கை முகத்துவாரம், ஈச்சிலம்பற்றை, ஆனை நெய்த்தீவு, சேனையூர், பள்ளிக்குடியிருப்பு ஆகிய இடங்களில் குளக்கோட்ட மன்னனால் குடியேற்றப்பட்டனர். இக்குடிகளுடன் 30 உப குழுக்களும் திருகோணமலை பிரதேசத்தில் வந்து இறங்கியதாகக் கூறப்படுகிறது.


அகத்தியர் ஸ்தாபனம்

**ஆலய சட்டதிட்டங்களை வகுத்தமை :**

கோணேசர் ஆலயத்தை நிர்மாணித்து அக்கோவிலின் திருப்பணிகள் வெற்றி கரமாக முடிந்தபின் அவ்வாலயத்தின் நித்திய, நைமித்திய பூஜைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் இப்பணிகளின் கூற்று வேலைகளைப் பொறுப்புடன் செய்ய தகுதிவாய்ந்தவர்களை நியமிக்க வேண்டும் என்று கனவு கண்டான். அதன் வியாகூலந்தான் அவன் பல்வேறு கடமைபுரியும் வேலைப் பிரிவினரை நியமிக்க வேண்டியிருந்தது. குளக்கோட்ட



அகத்தியர் ஸ்தாபன ஆதி ஆலயம் அமைந்திருந்த இடம்

மன்னன் பெருந்தொகையான மக்களை சோழ நாட்டிலிருந்து அழைத்துவந்து திருமலையில் குடியேற்றினான் எனவும். வயல் குளம் அமைத்து விவசாயத்தை விருத்தி செய்தான் எனவும் கூறப்படுகிறது. இதனைக் கோணேசர் கல்வெட்டு மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. இதுபோலவே நாளாந்த பூசை நடைபெறுவதற் கான ஏற்பாடுகளைச் செய்யும் சம்பிரதாயம் சம்பந்தமான விளக்கம் கங்கு வேலி கல்வெட்டில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

குளக்கோட்ட மன்னன் எத்தகைய குடி மக்களை தொழும்பர்களாக நியமித்தான் என்ற விடயங்களை சுருக்கமாகப் பார்ப்போம்.

(அ) தானத்தார் (ஆ) வரிப்பத்தார்

(இ) குருகுலக்கணக்கர் (ஈ) முதன்மை வன்னிமை

(உ) ஆலாத்திப் பெண்கள்

(ஈ) புலவன்

ஆகியவர்களின் தொழும்புகள், கடமைகள் என்பவற்றை கோணேசர் கல்வெட்டு விரிவாகக் கூறுகிறது. ஏழு குடிமக்களுக்கு மன்னன் ராஜபட்டம் வழங்கினான். பிற்காலத்தில் கஜபாகு மன்னன் மேலும் பல கடமைகளை இவர்களுக்கென வகுத்தான் எனப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தானத்தார் :**

ஆலயத்தின் வரவு செலவுகள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

**வரிப்பத்தார் :**

- பட்டாடை செய்தல்
- மெழுகுதல்
- பொருட்களை பூசி விளக்குதல்
- விறகு சேர்த்தல்
- பாவாடையிடுதல்
- கொடியேற்றல்
- புஷ்பம் எடுத்தல்
- விளக்கேற்றுதல்
- நெற்குத்தி அரிசி சேர்த்தல்
- இசைக்கருவி வாசித்தல்
- பொற்சுண்ணம் இடித்தல்
- சந்தணமரைத்தல்

போன்ற நித்திய பணிகளைச் செய்ய இவர்கள் நியமிக்கப்பட்டனர்.

**குருகுலக்கணக்கர் :**

கோணேசர் கோவிலுக்குத் தேவையான பாக்கு, வெற்றிலை, வாழைப்பழம், சந்தனம், பால், தயிர், நெய், அரிசி, ஆமணக்கு, இலுப்பை, புன்னை, எண்ணெய்களை மக்கள் சேகரித்து சம்பூரிலுள்ள கெவுளியாவில் காத்திருக்கும் ஓடக்காரரிடம் கையளிக்க அப்பொருட்களை ஓடக்காரர்கள் குருகுலகணக்கரிடம் ஒப்படைப்பர். அவர்கள் அப்பொருட்களை பதிந்துவைக்கும் தொழிலைச் செய்வதனால் இவர்கள் குருகுலக்கணக்கர் எனப்பட்டனர்.

**பாசுபதர் :**

இவர்கள் பாசுபத சமயத்தை சேர்ந்தவர்கள். இவர்களை பூசகர்களாக குளக்கோட்டன் நியமித்தான்.

**வன்னிமை :**

தன்னால் குடியேற்றப்பட்ட தானத்தர், வரிப்பத்தார் ஆகியோர்களுக் கிடையே ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்க்கும் முகமாகவும், அவர்களைப் பராமரிப்பதற்காகவும் கட்டுக்குளம்பற்று, கொட்டியாரப்பற்று, தம்பலகமப் பற்று, திருகோணமலை நகர் ஆகிய நான்கு பற்றுக்களுக்கும் குளக்கோட்ட மன்னன் வன்னிமைகளை நியமித்தான். இதில் கட்டுக்குளம் பற்றில் உள்ளோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ காப்பணிதல் ❖ விழா நடத்தல் ❖ நெல் கொடுத்தல்

போன்ற தொழும்புகளை செய்ய கொட்டியாபுரப்பற்று வன்னிமைகள் வெற்றிலை, பாக்கு, கதலிப்பழம், பால், தயிர், சந்தனம், நெய் முதலியனவற்றை சேகரித்து கெவுளியா வழியாக கோணேஸ் வரத்துக்கு அனுப்பி வைத்தனர். அதற்கு மேலாக ஆமணக்கு, இலுப்பை, புன்னை முதலிய எண்ணெய் வகைகள், மீகாமனால் கோயிலுக்கு கொண்டுவரப்பட்டன.

திருகோணமலை நகர வன்னியன் பூபாலக்கட்டு எனும் தலத்திலே தங்கியிருந்தான். இவனே கோணேசர் கோயிலின் பொறுப்பை கவனிப்பதில் முக்கியம் பெற்று நின்றான். தனியுன்னாப் பூபாலன் என்பது அவர்களது வம்சாவழிப் பெயராகும். இவனை குளக்கோட்டன் மதுரையில் இருந்து அழைத்துவந்து திருமலை நகரை அரசுபுரிவதற்கு வன்னிமையாக நியமித்தான் என்பது ஐதீகம். கட்டுக்குளப்பற்று வன்னியர் சிறப்புப் பெயர் கனகசுந்தரப் பெருமாள் என்பதும் இவர்கள் ஆலய வரவு செலவுகளை கவனிப்பதும், கோயில் விவகாரங்களை ஆராய்வதற்கும் இவர்கள் பொறுப்பாக இருந்தனர். 17 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் பூபால கோத்திர வன்னியர் வம்சத்தை அழித்துவிட்ட காரணத்தினால் கொட்டியாரப் பற்று வன்னியர்கள் முதன்மை பெறுகின்றனர்.

மேலே கூறப்பட்ட வன்னியர் எனும் மரபினர் சிற்றரசர்களாக இருந்து மேற்படி நான்கு பிரிவுகளின் அரசாட்சியைக் கவனிக்க குளக்கோட்ட மன்னனால் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அந்த நான்கு சிற்றரசர்களின் அதிகாரம் , கடமை, அவர்கள் பொறுப்புக்கள் என்ன என்பது கோணேசர் கல்வெட்டில் விவரமாக கூறப்பட்டுள்ளன. திருகோணமலை நகருக்கு நியமிக்கப்பட்ட நகர வன்னியன் பூபாலக்கட்டு என்னும் இடத்தில் தங்கி இருந்தான் என்றும் இவனே கோணேசர் கோவிலின் பொறுப்பை கவனிப்பதில் முக்கியம் பெற்று விளங்கினான். இவன் தனி யுண்ணாப் பூபாலன் என்பானின் வழித்தோன்றல் என்றும் இவனை குளக்கோட்ட மன்னன் மதுரையிலிருந்து அழைத்து வந்து திருமலையை அரசு புரிவதற்கு நியமித்துள்ளான். திருகோணமலையையும் அதன் சுற்றாடல் பகுதியையும் 17 ஆம் நூற்றாண்டிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கீசர் கைப்பற்றிய பின்னர் திருமலையில் வன்னியர் ஆட்சி ஒழிந்தது. ஏனைய மூன்று பகுதிகளிலும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் முதற் பகுதி வரை வன்னியர் அதிகாரத்தில் இருந்தனர். இருபதாம் நூற்றாண்டுவரை வன்னியர் எனும் பதவிப் பெயர் வழக்கில் இருந்தது (கலாநிதி.சி. பத்மநாதன் இலங்கையில் வன்னியர் ப.76)

## கயபாகுராசன் :

குளக்கோட்ட மன்னனிற்குப் பின் கோணேசர் கோவிலுடன் தொடர்பு பட்ட இன்னொரு மன்னாக விளங்குபவன் கயபாகு மன்னன் என்பவன்.

1) கி.பி. 171-193 வரை ஒரு கயபாகு மன்னனும்.
2) கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மற்றொரு கயபாகு மன்னனும் இலங்கையில் ஆட்சி செய்திருக்கிறார்கள்.

கி.பி. 12ம் நூற்றாண்டில் அனுராதபுரத்தில் ஆண்டவன் சைவ சமயத்தை ஆதரிப்பவனாக இருந்தபோதும் பௌத்தமதத்தைச் சேர்ந்தவன் விக்கிரமபாகுவின் மகனாகிய கஜபாகு கி.பி. (1132 - 1153) பொலநறுவையில் இருந்து ஆட்சி புரிந்தான். இவனது தந்தையாகிய விக்கிரம பாகுவும் சைவசமய சார்புடையவனாக காணப்பட்டான். இவன் கோகர்ணத்தில் உள்ள சிவாலயத்துக்குப் புரிந்த ஆதரவுகள் தட்சணகைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசல புராணம் ஆகியவற்றில் புகழ்ந்து பேசப்படு கின்றது. அதுமட்டுமன்றி இவனது ஆட்சி இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதியில் நிலவியது என கஜபாகு பற்றி கலாநிதி சி.பத்மநாதன் குறிப்பிட் - டுள்ளார். (ஆதாரம் சிறப்புமலர் 2 ஆவது உலக இந்து மாநாடு பக்கம் 23).

கஜபாகு பற்றி தட்சணகைலாசபுராணத்திலுள்ள திருநகர சருக்கத்திலும் கோணேசர் கல்வெட்டிலும் தனிப்பகுதி இருப்பதுடன் வசன நடை உள்ள பகுதியிலும் இவன் பேசப்படுகிறான். திருகோணாசல புராணத்தில் 20 படலங்களில் 3 படலங்கள் இவனைப்பற்றியது. குளக்கோட்ட மன்னனுக்கு நிகரானவனாக இவன் போற்றப்படுகிறான். இவ்விரு மன்னர்களில் அனுராத புரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த கயபாகு மன்னன் பற்றியே கோணேசர் கல்வெட்டும் ஏனைய புராணங்களும் கூறுகின்றன என்று ஊகிக்க முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுராதபுரத்தில் இருந்து ஆட்சி செய்த கஜபாகு மன்னனுக்கு அவனது ராச்சியத்திலிருந்து செல்வாக்குச் செலுத்திய பௌத்த பிக்குகள் கிழக்குக் கரையில் கோகர்ண விகாரை (கோணேஸ்வரம்) பிற மதத்தவரை ஈர்க்கும் அளவுக்கு சிறப்புப் பெற்றிருக்கிறது என்றும் இந்துமத வழிபாடு இப்பகுதியில் கூடியளவு வேரூன்றி இருக்கின்ற காரணத்தினால் அக் கோவிலை இடித்து பௌத்த விகாரையொன்று அமைக்கப்பட வேண்டுமென தூண்டியதன் பேரில் கயவாகு மன்னன் அகங்காரங்கொண்டு அநுராதபுரத்தில் இருந்து படைகளுடன் கோயிலை அழிக்கப் புறப்பட்டு வந்தான் என்று கூறப்படுவதுடன் மற்றுமொரு கதை இவ்வாறு கூறப்படுகின்றது. சிவனடியார்கள் தென்கயிலை போன வேளை பௌத்த துறவிகள் தாக்க, அந்த பௌத்த துறவிகளை சிவனடியார்கள் கடலில் தள்ளிவிட்டடதாகவும், கேள்வியுற்ற கயபாகு சீற்றமுற்று பௌத்த பள்ளிகள் அமைக்கும் நோக்கில் கோணேஸ்வரம் வந்ததாகவும் மற்றுமொரு கதை கூறப்படுகின்றது.

கஜபாகு மன்னன் வரும் வழியில் கண் பார்வையை இழந்தான். கோணேஸ்வரர் அருளால் ஒரு கண்பார்வையைப் பெற்றான். கண்பார்வை பெற்றவன் தொடர்ந்து நடந்துவரும் வழியில் குளக்கோட்ட மன்னன் கட்டிய கந்தளாய்க்குளம் வரும் இடத்திற்கு வரும் போது மறு கண்ணும் ஒளிபெற்றது என்ற ஐதீகமும் வாய்வழி மரபாகவுள்ளது.

கண் தளைத்த இடம் ஆகையால் இவ்விடத்திற்கு கந்தளாய் எனும் காரணப்பெயர் உண்டாகியதாக கல்வெட்டுக் கூறுகின்றது. கஜபாகு கோணேசர் கோவிலை இடிக்க வருகின்றான் என்ற செய்தி கேட்டு, கோவில் பூசகர்கள், பாசுபதர்கள் கடலில் குதித்து மாண்டார்கள். இச்செய்தி கேட்டு வருந்திய கஜபாகு மன்னன் கடலில் தற்செயலாக வந்துகொண்டிருந்த இரு அந்தணர்களை அழைத்து கோவில் பூசைகளைச் செய்வித்ததுடன் இரு அந்தணர்களுக்கும் வடக்கே கரம்பகம், தெற்கே வெருகல் நதி, மேற்கே தருப்பையாறு, கிழக்கே கடல் எல்லையாகக் கொண்ட நிலப்பரப்பை அந்தணர்களுக்கு மானியமாக வழங்கியுள்ளான். அதன் பின்பே அநுராதபுரம் மீண்டான் என தட்சண கைலாசம் கூறுகின்றது. இச்செய்தி கோணேசர் கல்வெட்டிலும் விவரிக்கப்படுகின்றது. (கோணேசர் கல்வெட்டு பக்.96)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சி.பத்மநாதன் பொலநறுவையை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தவனே கஜபாகு மன்னன் எனக் குறிப்பிடுகின்றார். தனது தந்தை விக்கிரமபாகு மன்னன் போலவே கஜபாகு மன்னன் சிவனிடத்திலும், சைவ சமயத்திலும் ஈடுபாடு கொண்டு காணப்பட்டதனால் பூஜைகள் இல்லாது இருந்த காலத்தில் கோணேசர் ஆலயத்திற்கு அர்ச்சகர்களை நியமித்து கோவிலுக்கென 1100 பொன் கையிருப்பாக வைத்தான் என்றும், வருடாவருடம் உற்சவம் முறையாக நடைபெற வழி செய்தான் என்றும் வரலாறுகள் கூறுகிறது. தனது அந்திம காலத்தில் இவன் கந்தளாய் பகுதியில் வாழ்ந்திருக்கின்றான் என சில குறிப்புக்கள் கூறுகின்றன. கந்தளாய் சாசனத்திலும் இச் செய்தியுண்டு.

கஜபாகு மன்னனுக்குப் பிறகு ஞானசம்பந்தர் காலம் வரை கோணேசர் கோவில் பற்றிய தகவல்களோ வரலாறுகளோ அறியமுடியா - துள்ளது. இருந்தபோதும் கலாநிதி செ.குணசிங்கம் அவர்களின் கருத்துப்படி (கோணேஸ்வரம் பக்.40) மகாசேனன் காலத்திற்குப் பிறகு இக்கோவில் பற்றி அறியக்கூடியதாக உள்ள காலம் பல்லவர் காலமாகும் என குறிப்பிட்டுள்ளார்.

மகாசேனன் காலத்திலிருந்து திருஞானசம்பந்தர் தேவாரம் பாடிய காலம் வரையுள்ள காலப்பகுதியில் ஒருபோதும் இலங்கைக்கு வருகை தராதவரான ஞானசம்பந்தர் தென்னிந்தியாவில் இருந்தவாறே இக்கோவில் மகிமையை கேள்வியுற்று தமிழகத்தில் சிறப்புபெற்ற ஏனைய தலங்களின் வரிசையிலே இதனை வைத்து பதிகம் பாடியுள்ளார். இக்கோவிலின் சிறப்பு இந்தியாவில் இருந்து இங்கு வந்து சென்றோராலும் இங்கிருந்து இந்தியா சென்றோராலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கலாம். பல்லவர் காலத்து தமிழ் நாட்டு வரலாற்றில் புதிய போக்கு அயலிலிருந்த இலங்கையும் பெருமளவிற்குப் பாதிக்கலாயிற்று.

வாதாபி கொண்ட பல்லவன் என அழைக்கப்படும் மாமல்லன் (நரசிம்மவர்மன் கி.பி 7 ஆம் நூற்றாண்டு) அரண்மனையில் தபோசீனிடம் தோற்று நாட்டைவிட்டு ஓடிய இலங்கை அரசனான மானவர்மனும் அவன் மனைவியும் தஞ்சங்கோரினர். அவ்வேளை வாதாபிப் போரில் ஈடுபட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த மாமல்லனுக்கு இலங்கை மன்னனான மானவர்மன் உதவினான். வாதாபிப் போரில் புலிகேசியை வெற்றிகொண்ட மாமல்லன் தனக்கு போரில் உதவிய மானவர்மனுக்காக பல்லவசேனையை இலங்கைக்கு அனுப்பி தபோதீசனை முறியடித்து இலங்கைக்கு மானவர்மனை மன்னனாக்கினான் மாமல்லன்.

நரசிம்மவர்மனால் தான் திருக்கோணேஸ்வரம் கற்கோவிலாக கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் உண்டு. காரணம், மாமல்லன் மானவர்மனுக்கு உதவியுள்ளான். உதவியதன் காரணமாக இலங்கையில் செல்வாக்குச் செலுத்திய பல்லவர்கள் பல்லவ முறைப்படி இக்கோவிலை கட்டியிருக்கலாம். இவர்கள் கட்டிய கோவிலையே பிற்காலத்தில் பறங்கியர் இடித்துள்ளனர்.

பல்லவ சிற்பிகளே கோணேஸ்வரர் கோவிலை பல்லவர் பாணியில் அமைத்திருக்கலாம். (கோணேஸ்வரம் செ.டு.பக்.69) 56 காரணம் பல்லவர் காலத்தில் இலங்கையின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவில் திருமலைப் பகுதியில் அவர்களின் செல்வாக்கு கூடுதலாகக் காணப்பட்டது என அறிய முடிகின்றது. இத்தகையதொரு காலச் சூழ்நிலையில்தான் பல்லவர் காலத்தில் வாழ்ந்த ஞானசம்பந்தர் பதிகத்தைப் பாடினார். அவர் தனது பதிகத்தில் கோணேசர் கோவிலை விபரிக்கையில் 'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை' என்றும், 'குரைகடல் ஓத நித்திலம் கொழிக்கும் கோணமலை' என்றெல்லாம் புகழ்ந்து பாடியுள்ளார்.


ஞானசம்பந்தர் காலத்திலிருந்த கோணேஸ்வரம் கடலோரமாக உள்ள கோணமலையில் அமைந்து இருந்தது என்றும், கோணமாமலை அமர்ந்தாரே என சம்பந்தர் தனது பாடல்களில் கோயில் பெயரைக் குறிப்பிடாது அது அமைந்திருந்த தலத்தையே சிறப்புற்றுப் போற்றுகிறார் என்றும் அருகில் அமைந்த கடல் சுற்றாடலில் காணப்பட்ட பொழில்கள் என்பவற்றின் காரணமாக மலைமேல் அமைந்த கோயில்கள் வனப்புடன் விளங்கியது. சந்தனமும் அகிலும், மணியும் முத்தும் அங்கு காணப்பட்டனவென்று கூறப்படுகிறது. வாணிபத்தின் காரணமாக இப்பொருள் இங்கு கிடைத்திருக்கலாமென




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார். அவர் மேலும் கூறுகையில், "தேவார காலத்திலே கோணேஸ்வரம் காவும் பொழிலும் சூழ்ந்த பதியாக விளங்கியது. அங்கு கனிமரச்சோலைகள் அன்றி நிழல்தரும் சோலைகள் பூம்பொழில்களுமே காணப்பட்டன. மௌவல் மாதவி புன்னை வேங்கை, வண்செருத்தி, செண்பகம் முதலியன செழிப்புடன் வளர்ந்தனவென்று குறிப்பிட்டிருந்தார். (பேரா. சி. பத்மநாதன் இலங்கையில் இந்து கலாசாரம் பக்கம் 32)

பல்லவர் மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பின் சோழ சாம்ராச்சியம் நிறுவப்படுகிறது. (கி.பி. 9 நூற்றாண்டு - 12 வரை) சோழச் சக்கரவர்த்திகள்



ஸ்ரீ பத்திரகாளி அம்மன்



திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்

அந்நியப்படையெடுப்புக்களை மேற்கொண்டு இலங்கையையும் கைப்பற்றி ஆட்சி செய்கிறார்கள். ராஜேந்திரசோழ மன்னனின் 36 ஆம் ஆட்சியாண்டில் இலங்கை முழுவதும் சோழர் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படுகிறது. (கி.பி. 1017-1070)

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் திருகோணமலை, கந்தளாய், பதவியா என்பவற்றை உள்ளடக்கிய முக்கோணத்திலே சோழர் ஆட்சிக் காலத்துக்குரிய தொல்பொருள் சின்னங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இம்மூன்று பிரதேசங்களும் சோழர் ஆட்சிக்காலத்தில் நகரங்களாய் விளங்கின வென்றும், பதவியாவில் ஐந்து சிவாலயங்களின் அழிபாடுகள் அடையாளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிட் டுள்ளார். (கந்தளாய் சிவன் ஆலய கும்பாபிஷேக மலர். பக்.8)

கலாநிதி.ப.புஸ்பரெட்ணத்தின் கருத்துப்படி கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழரது நேரடியாட்சி ஈழத்தில் ஏற்பட்டபோது நாக நாட்டில் இருந்து (வ.கி. மாகாணம்) தமிழ் அரசும் அவர்களது ஆதிக்கத்திற்குட்பட்டதென்பதற்கு திருகோணமலை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும், நாணயங்களும் சிறந்த சான்றாகும்.

இக்காலத்தில் பொலநறுவை சோழரது அரச தலைநகராக இருந்த போதும், அவர்களது அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் முக்கிய மையமாக திருகோணமலை விளங்கியது. இதற்கு பதவியா, மானங்கேணி, கந்தளாய், நிலாவெளி, திரியாய், குச்சவெளி போன்ற இடங்களில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள், நாணயங்கள், ஆலயங்களின் கட்டிட சிற்ப அழிபாட்டு சிதைவுகள் போன்ற தொல்பொருள் சின்னங்கள் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.


சோழர் ஆட்சி கி.பி. 1070 இல் முடிவுற்று மீண்டும் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டபோதும் திருகோணமலையில் தமிழரது ஆதிக்கம் குறையவில்லை. (கலாநிதி ப.புஸ்பரெட்ணம், யாழ்.பல்கலைக் கழகம்) பொலநறுவையில் இருந்த சிங்கள இராசதானியின் முக்கிய கோட்டைகள் அரச தலைநகரங்கள் இராணுவ மையங்கள் திருமலை மாவட்டத்திலுள்ள கோகர்ணம் கந்தளாய், பதவியா போன்ற இடங்களிற்கு இடம்மாறியதை சூளவம்சம் என்ற பாளி நூல் காட்டுகிறது என கலாநிதி புஸ்பரெட்ணம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் கூடியளவு சோழர்கால கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப் பட்ட மாவட்டம் திருகோணமலை, சோழர் காலத்தையும் இக்காலத்துக்கு முற் பட்ட கால திருகோணமலையை அறிவதற்குக் கிடைத்த ஆதாரங்களில் சோழர்கால கல்வெட்டுக்கள் ஆதாரமாகின்றன. பெரியகுள கல்வெட்டுத் தொடக்கம் கிளிவெட்டி வரை பல நூறு கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளன. (இக்கல்வெட்டின் விபரம் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது). எனவே சோழரது ஆட்சிக்காலத்தில் திருகோணமலை பெற்ற முக்கியத்துவத்தை இக் கல்வெட்டுக்களினூடாக அறியக்கூடியதாக இருந்தபோதும் கோணேஸ்வரத்திற்கும் சோழரது ஆட்சிக்கும் இடையேயுள்ள இடைத் தொடர்பை அறிவதற்கு உரிய ஆதாரங்களின் கோப்பை ஆராயவேண்டி உள்ளது. இருந்த போதிலும் பேராசிரியர் செ.குணசிங்கம் ஒரு கருத்தைக் கூறியுள்ளார். இன்று ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலிருக்கும் இடத்தில் சோழர்காலக் கோவில் ஒன்று இருந்ததெனவும் இக் கோவிலுக் குரிய தூண் ஒன்றில் கல்வெட்டு ஒன்று காணப்பட்டதையும் (கும்பாபிஷேக மலர் 07.02.2001 பக்.23) குணசிங்கம் சுட்டிக் காட்டியுள்ளார்.



காளி கோயில் தேர்

பத்திரகாளி அம்பாள் ஆலயம் அமைந்த இடத்திலிருந்து கோணேஸ்வரர் ஆலயத்தை மிகச் சிறப்பாக பார்க்க முடியும். அவ்வாறாயின் கோணேஸ்வரர் ஆலயத்தின் திருப் பணிகளிலோ ஆலய அபிவிருத்தியிலோ சோழர் எவ்வாறு ஈடுபட்டனர் என்பது ஆராய்ச்சிக்குரிய விடயமாகும்.

இதேவேளை பெரிய குளத்தில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டின்படி நாத்தனார் கோவில் எனப்பட்ட **'வெல்கம் விகாரை'** என்ற பௌத்த விகாரையை இராசராசப் பெரும்பள்ளி என மறுபெயரிட்டு சோழர் பேணி வந்தனர். அத்துடன் அது இராஜராஜனால் புதுப்பிக்கப்பட்டது என்ற செய்தியும் சொல்லப்படுகின்றது.

கோணேஸ்வர வரலாற்றை இன்னொரு திசைநோக்கி இழுத்துச் சென்ற காலம் போர்த்துக்கீசர் காலமாகும். 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் கீழைத்தேசங்களில் வர்த்தகம் செய்ய வந்த ஐரோப்பிய கப்பலோட்டிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வில்கம் விகாரை


வில்கம் விகாரையிலுள்ள சிதைந்த சிவ சின்னம்

வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றில் நின்று புகலிடம் பெறுவதற்கு திருகோணமலை என்னும் இயற்கைத் துறை முகம் வாய்ப்பாக அமைந்திருந்தமையை அவர்கள் அறிந்து வைத்திருந் -தார்கள்.

இதன் காரணமாகவே போர்த்துக்கீசர், ஒல்லாந் -தர், ஆங்கிலேயர் இத் துறைமுகத்தைக் கைப் பற்றினார். *Description of Ceylon* என்ற நூலில் ஜேம்ஸ் கோர்டினர் *(James Cordiner)* என்பவர் திருகோணமலை பற்றிக் குறிப்பிடுகையில் "எமது இந்திய வியாபாரத்தின் கேந்திர நிலையம் திருகோணமலை என்று குறிப்பிட்டுள்ளார். உலகத்திலேயே அதிசிறந்த குடியேற்ற உடைமையாக திருகோணமலையை மேலைத் தேசத்தவர் வர்ணித்துள் -ளனர்.

பிரித்தானியர்கள் திருமலைத் துறைமுகத்தின் முக்கியத்து வத்தை உணர்ந்து அதைப்பெற கண்டி மன்னனாக இருந்து ஆட்சி செய்த கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனுடன் (1747 - 82) பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய புகழ்கொண்ட திருகோணமலையை போர்த்துக்கீசர் (1505) இலும், ஒல்லாந்தர் (1639) இலும் பிரித்தானியர் (1782) ஜனவரி இலும், பிரான்ஸியர் (1782) ஆகஸ்டிலும் ஒருவர் பின் ஒருவராக கைப்பற்றினர்.

போர்த்துக்கீசர் திருகோணமலையை கைப்பற்றியதன் காரணமாக (1624 ஆம் ஆண்டு) புதிய நெருக்கடியொன்றை சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்குத் திருக்கோணேஸ்வர ஆலயம் தள்ளப்படுகின்றது. ஆலயத்தின் அருட்சிறப்பையும்புகழையும் மட்டற்ற திரவியங்களையும் கண்டு வியப்படைந்த போர்த்துக்கீசத் தளபதி கொன்ஸ்ரன்ரையின்டீசா இவ்வாலயத்தை எப்படியாவது அழித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டினான். அதற்கு இரு காரணங்கள் இருந்தன.

(1) இவ்வாலயத்தின் திரவிய இருப்பும், செல்வாக்கும்

(2) இவ்வாலயத்தை இடித்து அதன் கற்களைக் கொண்டு ஒரு கோட்டையைக் கட்டுவது.

இதற்கு முன்னாயத்தமாக டீசா 1620 ஆம் ஆண்டளவில் ரிசண்டி என்பவனைக் கொண்டு ஆலயத்தின் படத்தை வரைவித்தான். ஏற்கனவே தனக்குமுன் கடமையாற்றிய தளபதிகளான நுனோஅஸ்வரஸ்கனேசி *(Ganezes)*, ஜெடாக்கஸ் *(Jedacas)* ஆகிய தளபதிகள் கோணேஸ்வரத்தை இடிப்பதற்குத் திட்டம் தீட்டியபோதும், அவர்கள் ஒருவர்பின் ஒருவராக கொல்லப்பட்டதை தெரிந்துகொண்ட டீசா மிகக் கவனமாக திட்டம் தீட்டினான்.

1624 ஆம் ஆண்டு சித்திரை பிறப்பன்று தன்னுடைய படையினரை பூசகர்போல் வேடம் தரிக்கப்பண்ணி அப்படையினருடன் ஆலயத்திற்குள் நுழைந்தான். வேலும், வாளும், வில்லும் எறியம்பும் கொண்டு போர்செய்த நம்மவர்கள் நவீன பீரங்கி படைகளுடன் உட்புகுந்த போர்த்துக்கீச படை கண்டு ஆலயத்தின் பூசகர்கள், தொண்டர்கள், வரிப்பத்தார் தானதத்தார், முதன்மைக் குருக்கள் ஆகியோர் நாலா திசையும் ஓடினார்கள். அவர்களுடன் ஆலயக் கடமை புரிந்த வன்னியர் ஆட்சியின் பங்குதாரர்கள், படையாண்ட குடிகள், முத்துசங்கு எடுப்போர், நக்கீரர் பரம்பரையினர், குருகுலத்தார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளன், அரசவம்சத்தார், பட்டணைவர் யாவரும், அங்கிருந்த விக்கிரகங்களை காப்பாற்றவெண்ணி தம் கைக்கெட்டிய விக்கிரகங்களை பயபக்தியோடு எடுத்து கட்டுமரத்தில் ஏற்றிக் கொண்டுவந்து ஆலயத்துக்கு அருகில் உள்ள கிராமங்களான பத்தாங்குறிச்சி, சின்னப்படுக்கை, வீரநகர் போன்ற இடங்களில் பாதுகாப்பாக புதைத்துவிட்டு சில விக்கிரகங்களை தம்பல - காமம் என்னும் கிராமத்துக்கும் எடுத்துக்கொண்டு ஓடினார்கள். இவர்கள் ஓடியதை சாதகமாக பாவித்த போர்த்துக்கீசப் படைகள் அழகிய வடிவமைக் - கப்பட்ட சிற்பக்கற்களாலான கோவிலை இடித்துத் தரை மட்டமாக்கினார்கள். தாம் கட்ட விரும்பிய கோட்டைக்கு புதிய கற்களைச் செதுக்கி எடுத்து கோட்டை கட்டுவதென்பது (திருமலை முனைக் கோட்டைக்கு) இயலாத காரியம் என்பதைத் தெரிந்துகொண்ட போர்த்துக்கீசர் கலைச் செழுமையும் அழகும் கொண்ட வைரக்கற்களாலான ஆலயத்தை இடித்து அதன் கற்களைக் கொண்டு பிரமாண்டமான கோட்டையைக் கட்டினர்.

ஆங்கில வரலாற்று ஆசிரியர் கலாநிதி பி.ஈ.பீரிஸ் (1920) தனது இலங்கை என்னும் நூலில் குறிப்பிட்டது போல் திருமலையில் பெரிய வளைகுடா தற்கால உலகில் மிகவும் பிரபல்யமடைந்துள்ளது. இங்குள்ள ஆலயம் கிழக்குலகின் தீபமாக விளங்குகிறது. ஆலயப் பகுதியிலுள்ள மூன்று ஆலயங்களின் நடுவேயுள்ள மிகப்பெரிய உயர்ந்த கோபுரத்தின் செப்புத் தகட்டினாலான கூரை சூரிய ஒளிப்பட்டுத் தெறித்து கப்பல்களுக்கு திசைகாட்டும் மையம் போல் விளங்குகிறது.

இவ்வாலயத்தில் ஆயிரம் பிராமணர்கள் குருமார்களாக பணி புரிந்தார்கள். ஆலயத்தின் ஆண்டு திருவிழா கிழக்கு நாடுகளில் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட விக்கிரகங்கள் போர்த்துக்கீசரால் உடைத்தெறியப்பட்டுள்ளன. ஏழு அடுக்குகளையுடைய தங்கரதம் எரித்து சாம்பலாக்கப்பட்டது. அளவற்ற திரவியங்கள் நிறைந்த களஞ்சியங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இங்கிருந்த சமயப் பிடிவாதக் காரர்கள் கீழேயுள்ள கடலில் குதித்து உயிர் தியாகம் செய்துள்ளார்கள். இந்நிகழ்வு இவ்வாலயத்தில் வழக்கமாக நடைபெறுவதுபோல் தெரிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீரிஸின் கூற்றின்படி போர்த்துக்கீசர் இக்கோவிலை அழிக்கவரும் போது மாண்ட சைவர்களின் உயிர்த்தியாகம் இந்த வரலாற்றுக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கின்றது. இது வழமை என்பதிலிருந்து இதற்கு முன் இவ்வாலயத்தை சிங்கள மன்னர்கள் அழிக்க வந்தபோது இப்படியான கோர சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என ஊகிக்க முடிகிறது.

ஆலயக் கற்களைக் கொண்டு தளபதி டீசா அமைத்த கோட்டை பிற்காலத்தில் பிரெட்றிக் கோட்டை என அழைக்கப்பட்டது. 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டதும் மூன்று அடுக்குகளைக் கொண்ட கோபுரங்களையுடையதுமான மலைக்கோவிலின் ஆதிக்காலத் தோற்றத்தை இன்றைய பிரெட்ரிக் கோட்டையின் காப்பரணில் பதிக்கப்பட்டு இருக்கும், செதுக்கப்பட்ட கற்கள் எமக்கு புலப்படுத்துகின்றன. (திருகோண மலை வரலாறு, கனகசபாபதி சரவணபவன் பக்.8)

போர்த்துக்கீசருக்குப் பின் திருகோணமலையை கைப்பற்றிய ஒல் -லாந்தர் போர்த்துக்கீசரால் நிர்மாணிக்கப்பட்ட கோட்டையை திருகோண -மலை கோட்டை என்றே பெயர் சூட்டி அழைத்து வந்தனர். ஆனால் 1803ஆம் ஆண்டளவிலேயே முதல் முதலில் பிரெட்ரிக் கோட்டை என்ற பெயர்



பிரட்டிக் கோட்டை

பாவனைக்கு வந்தது. அவ்வாறு பிரெட்ரிக் கோட்டையென அழைக்கக் காரணம், இக்காலத்தில் யோர்க் பிரபு பிரெட்ரிக் என்பவர் பிரித்தானிய இராணுவத்தின் பிரதம தளபதியாக இருந்தார். அவர் யோர்க் அல்பேனி ஆகியவற்றின் கோமகனும், மூன்றாவது ஜோர்ஜ் அரசி சர்லொக் ஆகியோரின் இரண்டாவது மகனுமாவார். இவரது ஞாபகமாகவே இக்கோட்டைக்கு பிரெட்ரிக் கோட்டையென பெயர் சூட்டப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிட்டது போல் நவீன பீரங்கிப்படை கொண்டு போர்த்துக்கீசர் ஆலயத்தைத் தகர்த்தபோது நாலா திசையும் ஓடிய பூசகர்களும் தொண்டர்களும் தமது கைக்கெட்டிய அற்புத விக்கிரகங்களை எடுத்துக் கொண்டு ஓடினார்கள். வசதியான இடங்களில் விக்கிரகங்களைப் புதைத்து வைத்தார்கள். முதன்மைக் குருக்கள் சிலர் சில விக்கிரகங்களை எடுத்துக் கொண்டுபோய் தம்பலகமத்திற்கு மேற்கேயுள்ள சுவாமிமலை என்ற இடத்தில் ஒழித்து வைத்தார்கள். சில விக்கிரகங்கள் கடலினுள் எறியப் பட்டிருக்கக் கூடும். இல்லையேல் 500 அடி தூரம் வரை தூக்கிச் சென்று பாதுகாப்பான இடங்களில் புதைத்து வைத்திருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஏனெனில் பிற்காலத்தில் பத்தாம் குறிச்சி, வீரநகர் போன்ற இடங்களில் விக்கிரகங்கள் தலைகீழாகப் புதைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டமை இதற்குச் சான்றாகின்றது.

தம்பலகாமத்தில் சில விக்கிரகங்கள் புதைக்கப்பட்டமைக்கு ஆதாரமாக தம்பலகம வாசிகள் கிழங்கு எடுக்க சுவாமிமலை என்ற இடத்துக்குச் சென்ற சமயம் அம்மலையில் விக்கிரகத்தோடு செப்பேடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு விக்கிரகம் தம்பலகமம் ஆதிகோணேசர் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று தம்பலகமம் ஆதிகோணேசர் ஆலயத்திற்குச் சிறிது தூரத்தில் தினேரி, பாண்டியூற்று ஆகிய இடங்களில் பண்டைய ஆலய இடிபாடுகள் இன்றும் காணப்படுவதாக சொல்லப்படுகிறது. போர்த்துக்கீசத் தளபதி இக்கோயிலை இடித்த போது அவ்வாலய வாசலிலுள்ள கல்வெட்டின் வாசகத்தை பிரதி பண்ணி (Copy) போர்த்துக்கீச மன்னனிற்கு அனுப்பி வைத்திருந்தான். அவன் அனுப்பிய இக்கல்வெட்டுச் செய்தியில் மனுராசா அல்லது மாணிக்கராசா எனும் மன்னன் இலங்கையை ஆண்டான். அவன் கி.மு.1300 ஆண்டளவில்


கோணேஸர் ஆலய இலிங்கங்கள் மறைத்து வைக்கப்பட்ட கிணறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் கோவிலைக் கட்டினான் என்று கூறப்பட்டுள்ளது. (ஆதாரம் அஜூடா நூல்நிலைய சுவடி கொன் குவிஸ்ரா - பக்.51).

இக்கருத்தை யாழ்ப்பாண வைபவமாலையிலும் காணமுடியும். மனுநீதிசோழன் மகன் குளக்கோட்டன் சாலிவாகன சகாப்தம் 358 இல் கி.பி. 436 இல் திருமலை வந்தான். திருப்பணிகள் செய்து ஆலயக் கிரியைகள் தடங்களின்றி நடைபெற ஏழு கிராமங்களில் வயல்களை நிவந்தமளித்து கணக்குவழக்குகளை மேற்பார்வை செய்ய வன்னியரை நியமித்து நாடு திரும்பினான். இவன் சோழநாட்டவன் என்று கூறப்பட்டுள்ளது.

போர்த்துக்கீசர் ஆலயத்தை இடித்து துவம்சம் செய்த பின்பு ஒல்லாந்தர் திருகோணமலையை 1639 இல் கைப்பற்றினார்கள். இவர்கள் காலத்தில் ஆலயத்தின் நிலைபற்றி அறிய முடியாவிட்டாலும், ஒல்லாந்த அதிகாரி *W.J.*கோஸ்டர் ஒல்லாந்த நாட்டு தேசாதிபதி அந்தோனியோ வான் டீ மென் அவர்களுக்கு எழுதிய (1983 டிசம்பர் 31) கடிதத்தில் திருகோணமலை பற்றி பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

திருகோணமலை கோட்டையானது மலையிலிருந்த பழைய கோவிலின் கருங்கற்களினால் மிகவும் பலமாக கட்டப்பட்டதொன்றாகும். ஒவ்வொரு பக்கத்திலும் மணல் நிறைந்த பாறைக் குடாக்கள் அமைந்துள்ளதால் ஒரு தீபகற்பம் போல் அது உள்ளது. இந்த வாசகத்தின் மூலம் ஒல்லாந்தர்கள் கோணேசர் ஆலயத்தின் தொன்மையை அறிந்திருக்கிறார்கள் என்று அறிய முடிகிறது. 1639 இல் திருகோணமலைப் பிரதேசத்தைக் கைப்


அந்நியர் கால திருகோணமலை துறைமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய ஒல்லாந்தர் பிரெட்டிக் கோட்டையைக் கைப்பற்ற முடியாத நிலையில் மேலோட்டமான நிர்வாகம் செலுத்திவந்தார்களே தவிர, முழுமையான அதிகாரம் அவர்களால் செலுத்த முடியவில்லை. 1665 இல் தளபதி டியுபொன் புரட்டாதி மாதம் திருகோணமலை கோட்டையைக் கைப்பற்றினான்.

ஒல்லாந்தருக்குப் பின் பிரித்தானியர் 1728 ஆம் ஆண்டு திருகோண மலையை கைப்பற்றும் வரையுள்ள சுமார் 117 வருடங்கள் ஒல்லாந்தர் ஆட்சியில் நடைபெற்ற கோவில் சம்பந்தப்பட்ட வரலாற்று ஆதாரங்களைத் தேடுவதில் பல்வேறு கஷ்டங்கள் காணப்படுகின்றன. இருந்தபோதிலும் கோணேசர் ஆலயத்தின் உச்ச பீடமாக அமைந்த சுவாமி மலையில் நடந்த சோக வரலாற்றுச் சம்பவமொன்று ஒல்லாந்தரின் பதிவேடுகளிலும் கல்வெட்டு ஒன்றிலும் வரையப்பட்ட கதையின் சோகத்தன்மை கோவிலுடன் சம்பந்தப் - பட்டது என்பதுடன் மலையுடன் தொடர்புடையது.

ஒல்லாந்த அரச அதிகாரியின் மகளான பிரான்சீனா என்பவள் இராணுவ அதிகாரியொருவனை மிக வாஞ்சையுடன் காதலித்து வந்தாள். திருமண ஏற்பாடு மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. சீதனம் ஏனைய பிரச்சினைகளை காரணம் காட்டி காதலன் திருமணச் சடங்கினை முறித்துவிடுகிறான். தனது தாய்நாட்டுக்கு திரும்புவதற்கான ஏற்பாடுகளை இரகசியமாக மேற்கொண்ட இராணுவ வீரன் கப்பலில் செல்வதற்கான முழு ஏற்பாடுகளையும் மேற்கொண்டான். இதைக் கேள்வியுற்ற அந்த அபலைப் பெண் மனமுடைந்துபோய் தனது உயிர் இருக்கும்வரை தனது காதலன் தீவை விட்டுச் செல்லக்கூடாது என விரதம் எடுத்துக்கொண்ட அவள் அவன் செல்லவிருக்கும் நேரம், செல்லும் கப்பல் ஆகிய எல்லா விபரங்களையும் தெரிந்துகொள்கிறாள்.

குறித்த நேரத்தில் பாய்கள் விரிக்கப்பட்டு கப்பல் நகர்ந்து செல்வதை தனது வீட்டின் ஜன்னலூடாக அவதானித்த அந்தப் பெண் கோட்டையின் தென்பகுதியில் அமைந்துள்ள செங்குத்தான பாறையடிக்கு கப்பல் வரும் வரை காத்திருந்தாள். சுவாமி மலையின் செங்குத்தான கூர்முனைக்கு விரைந்து ஏறினாள். அவள் ஏறிய மலை கடலோடு குவிந்திருந்தது. கப்பல் குறித்த மலையடிவார கடலுக்குள் நுழைகின்றவேளை பார்த்து மலை உச்சியில் இருந்து கீழே பாய்ந்தாள். அவள் உடல் கீழேயிருந்த பாறைகளுடன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதுண்டு கடலில் போய் விழுந்து உயிர் பிரிந்தது. பிரான்சீனா வான் ரீட் கிறிஸ்தவ முறைப்படி புதைக்கப்பட்டாள். குரூரமாக நடந்த இத்தகைய தொரு சோகச் சம்பவத்தையே இவர்களது பெற்றோர் கல்லில் பொறித்து வைத்துள்ளனர். கோணேச சுவாமி மலையில் நடந்த இச்சம்பவம் ஒல்லாந்தர் காலத்தில் நடந்த சம்பவம் என்ற காரணத்தினால் இது இப்பொழுதும் நினைவு கொள்ளப்படுகிறது.

பிரித்தானியர் கையில் திருகோணமலை 1782 ஆம் ஆண்டு ஜனவரியிலும் அதேயாண்டு 1782 ஆகஸ்ட் பிரான்சியர் கையிலும், 1783 ஆம் ஆண்டு திருகோணமலையை ஒல்லாந்தரிடமும் 1795 மீண்டும் பிரித்தானியர் கையிலும் வந்து சேருகின்றது.

**பிரித்தானியர் காலம் :**

பிரித்தானியர் திருகோணமலையைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்து ஆதாரங்களின்படி ஆங்கிலேயரின் ஆளுகைக்குட்பட்ட கோட்டைக்குள் இருந்த கோணேஸ்வர ஆலயத்தின் சுவடுகள் பிரித்தானியரால் மதிப்பளிக்கப்பட்ட நிலையில் கோணேசர் மலையில் உள்ள கிழக்குத் திசையில் அமைந்த கற்பாறை மரத்தடியில் வைக்கப்பட்டிருந்த விக்கிரங்களுக்கு கடலை நோக்கிய பூசைகளை நடத்துவதற்கு ஆங்கிலேயரால் இந்துக்களுக்கு மத சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. 1903 ஆம் ஆண்டு கோணேசர் மலையைப் பார்வையிட வந்த எச்.டபிள்யு.கேவ் என்பவர் தான் எழுதிய *'The Book of Ceylon'* என்ற நூலில் பிரமாண்டமான கோயில் இருந்த இடம் இன்று வெற்றிடமாக



தல விருட்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். *(There is now life only the Bare Site of the Magnificent Temple Page 630)* அலெக்சாண்டர் என்பவர் 1803 இல் எழுதிய குறிப்பின்படி மலை உச்சியின் மரத்தடியிலுள்ள விக்கிரகத்தை வழிபடவும், பூஜை செய்யவும் பிரித்தானியரால் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அர்ச்சகரும் அடியவர்களும் கோணேசர்மலைக்கு சுதந்திரமாகச் சென்றுவர கோட்டையின் மேற்குத் திசையிலிருக்கும் சிறிய வாயிலையும் பயன்படுத்த அனுமதி வழங்கியிருந்தார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, விசேட காலங்களிலும் விழாக் காலங்களிலும் வழிபடுவதற்கு மக்கள் அனுமதி பெற்றுக்கொண்டு மாட்டுவண்டியில் பொருட்களை ஏற்றிக் கொண்டு மேள வாத்தியங்கள் முழங்க, பக்தர்கள் புடைசூழ சென்று வந்ததாகவும் வெள்ளிக்கிழமைகளில் சாதாரணமாகச் சென்று வருவதாகவும் அக்குறிப்புக்கள் கூறுகின்றன.

19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் திங்களும், வெள்ளியும், பூஜை நடத்த பிரித்தானியரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் காலங்களில் பின்வரும் பெயரையுடைய குருக்கள்மார் பூசை செய்து வந்துள்ளனர். 1851 கணபதிக் குருக்கள், மயில்வாகனக் குருக்கள், 1875 கதிர்காமக் குருக்கள், கண்ணமுத்துக் குருக்கள், வைத்தீஸ்வரக் குருக்கள், 1885 சுப்பையாக் குருக்கள், ஐயாத்துரைக் குருக்கள் அர்ச்சகர்களாக மரத்தடி விக்கிரகத்திற்கு பூசை செய்து வந்துள்ளனர். இவ்வாறு சுதந்திரமாக கோணேசர் ஆலயத்திற்குப் போய் வந்தவர்களுக்கு இரண்டாம் உலக மகாயுத்தம் காரணமாக பிரித்தானிய இராணுவம் சில கட்டுப்பாடுகளையும், நிபந்தனைக-ளையும் விதித்தது. யுத்தம் காரணமாக வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் கோயிலுக்கு சென்றுவர அனுமதிக்கப்பட்டனர். கோயிலைத் தரிசிக்க வருபவர்கள் மாலை 3.30 மணிக்கு கோட்டை வாசலில் நிற்க வேண்டும். குறித்த நேரத்தில் கோட்டை கதவுகள் திறக்கும். மக்கள் உள்ளே செல்வார்கள். இருபக்கமும் 25 இற்கு மேற்பட்ட படை வீரர்கள் அணிவகுத்துவர மக்கள் கோவிலுக்கு அழைத்து வரப்படுவர். இலந்தைக் காடு இரு மருங்கிலும், தொங்கிப் பாய்கின்ற மந்திகள், மருண்டோடும் மான்கள் சிறிய காடு இரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமும் அழகுதர அழைத்துச் செல்லப்படும் மக்கள் கல்மர லிங்கத்திற்கு பூஜை முடிந்தவுடன் மக்கள் வெளியேற்றப்படுவர்.

பிரித்தானியர் காலத்தில் (சுதந்திரம் கிடைப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பாக) கோட்டைப் பகுதிக்குள் இருந்த சிறிய கிறிஸ்தவ ஆலயம் ஒன்றை புதுப்பித்துக் கட்ட பிரித்தானிய உயர் அதிகாரிகள் முயற்சித்த போது ஏலவே உள்ள கோணேசர் ஆலயத்திற்குள் வேறு ஆலயத்தை அமைப்பது முறையற்றது என்பதைக் காரணங்காட்டி அப்போதைய தள கர்த்தாவாகிய அட்மிரல் வூட் ஹவுஸ் கிறிஸ்தவ ஆலயம் கட்ட மறுத்தமை அவர்களின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. இதேவேளை பிற்காலத்தில் (1969) புத்த பெருமான் சிலையொன்று உயர்ந்து நிற்பதும் நமது மனதை நெருடும் விடயமாகும்.

**இலங்கை** சுதந்திரமடைந்த பின் நிலைமை சுலபமாக மாறிய நிலையில் முன்பிருந்த இறுக்கநிலை தளர்த்தப்பட்டு சுதந்திரமாக மக்கள் ஆலயத்திற்கு சென்றுவர அனுமதிக்கப்பட்டார்கள். சுதந்திரத்திற்கு அடுத்த அண்மிய ஆண்டுகளில் கோணேஸ்வரம் எனும் புனித தலத்தை புனருத் தாரணம் செய்ய வேண்டும் என்ற ஆவலுடனும், ஆர்வத்துடனும் திருகோண மலையைச் சேர்ந்த பல பெரியோர்கள் முன்வந்தார்கள்.

இதற்கிடையில் 1939 ஆம் ஆண்டளவில் திருகோணமலை கடற் படைத் தளத்தில் உயர் அதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருந்த டாக்டர் டபிள்யூ.பாலேந்திரா என்பவர் போர்த்துக்கீசர் இடித்த ஆலயம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அதே இடத்தில் மீண்டும் ஒரு ஆலயத்தை நிறுவ வேண்டுமென்ற ஆர்வத்துடன் புதைபொருள் ஆராய்ச்சித் தலைவர் லோங்கேஸ்ட் மூலம் ஆலயப்படத்தை தயாரிக்க எடுத்த முயற்சி பலனளிக்காத நிலையில் அவர் 1952 போர்த்துக்கல்லில் உள்ள லிஸ்பென் நகர அஜூடா நூல் நிலையத்திற்குச் சென்று போர்த்துக்கீசர் அழிக்க முன் இருந்த பூர்வீக ஆலயத்தின் பீடத்தின் பிரதியை எடுத்து வந்தார்.

படத்துடன் இலங்கை திரும்பிய டாக்டர் பாலேந்திரா பூர்வீக ஆலயம் இருந்த அதே இடத்தில் புதிய ஆலயமொன்றை புனருத்தாரணம் செய்வதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி மக்களின் ஆதரவினையும் சமயப் பெரியோர்களின் உதவியையும் வேண்டி நின்றார். அவ்வாறு அவர் முயற்சி எடுப்பதற்கு முன்பே 1831 ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சியில் நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் *(Extract from the supplement the Ceylon gazette Colombo Saturday November 26 - 1831)* ஆலயம் அமைந்த இடம் கச்சேரிக்கு அண்மித்ததாக உள்ள சமதரையில் அமர்ந்திருந்ததாகவும் அதனருகே பாவநாசச்சுனை எனும் தீர்த்தக்கேணி அமைந்திருந்தது என்றும் போர்த்துக்கீசர் அச்சுனையை மூடி சுனையின் நான்கு எல்லைகளிலும் நான்கு சிறு கிணறுகள் அமைத்துள்ளார்கள் என்றும், அவ்வர்த்தமானியில் குறிப்பிடப் டுள்ளது. அத்துடன் அடங்காப்பற்று, வரிப்பற்று எனக் கூறும் ஏழு கிராமங்கள் இவ்வாலயத்திற்குச் சொந்தமாக இருந்தென்றும், கிழக்கே திருமலை தொடக்கம் மேற்கே கந்தளாய் வரை வடக்கே கட்டுக்குளம்பற்று தொடக்கம் தெற்கே கொட்டியாப்பற்று வரை இவ்வாலயத்திற்குரிய கிரா-மங்கள் வரையறுக்கப்பட்ட எல்லைப் பிரதேசங்களுக்குள் இவ்வாலய ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டுள்ளதென அவ்வர்த்தமானியில் குறிப்பிடப் பட்டிருந்தது.

இக்குறிப்புக்களுக்கு மேலாக மக்களின் வாய்மொழி உண்மைகளாக சில ஆதாரங்களும் கூறப்படுவது வழக்காறு. கோணேசர் மலை, புறா மலை, கந்தசாமி மலை, வெள்ளாட்டி மலை, மத்தள மலை, பாதாள மலை, களனி மலை என்பவற்றை உள்ளடக்கிய மலைத்தொடரில் அமைந்த இப் பிரதேசத்தில் தம்-பலகமம் ஆதி கோணேஸ்வரர் கோவில், திருமங்கலாய சிவன் கோவில் வெள்ளைவில் வபத்திர கோணேஸ்வரர் கோவில், திருக்கரையம் பதி


திருமலை சனீஸ்வரன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகஸ்தியர் தாபனம், மல்லிகைத்தீவு சிவன் கோவில், கன்னியா நடேசர் ஆலயம் என நூறு சிவாலயங்கள் இப்பிரதேசத்தில் அமைந் திருப்பதால் சனீஸ்வரர் ஆலயம் கோணேஸ்வரத் தில் அமைக்கப்பட்டிருக்கி -றது என்றும், கோணேஸ்வ ரத்தைச் சூழ்ந்து எல்லைக் காளியம்மன் கோயில்க-ளாக, திருமலை பத்திர காளிம்மன், உப்புவெளி காளியம்மன், பறையன் குளம் எல்லைக்காளி, படுக்கை பத்திரகாளி, பாலம் போட்டாறு பத்திரகாளி, திரு மலை மாரியம்மன் தம்பலகமம் முத்துமாரியம்மன், மாங்கனாய் மாரியம்மன், சல்லி முத்து மாரியம்மன் போன்றவை எல்லைக்காளிகள் அமைந்த இப்புனித தலத்தின் புனரமைப்புக்கான பணிகள் 1950 ஆம் ஆண்டுகளுக்குப் பின் மேற்கொள்ளப்-பட்டன.

டாக்டர் பாலேந்திரா மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்து 1950 ஆம் ஆண்டு ஆலயப் புனருத்தாரண வேலைகளுக்குரிய முன்னெடுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது முதலியார் கார்த்திகேசு என்பவர் மலையடிவாரத்தில் தற்காலிக கொட்டில் ஒன்றை அமைத்து வேலைகளை ஆரம்பிக்க முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோது எதிர்பாராத அற்புத நிகழ் -வொன்று நடந்தது. அந்த நிகழ்வு சகலரையும் ஆச்சரியத்துள் ஆழ்த்தியது. ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய ஆரம்பித்த அதே காலப்பகுதியல் 1950 ஆம் ஆண்டு மேமாதம் பத்தாம் குறிச்சியிலுள்ள தென்னைமர வேரின் கீழ் வெண்கலத்தினாலான இரு விக்கிரகங்களை அங்கு குடியிருப்போர் கண்டெடுத்தார்கள். கண்டெடுக்கப்பட்ட கணபதி - பார்வதி (திரிபுங்க வடிவம்), அன்னப்பட்சி, திரிசூலம் ஆகிய இரு விக்கிரகங்களையும் அப்பிரதேச மக்கள் கோவில் ஒன்றில் வைத்து வழிபட்டனர். பின்பு அவ்விரு விக்கிரகங்களையும் திருமலை நகராண்மைக் கழகத்திடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இன்னொரு அதிசயமும் நடந்தது. 1950 ஆம் ஆண்டு ஜுன் 27 ஆம்திகதி திருமலை நகராண்-மைக் கழக தொழிலா -ளர்கள் பத்தாம் குறிச்சியில் பொதுக் கிணறு ஒன்றை வெட்ட முற்பட்டபோது அக் குழியிலிருந்து மூன்று விக்கிரகங்களைக் கண்டெடுத்தார்கள். கோணேஸ்வரர் (சோமாஸ்கந்த மூர்த்தம்), மாதுமை (சோமாஸ்கந்த மூர்த்தம்), சந்திரசேகரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தம் ஆகிய இந்த மூன்று விக்கிரகங்களும் உடனடியாக நகராண்மைக் கழக நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஏலவே கண்டெடுக்கப்பட்ட வெண்கல திருவுருவங்கள், பின்னெடுக்கப்பட்ட விக்கிரகங்கள் அனைத்தும் கோணேஸ்வரர் கோவிலில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தில் வைத்து பூஜிக்கப்பட்டிருந்த நிலையில் ஆலயப் புனருத்தாரணத்தின் அவசியமும், அவசரமும் உணரப்பட்டது.

சமூக சேவையாளரும் ஆன்மீக செம்மலும் சட்டத்தரணியுமான கே.வி.இரங்கநாதன் அவர்கள் கோணேஸ்வரம் ஆலயத்தை புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்ற அவசியத்தை திருகோணமலை வாழ் சைவத்தவர்களுக்கும், உலகத்தவர்களுக்கும் எடுத்துக்கூறும் வகையில் புனருத்தாரண சபை ஒன்றை அமைப்பதற்காக முதலாவது ஆலய புனருத்-தாரண சபைக் கூட்டத்தை 1950 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 9ம் திகதி கூட்டினார். இக்கூட்டம் முதலியார் கார்த்திகேசுவால் தற்காலிகமாக நிறுவப்பட்டிருந்த கொட்டிலில் கூட்டப்பட்டது. மீண்டும் ஆலய புனர் நிர்மாணம் சம்பந்தமாக மக்களின் அபிப்பிராயத்தையும், ஆதரவையும் பெறவேண்டும் என்ற நோக்குடன்



அமரர்
கே.வி.இரங்கநாதன்
சட்டத்தரணி

திருகோணமலை இந்துக்கல்லூரியில் 1950.08.15 அன்று பரிபாலன சபைக் கூட்டம் நடைபெற்ற போது பெரியார் து.இராசரத்தினம் என்பர். புனருத்தாரண சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். தற்காலிகமாக அமைக்கப்பட்ட இச்சபையில் பின்வருவோர் அங்கம் பெற்றனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிவபாலன் (1947), இ.இராஜவரோதயம் (1952, 1956), பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர், கே.சரவண முத்து, பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியம் குருக்கள், வி.இராமலிங்கம், எஸ்.எம்.மாணிக்கராஜா (1965), ரி.சுப்பிரமணியம், டாக்டர் டபிள்யு.பாலேந்திரா, எஸ். ஆறுமுகம், ரி.ஏகாம்பரம் (1960 மூதூர் பாராளுமன்ற உறுப்பினர்) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இராசரெத்தினம் மரணமாக தலைவர் பொறுப்பை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிவபாலனும் அவரைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.எம்.மாணிக்கராஜா தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டனர். திருகோணமலையின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ்.சிவபாலன் தம்பலகமம் ஆதிகோணேஸ்வர ஆலயம் அதனைத் தொடர்ந்து திருக்கோணேஸ்வர ஆலயத்தின் புனருத்தாரணத்திற்கும் அபிவிருத்திகளுக்குக் காரணகர்த்தாவாக விளங்கினார்.



எஸ்.சிவபாலன்
திருகோணமலையின்
1வது பாராளுமன்ற உறுப்பினர்

கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களை தற்காலிக ஆலயத்தில் வைத்து மக்கள் வழிபட்டனர். தற்காலிக ஆலயத்தில் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வதற்கு முன் கலாநிதி பாலேந்திரா விக்கிர-கங்கள் அனைத்தையும் இலங்கை பூராகவும் ஊர்வலமாக எடுத்துச்சென்றது. 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி சுவாமிமலையில் தற்காலிக ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு அங்கு விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்று வந்தன.

இதற்கிடையில் ஆலயம் அமைந்திருந்த பூர்வீக இடத்தை அறிய வேண்டுமென்ற ஆர்வம் கொண்டிருந்த டாக்டர் டபிள்யு பாலேந்திரா கடும் முயற்சிகளை மேற்கொண்டு போர்த்துக்கல் நாட்டுக்குச் சென்று அங்குள்ள லிஸ்பன் நூல்நிலையத்திலிருந்து ஆலயத்தின் பூர்வீக வரைபடத்தைக் கொண்டு வந்தார். வரைபடத்தின்படி ஏலவே மூன்று கோவில்கள் இருந்துள்ளமை கண்டுகொள்ளப்பட்டது. இதுதவிர போர்த்துக்கீச தளபதிகளின் பதிவேடுகளில் பின்வரும் விடயங்களும் குறிப்பிடப்பட்டிருந்தது. திருக்கோணேஸ்வரத்தை அழித்த போர்த்துக்கீச தளபதி கொன்ஸ் டீசா வரைந்த படங்களும் ஆலயத்தின் நீள அகல எல்லைகளும் ஏனைய கோவில் பற்றிய குறிப்புக்களும் காணப்பட்டன. டீசாவால் அழிக்கப்பட்ட ஆலயத்தின் பரப்பளவானது கோவில் அமைந்த நிலத்தின் நீளம் 600 பாகம் (240 முழம்), அகலம் 80 பாகம் (320 முழம்) அது ஒடுங்கி ஒடுங்கி 30 பாகமாக குறைந்துவிட்டதென்றும், மேற்படி தளபதியின் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இக்குறிப்புக்களின்படி தற்போது ஆலயம் அமைந்திருக்கும் கோட்டைப் பகுதி முழுவதும் ஆலயப் புனிதப் பிரதேசமாக இருந்ததென்பதை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இற்றைக்கு நான்கு நூற்றாண்டுகலுக்கு முன் இப்போது பிரட்ரிக் கோட்டை அமைந்திருக்கும் நிலப்பரப்பு முழுவதும் கோணேசர் கோயிலுக்கு உரியதாக இருந்ததென்பதை போர்த்துக்கீசரின் பதிவேடுகள் உறுதிப்படுத்துகின்றன. (ஆதாரம் பண்டிதர் இ. வடிவேல் கோணேசர் கோயில் வரலாறு 1984 பக்கம் 8)

1952 ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சியின் மத்தியில் டாக்டர் பாலேந்திரா போர்த்துக்கல் நாட்டிலிருந்து கொண்டுவந்த வரைபடத்தின் உதவியுடன் சைவ பெருந்தகைகளின் பெருநிதி உதவியினால் ஆலயம் மீளவும் புனரமைக்கப்பட்டது.

1624 ஆம் ஆண்டு போர்த்துக்கீசரால் துவம்சம் செய்யப்பட்ட புகழ்பெற்ற கோணேசர் ஆலயம் 339 வருடங்களுக்குப் பின் புனருத்தாரணம் செய்யப்பட்டு முதலாவது கும்பாபிஷேகம் 1963 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி நடந்தேறியது. அதனை தலைமை தாங்கி நடத்தி வைத்தார் முன்னாள் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் இராஜவரோதயம். அன்றைய கால கட்டத்தில் கோணேசர் ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவராக இருந்த வைத்திய கலாநிதி க.சித்திரவேலு ஆலயத்தின் குடமுழுக்கு பொறுப்பு அனைத்-தையும் தானே ஏற்றுக்கொண்டு மிகச் சிறப்புற ஆலய நிர்வாகத்தை நடத்தினார். முதலாவது கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆலய பரிபாலன சபைத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர் க.சித்திரவேல் தலைமையில்


என்.ஆர்.இராஜவரோதயம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்


என்.ஆர்.இராஜவரோதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கிவந்த ஆலய பரிபாலன சபையினர் கோணேசர் ஆலயத்தையும் அதனது சுற்றுப்புறத்தையும் புனித நகரமாக பிரகடனம் செய்வதற்குரிய முன்னெடுப் - புக்களை அரசியல் ரீதியாக மேற்-கொண்டு வந்தார்கள். அனுராதபுரம், பொலநறுவை, மிகிந்தலை, கதிர்காமம், களனி, தலதா மாளிகை போன்ற ஆலயங்கள் அமைந்திருக்கும் இடங்கள் எவ்வாறு அரசாங்கத்தினால் புனித நகராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோ அதேபோன்றே உலகப் புகழ்பெற்ற இந்துக்களின் ஆலயமான கோணேசர் ஆலயத்தையும் அதன் சுற்றுப் புறத்தையும் புனிதநகராக பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஆலய பரிபாலன சபையும் உலக இந்து அமைப்புக்களும் வேண்டி நின்ற வேளையில் தான் 1965 ஆம் ஆண்டு டட்லி சேனாநாயக்கா தலைமையிலான தேசிய அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது.

இவ்வரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் இணைந்து கொண்டதான் காரணமாக நியமன உறுப்பினரான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எம். திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இதே அரசாங்கத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் சுகாதார மந்திரியாகவும், எம்.சிவசிதம்பரம் உப சபாநாயகராகவும் நியமிக்கப்பட்டனர். தேசிய அரசுக்கு ஆதரவு நல்கும் நிபந்தனைக்கு அமைய டட்லி - செல்வா ஒப்பந்தம் 1965 மார்ச் 24 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இத்தகையதொரு நல்ல சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி திருக் கோணேஸ்வரத்தை புனித நகராக்கும் கோரிக்கைகள் ஆலய பரிபாலன சபையால் முன்னெடுக்கப்பட்டது.

திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக பதவி வகிக்கும் நிலையில் அவரது அதிகாரத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்துவதுடன் பிரதமர் டட்லி சேனாநாயக்காவுக்கும், தமிழரசுக்கட்சிக்குமிடையேயுள்ள புரிந்துணர்வு நிலை சாதகமாக இருக்கின்ற காரணத்தினால் நோக்கம் நிறைவேற்றப் படுமென நம்பினார்கள் இதற்கிடையில் கோணேசர் ஆலய புனிதநகர் விவ காரம் பத்திரிகைகளில் வாதப்பிரதிவாதங்களை உருவாக்கிய வேளையில் எதிர்ப்புத் தெரிவித்த பௌத்த பீடாதிபதிகளுக்கெதிராக தமிழறிஞர்களும் முன்னைய வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் உட்பட பலர் நியாய, வரலாற்றுக் கருத்துக்களை ஆதாரம்காட்டி விவாதித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த எம்.திருச்செல்வம் புகழ்பெற்ற திருக்கோணேஸ்வரத்தை புனித பிரதேசமாக பிரகடனம் செய்து பாதுகாக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்துக்கள் சார்பில் முன்வைத்து அரசாங்கத்தின் சம்மதத்துடன் புனிதப் பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டிய ஆலய எல்லையை நிர்ணயிக்க, மூவர் கொண்ட குழுவை நியமித்தார். இக்குழுவின் தலைவராக இளைப்பாறிய உச்சநீதிமன்ற நீதிபதி பி.ஸ்ரீஸ்கந்த ராஜா, இளைப்பாறிய மாவட்ட நீதிபதி நியூரன் எதிரிசிங்க, இளைப்பாரிய மாவட்ட நீதிபதி கே.கந்தகாமி ஆகியோர் இலங்கை அரசாங்க வர்த்தமானியின் (1968.08.23 இல்) மூலம் நியமிக்கப்பட்டனர். அவ்வறிவித்தல் திருகோணமலை பிரட்ரிக் கோட்டையைப் புனித பிரதேசமென பிரகடனப்படுத்தல் என்ற வாசகங்களுடன் வெளியிடப்பட்டிருந்தது. இப்பிரகடனம் பேரினவாதி - களின் கடுங்கண்டனத்திற்கு உள்ளாகியது. சேருவில பௌத்த விகாரை விகாராதிபதி இக்குழு நியமனத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். இதனால் அமைச்சர் திருச்செல்வத்தைக் கலந்தாலோசிக்காமலே ஏலவே நியமிக்கப்பட்ட குழுவை இரத்துசெய்துவிட்டு வேறு குழுவை பிரதமர் டட்லி சேனாநாயக்க நியமித்தார். இதனை ஏற்காத திருச்செல்வம் 1968 செப்டெம்பர் 16ஆம் திகதி மந்திரிப் பதவியை ராஜினாமா செய்தார். இந்த ராஜினாமா நடைபெறுவதற்கு சில வாரங்களிற்கு முன் கோணேசர் ஆலய புனிதநகர் பிரகடனம் செய்தியை தெரிவிப்பதற்கான கூட்டம் ஒன்று தமிழரசுக் கட்சியினால் திருகோணமலை முற்றவெளியில் நடத்தபட்டவேளை கட்சியின் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு அரசின் முரண்பட்ட நடவடிக்கையை விளக்கினார்கள். இக் கூட்டத் -திற்கு அப்போது உபசபாநாயகராகவிருந்த மு.சிவசிதம்பரம் அழைக்கப்பட்டி -ருந்தும் அவர் சமூகந்தரவில்லை. அமைச்சர் திருச்செல்வத்தால் நியமிக் - கப்பட்ட குழுவின் முன் சாட்சியமளிப்பதற்காக அப்போது கோணேசர் ஆலய பரிபாலன சபை தலைவராக இருந்த டாக்டர் சித்திரவேல் பொதுமக்களின் ஆதரவையும், ஆலோசனையையும் திரட்டும் வகையில் பல்வேறு முன்னேற்பாடுகளை மேற்கொண்டார். அந்த ஏற்பாடுகளுக்கமைவாக டாக்டர் சித்திரவேல் மக்களிற்கும் நிறுவனங்களிற்கும் பொது அமைப்புக்களிற்கும் பின்வரும் செய்தியை வெளியிட்டார். இன்றைய கச்சேரிக்கு அணித்தாகவுள்ள சமதரையில் பாவநாசத் தீர்த்தக்கேணி அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கீசர் அதை மூடி சுனையின் நான்கு எல்லையிலும் நான்கு கிணறுகள் அமைத்துள்ளனர். கோவிலின் புராதன சிதைவுகள் கோட்டை மதில்களிலும் மற்றும் பல இடங்களிலும் பரந்து கிடப்பதால் இந்நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க முழு மலைப்பிரதேசத்தையும் புனித நகரமாக்க மக்களின் ஒத்துழைப்பு வேண்டுமெனக் கோரியிருந்தார். துரதிஷ்டவசமாக அமைச்சர் திருச்செல்வத்தின் ராஜினாமாவுடன் இம் முன்னெ -டுப்புக்கள் தடைப்பட்டன. கோணேசர் ஆலயத்தின் பரிபாலனத்தை சிறப்புற ஆற்றிவந்த டாக்டர் க.சித்திரவேல் 1971 ஆம் ஆண்டு சிவபதடைந்தார். அவரைத் தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவராக சட்டத்தரணி எம்.கே.செல்வராஜா பொறுப்பேற்றுக் கொண்டார்.


ஆலயப்பரிபாலன சபைத் தலைவர் பொறுப்பை பொறுப்பேற்றுக் கொண்ட எம்.கே. செல்வராஜாவின் அரும்பெரும் முயற்சியால் குரை கடல் ஓத நித்திலம் கொண்டுவந்து கொட்டும் வண்ணக் கடற்கரையென புகழ்ந்து போற்றப்படும் கடற்கரையில் 1973 ஆம் ஆண்டு தெப்பத்திருவிழா நடாத்தப்பட்டது. தெப்ப உற்சவத்திற்கு கோணேசர் சுவாமிமலையிலிருந்து இறங்கிவந்து திருகோண மலை கடற்கரையில் தெப்பத்தில் ஆரோகணித்து சமுத்திரத்தில் வலம் வருவார். சமுத்திரக் கரை யில் இரவு பூராகவும் இருந்து அடியார்களுக்கு அருள்புரியும் காட்சியே தெப்பத்திருவிழா எனப் போற்றப்படுகிறது. குளக்கோட்ட மகராஜா காலத்தில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இந்த தெப்பத் திருவிழாவை இப்புனருத்தாரண



என்.ஆர்.இராஜவரோதயம்
முன்னாள் பாராளுமன்ற
உறுப்பினர்



எம்.கே.செல்வராஜா
சட்டத்தரணி
முன்னாள் கோணேஸர் ஆலய
பரிபாலன சபைத்தலைவர்



பெ.சூரியமூர்த்தி
முன்னாள் நகரசபைத்
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையினர் மிக நீண்டகாலத்திற்குப் பின் அறிமுகம் செய்து வைத்தமை சைவப் பெருமக்களால் பாராட்டப்பட்ட விடயமாகவிருந்தது.

புகழ்பெற்ற கோணேஸ்வரத்தின் மகிமை பேசும் சம்பிரதாயங்களில் பிரசித்தி பெற்ற விடயமாக பேசப்படுவது கோணேஷர் உலா என்ற மரபு விழாவாகும். சிவராத்திரிக்கு அடுத்ததினம் மாதுமை அம்பாள் சமேத கோணேஷப்பெருமான் நகர் வலத்துக்குப் புறப்படுவார். இரவு நேரத்தில் நகர்வலம் நடைபெறும். நகர்வலத்தின்போது கோணேசப் பெருமான் திருகோணமலையிலுள்ள வீதிகள் தோறும் சென்று பக்தர்களுக்கு தரிசனம் கொடுப்பார்.

கோணேசர் உலாவரும் போது, வீதிகள் தோறும் பூரண கும்பம் வைத்து வீதியெல்லாம் அலங்கரிக்கப்பட்டு மாவிலைத் தோரணங்கள், வாழை, கமுகு அலங்காரங்கள் கண்ணைப் பறிக்கும் காட்சியாக அமைந்து காணப்படும். சமய வேறுபாடு காட்டாது வீதிதோறும் அலங்கரிக்கப்படும் நிகழ்வு மனதுக்கு ரம்மியமாக இருக்கும். நகர்வலத்தின் போது முதலாம் நாள் விஸ்வநாத சிவன் ஆலயத்திலும், இரண்டாம் நாள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலும் தங்கியிருந்து, மூன்றாம்நாள் தனது ஆலயத்திற்கு எழுந்தருளுவார். கால மாற்றத்தின் காரணமாக இந்த நடைமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கோணேசர் உலாப்போல் வேறெங்குமே நடைபெறுவதில்லை என்பது பக்தர்களின் நம்பிக்கை.

ஆலயத்தின் இரண்டாவது கும்பாபிசேகம் 1981 ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி புனருத்தாரண சபைத்தலைவர் சட்டத்தரணி எம்.கே.செல்வ ராஜாவைத் தலைவராகக் கொண்ட சபை உபதலைவராக சி.முத்துக்குமாரு செயலாளர் பண்டிதர் இ.வடிவேலு பொருளாளர் சி.ஆறுமுகம் ஆகியோரைக் கொண்ட சபையால் மிகத் திறம்பட நடத்தப்பட்டது. இரண்டாவது கும்பாபிஷே -கத்துடன் மீண்டும் புனிதநகர் என்று கோணேசர் ஆலயம் பிரகடனப்படுத்தப் பட வேண்டும் என்ற கோரிக்கை தீவிரமடையத் தொடங்கியது. இத்தகைய - தொரு நெருக்கடி நிலை ஏற்கனவே 1968 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலைபோன்று உருவாகப்படக்கூடாது என்பதற்காகவோ என்னவோ அடிக்கடி தலைதூக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரச்சினைக்கு முடிவுகட்டும் சூழ்ச்சி நோக்குடன் தந்திரோபாயத்துடன் 1983 ஆம் ஆண்டளவில் பிரட்ரிக் கோட்டையையும், அதன் சுற்றுப்புற பிரதேசமும் தொல்பொருள் ஆய்வுக்காக ஒதுக்கப்படுகிறது என்ற வர்த்தமானி பிரகடனத்தை செய்ததுடன் அதற்குள் அடக்கப்பட்ட அனைத்து பிரதேசத்தையும் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது. 1990 ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் கோணேஸ்வரர் ஆலயம் சேதமாக்கப்பட்டதுடன் ஆலயத்திற்குள் பக்தர்கள், பொதுமக்கள் போய்வர முடியாத சூழ்நிலையொன்று உருவாகியிருந்தது. இத்தகைய இருண்ட சூழ்நிலைக்கு விடிவுகாணும் முகமாக அப்போது இந்து கலாசார அமைச்சராக இருந்த பி.பி.தேவராஜின் கடும் முயற்சியாலும் வடகிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமையவும் 1991.11.17 ஆம் 1992.10.30, 1992.11.04 ஆகிய காலப்பகுதிகளில் ஆலய புனருத்தாரணத்துக்காக கூட்டப்பட்ட பல்வேறு கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், ஆலோச - னைகளுக்கு அமைவாக ஆலயத்தின் மூன்றாவது மஹா கும்பாபிஷேகம் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி நடந்தேறியது.

அன்றைய ஆலய பரிபாலனசபைத் தலைவர் எம்.கே.செல்வராஜா இதைச் சிறப்பாக நடத்தி முடித்தார். இக்கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மீண்டும் புனிதநகர் ஆக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வளர்ந்தன. இதனை கலாநிதி டபிள்யூ.பாலேந்திரா (1993.02.26), வ.ஞானசம்பந்தர், பெ.சி.கணேசலிங்கம் (1994.08.20), எஸ்.ரி.அரசு போன்ற பல்வேறு அறிஞர்களும் பொதுமக்களும் கோணேசர் ஆலயம் புனித நகராக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளனர். 1994 ஆம் ஆண்டில் நகரசபைத் தலைவராக இருந்த பொ.சூரியமூர்த்தி பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளிக்கையில் கோணேசர் ஆலயம் புனிதநகராக்கப்படுவது தொடர்பான ஆலோசனையை தன்னிடம் பெறும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கி உள்ளார். அதற்கு அமைவாக கோட்டை முழுவதும் புனிதநகராக பிரகடனப் படுத்த வேண்டும். இராவணன் வெட்டு, அருள்மலை, அன்னதான மண்டபம், பாவநாச தீர்த்தம் கோட்டைவாசல், பிள்ளையார் கோவில் தீர்த்தமாடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரைப் பிரதேசம் ஆகியன இப்புனித பிரதேசத்திற்குள் அடக்கப்பட வேண்டுமென தனது பத்திரிகை பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இத்தகை - யோரின் கருத்துப்படி திருக்கோணேஸ்வரமும், தீர்த்தப் பிரதேசமும் புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற விருப்பும் கோரிக்கையும் வலுப்பெற்றுக் காணப்படுகிறது. இக்கோரிக்கை கடந்த அறுபது வருட காலமாக மக்களாலும் பொது அமைப்புக்களாலும் முன்வைக்கப்பட்டு எப்போதும் அவை உதாசீனப்படுத்தப்பட்ட நிலையே காணப்படுகிறது.

ஆலயப் பிரதேசத்தையும் தீர்த்தக்கரையையும் புனித நகராக பிரகடனம் செய்ய வேண்டுமென்று கூறும் இந்துப் பெரியார்களின் கருத்துப்படி இந்தத் தீர்த்தக்கரையில் அதே ஆலயங்கள், தீர்த்தமாடக் கொண்டு வரப்படுவது வழக்கம். அறுபது வருடங்களுக்கு ஒருமுறை மஹா மகா விழாவும், பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை மாசிமக விழாவும் இடம்பெறும் வேளையில் நகரிலுள்ள ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆலய மூர்த்திகள் இப்புனித சமுத்திரக்கரைக்கு கொண்டுவரப்படுதல் சம்பிரதாயம். அப்போது தற்காலிக கொட்டில் அமைக்கப்பட்டு சமய சடங்குகள் செய்வது வழக்கம்.

பங்குனி உத்தரத்தில் பத்திரகாளி அம்பாளும் அதனைத் தொடர்ந்து கோணேசப்பெருமானும் தீர்த்த தெப்பத் திருவிழா என்பவற்றிற்காக இந்த தீர்த்தக்கரைக்கே கொண்டுவரப்படுவது வழக்கமாகும். அந்த இடங்கள் குடியேற்றப்பட்டு இன்று நிறைக்கப்பட்டிருக்கின்றன. இவை ஒரு ஆன்மீக சமூகத்தின் நியாயத்தின் பேரால் அரசு செய்யவேண்டிய நீதித் தீர்ப்பு என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போல் சுதந்திரத்திற்குப் பிறகு எத்தனையோ ஆலயங்கள் புனிதநகராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. பல்லாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்த இந்த ஆலயத்தை தரிசிக்க மதவேறுபாடின்றி பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் இன்னும் வேறு மதத்தவர்கள் இன்றும் வந்தவண்ணமேயுள்ளனர். இவர்களை நுழைவாசலில் அமைக்கப்பட்டு இருக்கின்ற வியாபாரக் கொட்டில்கள்தான் வரவேற்கின்றன. சில மரபுகளும் சம்பிரதாயங்களும், சடங்குகளும் இதனால் மீறப்படுகின்றன. போர்த்துக்கீசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலந்தொட்டு பரிபாலனத்தின் பகுதியாக இயங்கிவந்த பிரட்ரிக் கோட்டையில் அமைந்த கச்சேரி அண்மையில் கடந்த ஒக்டோபர் மாதம் 2014 முதல் நாலாங் கட்டை சந்தியில் (ஆண்டான் குளம்) பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட நிர்வாக கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பழைய கச்சேரியென பல ஆண்டுகளாக தரிசாகக்கிடந்த கடற் கரைக்கு முன்னாலுள்ள கட்டடத்தின் நிலைபற்றி எடுத்துக்கூற வேண்டிய - தில்லை. மிக நீண்டகாலகமாக பரிபாலனசபைத் தெரிவில் ஏற்பட்ட இழுபறி நிலையைத் தீர்க்கும் முகமாக 2009.12.12 அன்று நடைபெற்ற (நீதிமன்ற பொதுக்கூட்டம்) கூட்டத்தில் வட்டாரம், பற்று ரீதியாக ஐந்துபேரும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பரஞ்சோதிப் பிள்ளை பரமேஸ்வரன் (தலைவர்), நாகலிங்கம் சந்திரசேகரம் (உபதலைவர்), கணபதிப்பிள்ளை அருள்சுப்பிரமணியம் (செயலாளர்), ஆறுமுகம் குணராஜ ரெட்ணம் (உப செயலாளர்), தர்மலிங்கம் யோகேஸ்வரன் (பொருளாளர்) ஆகியோர் இச்சபையில் இடம்பெறுகின்றனர். உலகப்புகழ் கொண்டதும், புராணகாலம் தொடக்கம் போற்றப்பட்டு வரும் இவ்வாலயம் புனிதப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென்பதே மேன்மைகொள் சைவநீதியை பின்பற்றுவோர் கனவாகும்.

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள்

வரலாற்றுக் காலந்தொடக்கம் திருகோணமலையை அடையாளப்படுத்தும் சின்னங்களில் முதன்மை பெற்று நிற்பது கோணேஸ்வரம், கன்னியா வெந்நீரூற்று, இயற்கைத்துறைமுகம், தம்பலகமம் ஆதி கோணேஸ்வர ஆலயம், கங்குவேலி சிவன்கோவில் ஆகிய வரலாற்றுச் சின்னங்களாகும்.


இந்த வரலாற்றுச் சின்னங்கள் மீது கி.மு. காலந்தொட்டு மற்ற மதத்தினர், இனத்தினர் மேற்கொண்டு வந்த அழிப்புக்கள், தாக்கங்கள் என்பன ஏராளமாகவே நடந்துள்ளன. இதை வரலாறுகளிலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம். இந்த அட்டூழியங்களின் ஒரு புள்ளியாக வந்து நிற்பதுதான் இன்றைய கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசம்.

முள்ளிவாய்க்கால் போரை வெற்றிகொண்டுவிட்டோமென்ற மமதையில் 05.10.2010 அன்று கன்னியாவுக்கு வருகைதந்த திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான அதிகாரிகள் குழுவொன்று இந்துக்களின் புனிதபிரதேசமாக பல நூற்றாண்டுகளாக போற்றப்பட்டு வந்த கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்துக்குள் புகுந்து 50 வருடங்களுக்கு மேலாக உப்புவெளி பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்த கன்னியா வெந்நீரூற்றுக்களை அடையாளப்படுத்தப்பட்டிருந்த விளம்பரப் பலகையையும், ஏனைய அடையாளப் பொருட்களையும் உடைத்தெறிந்ததுடன், இராவணனுக்கும், கன்னியா வெந்நீர் ஊற்றுக்கும் இடையேயுள்ள தொடர்புசார் விடயத்தை விளக்கும் புராணக்கதையடங்கிய பலகையையும் அக்குழுவினர் பிடுங்கியெடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்பே கன்னியாவை பௌத்த மயப்படுத்தும் நோக்கில் பல திட்டமிட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பதற்கு ஆதாரமாக சில முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. சில அதிகாரிகளின் அழுத்தங்கள் காரணமாக திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் அவர்கள் மாகாண காணி ஆணையாளர் நாயகத்துக்கு 26.11.2009 தேதியிடப்பட்ட 2/4/5/1//1026 இலக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கன்னியா வெந்நீர் ஊற்று நுழைவாயில்

கடிதமொன்றை பின்வரும் உள்ளடக்கம் கொண்டதாக எழுதியிருந்தாரென உப்புவெளி பிரதேச சபையின் தற்போதைய(2013 ) தவிசாளர் விஜேந்திரன் தெரிவித்திருந்தார்.

**கன்னியா "வெந்நீர் ஊற்றுக்கு அருகில் 0.4120 ஹெக்டர் விஸ்தீரணம் உடைய காணியை வில்கம் ரஜமகா விஹாராதிபதிக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு குறிப்பிட்ட படிவங்கள் பூரணப்படுத் -தப்பட்டு எனது சிபாரிசுடன் தங்களுக்கு அனுப்பி வைக்கின்றேன்" என அக்கடிதத்தில் பிரதேச செயலாளர் குறிப்பிட்டிருந்ததாகத் தெரிவித்திருந்தார்.**

இவ்வாறான கபளீகர முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில்தான் அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்துக்குள் புகுந்த மேற்படி சம்பவம் நடைபெற்றது.

05.10.2010 இல் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் 06.10.2010 தேதி அன்று உப்புவெளி பிரதேச சபையில் ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இக்கண்டனத் தீர்மானத்தைத் தொடர்ந்து அடுத்த நடவடிக்கையாக தவிசாளர் தங்கவேலாயுதம் காந்தரூபன் தலைமையிலான சபை உறுப்பினர்கள் கன்னியா வெந்நீரூற்று விவகாரம் தொடர்பாக திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதியிருந்தார்கள்.

**கன்னியா வெந்நீர் ஊற்றும் ,அதனைச் சூழவுள்ள பிரதேசமும் உள்ளடங்கிய சுமார் 3 ஏக்கர் காணி 1957 ஆம் ஆண்டு திருகோணமலை அரசாங்க அதிபரால் உப்புவெளி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அப்போது அரசாங்க அதிபராக இருந்தவர் மக்ஹெய்சர் *Anton Rothwell Mcheyzer (1954-1950)* என்பவர். எனவே 50 வருடங்களுக்கு மேலாக உப்புவெளிப் பிரதேச சபையின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த வெந்நீர் ஊற்றுப் பகுதியை மீண்டும் எம்மிடம் ஒப்படைக்க ஆவண செய்யும்படி பிரதேச சபையினர் பிரதேச செயலாளருக்கு கோரிக்கை விடுத்திருந்தார்கள்.**

**பிரதேச சபையினரின் கடிதத்தையொட்டி** திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் அவர்கள் மாகாண காணி ஆணையாளருக்கு பின்வரும் அடக்கம் கொண்ட கடிதமொன்றை வரைந்திருந்தார்.

**உப்புவெளிப் பிரதேச சபை கூறியுள்ள 1957 ஆம் ஆண்டு திருகோணமலை அரசாங்க அதிபரால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் மேற்படி காணி 1981.11.09 திகதிய 47 ஆம் இலக்க திருகோணமலை காணி நிர்ணய சட்டத்தின் 166/4 இலக்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1981.11.09 திகதிய அரச வர்த்தமானி பிரசுரம் மூலம் அரச உடைமை ஆக்கப்பட்டுள்ளது என நில அளவைத் திணைக்கள ஆவணங்களின் படி அறியமுடிகிறது. அக்காணி குறிப்பிட்ட வரைபடத் துண்டில் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர வேறு காணிகள் உப்புவெளி பிரதேச சபைக்கு இருக்கவில்லை** என பிரதேச செயலாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இச்சம்பவங்கள் நடைபெறுவதற்கு முன்பே பிரதேச செயலாளரின் 26.11.2009 தேதியிடப்பட்ட 2/4/5/1/ 1026. இலக்க கடித சிபார்சுக்கு அமைய காணி ஆணையாளர் அவர்கள் வில்கம் ரஜமகா விஹாரை விஹாராதிபதிக்கு கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதியில் காணி வழங்கும் நோக்கில் 04.06.2010 திகதியிட்டு மேற்படி காணிக்கு அனுமதி வழங்கும் கடிதமொன்றை கொழும்பு காணி ஆணையாளர் நாயகம் மற்றும் மாகாண காணி ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பியிருந்தார்.

இந்த அனுமதியின் பிரகாரம் வெந்நீர் கிணற்றுக்கு மேலுள்ள பகுதியில் (வெந்நீர்கிணற்றின் தெற்குப்புறம் சுமார் 200 மீற்றர்) பௌத்த விஹாரையொன்று வில்கம் ரஜமகா விஹாரை விஹாராதிபதியால் எவ்வித அனுமதியுமின்றி 2010 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாக உப்புவெளி பிரதேச சபையினர் குற்றம் சாட்டியிருந்தனர்.




2010ம் ஆண்டுக்குப்பின் நிர்மாணிக்கப்பட்ட விஹாரை வில்கம் ரஜமகா விஹாரை என்பது கன்னியா வெந்நீரூற்றில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள விகாரை. 30 ஏக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்தீரணத்தில் இவ்விகாரை அமைக்கப்பட்டிருக்கிறது. வரலாற்று குறிப்புகளின்படி இவ்விகாரை ராஜ ராஜப் பெரும்பள்ளியென்ற பெயர் கொண்டது. சோழ சாம்ராச்சியம் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் நிறுவப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த விஹாரை பற்றி பிறிதொரு ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

வெந்நீரூற்றுக் கிணறுகளை கையகப்படுத்தி பௌத்த ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கில் கன்னியா வளாகத்துக்குள் ஒரு விஹாரையை நிறுவி அதை வில்கம் விஹாரையின் நிர்வாக எல்லைக்குள் கொண்டுவரும் நோக்கிலேயே கன்னியாவில் 2010 ஆண்டு பௌத்தவாதிகள் மேற்படி விஹாரையை நிறுவியுள்ளனர் என இந்து மதத்தினர் தமது கடுமையான சினத்தை அக்காலத்தில் வெளிக்காட்டியிருந்தனர்.

இந்த நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் கன்னியா வெந்நீரூற்றின் பூர்வீக வரலாற்றை மிகச்சுருக்கமாக அறிந்துகொள்வது நன்று.

கன்னியா எனும் பெயர் பற்றிய காரணத்தை அல்லது ஆதாரத்தை அறிய முற்படும் போது அது எமக்கு பல வரலாற்றுச் சிக்கலைத் தருகின்றது. கன்னியா என்பது இயற்பெயரா? அல்லது மாற்றுப் பெயரா? அல்லது காரணப் பின்னணியற்ற பெயராவென ஆராயப்பட வேண்டிய கடப்பாடு ஆய்வாளர்க - ளுக்குண்டு.

பொதுவாகவே இடப்பெயர்கள் என்பது ஏதாவதொரு காரணத்தை அடியொற்றி சூட்டப்படுகின்றது என்பது பொது வழக்கம்.

கன்னியா என்ற பெயர்வரக் காரணம் கன்னி என்னும் சொல்லுக்கு கற்றாழை எனும் பொருளுமுண்டு. இத்தாவரம் இப்பிரதேசத்தில் அதிகமாக காணப்பட்ட காரணத்தினால் கன்னியா எனும் பெயர் காரணப்பெயராக ஆகியிருக்கலாமென கதிர் தணிகாசலம் எனும் ஆய்வாளர் தனது **"தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும்"** எனும் நூலில் குறிப்பிட் - டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியா என்ற பெயருக்கு முன்வரும் கன்னியென்ற சொல் இன்னும் சில அர்த்தங்களைக் கொண்டுள்ளதாக காணப்படுகின்றது. துர்க்கை, பார்வதி, குமரி, தவப்பெண், பூண்டு என்ற பலவேறு அர்த்தங்களை இது தருவதை சொல்லகராதிகள் எடுத்துக்காட்டுகின்றன.

## புராண இதிகாச ஆதாரங்கள்

கன்னியா எனும் பெயருக்கான காரணங்கள் புராண, இதிகாச மற்றும் வரலாறு சார்ந்த வகையில் எவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது என்பது பற்றி பார்ப்பது இதுபற்றிய தெளிவைத் தரும்.

### 1) வீரசிங்காதபுராணம்

இப் புராணம் கன்னியா என்னும் பெயருக்கான காரணத்தை இவ்வாறு விளக்கிக் கூறுகின்றது. சப்த கன்னியர்களும் மஹாமக நாளில் (இது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வருவது) ஏழு கூவங்களில் மூழ்கி எழும்பி 7 குடங்களில் நீர் எடுத்து வந்து இங்குள்ள சிவனுக்கு அபிஷேகம் செய்தார்கள். சிவன் அனுக்கிரகம் கொடுத்தார். இக்கன்னியர்கள் நீராடிய காரணத்தினால் கன்னியர்கள் என்ற சொல் திரிந்து கன்னியா என மருவி இருக்க வேண்டுமென அப்புராணம் கூறுகிறது.. கன்னியர் என்பது கன்னியா என மருவ நியாயம் இருக்கின்ற போதும் சப்த கன்னியர்கள் நீராடினார்கள் என்ற புராணத்துடன் தொடர்புபட்ட ஆதாரங்களை உண்மைப்படுத்துவது என்பது எவ்வளவு கடினமான காரியம் என்பது கூறாமலே விளங்கிக் கொள்ள முடியம். ஆனால் வீரசிங்காதபுராணத்தில் விவரித்துக் கூறப்படும் அளவுக்கு இந்த நீர் ஊற்றுக்கள் கால முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 2) ஐதீகங்கள் .

கன்னியா வெந்நீர் ஊற்றுக்களின் தோற்றம் பற்றி ஐதீக கதை ஒன்று இவ்வாறு கூறுகிறது. இலங்கை மன்னனாக ஆட்சி செய்த இராமாயணத் - தினால் விதந்துரைக்கப்படும் இராவணனுடைய தாயாரின் நாமம் கைகேசி. இவளின் பெயரை கேகசி என இராமாயணம் விளித்துள்ளது. கைகேசியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியெனவும் அழைத்துள்ளார்கள். இராவணனுடைய தாயாருக்கு இராவணன் ஈமக்கிரிகைகளை இவ்விடத்தில் செய்த காரணத்தினால் அந்த இடத்துக்கு கன்னியா என்ற காரணப்பெயர் வந்ததாகவும், கன்னியென்ற பெயரே காலப்போக்கில் கன்னியா என மருவியதாகவும் கூறப்படும் காரணங்கள் ஒரு சில சிங்கள நூல்களில் குறிப்பாக கூறப்பட்டுள்ளது.

**3)** இராவணனுடன் தொடர்புபட்ட மற்றுமொரு கதையும் ஐதீகமாகக் கூறப்படுகிறது. இராவணனுடைய தந்தையாகிய விச்சிரவசு (விசிரவசு)வின் தந்தையாகிய புலஸ்திய முனிவர் அதாவது இராவணனுடைய தாத்தாவாகிய புலஸ்திய முனிவரின் மனைவிக்கு கன்னியா என்ற ஒரு பெயருண்டு. இந்த புலஸ்திய முனிவர் இலங்கையை ஆட்சி செய்தார் என்றும் அவருடைய மனைவியாகிய கன்னியா இந்த இடத்தை தரிசனம் செய்ததாகவும் அக்காரணத்தினால் இந்த இடத்துக்கு கன்னியா என்ற பெயர் வந்ததாகவும் இன்னுமொரு ஐதீகக் கதையுண்டு.



இராவணேஸ்வரன்

## திருக்கோணாசல வைபவம்

**4)** ஆன்மீக உலகின் அதிசயங்களில் ஒன்றான இந்த ஊற்றுக்கள் பற்றி திருக்கோணாசல வைபவம் என்னும் நூல் பின்வருமாறு கூறுகிறது. "தாயாரின் வழிபாட்டுக்காக சிவலிங்கம் பெற திருக்கோணேஸ்வரம் வந்த இராவணன் சிவலிங்கம் பெற பல வழிபாடுகளை மேற்கொள்கிறான். அவன் சிவனிடம் லிங்கத்தைப் பெற்று பூமியில் பிரதிஸ்டை செய்துவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை வெல்ல பிரபஞ்சத்தில் யாராலும் முடியாது என்பதை உணர்ந்த விஷ்ணுபகவான் சூழ்ச்சி செய்து இராவணன் லிங்கத்தை அடையா வண்ணம் முனிவர் வேடம் தாங்கிவந்து "உன் தாய் இறந்துவிட்டாள்" எனப் பொய் கூறியது கேட்டு புலம்பிய இராவணன் முனிவர் வேடம் தாங்கி வந்த விஷ்ணுவிடம் தனது தாயாரின் ஈமக்கிரியைகளைச் செய்து தரும்படி வேண்டுகிறான். அதற்கு உடன்பட்ட முனிவர் இராவணனை அழைத்துக் கொண்டு திருகோணமலைக்கு மேற்குத் திசையாகவுள்ள கன்னியா என்னும் தலத்துக்கு வந்து அவ்விடத்தில் தனது கையிலுள்ள தண்டினால் ஏழிடத்தில் ஊன்றினார். முனிவர் ஊன்றிய ஏழு இடத்திலும் கடும் சூடு, இளஞ்சூடு என ஏழுவகைப் பேதமுள்ள ஏழு கூவல்கள் உண்டாகின. இவையே கன்னியா வெந்நீர் ஊற்றுக்களாகும்.

இங்கு தெய்வப் பெண்கள் எப்போதும் வந்து விளையாடிப் போவதால் கன்னியா மிகவும் விஷேசமான தலமாகும் எனக் கூறி ஈமக் கிரியைகளைச் செய்து வைத்தாராம் முனிவர் வேடத்தில் வந்த விஷ்ணுபகவான்.

இவ்வாறு கன்னியா என்ற பெயரையொட்டி பல்வேறு புராண, இதிகாச மற்றும் ஐதீகக்கதைகள் இருந்துவருகின்றபோதும் வரலாற்று ஆதாரங்களுடன் தொடர்புபட்ட விடயங்கள் அடையாளமிட்டுக் காட்டப்பட வில்லை. பொதுவாக புராணங்களையும், இதிகாசங்களையும், ஐதீகங்களை யும் வரலாறு மூலாதாரங்களாக ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் மரபு வழிப்பட்ட சமூகங்கள் புராணங்களையும், இதிகாசங்களையும், ஐதீகங்களையும் அதிக நம்பிக்கை கொண்டதாகவே ஏற்றுக் கொள்கின்றது.

**வரலாற்று ஆதாரங்கள் .**

இராவணன் காலத்திற்குப் பின் எமக்கு கன்னியா பற்றிக் கிடைக்கும் வரலாற்று ஆதாரமென்ற வகையில் ஒல்லாந்தர் காலத்தைக்குறிப்பிடலாம். திருகோணமலையுடன் தொடர்புபடுத்திக் காட்டப்படுகின்ற 1786இல் ஒல்லாந்த ஆளுனர் அவர்களின் திருகோணமலை மாவட்டச் சுற்றுப் பயண அறிக்கையில் (15.05.1786 - 21.06.1786) கன்னியா வெந்நீர் ஊற்றுப்பற்றிய சில குறிப்புக்களை இவ்வாறு தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யூன் 20 ஆந் திகதி (26.06.1760) இறம்பைக்குளத்துக்கு நான் சென்றபோது ஐரோப்பிய படை வீரன் ஒருவன் காட்டில் இருப்பதாக தகவல் கிடைத்தது. அவனைப் பிடித்தபோது, நோயாளியைப் போல் காட்சிளித்ததோடு, அவன் கால்கள் மிக மோசமாக வீங்கிக் காணப்பட்டது. அவன் வெந்நீர்க் கிணற்றுக்கு அருகிலுள்ள ரோமத் தேவாலயத்துக்கு வணங்கச் சென்றபோது காப்பிரிகள், மலாயர்கள் முஸ்லிம் கொண்ட ஒரு கூட்டத்தினர் தன்னைப் பிடித்ததாக கூறினான்.

ஒல்லாந்த ஆளுனரின் குறிப்பின்படி பார்க்கின்றபோது வெந்நீர்க் கிணறுகள் ஒல்லாந்தர் காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றதாக இருந்திருக்கிது என்பதை மேற்படி குறிப்புக்களிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அத்துடன் அருகில் புகழ் பெற்ற ரோமத் தேவாலயமொன்றும் இருந்திருக்கிறது என்ற தகவலும் பெறப்பட்டுள்ளது. இக்குறிப்பின்படி மேற்படி தேவாலயம் வெல்வேரியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயமாக அது இருக்கலாமென ஊகிக்க இடமுண்டு.

போர்த்துகீசர் 1624 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோணேசர் ஆலயத்தை துவம்சம் செய்தார்கள். பல இந்துக் கோயில்களுக்கு எதிராக தேவாலயங்களை நிறுவியுள்ளார்கள். இந்த அடிப்படையில் பார்க்கின்றபோது கன்னியாவிலுள்ள பிரபல இந்துக்கோயில்களுக்கு எதிராகவே குறித்த தேவாலயத்தை அமைத்திருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு.

ஒல்லாந்த ஆளுனரின் பயணக்குறிப்பில் இன்னுமொரு விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. பிடிபட்ட ஐரோப்பிய படை வீரனை விசாரணை செய்த ஆளுனர் "நீ வெகு தொலைவிலுள்ள வெந்நீர் ஊற்றுக்குக் குளிக்கச்செல்ல உரிமையில்லை" என அந்தப்படை வீரனை ஆளுநர் வெருட்டியதிலிருந்து அக்காலப் பகுதியில் வெந்நீர் ஊற்று யாவராலும் அறியப்பட்டதாகவும், பிரபல்யம் பெற்றதாகவும் இருந்திருக்கின்றது.

மற்றுமொரு பயணக்குறிப்பில் ஒல்லாந்த ஆளுநர் குறிப்பிட்டிருப்பதா -வது பிற்பகல் 1.15 மணியளவில் பன்குளத்துக்குப் புறப்பட்டு அதன் பின் நிலாவெளிக்கும், வெந்நீர் குளிப்பிற்குமிடையே அமைந்துள்ள கரடிமோட்டைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்துக்குப் போகவில்லை. அது இப்பொழுது குடிமக்களால் கைவிடப் பட்டுள்ளது" என ஒல்லாந்த ஆளுனர் தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இக்குறிப்புக்கள் மூலம் தெரியவருவது யாதெனில் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு பிரபல்யம் பெற்ற இடமாக கன்னியா பகுதி இருந்திருக்கிறது என்பதாகும். இத்தகையதொரு குறிப்பையே 1890 ஆம் ஆண்டளவில் பிரித்தானிய ஆளுகைக் குறிப்பிலிருந்து பெற முடிகிறது. கன்னியா ஊற்றில் இருந்து திருகோணமலை நகரத்துக்கும் கடற்படைத் தளத்துக்கும் நீர் வழங்குவது குறித்து அக்காலப்பகுதியல் அரச அதிபராக இருந்த *Charles Edward Ducat Pennyaquick* (1886 - 1890) அவர்களால் கலந்துரையாடப்பட்டிருக்கிறது.

1869 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டம்

(1) கட்டுக்குளம் பற்று,

(2) தம்பலகமம் பற்று

(3) கொட்டியாபுரப் பற்று

(4) திருகோணமலை நகரம்

என நான்கு வருவாய் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. 1905 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டம், 5 வன்னிப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இந்த 5 பெரும் பிரிவுகளும் 31 பொலிஸ் மற்றும் விதானையார் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இப்பிரிவுகளுக்குள் 120 கிராமங்கள் இருந்துள்ளன. இதில் முக்கியமான கிராமமாக கன்னியா இருந்துள்ளது என்பதை வரலாற்று ஆவணங்கலிருந்து அறியலாம்.

1905 ஆம் ஆண்டு மாசிமாதம் பேராதனையிலிருந்து திருகோணம - லைக்கு விஜயம் செய்திருந்த தாவரவியல் கண்காணிப்பாளர் *Herbert Wright* கன்னியாவுக்கும், உப்பாற்றுக்கும் விஜயம் செய்து பல புதிய தாவரங்கள் வளர்ப்பதற்கான ஆய்வுகளை மேற்கொண்டார். கன்னியாவில் *Ceara Rubber* வளர்ப்பது குறித்து ஆலோசனைகளை வனவிலாக்காவுக்கு வழங்கியுள்ளார். இவ்வாறான சின்ன சின்ன தகவல்கள் மூலம் அறியக்கூடிய விடயமாக இருப்பது திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா என்னும் பிரதேசம் வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாகவும் பாரம்பரியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுவழித் தொடர்புகளைக் கொண்டதாகவும் இருந்து வந்துள்ளது என்பதாகும்.

ஆராச்சியாளரும், வரலாற்று ஆசிரியருமான **ஜோன்டேவி** என்பவர் கி.பி. 1821ம் ஆண்டு வெளியிட்ட இலங்கையின் உட்பகுதியின் விபரம் என்ற குறிப்பில், திருகோணமலையிலுள்ள கன்னியா வெந்நீர் ஊற்றுப் பற்றி குறிப்பிட்டிருந்தது முக்கியத்துவம் வாய்ந்த பதிவாகக் கருதப்படுகின்றது. அவர் குறிப்பிட்ட விபரம் 1817 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 ஆந் திகதி வெந்நீர் ஊற்றைத் தரிசிக்கச் சென்றபோது ஒவ்வொரு கிணறுகளின் வெப்பநிலைகளும் பின்வருமாறு அமைந்திருந்தது எனச்சுடடிக்காட்டியிருந்தார். 1010, 101.50,1070, 88.50,105.750,910 இக் கிணறுகளின் மிகவும் கூடிய வெப்பநிலையாக 1070 மிகக் குறைந்த வெப்பநிலையாக 88.5 இருந்தது. வெவ்வேறு நேரஅளவுகள் கொண்டு நீரின் வெப்பநிலையை அளந்து பார்த்தபோது பவனத்தின் வெப்பம் அதிகரிக்க, வெப்பம் குறைந்துகொண்டே சென்றது எனக் குறிப்பிட்டதுடன் அதனுடைய மருத்துவப் பயனைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.


*The Water is used Chiefly for Rheumatsm and Skin Diseases.* இதன்படி . இந்த வெந்நீர்க் கிணற்றில் நீராடுமொருவருக்கு வாத சரும நோய் நீங்கும். அதற்குக் காரணம். அந்நீரிலுள்ள இரசாயனப் பொருட்களே ஆகுமென அவர் தனது குறிப்பில் குறிப்பிட்டிருந்தார். வெந்நீர்க் கிணற்றின் சூட்டுக்கு அவர் கொடுத்த காரணம் பின்வருமாறு அமைந்திருந்தது.

ஒரே ஊற்றிலிருந்து எல்லாக் கிணறுகளுக்கும் நீர் ஊறுகின்றது. நீரூற்றுக்களின் வெப்பநிலை ஏற்றதாழ்வாக இருப்பதால் முன்கூறிய கருத்து தண்ணீரின் அளவு ஏனைய ஊற்றுக்களிலிருந்து வரும் நீரைவிட அதிகமாக இருக்கின்றது. ஒரு கிணற்றில் அதிகமாக குமிழி வருகின்ற காரணத்தால் இதற்கு விதிவிலக்காக அமைகிறது என தனது குறிப்பில் குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 18 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே கன்னியா வெந்நீர் ஊற்றும், அதைச் சூழவுள்ள பகுதியும் பிரசித்தி பெற்று விளங்கியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கன்னியா உரிமம்.**

கன்னியாவின் உரிமைமாற்று சம்பந்தமான விடயங்களை இனி நோக்குவோம். திருகோணமலை மடத்தடியில் உள்ள மாரி அம்மன் கோவிலுக்கும், கன்னியா வெந்நீர் ஊற்றுக்கும் இடைத் தொடர்பு ஒன்றைக் காட்டும் கதை ஒன்று வாய் வழியாகயிருந்து வருகிறது. சுமார் 300 வருடப் பழமை வாய்ந்த மாரி அம்மன் ஆலயத்தில் வருடா வருடம் வழமை நேர்த்தி ஒன்றை செய்துவருவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. அம்மனை கும்பத்தில் கட்டி அக் கும்பத்தை இக்கோவிலிலிருந்து புறப்பாடு செய்து வீதிவழியாக குறித்த தினத்தில் கன்னியா ஆலயத்துக்கு எடுத்துச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது.



திருகோணமலை மடத்தடி மாரியம்மன் கோயில்

பறங்கியரின் அதிகாரம் திருகோணமலையில் (1623 - 1638) நிலவிய காலத்தில் வழமையைப் போல் பக்தர்கள் இக்கும்பங்களை கன்னியாவிலுள்ள ஆலயத் துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இக்கும்பத்தையும், பக்தர்களின் ஆட்டத்தையும் அநாகரிகமாகவும், மூட நம்பிக்கையாகவும் கருதிய பறங்கிய படைத் தளபதி அக்கும்பத்தையும் அதை ஆடி வந்தவர்களையும் ஏளனம் செய்து காலால் உதைத்து தள்ளி இருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆடட்படும் கும்பங்கள்


இச்சம்மவம் நடைபெற்ற சில தினங்களுக்குள் திடீரென அத் தளபதிக்கு குணங்காணமுடியாத நோய் ஏற்பட்டதாகவும், அதிலிருந்து தெய்வாதீனமாக உயிர் பிளைத்த அத்தளபதி தான் செய்த பாவத்துக்குப் பரிகாரமாக கன்னியாப் பிரதேச காணியையும், கமுகம் சோலை கொண்ட பகுதியையும் மடத்தடி மாரியம்மனுக்கு நன்கொடையாகத் தானம் பண்ணினான் என்பது அக்கதை. இதற்குரிய ஆவணப்பரிமாற்றத்தைக் காண்கின்ற போது மாரியம்மன் ஆலயத்தை பராமரித்து வந்த தர்மகர்த்தாவிடம் கன்னியா வெந்நீர் ஊற்றும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்கள், 1894 ஆம் ஆண்டுக்கு முன் பின்வரும் வகையில் கையளிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1) | 8 ஏக்கர் | 3டி றூட் | 26.75 பேர்ச் |
| 2) | 5 ஏக்கர் | - | 1.5 பேர்ச் |
| 3) | 5 ஏக்கர் | - | 1.5 பேர்ச் |
| 4) | - | - | 7.25 பேர்ச் |

இவ்வாறு சுமார் 17 ஏக்கர் காணிக்கு மேல் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கையளிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் நில அளவை ஆணையாளர் நாயகத்தால் 1895 செப்டெம்பர் 11ம் திகதியிட்ட 167971 இலக்கம் கொண்ட பெரிய கன்னியாக் காடு 5 ஏக்கர் காணியும், கட்டுக் குளம்பற்று என அடையாளம் இடப்பட்ட 167973 வரைபடமும, 1896 பெப்ரவரி 21 ஆம் திகதியிடப்பட்ட 169806 இலக்கம் கொண்ட 167971 அல்லது 169806


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கம் கொண்ட 167971 அல்லது 169850 வரைபடமும் தயாரிக்கப்பட்டு ஆவணமாக இருந்ததுடன், கன்னியா கிணற்றுக்கு அருகிலுள்ள நீர் வீழ்ச்சிப் பகுதி 5 ஏக்கர் 1.50 பேர்ச் நிலமும் 1894, ஆம் ஆண்டு வரைபடத்துடன் கூடிய ஆவணமாக கையளிக்கப்பட்டுள்ளது.



உறுதிப் பத்திரம்

இந்த வரைபடங்கள் ஏற்கனவே மடத்தடி மாரியம்மனுக்கு போர்த்துக்கீச படைத்தளபதியால் கையளிக்கப்பட்ட காணிகளை அடிப்படையாகக்கொண்டு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு கோவில் தர்மகர்த்தாவுக்கு வழங்கப்பட்டிருக் கலாமென ஊகிக்க முடிகிறது.

வழங்கப்பட்ட இந்த நிலத் துண்டுகளின் ஒரு பகுதியில் கன்னியா வெந்நீர் ஊற்றும், அதன் மேற்பகுதியில் நீர் வீழ்ச்சியும், அதன் வளாகப் பகுதியல் பிள்ளையார் கோவில், மற்றும் அந்தி யேட்டி மடம் ஆகியன அமைந்திருந்தமை பல்வேறு பதிவுகளிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

பறங்கிய படை அதிகாரி ஒருவரால் திருகோணமலை மடத்தடி மாரியம்மன் ஆலய தர்மகர்த்தாவுக்கோ அல்லது ஆலயத்துக்கோ தானமாகக் கொடுக்கப்பட்ட வெந்நீர் ஊற்றும் அதைச் சூழவுள்ள பகுதியும் குறித்த ஆலயத்துக்கே உரித்தாக்கப்பட்டது என்பதற்கு ஆதாரமாக இன்னும் சில ஆவணங்கள் சான்றாக உள்ளன.

உதாரணமாக, 1894 ஆம் ஆண்டு கொழும்பு நில அளவை ஆணையாளர் நாயகத்தின் plan of four allotments of land என்ற வரைபில் (1896 - feb 21) பின்வரும் விடயங்கள் அடையாயமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

**1) வெந்நீரூற்று**

**2) பிள்ளையார் ஆலயம்**

**3) நீர்வீழ்ச்சி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மூன்று துண்டுகளாக வகுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியும், அதனை சூழவுள்ள பிரதேசமும் யாருக்கு உரித்து - டையது என்ற சர்ச்சை எப்பொழுது எழுந்தது என்பதை அறிவதன் மூலம் கன்னியா உரிமம் சம்பந்தமான உண்மைகளை அறிந்துகொள்ள முடியும்.

## அழிக்கப்பட்ட ஆலயங்களும் மடங்களும்.

வெந்நீரூற்று வளாகத்துக்குள் இருந்த வரலாற்றுத் தொன்மை கொண்ட பிள்ளையார் கோவில் 1983 ஆம் ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக துவம்சம் செய்யப்பட்டது. அங்கிருந்த மடமும் சேதமாக்கப்பட்டது. கன்னியா என்னும் புனிதப் பிரதேசம், மக்கள் செல்ல முடியாத சூனியப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இருந்த போதிலும் சில சிவ அன்பர்கள் விக்கிரத்தைக் காப்பாற்றி, சிறு கொட்டில் அமைத்து பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு வந்தார்கள்.



ஆலயத்தின் வெளிப்புறத்தில் வைக்கப்பட்டிருக்கும் பிள்ளையார் சிலை

கன்னியா பிள்ளையார் ஆலயம் துவம்சம் செய்யப்பட்ட அதே காலப் பகுதியில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள சுமார் 18க்கும் மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்கள் விஷமிகளால் இடித்தும், களவாடப்பட்டும், தீயிடப்பட்டும் அழிக்கப்பட்டன.

வரலாற்றுப் புகழ்கொண்ட கோணேஸ்வரம், தம்பலகமம் ஆதி கோணேஸ்வரர் கோவில், பன்குளம் எல்லைக் காளிகோயில், கங்குவேலி சிவன் கோவில், மடத்தடி சனீஸ்வரர் கோவில், சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவில், கன்னியா நடேசர் கோவில், மடத்தடி வீரகத்திப்பிள்ளையார் கோவில், கந்தளாய் சிவன் கோவில், பன்குளம் பிள்ளையார் கோவில், வெருகல் முருகன் கோவில், திரியாய் பிள்ளையார் கோவில் மடத்தடி கிருஷ்ணன் கோவில், பெரிய தொடுவாய்ப் பிள்ளையார், கடற்கரைப் பிள்ளையார், கடற்கரை முருகன் கோவில், கிண்ணியா துறையடிப்பிள்ளையார் எனஎத்தனையோ கோவில்கள் அழிவுக்கு உள்ளாக்கப்பட்டன.

2004 ஆம் ஆண்டு இடிபட்டுப் போய்க்கிடந்த கன்னியா பிள்ளையார் ஆலயத்தை புனரமைத்து பாலஸ்தாபனம் செய்து விக்கிரகத்தை உரிய ஆலயத்தில் வைக்க உப்புவெளிப் பிரதேச சபை முயற்சிகளை மேற்கொண்ட போதுதான் புதிய பிரச்சினையொன்று இனவாதிகளாலும் பௌத்த பிக்குக்களாலும் உருவாக்கப்பட்டது.


மடத்தடி மாரியம்மன் கோயில் தர்மகர்த்தா ரி.இரத்தினம்மா

பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்த இடம் பெரியகுளம் வில்கம் விஹாரைக்கு பூர்வீகச் சொந்தமானது. அந்த வரலாற்றுத் தடயத்தை அழிக்கவும், இல்லாமல்செய்யவும் முயற்சிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள் புனர்நிர்மாணம் என்ற பெயரில் கோவிலை புதிதாகக் கட்ட முயற் - சிக்கிறார்கள். புராதன காலத்துப் பௌத்த அடையாளங்களையும், தொல்பொருள் நிலையங்களையும் மூடி மறைக்க முற்படுகிறார்கள்" என வில்கம் விஹாரையைச் சேர்ந்த பௌத்த குரு உப்புவெளி பொலிஸில் முறைப்பாடு ஒன்றை இட்டிருந்தார். இந்த முறைப்பாட்டின் நிமித்தம் தொல்பொருள் ஆதாரங்களைச் சிதைக்க முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் உப்புவெளி பிரதேச சபை அதிகாரிகளை கைது செய்ய பொலிஸ் அணுகியபோது கன்னியா பிள்ளையார் கோயில், மடத்தடி மாரியம்மன் கோயில் மணியகாரரான ரி. இரத்தினம்மாவுக்கு சொந்தமானது என கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் ரி.இரத்தினம்மா கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனால் திருகோணமலை குற்றவியல் நீதி மன்றத்தில் தொல்பொருள் ஆய்வுச் சட்டத்தின் கீழ் தர்மகர்த்தா இரத்தினம்மா மீது வழக்குத் தொடரப்பட்டது. இதற்குப் பிரதான சாட்சியாக வில்கம் விஹாரை குரு இருந்தார்.

தொடரப்பட்ட வழக்கு நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக திருகோணமலை நீதிமன்றத்தில் இருந்து வந்தது. தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கு நீதிமன்றினால் அழைப்பாணை விடப்பட்டபோதும் அவர்கள் சமூகமளிக்கவில்லை. தர்மகர்த்தா இரத்தினம்மா சார்பில் சட்டத்தரணி கா.சிவபாலன் ஆஜராகினார். தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் மன்றில் ஆஜராகவேண்டும். ஆனால் உதவி ஆணையாளர் தரத்துக்கு குறைவான ஒருவர் கூட பல தவணைகளுக்கு சமூகமளிக்கவில்லை. இரத்தினம்மாவின் சட்டத்தரணியின் வாதத்துக்கு அமைய நீதிமன்றினால் கடைசித்தவணை வழங்கப்பட்டது. அத்தவணைக்கும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றுக்கு ஆஜராகாத நிலையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் தொடர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பிலிருந்தே அதிகாரிகள் வரவேண்டும். பயம் காரணமாக தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் நீதிமன்றுக்கு ஆஜராக முடியவில்லை. எனவே மீண்டும் வழக்கு விசாரணை முன்னெடுக் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படவேண்டுமென கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட சட்டத்தரணி நீதிமன்றில் வாதத்தை முன்வைத்தார். அவ்வேளை இரத்தினம்மா சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிவபாலன் அச்சந்தர்ப்பத்தில் கொழும்பிலிருந்த எத்தனையோ அதிகாரிகள் இங்கு வந்து கடமையாற்றுகிறார்கள். அதுவுமன்றி பாதுகாப்பு வலயத்துக்குள்ளேயே நீதிமன்றம் உள்ளது. எனவே குறித்த வழக்கை மீள விசாரணைக்கு கொண்டுவர முடியாது என வாதித்ததற்கு அமைய அவ் வழக்கு மீளத் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதற்கிடையில் தர்மகர்த்தா இரத்தினம்மா அந்நாளில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இரா.சம்பந்தரிடம் இதுபற்றி முறையிட்டதற்கு அமைய அவர் புத்தசாசன அமைச்சரிடம் இரத்தின்னம்மா மீது தொல்பொருள் திணைக்களத்தினால் தொடரப்பட்ட வழக்கை வாபஸ் பெறும்படி கோரியபோது அவ்வாறு வாபஸ்பெறுவது கடினமான காரியம். வாபஸ்பெற்றால் பௌத்த பிக்குக்கள் சத்தம்போடுவார்கள் என புத்தசாசன அமைச்சர் சம்பந்தரிடம் தெரிவித்ததாக சம்பந்தர் தர்மகர்த்தாவிடம் கூறியுள்ளார்.

போதிய சாட்சியங்களும், ஆதாரமும் இல்லாத காரணத்தினால் பிரதானசாட்சி ஒன்றுக்கு மேற்பட்ட தவணை நீதிமன்றத்துக்கு ஆஜராகாத காரணத்தினாலும், 2008 ஏப்ரல் மாதம் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கு தொடர்பில் சாதகமானவிடயம் யாதெனில் தொல்பொருள் திணைக்களமும், நீதிமன்றும் இரத்தினம்மாவை கன்னியாவின் தர்மகர்த்தாவாக ஏற்றுக்கொண்டதன் காரணமாகவே தொல்பொருள் திணைக்களத்தினால் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பதாகும்.

இத்தகையதொரு மதக் கொடூரம் திருகோணமலை மாவட்டத்தில் இன்று நேற்று மாத்திரமல்ல, பல வருடங்களாகவே இடம்பெற்று வந்திருக்கிறது என்பதற்கு முன்னுதாரணந்தான் வரலாற்றுப் புகழ்கொண்ட கோணேசர் ஆலயத்தைப் புனித நகர் ஆக்கவேண்டுமென்ற நோக்குடன் 1968ஆம் ஆண்டளவில் டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த எம். திருச்செல்வம் அரசின் அனுமதியுடன் கோணேசர் கோவிலையும், அதன் சுற்றுப்புறத்தையும் புனித பிரதேசமாக பிரகடனம் செய்ய வேண்டுமென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கையை முன் வைத்து புனிதப் பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டிய எல்லையை நிர்ணயிப்பதற்காக மூவர் கொண்ட குழுவை நியமித்தார். இது (1968 - 08.23) அரச வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இக்குழு நியமனத்துக்கு அன்றைய சேருவில பௌத்த விஹாரை விகாராதிபதி கடும் எதிர்புத் தெரிவித்தார். இதனால் அமைச்சர் திருச்செல்வத்தை கலந்தாலோசிக் -காமலே பிரதமர் டட்லி சேனநாயக்கா குழுவை இரத்துச் செய்தார். இதனை ஏற்காத திருச்செல்வம், 1968.09.16 ஆந் திகதி தனது மந்திரிப் பதவியை இராஜினாமாச் செய்தார். அத்தோடு கோணேசர் கோவில் புனித நகர் விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. 6000 வருடங்கள் பழமை வாய்ந்த கோணேசர் ஆலயம், புனித நகர் தகுதியை இன்னும் பெறவில்லை என்பது வேடிக்கைக்குரிய விடயமாகும்.

**வில்கம் விஹாரை**

கன்னியாவையும் அதன் சுற்றுப்புறத்தையும் பூர்வீக உரிமை பாராட்டி இடிபட்ட கன்னியா பிள்ளையார் ஆலயத்தை புனரமைப்புச் செய்யமுனைந்த உப்புவெளி பிரதேச சபையினரையும், தர்மகர்த்தா இரத்தினம்மாவையும் தடுத்த வில்கம் விஹாராதிபதியின் ஆளுகைக்குட்பட்ட வில்கம் விஹாரைக்கும் கன்னியா வெந்நீரூற்றுக்குமிடையில் ஏதாவது மதவழிப்பட்ட தொடர்புகள்உண்டா? எவ்வகைத் தொடர்புகள் இருக்க முடியும்?என்பதை சிறிது நோக்க வேண்டும்.


10 ஆம் நூற்றாண்டுக்கு முன்னுள்ளதாக கருதப்படும் ராஜராஜ பள்ளியென்று கருதப்படுகிற வில்கம் விஹாரை

கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் வனம் அடர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தில் அமைந்திருக்கும் விஹாரை வில்கம் விஹாரையாகும். கன்னியா வெந்நீர் ஊற்றானது திருகோணமலை அனுராதபுர வீதியில் உள்நுழைவாக சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருக்கிறது. கன்னியா சந்தியிலிருந்து சுமார் 4 கிலோமீற்றர் தொலைவில் அனுராதபுர வீதியிலிருந்து உள்நுழைவாக சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவில் வில்கம் விஹாரை அமைந்திருக்கிறது.

வில்கம் விஹாரைக்கும் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கும் இடையில் ஏதாவது வரலாற்றுத் தொடர்பு உண்டா? இந்த விகாரையின் தொன்மைசார் தொடர்பு கன்னியாவுடன் இருந்திருக்க முடியுமா? என்பதை வரலாற்று முறையில் ஆராயவேண்டிய தேவை இருக்கின்றது என்பதால் வில்கம் விஹாரை பற்றிய வரலாற்று மூலாதாரங்களை முதலில் தெரிந்துகொள்வது நன்று.

திருகோணமலை மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ள சாசனங்களில் மயிலங்குளச் சாசனம் திரியாய்ப்பகுதி செய்திகளையும் வேளைக்காரப் படையினரது செயற்பாடுகளையும் தெரிவிக்கின்றது. இச்சாசனம் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளபோதும் கிரந்த எழுத்துக்களும் கொண்டன. ஜயபாகு என்பவனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1126) இச்சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது.

இச்சாசனத்தில் காணப்படும் செய்திகளின் பின்னணியில் மகாசேனன் காலத்தில் கோணேசர் ஆலயம் அழிக்கப்பட்டு பௌத்த பள்ளி அமைக்கப்பட்ட தகவலை மஹாவம்சம் எடுத்துக் கூறுகிறது. எனவே, மகாசேனன் காலத்தில் கிழக்கில் பௌத்தபள்ளிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் வில்கம் விஹாரை சோழர் காலத்தில் ராஜராஜப் பெரும்பள்ளி என்ற பெயருடன் அழைக்கப்பட்டது. சோழர்களும் இதை இவ்வாறே அழைத்து வந்துள்ளனர். சோழர்கள் இலங்கையில் பௌத்த பள்ளிகளை அழித்ததாக சூளவம்சம் கூறுகின்றது. எனினும் திருகோணமலை மாவட்டத்தில் கன்னியாவுக்கு வடக்கே சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வில்கம் விஹாரையை சோழர்கள் பாதுகாத்து ஆதரவளித்ததாக வில்கம் விஹாரை சாசனம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழருடைய படையெடுப்பு நிகழ்ந்த 10 ஆம் நூற்றாண்டு காலத்துக்கு முன்பே வில்கம் விஹாரை இருந்திருக்கிறது. சோழரது ஆட்சியின் கீழ் திருகோண - மலை மாவட்டம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து வில்கம் விஹாரை ராஜராஜப் பெரும்பள்ளி எனச் சோழர்களால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் வில்கம் விஹாரையின் தோற்றக் காலம் குறித்து தெளிவான தகவல்களில்லை. இங்கு கிடைக்கப் பெற்ற அதிகமான அறக்கொடைச் சாசனங்கள் தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இதை ஆதாரமாகக் கொண்டு பார்க்கையில் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்த தமிழ் பௌத்த துறவிகளினால் வில்கம் விஹாரை உருவாக்கப்பட்டிருக்கக்கூடும் என நம்ப இடமுண்டு. இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்த பௌத்த பள்ளிகள் சோழரால் அழிக்கப்பட ஏன் வில்கம் விஹாரை சோழரால் பாதுகாக்கப்பட்டது என்பதற்குக் காரணம் தெரியவில்லை. ஒருவேளை, தமிழ் பௌத்த துறவிகளால் விஹாரை நிறுவப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்ததன் காரணமாக சோழர் இதை அழிக்காமல் விட்டிருக்கலாம். இங்கு கிடைக்கப்பெற்ற சாசனங்களின் மூலம் ராஜராஜசோழன் 84 பசுக்களை இவ்விகாரைக்குத் தானம் பண்ணியதாக அறிய முடிகிறது. இந்தப் பசுக்களிலிருந்து பெறப்படும் நெய் விஹாரையில் விளக்குகள் எரிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

வில்கம் விஹாரையில் 1929 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்ட பொருளான பித்தளை விளக்கில் பொறிக்கப்பட்டிருக்கும் அடையாளத்தின்படி இந்தப் புனித விளக்கு ஏரா நாடான் யாக்கான் என்பவனால் விஹாரைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது என அறியக்கூடியதாகவுள்ளது. தமிழ் எழுத்துக்களால் இவ்விபரம் பொறிக்கப்பட்டு இருக்கிறது.

இத்தகைய வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு நோக்குகையில் வில்கம் விஹாரைக்கும் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கும் இடையில் எவ்வித வரலாற்றுத் தொடர்புகளும் இருந்ததாகவோ மதத்தொடர்புகள் இருந்ததா - கவோ எதுவித ஆதாரங்களையும் கண்டுகொள்ள முடியவில்லை. இவ்வாறு இருக்கும்போது கன்னியா வெந்நீரூற்று வில்கம் விஹாரையோடு தொடர்பு பட்டது. அதன் தொன்மங்கள் வில்கம் விஹாரை வழிபட்டதாக இருந்திருக் - கின்றது என்று கூறுவது எந்தளவுக்கு ஆதாரமுடையது என்பது ஆராயப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய விடயமாகும். கன்னியாபற்றிய விஹாராதிபதிகள் கூற்றுக்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

வில்கம் விஹாரையின் தோற்றம் பற்றி அம்பிட்டிய சீலவன்ச திஸ்ஸதேரர் என்பவர் பின்வரும் குறிப்பொன்றை வெளியிட்டிருந்தார். *Velgam Raja Mahavihara Possesses More than Two Thousands Years Old History. It says in some important Historical Inscriptions that the Velgam Raja Maha Vihara Had its oirigin with the King Devanambiyatissa Planting a Bodi Plant in its Premises.* இந்தக் குறிப்பிலிருந்தோ. இவ்விஹாரை பற்றிய ஏனைய குறிப்புக்களில் இருந்தோ எவ்விடத்திலும் கன்னியா வெந்நீர் ஊற்று தொடர்புபடுத்தப்படவில்லை என்பதே உண்மை.



புராதன வில்கம் விகாரையின் இன்னொரு பக்கத்தோற்றம்

**சோழர்கால நிர்வாகம்**

திருகோணமலையில் நடந்தேறியபோது ராஜராஜசோழன் கி.பி. 985-1014, அவன் மகன் ராஜேந்திர சோழன் கி.பி. 1012-1044, காலத்தில் சோழ ராச்சியம் 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மண்டலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. இதில் நான்கு சோழவள நாடுகள் திருகோணமலை மாவட்டத்தில் அடையாளம் காணக்கூடியதாகவுள்ளது. நான்காவதான ராஜேந்திரசிங்க வளநாடு வில்கம் விஹாரை என அழைக்கப்படும். ராஜராஜப் பெரும்பள்ளி என அழைக்கப்பட்டு வந்த வில்கம் விஹாரைப் பகுதி தற்பொழுது கட்டுக் குளம்பற்று என அழைக்கப்படும். (இப்பகுதி தற்பொழுது திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவுக்குள்ளும் உள்ளூராட்சி அமைப்பு வகையில் உப்புவெளிப் பிரதேச சபைக்குள்ளும் உள்ளடங்கிக் காணப்படுகின்றது).



வில்கம் விஹாரையில் அழிந்து காணப்படுகின்ற இந்து விக்கிரகம்

கன்னியா பிரதேசம் பாரம்பரியமாகவே தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசமாக அது நீண்டகாலமாக அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அவ்வாறு இருக்கின்றபோது கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் ரஜமஹாவிகாரையென அழைக்கப்படும் வில்கம் விஹாரை காணப்படுகிறது. இது 12ம் நூற்றாண்டில் தமிழ் பௌத்தர்களால் அமைக்கப் பட்ட ராஜராஜப் பெரும்பள்ளியெனக் குறிப்பிடுவர். இதற்கு அண்மைக்கால சுற்றுலா விளம்பரமொன்றை ஆதாரமாகக் காட்ட முடியும். *Srilanka, Robin Gauldie vd;w Travel Gudied* (2007) ல் இப்பள்ளி பற்றி பின்வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. ***Velgam Vihara Natana Kovil, Srilanka's Only Tamil Vihara Budditist Shirine Velgam Vihara (Also) Called Natana Kovil by Hindu Worshippers) is 15km North of Trinco, an a dates from the 2nd Century ad.***

சுதந்திரத்திற்கு முன்னைய காலப்பகுதியில் இப்பிரதேசம் பிரித்தானிய தளபதியின் ஆட்சிக்குட்பட்டதாக அமைந்திருந்த காரணத்தினாலும் இப் பிரதேசப் பகுதிகளில், குறிப்பாக வெல்வேரிக் கிராமம், கன்னியாக் கிராமம் ஆகிய கிராமங்களில் புகழ்பெற்ற கிறிஸ்தவ தேவாலயங்கள் இருந்த காரணத்தினாலும் ஆங்கிலேயர் இப்பிரதேசத்தை மிகக் கவனமாக பராமரித்து வந்துள்ளனர்.

சுதந்திரத்துக்குப் பின்னைய காலப்பகுதியில் நிர்வாக முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக வட்டவிதானை முறையொன்றும், அதன் பின்னே கிராமசேவகர் பிரிவாகவும் வகுக்கப்பட்டு, திருகோணமலை பட்டணமும் சூழலுமாக உருவாக்கப்பட்டது. உப்புவெளி பிரதேச சபையானது கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியை கையகப்படுத்திய கால அளவை அல்லது அப் பிரதேச பகுதியைப் பொறுப்பேற்றுக்கொண்ட காலக் கணக்கெடுப்பை உள்ளூராட்சி அமைப்பு முறையொன்று இலங்கையில் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே ஏற்பட்டிருக்கலாமென கருத முடிகிறது.

உள்ளூராட்சி சபைகளானது 13ம் இலக்கம் கொண்ட 1898 ஆம் ஆண்டின் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டவை. இதன் பிரகாரம் திருகோண - மலை உள்ளூராட்சி சபை 1884 இல் அமைக்கப்பட்டது. 1939 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 81 இலக்கச் சட்டப்பிரகாரம், திருகோணமலை நகர் மாவட்ட சபையாக்கப்பட்டு அதன் பின்னரே 1940 ஆண்டு முதல் நகர சபையாக தரம் உயர்த்தப்பட்டது. ஏறத்தாழ இதே காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட கிராம சபைகளில் உப்புவெளி கிராம சபையும் ஒன்றாகும். இவ்வாறு கிராம சபை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியை பராமரிக்கும் பொறுப்பை உப்புவெளி பிரதேச சபை ஏற்றிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உப்புவெளி பிரதேச சபைத்தோற்றம்
(தற்போதைய பட்டணமும் சூழலும் பிரதேச சபை)

புலவர் வை. சோமாஸ்கந்தர் எழுதிய திருக்கோணேஸ்வரம் என்னும் நூலில் (ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம், 03.04. 1963) எழுதியுள்ள கன்னியா வெந்நீரூற்று என்னும் கட்டுரையில் (பக்கம் 61 கன்னியா வெந்நீர் ஊற்று நெடுங்காலமாக திருகோணமலை (மடத்தடி) மாரியம்மன் கோவில் ஆதனமாக இருந்ததென்று கருதுகின்றார். இதை மறுத்துக் கூறுபவர்களுமுண்டு. இன்று அது உப்புவெளி கிராமச் சங்கத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது. அவர்கள் ஒரு மடத்தை அமைத்து அங்கு நீராடச் செல்பவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் உண்டாக்கியுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார். (புலவர் வை. சோமஸ்கந்தர் மடத்தடி மாரியம்மன் கோவில் அர்ச்சகராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது).

கன்னியா வெந்நீர் ஊற்று விடயம் சார்பாக ஆய்வாளர்களிடமோ அல்லது தேடலாளர்களிடமோ மூன்று விடயங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

(1) கன்னியா வெந்நீரூற்றின் தோற்றம், அதன் தொன்மை பற்றியதான ஆதாரங்கள்

(2) கன்னியா வளாகத்துக்குள் பூர்வீகமாக இருந்த ஆலயங்கள், மடங்கள் சார்பான விபரங்கள்

(3) கன்னியா உரிமை சார்ந்த விடயமும், ஆவண இருப்புக்களும்.



புலவர்
வை. சோமாஸ்கந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெந்நீரூற்றின் தோற்றமும், அதன் தொன்மையும்.**

இது பற்றி கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் சில ஐதீகங்கள் புராணங்கள் , இதிகாசங்கள், வரலாற்று ஊகங்கள் என்ற அடிப்படையில் இன்னும் பல தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவைபற்றி சிறிது நோக்குவோம்.

கன்னியா வெந்நீர் ஊற்றின் தோற்றத் தொன்மை பற்றி கருத்துத் தெரிவித்த ஏ.பெரியதம்பி என்பவர் பின்வருமாறு கூறியிருந்தார் "கன்னியா வெந்நீர் ஊற்று இராவணனுடன் தொடர்புபடுத்தப்படுவதற்குக் காரணம் அந்த ஊற்றுக்கள் முன்னொரு காலத்தில் யாரோ ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டது0 என்ற தவறான கருத்தாகும். இக்கருத்தின் அடிப்படையில் எவர் தோற்றுவித்தார் ஏன் தோற்றுவித்தார் என்ற கேள்விகளுக்கு இராவணனை தொடர்புபடுத்தி விடையளித்துள்ளார்கள். கன்னியாவில் மாத்திரமின்றி, வேறு பல இடங்களிலும் இத்தகைய ஊற்றுக்கள் காணப்படுகின்றன. பளிங்குரு, பளிங்கு அடுக்குப் பாறைகளில் இத்தகைய நீரூற்றுக்கள் ஏற்படலாமெனக் குறிப்பிட்டிருந்தார். இவ்விடத்தில் எனது பாடசாலை வாழ்வில் ஏற்பட்ட சம்பவமொன்றையும் கூறிவைக்கலாமென நினைக்கின்றேன். 1966ம் ஆண்டு திருகோணமலை இந்துக்கல்லூரியின் அதிபராக திரு.சிவபாலன் இருந்த காலம் அது. எமது பாடசாலைக்கு யப்பானிய நாட்டுத் தூதுவர் விஜயம் செய்திருந்தார், சம்பந்தர் மண்டபத்தில் அவர் மாணவர்களோடு கலந்துரையாடிக் கொண்டிருந்த போது, நான் எழுந்து ஒரு கேள்வியைக் கேட்டேன்.

'யப்பான் நாட்டிலும் வெந்நீர் கிணறுகள் இருப்பதாகப் படித்திருக் - கின்றேன். எங்கள் கன்னியா வெந்நீர் ஊற்றுகளுக்கும், தங்கள் நாட்டு ஊற்றுக்களுக்கும் ஏதாவது ஒற்றுமை இருக்கிறதா? இதன் தோற்றம் பற்றி புராணக் கதையில் கூறப்படுகின்றது அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன எனக் கேட்டிருந்தேன். அதற்கு அந்தத் தூதுவர் குறித்த ஊற்றுக்களை நான் இன்னும் பார்வையிடவில்லை. பார்த்தபின் எனது கருத்தைக் கூறுகின்றேன் எனச் சொல்லிவிட்டுச் சென்று விட்டார். இது நடைபெற்று இரு நாட்களுக்குப் பிறகு அதிபர் சிவபாலன் என்னை அழைத்து தெரிவித்த கருத்து யப்பானிய தூதுவரின் கருத்துப்படி கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு ஒரு தெய்வீகத் தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது என்ற கருத்தைக் கூறும்படி தன்னிடம் சொல்லிவிட்டுச் சென்றார் தூதுவர் என அதிபர் சிவபாலன் என்னிடம் கூறினார்.

பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கூறிய கருத்தானது மேல் எழுந்த வாரியாகக் காணப்படுகின்றதே தவிர ஆழமாக ஆராயப்பட்ட விடயமாகக் கொள்ள முடியாதுள்ளது. கன்னியாவின் தொன்மைபற்றி அறியக்கூடிய மூலாதாரத்தில் மிக முக்கிய நூலாகக் காணப்படுவது தக்ஷிண கைலாச புராணமாகும். (1887- 1916) ஈழத்தில் எழுந்த அனைத்துப் புராணங்களுக்கும் மூத்த புராணமாக விளங்குவது தக்ஷிண கைலாச புராணம். இப்புராணத்தில் இராவணனுடன் கன்னியா வெந்நீர் ஊற்றைத் தொடர்புபடுத்தி விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூலை மூலமாகக் கொண்டு கோணேசர் கல்வெட்டு (1887) திருகோணாசலப் புராணம், திருகோணமலைப் புராணம், திருக்கரசைப் புராணம் (1891), வெருகல் சித்திரவேலாயுதர் காதல் (1886) கோணமலை அந்தாதி போன்ற பல்வேறு புராணங்கள் எழுந்துள்ளன. அனைத்து புராணங்களிலும், கன்னியா வெந்நீர் ஊற்று இராவணனுடன் தொடர்புபடுத்தி கூறப்பட்டிருக்கின்றது. தக்ஷிண கைலாச புராணத்தில் கன்னியா வெந்நீர் ஊற்று பற்றி தனிப்படலமொன்றே இடம்பெற்றுள்ளது. அதில் ஏழுவகை நீரின் தன்மை, அதன் மருத்துவக் குணாம்சங்கள் கூறப்பட்டு இருப்பதுடன் அதன் தண்மை, வெம்மை பற்றியும் பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

இது ஒரு புராணச்சான்று எனக் கருதப்பட்டாலும், 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு திருகோணமலை உட்பட்டிருந்த காலத்தில் ஆங்கில படைத்தளபதி ***William mackdeen colbrook*** என்பவர் பிரித்தானியாவில் உள்ள தனது மேலதிகாரிக்கு வரைந்த ஒரு கடிதம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடிதமாகக் கருதப்படுகிறது. 1833 ஆம் ஆண்டு இன்ஸ் கிறிப்ஸன் டிஸ்கவரி இன் சிலோன் எனும் தனது நூலில் அக்கடிதத்தை பதிப்பித்துள்ளார். அக்கடிதத்தில் கன்னியா பற்றி பின்வருமாறு கூறியுள்ளார். (இந்நூல் இலண்டன் மாநகரில் வெளியிடப்பட்டுள்ளது.)

திருகோணமலையிலுள்ள கன்னியா எனும் பகுதி அகத்திய மாமுனிவரின் மனம் கவர்ந்த இடமாக போற்றப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*The Natives in Srilanka General Attached someting of a Sacred Character to These Phenomena the hot wells Near Trincomalee for Instance Are Said to have been a favourite Resort of the sage Agasthiya and aMedical Writingds asttributed to these Hindu Esculapieces are still Held over the whole of the sourthern peninsala of India. (journal of srilanka (branch) royal society)*



பூர்வீகக் குடிகள் பொதுவாக இத்தகைய அபூர்வங்களுக்குப் புனித ஒழுக்கத்தைப் பேணுகிறார்கள். திருகோணமலையிலுள்ள வெந்நீர்க் கிணறுகள், குறிப்பாக அகத்திய முனிவரின் மனங்கவர்ந்த இடமாக இருந்த தெனக் கூறப்படுகின்றது. அகத்திய முனிவர் இங்கிருந்துகொண்டு தனது மாணாக்கர்களுக்கு மருத்துவங்களை போதித்து வந்துள்ளார். அவர் போதித்துவந்த இந்து பாரம்பரிய மருத்துவ ஏடுகள் இன்றும் இந்தியாவின் தெற்கு தீபகற்பம் முழுவதிலும் போற்றி மதிக்கப்படுகிறது என கோல்புறூக் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கோல்புறூக்கின் குறிப்பிலிருந்து இரண்டு விடயங்களைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) அகஸ்திய முனிவரின் மனங்கவர்ந்த இடமாகக் கன்னியா இருந்துள்ளமை இந்துக்கள் தமது புனித இடமாக அதை போற்றி வந்திருக்கிறார்கள் என்பதும்,

(2) 17ம் நூற்றாண்டுக்கு முன்பே இவ்வெந்நீர் ஊற்றுக்கள் புகழ்பெற்றுக் காணப்பட்டிருப்பதுடன் இந்து மக்களின் பூர்வீகத் தலமாக இது போற்றப் -பட்டு வந்தமையை, போர்த்துக்கீசரும் அதன் பின்னே ஒல்லாந்தரும் அவரின் பின் திருகோணமலையைக் கைப்பற்றியாண்ட ஆங்கிலேயரும் பதிவுப்படுத்தியுள்ளனர் என்பதாகும்.


அகஸ்திய மாமுனிவர்

அகஸ்திய முனிவரோடு கன்னியாவை தொடர்புபடுத்துவதற்கு கங்குவேலி அகஸ்தியர் ஸ்தாபனமும் ஒரு காரணமாக இருக்கலாம். அகஸ்தியர் ஈழத்தில் பல்லாண்டு காலம் வாழ்ந்துள்ளார் என்பதற்கு திருமங்கலாயச் சிவன் கோவில், கங்குவேலி அகஸ்தியர் ஸ்தாபனம், திருக்கரசை சிவன் கோவில், திருகோணமலை வில்லூன்றி விநாயகர் ஆலயம் (அகத்தியப்பிள்ளையார்), பெரிய குளம், பொத்துவில், திருக்கேதீச்சரம் கண்ட லிங்கம் ஆகியவற்றைச் சான்றாகக் கூறலாமென பேரறிஞர் க.பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார். (ஆதாரம்: மகாசித்தர் முத்தூர் அகத்தியர் ஆய்வுநூல் 2001).


அகஸ்தியர் ஸ்தாபன புராதன சிவலிங்கம்


அகஸ்தியர் ஸ்தாபன தற்போதைய தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குவேலி அகஸ்தியர் ஸ்தாபனமானது மூதூர் பிரதேசத்திலுள்ள கங்குவேலி கிராமத்தில் இருந்து 3 கிலோமீற்றர் தொலைவில் காணப்படுகிறது. அகஸ்தியர் ஸ்தாபனத்திலிருந்து 3 கிலோமீற்றர் தொலைவில் மகாவலி கங்கைக்கரை அமைந்து காணப்படுகின்றது. குறிப்பாக கங்குவேலிக் கிராமத்திலிருந்து மேற்குத் திசையாக ஒரே நேர்கோட்டில் இந்த மூன்றும் அமைந்துள்ளன. அகஸ்தியர் ஸ்தாபனத்துக்குச் சுமார் 27 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருப்பதுதான் கன்னியா வெந்நீர் ஊற்றுமகாவலி கங்கைக்கரையில் அமைந்திருக்கும் அகஸ்தியர் ஸ்தாபனத்தின் இடிபாடுகள், கருங்கல்லில் பொறிக்கப்பட்ட அகஸ்த்தியரின் பாதச்சுவடுகள் கற்றூண்கள், படிக்கட்டுக்கள், கலைவேலைப்பாடுகள் அமைந்த கருங்கற்கள் அகத்தியலிங்கம் அமைந்துள்ள கோயிற் தலமடு சிற்றாற்றின் கரையிலிருந்து (சுமார் 8 கிலோ மீற்றர் வரை), மகாவலி கங்கைக் கரை வரை தோட்டம் தோட்டமாகக் காணப்படுகின்றன. பாதையின் முடிவில் அகஸ்த்தியலிங்கம் இருந்துள்ளது. அகஸ்த்தியர் அகஸ்த்திய லிங்கத்திற்கு சிவபூஜை செய்து வழிபட்டுள்ளார். என்பது மேற்படி எச்சங்களால் அறியக்கூடியதாகவுள்ளது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிருந்துதான் அகஸ்திய முனிவர் ஆய கலைகளைப் போதிக்கின்ற பல்கலைக்கழகமொன்றை அமைத்து போதனைசெய்து வந்தாரென்றும் மருத்துவம் முதலான தொன்மைமைக் கலைகளை தமது சீடர்களுக்கு போதித்ததாகவும் புராணவரலாறுகள் கூறுகின்றது. இந்தக் குறிப்பின் அடிப்படையில் பார்க்கையில் படைத்தளபதி டபிள்யு. எம் ஜி. கோல்புறூக் அவர்கள் குறிப்பிட்டவாறு அகத்திய முனிவரின் மனங்கவர்ந்த வாசஸ்தலமாக கன்னியா இருந்ததுடன் இங்குமொரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்துள்ளார் என்ற செய்தியையும் ஊகித்து அறிய முடிகின்றது அகஸ்தியர் ஸ்தாபனத்திலிருந்து அவரால் சீடர்களுக்குப் போதிக்கப்பட்ட மருத்துவ ஏடுகளே தென்னகத்தில் இன்றுவரை புகழ் பெற்றுக் காணப்படுகின்றது என்ற விடயத்தை கோல்புறூக் 1833ல் தான் எழுதிய குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தொன்மைவாய்ந்த அகஸ்தியர் ஸ்தாபனத்தையும் அதன் அடிச் சுவடுகளையும் ஆதாரங்களையும் கடந்த பல வருடங்களாக விஷமிகள் அழித்துவருவதுடன் கலைப்பாடுகள் நிறைந்த கற்களையும், தூண்களையும் களவாடிச் சென்று அயல் கிராமமான தெஹிவத்தையிலுள்ள விஹாரையில் சேர்ப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

2009ம் ஆண்டு டிசம்பர் மாதம் திருக்கரைசயம்பதி உறையும் சிவனின் தலை சீவப்பட்டதுடன் அகஸ்தியர் ஸ்தாபனத்திலுள்ள சிவலிங்கம் முருகன் உள்ளிட்ட சிலைகள் களவாடப்பட்டுள்ளதுடன் கட்டிடமும் முழுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளது. (ஆதாரம் வீரகேசரி : 13.12.2009).

இந்த அட்டூழியம்பற்றி திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். 2009 நவம்பர் 29 ம் திகதி பக்தர்கள் சிலர் அகஸ்தியர் ஸ்தாபனத்துக்குச் சென்றபோது சிவலிங்கமும் ஏனைய சின்னங்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் சில களவாடப்பட்டிருந்தது என தெரிவித்திருந்தார். (ஆதாரம். சுடரொளி 09.09.2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூர்வீக ஆலயங்கள், மடங்கள்.

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் பூர்வீகமாக

1) சிவனாலயம்

2) பிள்ளையார் கோயில்,

3) முருகன் கோயில்

என மூவகை ஆலயங்கள் இவ்வளாகப்பகுதியில் அமைந்திருந்தமைக்கான ஆதாரங்கள பல எடுத்துக்காட்டப்படுகின்றன. அவ்வாலயங்களின் தொன்மை பற்றி பற்றியும் அதற்கான ஆதாரங்களையும் இனி நோக்கலாம்.

### 1) சிவனாலயம்

கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்தில் சிவன் ஆலயம் ஒன்று அமைந்திருந்தமைக்கான சில மரபுத் தொடர்புகளை கலாநிதி கனசபாபதி சரவணபவன் தனது 'வரலாற்றுத் திருகோணமலை' என்னும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். அவரின் கருத்து பின்வருமாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

"மரபுக் கதைகளில் இராவணனுடன் தொடர்புபடுத்தப்படும் திருகோண மலையின் மற்றுமொரு புனித தலம் கன்னியா வெந்நீர் ஊற்றும், கன்னியா சிவன் ஆலயமுமாகும். இவை இறந்த தன் தாயின் ஈமக்கடனை நிறைவேற்ற இராவணனால் உருவாக்கப்பட்டதாக மரபுகதைகள் கூறுகின்றன" பல மரபுக் கதைகள் வாயிலாக கன்னியாப் பகுதியில் ஒரு சிவாலயம் அமைந்திருந்தமை கூறப்படுகிறது என சரவணபவன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர் இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில் சிவன் ஆலயமொன்று இருந்துள்ளமை பற்றி பல தகவல்கள் தெரிவிக்கப்படுகிறபோதும் ஆலயத்தின் இடிபாடுகளோ அதன் எச்சங்களோ ஏதாவதொரு இடத்தில் இருந்தமைக்கான ஆதாரங்களோ கல்வெட்டுக்களோ யாராலும் குறிப்பிட்டு காட்டப்படவில்லையென தெரிவித் துள்ளார்.

போ.செல்வகுமார் என்பவர் பின்வரும் கருத்தொன்றை தெரிவித்தி - ருந்தார். வில்கம் விஹாரையென்பது சோழ மன்னர் ஆட்சிக்காலத்தில் சிவன் ஆலயமாகவேயிருந்துள்ளது. அக்கோவிலை பராமரிக்க தவறியதன் காரண மாக காலப்போக்கில் அது வில்கம் விஹாரையாக மாற்றப்பட்டுள்ளது எனக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளார். (ஆதாரம். வீரகேசரி. 21.10 .2010). இவரின் கருத்துக்கு எவ்வித சான்றாதாரங்களும் காட்டப்படவில்லை.

பண்டிதர் இ. வடிவேலு என்பார் தனது நூலில் "கற்பக்கிரகம், அர்த்த மண்டபங்களைக் கொண்ட கற்கோவிலொன்று இங்கிருந்திருக்கின்றது. மிகப் பழமைவாய்ந்த இவ்வாலயம் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பது தெரிய வில்லை என கருத்துத் தெரிவித்துள்ளார். (திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள், 1992)

இதேவேளை திருகோணமலையின் மூத்த அறிஞர் வே. அகிலேச பிள்ளையென்பார் இயற்றிய திருக்கோணாசல வைபவம் 1889 ஆண்டு இயற்றப்பட்டு 1950 ஆண்டு முதல் பதிப்பில் வெளிவந்த நூலில் கன்னியாவில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தின் புகைப்படம் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் பார்க்கின்றபோது 1950 ஆண்டுவரை இச்சிவாலயம் இருந்துள்ளது என்பதை ஊகிக்க முடிகிறது. அவ்வாலயத்தின் மூலஸ்தானம் மணிக்கூட்டுக்கோபுரம் என்பன அப்புகைப்படத்தில் தெளிவாக தெரிய வருகிறது.



கன்னியாவின் பூர்வீக ஆலயமான சிவன் கோவில் (1950)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை அனுமானமாகக் கொண்டு பார்க்கின்ற போது அகஸ்தியர், சிவலிங்கம் அமைத்து வழிபட்ட இவ்விடத்தையே தசக்கீரிவன் இராவணன் தனது தாயாரின் ஈமக்கிரியைகளை மேற்கொள்ள தேர்ந்தெடுத்திருப்பதோடு வெந்நீர்க்கிணறுகளை விஷ்ணு பகவான் உருவாக்கி கிரியைகளைச் செய்திருக்கலாமென ஊகிக்க முடிகிறது. இருந்தபோதிலும் இராமாயண நிகழ்வுகள் அகத்தியர் காலம் ஆகியவற்றில் எவை முன் பின்னானவை என்பதில் வரலாற்றுத் திண்டாட்டம் ஒன்று காணப்படுகிறது. அனைத்துமே மரபு வழிபட்ட கதைகளாகவும், புராண இதிகாச நெறிப்பட்ட சம்பவங்களாகவும் இருக்கின்ற காரணத்தினால் பல வரலாற்றுத் தடுமாற்றங்கள் ஏற்படுவது இயல்பு.

கன்னியாவின் பூர்வீக ஆலயங்கள் தொடர்பில் இன்னும் சில மரபுக்கதைகள் புராணக்கதைகள் கூறப்பட்டு வருகிறது என்பதற்கு ஆதரமாக சில தகவல்களை இங்கு தெரிவிக்கவேண்டியது அவசியமாகிறது.

கன்னியா வெந்நீர் ஊற்றோடு தொடர்புபட்ட ஆய்வை மேற்கொண்ட திருமதி.ஜி. தனபாக்கியம் இலங்கை தொல்லியல் ஆய்வுகளும், திராவிடக் கலாசாரமும் என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "குளக்கோட்ட னுடைய தந்தையாகிய ஸ்ரீ வரராமதேவன் என்னும் சோழ மகாராஜா வெந்நீரூற்றுக்கள் அமைந்திருந்த இடத்துக்கு வருகை தந்து ஏழு கிணறுகளில் புனித நீராடினார் என்று தனபாக்கியம் தட்ஷணகைலாச புராணத்தை ஆதாரங் காட்டிக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் வரலாற்று முறைகளில் வரராமதேவன் என்பவன் யார் என்பதில் தடுமாற்றம் நிலவுகின்றன. திருமதி.தனபாக்கியம் கன்னியா வெந்நீர் ஊற்று பற்றிக் குறிப்பிடுகையில் இன்னுமொரு குறிப்பையும் கூறியுள்ளார்.

கன்னியாவிலுள்ள 7 வெந்நீர் ஊற்றுக்களும், குளக்கோட்ட மகா ராஜா என்பவர் மதில் கட்டியதுடன் அதையொரு புனிதபிரதேசமாக பிரகடனப் படுத்தியிருந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது குளமும், கோட்டமும் அமைத்த குளக்கோட்ட மன்னன் கோணேஸ்வரத்தைப் புனர்நிர்மாணம் செய்த அதே காலத்தில் கன்னியாவின் புனித தன்மையை அறிந்து இப்புண்ணிய நீர்க்கிணறுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கும் வகையில் மதில் அமைத்து அப்பகுதியை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ளான் என்பது தெரியவருகிறது.

## குளக்கோட்டன்

குளக்கோட்டன் என்னும் மன்னனுடன் தொடர்புபடுத்தி கன்னியா வெந்நீரூற்றுப் பகுதி கூறப்படுவது போலவே கோணேசர் ஆலயத்துக்குத் தொண்டு செய்த கஜபாகு மன்னனுடன் தொடர்பு-படுத்தி கன்னியா வெந்நீர் ஊற்றைக் கூறும் வழக்கமும் இருந்திருக்கிறது. கஜபாகு மன்னன் என்பவன் கண்ணகி அம்மனுக்கு சிலை எடுத்துவந்து (கி.பி 2ம் நூற்றாண்டுகளில்), கன்னியா-வில் ஒரு கோவில் அமைத்துள்ளான் என்றும், இங்கு குடிகொண்டிருந்த கண்ணகியம்மன் கோயில்தான் மருவி கன்னியம்மன் என்ற நாமத்துடன் மக்கள் வழிபட்டதன் காரணமாக கன்னியா என திரிவடைந்திருக்கலாம் எனக் கூறப்-படும் பாரம்பரிய சிங்களக் கதையொன்றின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. கஜபாகு மன்னனை ஆதாரங்காட்டிப் பேசப்படும் இம்மரபுக்கதை கண்ணகி அம்மன் என்ற ஆலயம் அமைக்கப்பட்டு வழிபட்டு வந்தமை காரணமாகவே கன்னியா எனத் திரிபடைந்திருக்கலாமெனக் ஊகப்படுத்தி கூறப்பட்டுள்ளது. இதற்கு இன்னுமொரு ஆதாரமாகவே கதிர் தணிகாசலம் என்பவர் 'தமிழர் வரலாறும் இலங்கையும்' என்னும் நூலில் கன்னியா என்பது சிவன் பார்வதியைக் குறிப்பது. அங்கு கோவில் மூர்த்தி, தீர்த்தம் என்பன அமைந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். இதன்படி சிவன்கோயில் ஒன்று இருந்துள்ளமைக்கு ஆதாரமாக இவர் கூற்று அமையலாம். (ஆதாரம்:கதிர் தணிகாசலம் - தமிழர் வரலாறும் இலங்கையும்).



குளக்கோட்ட மன்னன்

கஜபாகு மன்னன் யார்? இவனுக்கும் கன்னியா வெந்நீரூற்றுக்குமான தொடர்பு என்ன என்பது பற்றிச் சுருக்கமாக பார்க்கவேண்டியது அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழரைத் தொடர்ந்து திருகோணமலை வரலாற்றில் 2ம் கஜபாகு மன்னன் முக்கியம் பெறுகிறான். முக்கியம் பெறுவதற்கு காரணம் குளக்கோட்டனுக்குப் பின் கோணேசர் ஆலயத்துக்கு அவன் செய்த திருப்பணியேயாகும்.

தக்ஷண கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, திருக்கோணேச புராணம் ஆகிய நூல்களில் கஜபாகு மன்னன் கோணேசர் ஆலயத்துக்குச் செய்த திருப்பணிகள் பற்றி நிறையப் பேசப்படுகிறது. இதில் 1400 ஆண்டு காலத்திற்குரியதாகக் கருதப்படும் தக்ஷண கைலாசபுராணம், குளக் கோட்டன் கஜபாகு ஆகிய மன்னர்கள் குறித்த செய்திகளை விபரமாகத் தருகின்றது.

மேற்கூறிய நூல்கள் தரும் தகவல்களுக்கும் கஜபாகு மன்னன் பற்றிய கந்தளாய்க் கல்வெட்டு தரும் செய்திக்கும் நெருங்கிய தொடர்புண்டு. சூளவம்சம் இந்த மன்னனுக்குப் போதிய முக்கியத்துவம் தரவில்லை என்பது உண்மை. இவன் இந்துமதப் பிரியனாக இருந்த காரணத்தினால் பெருமாள் தேவதேவர், சூர்யவம்சாபிதாவ, கஜபாகுதேவர், கலாமேகன் போன்ற இந்துமதம் சார்பான விருதுப் பெயர்கள் இவனுக்கு வழங்கி வந்துள்ளன.

திருகோணமலையிலுள்ள மாங்கனாய்க் கல்வெட்டும், 2ம் கஜபாகு (1132 - 1153) குறித்த சில தகவல்களைத் தருகின்றது. கஜபாகு மன்னன் தனது இறுதிக் காலத்தை திருகோணமலை மாவட்டத்திலுள்ள கொத்தஸாறாவில் என்னும் இடத்தில் கழித்தான் என்று கூறப்படுகின்றது. இது கந்தளாய்ப் பகுதியாக இருக்கலாமெனக் கருத இடமுண்டு. கோணேசர் கல்வெட்டு திருக்கோணாசலபுராணம் என்பன கஜபாகு மன்னனின் இந்துமதப் பணிகளின் விபரங்களை எடுத்துக் கூறுவதனால் அவன் கன்னியா வெந்நீர் ஊற்று பற்றிக் கவனம் செலுத்தியிருக்கலாமென எண்ணத் தோன்றுகின்றது. இருந்த போதிலும் இவன் பற்றிய இன்னுமொரு கதையும் விபரிக்கப்படுகின்றது.

சிவனடியார்களின் சிலரைப் பௌத்த துறவிகள் தாக்கியதால் சிவனடியார்கள் பௌத்த துறவிகளைக் கடலில் தள்ளிவிட்டார்கள் என்றும், இச்செய்தியை கேள்வியுற்ற கஜபாகு மன்னன் ஆத்திரமடைந்து திருகோண - மலை முழுவதையும் கையகப்படுத்தி பௌத்த பள்ளிகளை அமைப்பேன் எனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூளுரைத்து திருகோணமலையை நோக்கி (அனுராதபுரியில் இருந்து) படையெடுத்து வரவே அவன் கண்பார்வை இழந்ததுடன் நினைவாற்றலையும் இழந்தான் என்றும், மீண்டும் கோணேசரின் அருளினால் கண்பார்வை பெற்று பல திருப்பணிகளைச் செய்தான் என தக்ஷிண கைலாச புராணம் கூறுகின்றது. அவன் கோணேசர் ஆலயத் திருப்பணியைச் செய்ததுடன் பல நிலத் தானங்களையும் செய்துள்ளான் என்று கூறுவதன் அடிப்படையில் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பணியையும் அவன் செய்திருக்க வாய்ப்பிருந்திருக்கலாம். இவை தவிர்ந்த ஆதாரமென்ற வகையில் 1833 ஆண்டில் திருகோணமலையை பராமரித்துவந்த லெப்டினன்கேணல் டபிள்யு எம்.ஜி.அவர்கள் *(william mackdeen colbrooke)* தான் எழுதிய குறிப்பொன்றில் கன்னியா வளாகத்துக்குள் சிவலிங்க கோவிலொன்று இருந்துள்ளது. அகஸ்திய முனிவர் இவ்விடத்தில் தனது வாசஸ்தலத்தை அமைத்திருந்த காலத்தில் அவரால் தாபிக்கப்பட்ட ஒரு சிவன்கோவில் இருந்துள்ளது. அவர் இவ்விடத்தில் சிவலிங்க வழிபாடு செய்திருக்கவேண்டுமென இந்துக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பானது அக்கால மக்களின் நம்பிக்கையின் அடிப்படையிலும் ஐதீகத்தின் அடிப்படை யிலும் இவருக்கு தெரிந்திருந்தமையினாலையே கோல்புறுாக் இக்குறிப்பை எழுதியுள்ளார் என தெரியவருகிறது.

இவ்வாறு கன்னியா பற்றிய வரலாற்றுத் தொடர்புகளை பல்வேறு புராணங்கள், வரலாறுகள், ஐதீகங்கள் அடிப்படையில் இராவணனுடனும், குளக்கோட்டன், கஜபாகு மன்னன் அகத்தியர், புலஸ்திய முனிவர் எனப் பல்வேறு பெயர்களுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. ஆனால் வரலாற்று ஆதாரங்கள் ஏன் விடுபட்டுப் போயின என்பது பற்றிக் கவலைப்பட வேண்டியே உள்ளது. ஏலவே குறிப்பிட்டது போல் திருகோணமலையிலுள்ள ஏனைய மூலங்களுக்கு அளிக்கப்பட்ட முன்னுரிமைகள் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு அளிக்கப்படாமை கவலை தரும் ஒரு விடயமாகவே தற்பொழுது கருதப்படுகிறது.

## 2) பிள்ளையார் கோயில்

அடுத்து நாம் நோக்கவேண்டிய விடயம் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் வரலாற்றுக்காலம் முதல் இருந்து வந்துள்ள பிள்ளையார் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியதாகும். மிகத்தொன்மைமிக்க பிள்ளையார் ஆலயமொன்று வெந்நீரூற்று வளாகப்பகுதியில் இருந்தமைக்கான ஆதாரங்கள் பல காணப்படுகின்றன. இப்பிள்ளையார் ஆலயத்தில் 1983 ஆம் ஆண்டு வரை பூசை புனருத்தாரணம் பேணப்பட்டு வந்திருக்கின்றது. இனக்கலவரங்களைத் தொடர்ந்து இது பக்தர்கள் செல்லாத சூனியப் பிரதேசமாக்கப்பட்டது. இவ்வாலயம் விஷமிக - ளால் புல்டோசர் போட்டு அழிக்கப்பட்ட நிலையில் அங்கு காடும், பற்றையும், மரங்களும் மண்டிக்கிடந்த நிலையில் அதை 2001ம் ஆண்டளவில் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்ற ஆவல் காரணமாக உப்புவெளிப் பிரதேச சபையின் செயலாளர் வே. ஸ்ரீதரன் அவர்கள் இவ் ஆலயத்தையும் சுடுநீர்க் கிணற்றுப் பிரதேசத்தையும் புனர்த்தாரணம் செய்வதற்குரிய ஏற்பாடுகளை முன்னெடுக்க முயன்றார். உப்புவெளிப் பிரதேச சபை மிக நீண்ட காலமாக இவற்றைப் பராமரித்து வந்ததன் காரணமாக அதைப் புனருத் தாரணம் செய்வதற்குரிய ஏற்பாடுகளை அவர் மேற்கொண்டிருந்தார்.

அந்த முயற்சியை முன்னெடுக்கும் முகமாக, பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்த பகுதியை துப்பரவு செய்து அடிக்கல் நாட்டும் வைபவத்தை உப்புவெளிப் பிரதேச சபையின் செயலாளர் வே.சிறிதரன் ஏற்பாடு செய்தமைக்கு அமைய, திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன் க.துரைரெட்ணசிங்கம், முன்னாள் அன்பு இல்லப் பொறுப்பாளர் சுந்தரலிங்கம் மற்றும் விடுதலைப்புலிகள் அமைப் பைச் சேர்ந்த ஐங்கரன் ஆகியோர் இவ் வைபவத்துக்கு பிரசன்னமாகி இருந்தார்கள். ஆலயத்துக்கான அடிக்கல் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சமபந்தன் அவர்களால் நாட்டி வைக்கப்பட்டது.


பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்கள் அடிக்கல் நாட்டிய போது

இவ்வேளையில் தான் கன்னியா வெந்நீர் ஊற்றுக் கிணறு பற்றிய இனவாதக் கெடுபிடிகள் அவிழ்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடப்பட்டன. வில்கம் விஹாரையுடன் தொடர்புபட்ட தொல்பொருள் தடயங்களை அழிக்க முற்படுகிறார்கள். பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்த இடத்தில் பௌத்த விஹாரையொன்று இருந்துள்ளது. அதை மூடி மறைக்கவே பிள்ளையார் ஆலயத்தை அமைக்க முற்படுகிறார்கள். தொல்பொருள் தடயம் நிறைந்த இவ்விடத்தில் இந்து ஆலயம் அமைக்கப்படக்கூடாது எனக் கூறிக்கொண்டு, உப்புவெளி பௌத்த விஹாரையின் பிக்கு அவர்களால் 2001 ஆம் ஆண்டு உப்புவெளி பொலிஸில் முறைப்பாடு ஒன்று போடப்பட்டதன் காரணமாக ஆலயம் அமைக்கும் முயற்சிக்கு தடைவிதிக்கப்பட்டது. அன்றைய காலப்பகுதியில் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் பிள்ளையார் ஆலய நில உரிமையாளர் என்ற பொறுப்பாக்கத்தை கொண்டிருந்த திருகோணமலை மடத்தடி மாரியம்மன் கோவில், தர்மகர்த்தாவாகிய இரத்தினம்மா (வயது 85) பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

ஏலவே கூறியதுபோல பொலிசார் மேற்கொண்ட விசாரணையின் போது இரத்தினம்மா உரிய ஆவணங்களைக் காட்டியதன் காரணமாக உப்புவெளி விஹாரை பிக்குவினால் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, இரத்தினம்மா விடுவிக்கப்பட்டார். பிக்குவினால் எவ்வித ஆதாரமும் காட்ட முடியாத நிலையில், அந்த வழக்கை பொலிசாரால் தொடரமுடியவில்லை. மாரியம்மன் கோவில் தர்மகர்த்தாவிடம் ஆங்கிலேயர் காலத்து (1894) ஆவணங்கள் கைவசம் இருந்த காரணத்தினால் பொலீசார் தமது நடவடிக்கையைக் கைவிட்டனர். இவ் அடாவடித்தனங்கள் காரணமாக புனருத்தாரணப்பணிகள் கைவிடப்பட்டது. இருந்தபோதிலும் இக்காலப் பகுதியில் கன்னியாவுக்கு வருகை தந்திருந்த பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவர்(அமைச்சர் புஞ்சிநிலமே) காடு மண்டிப் போய்க்கிடந்த அந்தப் பிள்ளையார் ஆலயத்துக்கு தான் ஒரு விநாயகர் சிலையை அன்பளிப்புச் செய்வதாகவும் அதை வைத்து பூஜை செய்யும்படியும் கோரியிருந்தார். அவரின் வேண்டுதலுக்கமைய அப்பிள்ளையார் சிலை சிறிய கொட்டிலொன்றில் வைத்து பூஜிக்கப்பட்டு வந்தது.

தொன்மை கொண்ட பிள்ளையார் ஆலயத்தின் சிலைகளும், ஆலயமும் சூனியப் பிரதேசமாக இருந்த காலப்பகுதியில் துவம்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டதுடன் 1983 ஆம் ஆண்டு தொட்டு பராமரிக்க ஆளில்லாக் காரணத்தினால் காடுமண்டி, கட்டிடம் இடிந்து சிதைபாடு அடைந்து கிடந்தது என அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளார்கள். இங்கு இருந்ததாகக் கருதப்படும் சிவாலயத்தின் தடங்கள் கால வெள்ளத்தின் காரணமாக அழிந்து போயிருக்கலாம். ஆனால் பிள்ளையார் ஆலயம் மிக நீண்ட காலமாக பூசிக்கப்பட்டு வந்த நிலையில் வன்செயல் கால அழிவுகள் இப்பிரதேசத்தை மங்கப் பண்ணின. 2001 ஆம் ஆண்டு பிள்ளையார் ஆலயத்தை புனர்த்தாரணம் செய்யும் நடவடிக்கைகள் தடைப்பட்டுப்போன நிலையில் 2004 ஆம் ஆண்டளவில் மீண்டும் புனர்தாரணம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டபோது மீண்டும் பௌத்த மத கெடுபிடிகள் தலைதூக்கியது.

கன்னியாவில் சட்டவிரோதமாக இந்து ஆலயமொன்று அமைக்கப் பட்டு வருகிறது. இது தடுத்து நிறுத்தப்படவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் வணஎல்லாவெல மேதானந்த தேரர் பாராளுமன்றில் கேள்வி எழுப்பியவேளை இதற்கு பதில் அளித்த கலாசார அமைச்சர் விஜிதஹேரத் இப்பகுதியில் இந்து ஆலயமொன்று 2002 ஆம் ஆண்டு அப்போதைய ஐ.தே.கட்சி அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட்டபின்னரே ஆலயம் அமைக்கப்பட்டு வருகிறது. இக்கோவில் வேலைகளை இடை நிறுத்துவதற்காக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு கிடைத்ததும் கோயில் அமைப்பு வேலைகள் இடைநிறுத்தப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (தினக்குரல் 10. 12. 2004) இவையெல்லாவற்றையும் பார்க்கிறபோது கன்னியா மீது பௌத்த ஆதிக்கம் எவ்வளவு திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது என்பதை இலகுவாக புரியமுடிகிறது.)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிள்ளையார் ஆலய தொன்மைபற்றி பல்சான்றோர்கள் கூறியிருக்கும் கருத்துக்களும் ஆதாரங்களும் இங்கு நோக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

பண்டிதர் இ.வடிவேலு அவர்களின் கருத்துப்படி கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் ஆகியவற்றைக்கொண்ட கோவிலொன்று இங்கிருந்திருக்கிறது. இது கன்னியாப்பிள்ளையார் கோவிலென அழைக்கப்பட்டுள்ளது. இப்பழமை வாய்ந்த ஆலயம் எப்போது யாரால் ஆரம்பிக்கப்பட்டதென்பது தெரியவில்லை. வெந்நீரூற்றுக்கு நீராடச் செல்கின்றவர்கள் இப்பிள்ளையாரை தரிசித்து வந்தமை கால காலமாக நடைபெற்றுவரும் சம்பிரதாயமாகும். இயற்கை அழகும், ரம்மியமும் நிறைந்துள்ள இவ்விடம் மனதிற்கு இதமாகவும், சுகமாவும் இருக்கின்றது. கமுகம் சோலைகள் ஆலயத்தை சுற்றிக்காணப்படுகின்றது. இவ்வாலயம் மலையடிவாரத்தில் இருக்கின்றது. மலையின் ஒற்றையடிப்பாதை வழியே ஏறிச்செல்லலாம். இராவணனுடைய வரலாற்றையும் இந்த தலத்தின் பெருமையையும் கூறும் சிறுகுறிப்படங்கிய விளம்பரப்பலகையொன்று அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. பூசகர் ஒருவர் நித்திய பூசை செய்துகொண்டிருக்கிறார். என பண்டிதர் குறிப்பிட்டுள்ளார். (ஆதாரம். திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள். பக்கம். 192)


பண்டிதர் இ.வடிவேல்

திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 65க்கு மேற்பட்ட தொன்மையான ஆலயங்களில் 31 மேற்பட்டவை பிள்ளையார் ஆலயங்களாகவே இருந்துள்ளன. அவற்றில் ஒன்றாகவே இவ்வாலயமும் இருந்துள்ளது. புலவர் வை. சோமாஸ்கந்தர் மற்றும் அ. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்ட திருக்கோணேஸ்வரம் என்னும் நூலில் (1963) இப்பிள்ளையார் ஆலயம்பற்றி பின்வரும் குறிப்பொன்று தரப்பட்டிருக்கிறது. இற்றைக்கு 75 வருடங்களுக்கு முன் கன்னியா செல்கின்றவர்கள் வட்டவடிவமான ஒரு கல்லையே பிள்ளை - யார் சின்னமாக பாவனை பண்ணி வந்துள்ளனர். இந்நூற்றாண்டு ஆரம்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு ஒரு கோயில் அமைக்கப்பட்டு கன்னியாவுக்கு செல்பவர்கள் பிள்ளையார் சந்நிதியில் வழிபாட்டை செய்து செல்வது வழக்கம். அக்கோவில் இன்று உப்புவெளி கிராமச்சங்கத்தால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது என அக்குறிப்புத் தெரிவிக்கிறது. இவர்களின் கூற்றுப்படி வட்டவடிவமான ஒருகல்லையே பிள்ளையார் ஆலயமாக பாவித்து வந்துள்ளார்கள் என்று அறியப்படுகிறது. 1983 ஆண்டுவரை இந்த வட்டவடிவமான கல் ஆலய வளாகத்துக்குள் இருந்ததற்கு பல சாட்சிவழி ஆதாரங்களுண்டு. 1983 ஆண்டுக்குப் பின் இக்கல் விஷமிகளால் பெயர்த்தெடுக்கப்பட்டு தற்பொழுது திருகோணமலை தொல்பொருள் திணைக்கள வசம் இருப்பதாக கூறப்படுகிறது.

1961 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் நடைபெற்ற ஆடி அமாவாசை தீர்த்தோற்ச வைபவத்தின்போது புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை கன்னியா வெந்நீரூற்றைச் சிறப்பித்துப் பாடியுள்ள கவிதைகொண்டு தகவலொன்றை தெளிவாக தெரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. இந்துக்களின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவ காலத்தில் தந்தையில்லாதவர்கள் தமது பிதிர்க் கடனைச் செய்வதற்காக கன்னியாவுக்கு தீர்த்தமாடச் சென்று இங்குள்ள பிள்ளையார் ஆலயத்தில் நேர்த்திக்கடன்களை செய்து வந்திருக்கிறார்கள் என்பதாகும். இவ்வாலயத்தின் புகழ்பற்றி புலவர்மணி பாடிய பாட்டு இதுதான்.

**கன்னியாய்திரு.....**


**திருந்துமினிய மனச்சான்றோர்**
**சிளம்போல் மேன்மை செய்தே நீர்**
**சுரந்துவருவதென்ன நீ சொல்வாய்**
**கன்னித்திருவே**
**சுரந்துவருவதென்னவெனில்**
**தொட்டேடயென்னை யணைவார்க்கு**
**மருந்தாய் பிணிதீர்க்கும் வகையென்று**
**உணர்வீர்கள் மாந்தர்களே**
**சைவர் பவுத்தர் கிறிஸ்தவர்கள்**
**சார்ந்தெச் சமயத்தோருமுனை**
**மெய்தொட்டாடக் கண்டுள்ளம்**
**விருபம்புவதேன் விளம்பாய்**
**கன்னியாத்திருவே.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியா கிணற்றுக்கருகில் வரலாற்றுக்காலம் முதல் ஒரு பிள்ளையார் ஆலயம் இருந்து வந்துள்ளமையை ஆதாரமாகக்கொண்டு இந்துசமய அலுவல்கள் திணைக்களம் மேற்படி ஆலய நிர்வாக சபையின் கோரிக்கைக்கு அமைய 1985 ஆம் ஆண்டு பதிவு செய்து கொடுத்துள்ளமையை பின்வரும் ஆவணத்தின் மூலம் நிரூபணமாகிறது. இவ்வாலயத்தின் பதிவு இலக்கமும் புனரமைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இது வழங்கப்பட்டுள்ளது பதிவு இலக்கம் 6/3/t/i/p/17(7/5/1985) இதே காலப்பகுதியில் இவ்வாலயம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று உப்புவெளி முன்னாள் கிராமோதைய சபைத்தலைவர் கே.சண்முகராஜா தலைமையில் நடைபெற்று ஆலய பரிபாலன சபைத்தலைவராக பீ. மாயழகு தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

கன்னியா பிள்ளையார் ஆலயம் விஷமிகளால் நிர்மூலமாக்கப்பட்டதைக் கண்டித்து பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்கள் "கன்னியா வெந்நீர் ஊற்றும், அதன் அருகில் இருக்கும் பிள்ளையார் கோயிலும்" என்னும் தலைப்பில் 20 யூலை 2009 ஆம் ஆண்டு பொருளாதார அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார். அதில் அவர் குறிப்பிட்டதாவது,


இரா. சம்பந்தன் அவர்கள்

"திருகோணமலையில் கோணேசருக்கு அருகில் தனது 31ம் நாள் கிரிகைகளை (அந்தியேட்டி) நடத்த விரும்பிய இராவணன் கன்னியாவில் அந்தியேட்டி நடத்துவதற்குத் தேவையான புனித நீரைப் பெற்றுக் கொள்வதற்காக அருகருகே வாளினால் தோண்டினான். ஒவ்வொன்றும் வெவ்வேறு வெப்பநிலை கொண்ட ஏழு ஊற்றுக்கள் பிரிக்கப்பட்டன. இந்த ஊற்றுக்கள் தான் கன்னியாவில் அமைந்துள்ள 7 வெந்நீர் கிணறுகளாகும். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்க முடியாத வரலாறு ஆகும். அன்றிலிருந்து இந்துக்கள் தமது உறவுகளின் 31 ஆம் நாள் கிரிகைகளை கன்னியா வெந்நீர் கிணறுகளிலேயே நிறைவேற்றி வந்துள்ளனர். இது பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வந்துள்ளது. எனது இளவயது முதல் வெந்நீர் கிணறுகளில் எனது உறவுகளின் எண்ணற்ற அந்தியேட்டிக் கிரிகைகளில் நான் கலந்துகொண்டுள்ளேன். இக்கிரிகைகளை நடாத்த மடங்கள் தோன்றின. இந்துக்கள் எந்தவொரு புனித காரியத்தைத் தொடங்குவதற்கு முன்னர் வழிபடும் தெய்வம் பிள்ளையார். பிள்ளையார் கோவில் (கணபதி) எனது நினைவுக்கு எட்டிய காலந்தொட்டு வெந்நீர்க் கிணறுகளுக்கு முன்புறம் இருந்துள்ளது. இதனை வழிபட்டே பின் கிரிகைகளை செய்து வந்துள்ளனர். இது பல நூற்றாண்டு காலமாக இடம்பெற்று வந்துள்ளது.

சில வருடங்களுக்கு முன் இப்பிள்ளையார் கோவிலைப் புனர - மைத்துக் கொண்டிருந்தபோது புராதன செங்கற்கள் தோன்றின. இவ்வாறு தோன்றுவது முற்றிலும் இயல்பானதே. இப்பிள்ளையார் கோவில் மிகவும் பழமைவாய்ந்தது.

தொல்பொருள் திணைக்களம் சில ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முயன்று அண்மையில் வெந்நீர்க் கிணறுகளுக்கு சில மைல் தொலைவில் அமைந்துள்ள பௌத்த விகாரையான வில்கம் விஹாரையின் தற்போதைய குருவின் தலைமையில் இந்துக்களின் புனிதமான கன்னியாப் பகுதியின் வரலாற்றை இருட்டடிப்பு செய்வதற்கு ஒரு முனைப்பான பிரசாரம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. புத்தர் சிலையொன்று இப்பகுதிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அச்சிலை இரகசியமாக அங்கு பொருத்தப்பட்டிருக்கின்றது என்றும் எனக்கு தகவல் கிடைத்துள்ளது என்று வில்கம் விஹாரையின் தற்போதைய குரு மற்றும் வேறு சிலரின் இத்தகைய செயற்பாடுகள் நிச்சயமாக புத்த பெருமானின் போதனைகளுக்கு ஏற்றதல்ல" என இரா.சம்பந்தன் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார். (ஆதாரம்: சுடர்ஒளி 9.9.2012)

## முருகன் ஆலயம்

கன்னியா வளாகப்பகுதியல் முருகன் ஆலயம் ஒன்று இருந்தமைக் கான மரபுவழி கதைகள் கூறப்படுகிறபோதும் அதற்குரிய ஆதாரங்கள் சான்றுகளை எங்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது என்பதை கண்டறிவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்டமாவுள்ளது. இருந்தபோதிலும் முருகன் ஆலயமொன்றுபற்றி வாய் வழியாக பேசப்பட்டே வருகின்றது. இதை ஆதாரமாகக்கொண்டு பார்க்கின்ற போது 2004 ஆண்டு இந்து விவகார அமைச்சு உப்புவெளி பிரதேச சபைக் கெழுதிய கடிதமொன்றிலிருந்து முருகன் ஆலயமொன்று கன்னியா வளாகப்பகுதியில் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. 30.7.2002 தேதியிட்ட HA/HCf/02A என இலக்கமிடப்பட்ட கடிதத்தில் இந்து விவகார அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் பின்வரும் அறிவித்தலொன்றை வழங்கியிருந்தார்.

கன்னியா வெந்நீர் ஊற்றும் புனித தீர்த்தமும் பிள்ளையார் முருகன் ஆலயங்களும் எனும் தலைப்பில் எழுதப்பட்ட மேற்படி கடிதத்தில் கன்னியா வெந்நீர் ஊற்றும் அவை அமந்துள்ள சூழலும் இந்து மக்களின் புனித தீர்த்தங்களாக கருதப்படுகின்றன. இக்கிணறுகளும் அதன் சுற்றாடலும் பிள்ளையார் முருகன் ஆலயங்களும், மடமும் உரியமுறையில் பேணப்படுவ - தில்லையென எமது அமைச்சுக்கு கிடைத்துள்ளது. இங்கு அமைந்துள்ள பிள்ளையார் முருகன் ஆலயங்கள் மிகவும் இடிபாடுள்ள நிலையில் உரிய பராமரிப்பின்றி காணப்படுகிறதென்றும் அருகேயுள்ள மடமும் மிகவும் சிதைவுற்ற நிலையில் உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாலயங்கள் மடம் ஊற்றுக்கள் அமைந்துள்ள சூழல் எல்லாவற்றையும் உரியமுறையில் புனரமைத்து பாதுகாக்கவேண்டும் இது இந்துமக்களின் கடமை. இவற்றைக் கருத்திற்கொண்டு தங்கள் பிரதேச சபை மூலம் இவ்வளாகத்தை புனரமைப்பு செய்து உதவுமாறு அன்புடன் வேண்டுகிறேன். இவ்வண்ணம் க.பரமேஸ்வரன் செயலாளர் இந்து விவகார அமைச்சு 248, காலி வீதி கொழும்பு 4, என மேற்படி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இம்முறைப்பாடு தொடர்பில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகமும் 20.8.2002 தேதியிட்ட கடிதத்தை உப்புவெளி பிரதேச சபைக்கு அனுப்பியிருந்தது. இத்தகவலின் அடிப்படையில் பார்க்கிறபோது கன்னியா வளாகத்துக்குள் ஒரு முருகன் ஆலயம் இருந்திருக்கலாமென ஊகிக்க முடிகிறது.

**கன்னியா மடம்**

கன்னியாப் பகுதியில் அமைக்கப்பட்ட மடம் தொடர்பில் சில தகவல்கள் நோக்கப்பட வேண்டும். கன்னியா வெந்நீர் கிணற்றுக்கருகிலிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடத்தை அந்திசஷ்டி மடமென்று அழைக்கும் வழக்கமொன்று நீண்ட காலமாக நடைமுறையிலிருந்து வந்துள்ளது. இம்மடம்பற்றி பல்வேறு தகவல்கள் தெரிவிக்கப்படுகிறபோதும் தம்பலகமத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் சண்முகப் பிள்ளை என்பவர் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு அருகில் சைவ மக்கள் தமது இறந்தவர்களின் ஈமக் கிரியைகளை செய்வதற்கென (31ஆம் நாள் செய்யப்படும் கிரியைகள்) அந்தியேட்டி மடம் ஒன்று நிறுவியிருந்திருக்கிறார். இது பற்றி தெளிவான குறிப்பு ஏதுமில்லை. ஆனால் ஸ்ரீ சண்முகா தர்ம ஸ்தாபனம் இதை நிறுவியுள்ளது என்பதை ஒரு சில குறிப்புக்களால் அறிய முடிகிறது. இம்மடத்தின் உரிமை தொடர்பில் ஸ்ரீ சண்முகா தர்ம ஸ்தாபனம் 19.08.2003 திகதியிட்டு உப்புவெளி பிரதேச சபைக்குப் பின்வருமாறு ஒரு கடிதத்தை எழுதியிருந்தது.

கடந்த வன்செயல் காலப்பகுதியில் மடமும், அதையொட்டிய கட்டிடங்களும் முற்றாக அழிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக இப்பகுதிக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை தாங்கள் அறிவீர்கள். தற்போதைய சுமூகமான சூழ்நிலையில் இந்து மக்களின் நலன் பொருட்டு இம்மடத்தினை மீளவும் கட்டியெழுப்ப இத்தாபனம் தீர்மானித்துள்ளது. ஆனால் அதற்குரிய நிலப்பரப்பு தங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருவதாக நாம் அறிகிறோம், எனவே எமது ஸ்தாபனத்தின் உரிமையுடன் சம்மந்தப்பட்ட நிலத்தை எம்மிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் மேற்படி மடத்தை புனரமைப்பு செய்ய நடவடிக்கையெடுப்போமென பதில் முகாமை தர்மகர்த்தா வி. நடராசா உப்புவெளிப் பிரதேச சபை செயலாளருக்கு கடிதமொன்றை எழுதியிருந்தார்.

இம்மடத்தை பராமரித்து வந்த தம்பலகமம் சண்முகப்பிள்ளையின் மறைவின் பின் அவர் பாரியார் திருவாட்டி தங்கம்மா வாரிசற்ற தங்களது திரண்ட சொத்துக்களையும் தனது கணவரால் நிறுவப்பட்ட அனாதரவற்றவர் களுக்கான இல்லங்களையும் கன்னியா அந்தியட்டி மடத்தையும் உள்வாங்கி சண்முகா நம்பிக்கை ஸ்தாபனமாக பிரகடனப்படுத்தி உயில் எழுதி நம்பிக்கை பொறுப்பாளர் சபையொன்றையும் நிறுவியிருந்தார். இந்த சபைக்கு திருகோணமலைப் பிரமுகர்கள் சிலரை திருமதி தங்கம்மா நியமித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சண்முகப்பிள்ளை தங்கமா -வால் எழுதப்பட்ட சட்டபூர்வமான சண்முகா தர்ம ஸ்தாபனத்தின் உயிலுக்கு அமைவாக வெந் நீர் கிணற்றுக்கு அருகில் நிறுவப்பட்ட மடத்தை நிர்வகிக்கும் பொறுப்பையும் பராமரிக்கத் தேவையான வருவாயையும் பெற்றுக்கொள்ள மூதூர் பிரதேசத்தில் பெருந் தொகையான வயல் நிலங்களையும் திருமதி. தங்கம்மா உயிலாக எழுதி ஒதுக்கியிருந்தார் என்ற தகவல்களும் தெரிவிக்கப்படுகின்றன. இதேவேளை கன்னியா மடத்துக்கும் திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலயத்துக்கும் தொடர்பு இருந்துள்ள மையை சில குறிப்புக்களால் அறியக்கூடியதாகவுள்ளது. 2004 ஆண்டு வன் செயல் காலப்பகுதியில் இம்மடம் புள்டோசர் போட்டு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. தற்பொழுது மடத்துக்குரிய நிலமும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவினால் கையகப்படுத்தப்பட்டு அந்த இடத்தில் யாத்திரியர்கள் தங்குவதற்கும், இளைப்பாறுவதற்கும் யாத்திரிகர் மடமொன்றை அமைக்க திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது. (ஆதாரம் 15.7. 2012 தினக்குரல்)


சண்முகா தர்ம ஸ்தாபன ஸ்தாபகர் திருவாட்டி தங்கம்மா

**கன்னியா சமாதி**

கன்னியா வெந்நீர் ஊற்றுடன் தொடர்புபட்ட இன்னொரு விடயமாகக் கருதப்படுவது நீரூற்றுக்கு மேலே தெற்குப் புறமாக அமைந்திருக்கும் சமாதி பற்றிய செய்தியாகும். பண்டிதர் இ.வடிவேல் அவர்களின் கருத்துப்படி மலையின் ஒற்றையடிப் பாதை வழியே ஏறிச்சென்று பார்ப்பின் ஒரு முஸ்லீம் பெரியார் அடங்கியிருக்கும் 40 அடி நீளமான சமாதியொன்று இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். (ஆதாரம்: திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள், பக்கம்192). இதேபோன்றே புலவர் வை.சோமஸ்கந்தர் திருக்கோணேஸ்வரம் என்னும் நூலில் (பக்கம் 63) பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கியா என அழைக்கப்படும் ஒரு இஸ்லாமிய பள்ளிவாசல் இருக்கிறது. மேலும் மலையின் உச்சியில் நாற்பதடி ஆண்டவர் என்று அழைக்கப்படும் ஒரு சமாதியுண்டு. அதில் 40 அடி நீளமுள்ள ஒரு அரேபிய ஞானி புதைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. இதன் சரித்திரம் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்டதென கர்ண பரம்பரையாக நம்பப்படுகிறது. இஸ்லாமியர்கள் கந்தூரிகளுக்கும், ஏனைய கொண்டாட்டங்களுக்கும் அங்கு செல்வார்கள் எனப் புலவர் சோமாஸ்கந்தர் குறிப்பிட்டுள்ளார். ( இந்த நூல் எழுதப்பட்ட காலம் 1963 என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.)

இச்சமாதி பற்றிய செய்திகள் இவ்வாறு இருக்கின்றபோதும் ஒரு தெளிவற்ற தன்மை கொண்டதாகவே அது காணப்படுகின்றது. இந்துக்களின் புனித பிரதேசமாகக் கருதப்பட்ட கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசத்தில் இஸ்லாமியர்கள் சமாதி உண்டாக்கியிருக்கும் வாய்ப்புக் காணப்பட்டிருக்குமா? என்பது பற்றிய கேள்வி தானாகவே எழுகின்றது. இந்த வினாவுக்கு இரண்டு விதமான முறையில் விடை தேட வேண்டியிருக்கின்றது. இஸ்லாமியக் குடியிருப்புக்களின் செல்வாக்கு இங்கு இருந்துள்ளதா? என்பது ஒன்று, மற்றது, இந்த முஸ்லிம் பெரியாரை அடக்கம் செய்வதற்குரிய நியாயச் சான்றுகள் என்ன என்பதாகும்.

2010 ஆம் ஆண்டு பஞ்சாப்பை சேர்ந்த ஆய்வாளர் அசோக்காந். (சீக்கிய ஆய்வாளர்). இராமாயண சுவடுகள் பற்றி ஆய்வொன்றை நடாத்து - வதற்காக இலங்கை வந்திருந்தார். அவர் திருகோணமலைக்கும் விஜயம் செய்திருந்தார். கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் ஆய்வுகளை மேற் கொண்ட அசோக்காந் ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தார். இராவணனுடைய சமாதி திருகோணமலைக்குப் பக்கத்திலுள்ள ஓர் இடத்திலேயே இடம் பெற்றுள்ளது. அது கன்னியா மலையிலுள்ள 40 அடி சமாதியாக அடையாளம் காணப்பட்டிருக்கும் இடமே இராவணனுடைய சமாதியாக இருக்க வேண்டு - மென அவர் அடித்துக் கூறியுள்ளார்.

இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்டியிருந்தார். இராவணனுக் கென அமைக்கப்பட்ட கோயிலொன்றும் திருமலையில் இருந்திருக்கின்றது என்று அவர் கூறியுள்ளார். இதுபற்றி மேலும் அவர் குறிப்பிடுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணனுக்கு இலங்கையில் ஏழு இடங்களில் கோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றுதான் கன்னியாவிலுள்ள இராவணனுக்கான கோவில் என அந்த ஆய்வாளர் குறிப்பிட்டிருந்தார்.

கன்னியா மலைக்கு மேலுள்ள சமாதிதான் இராவணனுடைய சமாதியெனக் கூறியிருப்பதோடு 40 அடி நீளம் கொண்ட அச்சமாதி பிற்காலத்தில் தவறான வரலாறாக மாறி பெரியார் ஒருவருடைய சமாதி எனக் கூறப்பட்டிருக்கலாம். உண்மையில் அது இராவணனுடைய சமாதி என்பதுடன் அவனுக்கு அமைக்கப்பட்ட ஆலயமும் அதன் அருகில்தான் அமைந்திருக்க வேண்டுமென சான்றுகளைக் காட்டி கருத்துத் தெரிவித்திருந்தார். இராவணனால் தனது தாயாருக்கு ஈமக்கிரியை செய்வதற்காக உருவாக்கப்பட்ட வெந்நீர்க் கிணற்றுக்கு அருகிலேயே அந்த சமாதி இருக்கிறது எனவும் கூறியுள்ளார் அசோக்காந்த். கன்னியா பற்றிய கதைகள் அனைத்தும் ஐதீகத்தின் அடிப்படையில் வாய்வழித் தன்மை கொண்டவையாகக் கூறப்பட்டு வருகின்றபோதும், புராண இதிகாசக் கதைகளைப் போல் அவை வலிமை அற்றவையாகவே காணப்படுகிறது.

## கன்னியா உரிமம் சார்ந்த விடயமும், ஆவண இருப்புக்களும்.

கன்னியாவின் உரிமம் சம்மந்தமான விடயங்கள் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் இன்னும் சில ஆதார பூர்வமான விடயங்கள் அறியவேண்டியது அவசியமாகிறது. 1865 ஆம் ஆண்டு பிரித்தானியரின் ஆட்சிக்காலப்பகுதியில் மடத்தடி மாரியம்மன் கோவிலுக்கு தானமாக கொடுக்கப்பட்ட கன்னியா வெந்நீர் ஊற்று அதனை சூழவுள்ள சுமார் மூன்று றூட் அளவிலான காணி 3 *(Roots)* நாடு சுதந்திரமடைந்ததன்பின் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களினால் 1952 ஆம் ஆண்டு உப்புவெளி பிரதேச சபைக்கு பின்வரும் வடிவத்தில் உரித்துடையவையாக எழுதிக்கொடுக்கப்பட்டது. உப்புவெளி கிராமோதய சபைக்கு உரித்துடமையாக்கப்படும் இந்த வெந்நீரூற்றுப் பகுதி (இயற்கை ஊற்றப்பிரதேசம்) சமய விடயங்களுக்காக மக்கள் வந்து கடமைகளைச் செய்யும் வண்ணம் வசதிகள் எல்லாவற்றையும் கிராமோதயசபையால் செய்துகொடுக்கப்பட வேண்டுமென அரசாங்க அதிபர் தான் கொடுத்திருந்த பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தார். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணத்தை மேலும் உறுதி செய்யும் வகையில் 1958.02.28 திகதியிடப்பட்ட ஆவணத்தின் மூலம் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் உப்புவெளி கிராமோதய சபைக்கு மேற்படி பத்திரத்தை எழுதிக்கொடுத்திருந்தார்.

***THIS SIDE PROPERTY SHALL BE USED AS A SITE FOR A CEMETERY AND FOR OTHER POURPOSE (28 FEB- 1958)***

இவ்வாவணத்தின்படி கன்னியா வெந்நீரூற்றுப்பகுதி இந்துக்கள் தமது இறந்தவர்களின் ஆத்ம அடக்கம் வேண்டி செய்யும் சடங்குகளுக்கு மிக நீண்ட காலமாக பயன்படுத்தி வந்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது. இதன் காரணமாகவே இங்கிருந்த மடம் அந்திசஷ்டி மடமென அழைக்கப்பட்டு வந்துள்ளது. திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரினால் 1958 ஆம் ஆண்டு வழங்கப்பட மேற்படி ஆவணத்தை உறுதிப்படுத்தும் வகையில் கொழும்பு காணி ஆணையாளர் நாயகம் 28.02.1961 திகதியிடப்பட்ட ppa 965 இலக்கம் கொண்ட கன்னியா வெந்நீரூற்றுப்பகுதியை அடையாளப்படுத்தி வரைபடம் ஒன்றை உப்புவெளி பிரதேச சபைக்கு கையளித்துள்ளார். அவ்வரைபடத்தில் சுட்டிக்காட்டியபடி 2றூட் 20.89 பேர்ச் காணி ( 2 roots 20.89 perch) கன்னியா வெந்நீரூற்றைச் சேர்ந்தது என அடையாளமிடப்பட்டு உப்புவெளி கிராமோதய சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. 1946ம் ஆண்டு ஒக்ரோபர் 5ம் திகதிய இன்னுமொரு அரச ஆவணத்தின்படி கன்னியா வெந்நீரூற்றுப்பகுதி பின்வருமாறு அடையாளமிட்டு காட்டப்பட்டுள்ளது.

**கிழக்கே - மடத்த மாரியம்மன் ஆலயத்திற்குரிய பகுதி**
**தெற்கே - அரச காணி**
**மேற்கே - அரச காணியும், சிற்றம்பலம் சண்முகம்பிள்ளைக்குரியது.**
என வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இவற்றுடன் மடத்தடி மாரியம்மன் கோயிலுக்குரிய காணியின் அளவு 1894 ம் ஆண்டு எழுதப்பட்ட ஆவணத்தின் படி 8 ஏக்கர் 8 றூட் 26 பேர்ச்சாகவும் வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆவணம் கொழும்பு நில அளவை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டிருக்கிறது. (ஆதாரம்- *plan of an allotment of land Trincomalee eastern province,Colombo.sep 1895.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்றே மற்றொரு ஆவணத்தில் கன்னியா வெந்நீரூற்றுப்பகுதியின் காணி அளவீடுகள் பின்வருமாறு எடுத்துக்காட்டப்பட்டிருந்தன.

**கிழக்கில் - வெந்நீரூற்று**

**தெற்கில் - முடிக்குரிய காணியும்,பெரிய கன்னியா காடும்**

**மேற்கே - மடத்தடி மாரியம்மன் கோயில் காணி**

தெற்குப் பகுதியை உறுதிப்படுத்தும் வகையில் - plan no.167975, மேற்குப்பகுதியை உறுதிப்படுத்தும் வகையில் - plan no.167973) என வழங்கப்பட்டுள்ளது. இந்த வரைபுகளை நில அளவை நாயகம் 1954ம் ஆண்டு ஆகஸ்ட் 7ம் திகதி என திகதியிட்டு சட்டத்தரணி எஸ். மாதவராஜாவின் கோரிக்கைக்கு அமைய நில அளவை நாயகம் *D.G.mantell* என்பவர் கையெழுத்திட்டு வழங்கியுள்ளார்.

மேற்படி ஆவணங்களின் பிரகாரம் மடத்தடி மாரியம்மன் ஆலயத்திற்கு வெந்நீரூற்றுக்கு அருகில் (மேற்கு) 5 ஏக்கர் 1.50 பேர்ச் காணித்துண்டொன்று இருந்துள்ளமையை அறியக்கூடியதாகவுள்ளது. இந்த ஆவணங்களின் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கின்றபோது கன்னியா வெந்நீரூற்றும், அதைச்சுற்றியுள்ள காணிகளும் பின்வருமாறு இருந்துள்ளமையை அனுமானிக்க முடிகிறது.

**(அ) கன்னியா வெந்நீரூற்றுக்கான பகுதி**

**(ஆ) மடத்தடி மாரியம்மன் ஆலயத்திற்கான பகுதி**

**(இ) தம்பலகமம் சிற்றம்பலம் சண்முகத்திற்குரிய பகுதி**

**(ஈ) முடிக்குரிய காணி**

இதில் மடத்தடி மாரியம்மன் ஆலயத்திற்கென பறங்கிய இராணுவத் தளபதியால் (1623 - 1638) தானம் செய்யப்பட்டதாக கருதப்படும் நிலங்களின் துண்டுகள் பின்வருமாறு வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**துண்டு 01 - 8 ஏக்கர் 3 றூட் 26.75 பேர்ச்**

**துண்டு 02 - 5 ஏக்கர் 1.5 பேர்ச்**

**துண்டு 03 - வெந்நீரூற்றுப்பகுதி**

**துண்டு 04 - பிள்ளையார் ஆலயப்பகுதி**

இத்தகவல்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது சுமார் 150 வருடங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாக கன்னியா வெந்நீரூற்றும் அதையண்டிய பிரதேசங்களும் மடத்தடி மாரியம்மன் கோயில் உப்புவெளி பிரதேச சபை மற்றும் சண்முகா தர்ம ஸ்தாபனம் ஆகியவற்றுடன் தொடர்புடைய உரிமை கொண்டதாக இருந்து வந்துள்ளதையும் இப்பிரதேசம் முற்று முழுதாக இந்துக்களின் பூர்வீக பிரதேசங்களாக இருந்துள்ளமையையும் இந்த ஆதாரங்களிலிருந்தும், தகவல்களிலிருந்தும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. இந்துக்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசமாக இராவணன் காலத்திலிருந்து இருந்து வந்துள்ளமையினாலையே இப்பிரதேசத்தில் சிவன் ஆலயம் பிள்ளையார் கோவில் முருகன் கோவில் என்பன இருந்தமைக்கான ஆதாரங்கள் பற்றி பேசப்படுகிறது. இந்துக்களின் பாரம்பரியப் பிரதேசமாக இருந்துவந்த கன்னியாப் பிரதேசத்தை 2009 ஆண்டுக்குப் பின் உரிமை பாராட்டிக்கொண்டு அரசாதிக்கங்களை செய்து வருவதுடன் கன்னியாவுக்கும் வில்கம் விஹாரைக்கும் தொல்பொருள் தொடர்புகள் உண்டெனபொய்மை உரைத்துக் கொண்டு அரச செல்வாக்கு மற்றும் படைத்தரப்பு உதவியுடன் கன்னியாவை கபளீகரம் செய்திருப்பதுடன் பௌத்த மேலாதிக்கத்தை நிலைகொள்ளச் செய்யும்வகையில் 2010 ஆண்டளவில் கன்னியா வெந்நீரூற்று வளாகப் பகுதியில் விஹாரையொன்று அமைக்கப்பட்டது பற்றி (ஆதாரம் வீரகேசரி 21.10.2010) ஆரப்பத்தில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

## 2009ம் ஆண்டுக்குப் பின்னுள்ள கன்னியா

2009ம் ஆண்டுக்குப்பின் கன்னியா வெந்நீரூற்றுப்பிரதேசத்தில் நடந்த சம்பவங்கள் பற்றி எவ்வகைப்பதிவுகள் இடம்பெற்றுள்ளது என்பது பற்றி சிறிது நோக்குவோம்.

2009 ஆண்டுக்குப்பின் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் திட்டமிட்ட முறையில் மிகவும் தீவிரப் படுத்தப்பட்டது. இதைத்தெரிந்துகொண்ட உப்புவெளி பிரதேச சபையினர் இதைத்தடுக்கும் முகமாக பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டனர். தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக கன்னியா வெந்நீர் ஊற்றுக் காணியில் வில்கம் விஹாராதிபதி விஹாரையொன்றை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்ற விவகாரத்தை பட்டணமும் சூழலும் பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளருக்கும் கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளருக்கும் எழுத்து மூலம் அறிவித்தனர். அறிவத்ததுடன் கன்னியா வெந்நீரூற்று உரிமம் சம்மந்தமாகவும் 11.01.2010 தேதியிட்ட கடிதமொன்றையும் அனுப்பியிருந்தனர். உப்புவெளி பிரதேச சபையினர் தமது கடிதத்தில் ஓர் ஆதாரத்தை எடுத்துக்காட்டியிருந்தார்கள்.

**1865 ஆம் ஆண்டு போர்த்துக்கீசத் தளபதியால் மடத்தடி மாரியம்மன் கோவிலுக்கு தானமாக கொடுக்கப்பட்ட கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியும் அதனை சூழவுள்ள சுமார் மூன்று றூட் அளவிலான காணி (3 ROOTS) பகுதியும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களினால் 1952 ஆம் ஆண்டு உப்புவெளி பிரதேச சபைக்கு உரித்துடையதாக எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கன்னியா வெந்நீரூற்றுக்குரிய ஆவணங்கள் பிரதேச செயலாளரின் கோவையில் 1957 ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை பேணப்பட்டு வருகின்றது** என உப்புவெளி பிரதேச சபை தவிசாளர் காந்தரூபன் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இக்கடிதத்துக்கு பதில் அனுப்பிய திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் 19.01.2010 தேதியிட்ட தி/ப.சூ.செ/வ.பி/2010 இலக்க கடிதத்தில் தெரிவித்திருந்ததாவது. 11.01.2010 தேதியிட்டு தாங்கள் குறிப்பிட்டபடி 1957 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரால் தங்களுக்கு வழங்கப்பட்ட 3 ஏக்கர் காணிக்குரிய ஆவணங்கள் எதுவும் எனது காரியாலயத்திலில்லை. தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 01.10.1984 இலக்க 28.07.2009 தேதிய கடிதத்தின் பிரகாரம் கன்னியா ஊற்றுப்பகுதியும் அதன் சுற்றுப்பகுதியும் தொல்லியல் திணைக்கள ஒதுக்கீடாக பிரகடனப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால் அக்காணியை நில அளவீடு செய்யும் நடவடிக்கையை எடுக்குமாறு கூறப்பட்டிருந்ததன் காரணமாக நில அளவைத்திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி நில அளவைத்திணக்களத்துக்கு அனுப்பப்பட்டு தொல்லியல் திணைக்கள அதிகாரிகளால் காண்பிக்கப்பட்ட எல்லைப்பகுதி அளவிடப்பட்டு ஒரு ஆரம்ப வரைபடம் மட்டுமே தயாரிக்கப் பட்டுள்ளது. இதன்படி தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் காட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைப் பகுதிக்குள் அடங்கும் காணிகள் பற்றிய விபரம் விபரப்பட்டியல் மூலம் தரப்பட்டுள்ளது. இதன்படி துண்டு H பகுதி தங்கள் சபையால் பராமரிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர தங்கள் சபைக்கு பராதீனப்படுத்தப்பட்டதாக கன்னியாவின் எந்தப் பிரதேசமும் குறிப்பிடப்பட வில்லை. தங்கள் சபைக்கு 3 ஏக்கர் 1957 ல் தரப்பட்டதாக கூறினாலும் 9.11.1981 ஆம் திகதிய 47 ஆம் இலக்க திருகோணமலை காணி நிர்ணய சட்டத்தின் 166.4ம் இலக்க 9.11.1981 திகதியுமான இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டபடிருந்த கிணறுகள் அமைந்த காணி உட்பட தங்களுக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் துண்டு இலக்கம் 130. 3-3 ஏக்கர் 2 றூட் 05 போச் காணி மேற்படி வர்த்தமானி பிரசுரம் மூலம் அரச உடமை ஆக்கப்பட்டுள்ளது. இதனை நில அளவைத்திணைக்கள அறிக்கைகள் காண்பிக்கின்றன. தங்கள் சபைக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் காணி வர்த்தமானி மூலம் அரச உடமையாக்கப்பட்டபோது தங்கள் சபை எதுவித நடவடிக்கையும் எடுத்ததாக தெரிவில்லை. மேலும் TRI/ TwG/2009/276 வரைபின் படி துண்டு இலக்கம் ACG. ஆகியவ மட்டுமே தனியார் காணிகளாக உள்ளன. இதில் துண்டு இலக்கம் G. இலயே வெந்நீர் கிணறுகள் அமைந்துள்ளன. C தனியார் பரம்பரைக் காணி எனவும் ஏனையவை அரச காணியெனவும் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் குறிப்பிட்டி ருந்தார். பிரதேச செயலாளரின் கருத்துப்படி கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதிக்கும் உப்புவெளி பிரதேச சபைக்கும் எவ்வித உரிமையும் அதிகார பூர்வமாக யாராலும் கையளிக்கப்படவில்லை என்பதுடன் அவை பற்றிய எந்த ஆவணமும், தகவலும் இல்லையென்ற விடயத்தை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

இவ்வாறான தவறுகளுக்கு யார் குற்றவாளிகள் என்பது சுட்டிக் காட்டாமலே விளங்கக்கூடிய விடயமாகும். கடந்த 60 வருடங்களுக்கு மேலாக உப்புவெளி கிராம சபை பிரதேச சபையை ஆட்சி செய்தவாகள் தமிழர்கள். 1987 ஆண்டு 15 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் உப்புவெளி பட்டணமும் சூழலும் பிரதேச சபை உருவாக்கப்பட்டது. பிரதேச சபைகள் உருவாக்கப் படுவதற்கு முன் உப்புவெளி கிராம சபை சாம்பல்தீவு கிராம சபை குடாக்கரை கிராமசபை (வெள்ளைமணல்) ஆகிய மூன்றும் இணைக்கப்பட்டு உப்புவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டணமும் சூழலும் பிரதேச சபை உருவாக்கப்பட்டது. ஏலவே உப்புவெளி கிராம சபையின் அதிகாரத்தின் கிழ் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதி இருந்துள்ளது. உப்புவெளி பிரதேச சபை உருவாக்கப்பட்டதன் பின் 2006 ஆம் ஆண்டுவரை எந்த தமிழ் தலைமைகளும் தவிசாளராகளாக வரவில்லை. 2006 ஆம் ஆண்டே முதல் முதல் தங்கவேலாயுதம் காந்தரூபன் என்பவர் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்தக்கையகப்படுத்தலின் தொடர் நாடகமாகவே இக்கட்டுரையின் ஆரம்பதிதில் சுட்டிக்காட்டியது போல் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் 26.11.2009 கடித சிபாரிசுக்கமைய மாவட்ட காணி ஆணையாளர் நாயகத்துக்கு 2.4.5.1.TG.1026, இலக்க கடிதத்தில் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கருகில் 0.4120. ஹெக்டர் விஸ்தீரணமுடைய காணியை வில்கம் ரஜமஹாவிஹாரை விஹாராதிபதிக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு எனது சிபாரிசுடன் அனுப்பிவைக்கிறேன் என்ற தாரை வார்த்தை சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து இன்னும் சில திட்டமிட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றன. இவைபற்றி அக்காலப்பகுதியிலிருந்த அதிகாரிகளும், பிரதேச சபை உறுப்பினர்களும் சில பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். பிரதேச சபையின் செயலாளராகவிருந்த இ.தயாளன் என்பவர் அன்றைய கால கெடுபிடிகள் பற்றி கிழக்குமாகாண முதலமைச்சரின் செயலாளருக்கு 31.5.2010 தேதியிட்ட கடிதம் மூலம் பின்வரும் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார். கன்னியா வளாகத்துக்குள் அனுமதியின்றி வில்கம் விஹாராதிபதி விஹாரை ஒன்றை அமைக்க முற்படுகிறார் இது உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனக்கோரி முதலமைச்சரின் செயலாளருக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பில் செயலாளர் தொடர்ந்தும் பல கடிதங்களை எழுதியிருந்தமை குறிப்பிடத் -தக்கது. இதுபோலவே கன்னியா வளாகத்துக்குள் பாதுகாப்புப் படையினர் யாருடைய அனுமதியுமின்றி வியாபார நிலையங்களை அமைத்தபோது தவிசாளர் த. காந்தரூபன் நகர அபிவிருத்திச் சபை பணிப்பாளருக்கு 6.8.2010 தேதியிட்ட கடிதத்தின் மூலம் உப்புவெளி பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட கன்னியா வெந்நிருற்றுப் பிரதேசத்தில் எமது அனுமதியன்றி பாதுகாப்பு படையினர் வியாபார நிலையங்களை அமைத்து வருகிறார்கள் தடுத்து நிறுத்தும்படி கோரியுள்ளார்.

நுழைவாசல் பகுதியில் (பள்ளிவாசலுக்கு முன்பாக) பெரும்பான்மை சமூகத்தவரால் வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டமை பற்றி பள்ளிவாசல் நிர்வாகம் உப்புவெளி பிரதேச சபைக்கு அறிவித்தது. இவ்வாறு பாதுகாப்பு படையினராலும், மற்றும் பெரும்பான்மை தரப்பினராலும் அனுமதியின்றி அமைக்கப்பட்ட கடைகள் தொடர்பாக உப்புவெளி பிரதேச சபையின் தவிசாளர் நகர அபிவிருத்திச் சபைக்கு பல்வேறு முறைப்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இவ்வகை அசம்பாவிதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில்தான் நகர அபிவிருத்தி சபையினர் (UDA) கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதியை விஷேட திட்டமொன்றின் கீழ் அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர். கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சிகள் 2003 ஆம் ஆண்டளவில் விஷேட ஆணையாளராக இருந்த இ. ரவீந்திரன் முன்னெடுத்து வந்த போதும் அவை பல்வேறு அரசியல் மற்றும் இனவாதக் காரணங்களினால் ஆற்ற முடியாது இருந்தது என்பது உண்மையே. இருந்தபோதிலும் 2010 ஆம் ஆண்டளவில் மீண்டும் முன்னெடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நகர அபிவிருத்தி சபையின் திட்டத்துக்கு அமைவாக உப்புவெளி பிரதேச சபையினர் கன்னியா வெந்நீரூற்று பகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர், மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு 09.07.2010 திகதியிடப்பட்ட கடிதத்தை பின்வரும் விடயங்கள் குறித்து எழுதியிருந்தார்கள்.

(1) கன்னியா வெந்நீரூற்றுப் பகுதிக்கு அயலிலுள்ள காணிகளை உப்பு வெளி பிரதேச சபைக்கு கையளிக்கும்படியும்,

(2) வாகன தரிப்பிட வசதியொன்றை ஏற்படுத்துவதற்காக காணி உரிமையை தமக்கு வழங்க வேண்டும் என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சிற்றுண்டிச்சாலை ஒன்றை அமைக்கவும் இன்னும் பல அபிவிருத் - திகளை உள்ளடக்கி நெக்கொட் திட்டத்தின் கீழ் கேள்விகள் கோரப்பட்டுள்ள போதும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் அக்கடிதத்தில் பிரதேச சபையினர் குறிப்பிட்டிருந்தார்கள்.

உப்புவெளி பிரதேச சபை தவிசாளர் இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். நகர அபிவிருத்திச் சபையினால் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டதாக கூறப்பட்டபோதும் பிரதேச சபையின் அனுமதியின்றி நீரூற்றுக்கு மேலுள்ள பகுதியில் பௌத்த விஹாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதனால் விசேட திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யும் விடயத்தில் சிக்கலும் காலதாமதமும் ஏற்படலாம். இவ்விடயம் தொடர்பில் தாங்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்தது என தவிசாளர் தனது கடிதத்தின் மூலம் கோரியிருந்தார். ஆனால் அன்றைய முதலமைச்சரின் செயலாளரோ, உள்ளூராட்சி ஆணையாளரோ இதுபற்றி எவ்வித கவனமும் செலுத்தவில்லை.

## கன்னியா வெந்நீரூற்றும், கையகப்படுத்தலும்.

05.10.2010 அன்றைய தினம் மாலை கன்னியா வெந்நீரூற்றுக் கிணற்றுப் பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்த நபர்கள் அங்குள்ள உபகரணங்களை உடைத்தெறிந்ததுடன் அறிவித்தல் பலகைகளையும் பிடுங்கி எடுத்து இன்னும் பல சேதங்களை உண்டாக்கினார்கள். இச்சம்பவம் பற்றி அன்றைய தினம் காவலில் நின்ற உப்புவெளி பிரதேச சபையின் காவலாளியால் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதுடன் உப்புவெளி பிரதேச செயலாளருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம்பற்றி வெளியான பத்திரிகைச் செய்தி அப்படியே தரப்படுகிறது. கன்னியா வெந்நீர் ஊற்றின் வரலாற்றுப் பெயர்ப்பலகை திருகோணமலை மாவட்ட அரச அதிபர் அவர்களின் உத்தரவின்பேரில் அகற்றப்பட்டுள்ளது. கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த அரசாங்க அதிபர் இராவணனுடைய வரலாற்று குறிப்புக்களும் கன்னியா வரலாற்று அம்சங்களும் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகையை நீக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து அப்பெயர்ப்பலகை அகற்றப்பட்டுவிட்டது. அத்துடன் வெந்நீர் ஊற்றக்கிணறுகளை பார்வையிட வருவோரிடம் கட்டணம் அறவிடுவதற்கு உப்புவெளி பிரதேச சபைக்கு தடைவிதித்துள்ளார். வெந்நீர் கிணறுகளை பார்வையிட வருவோரிடம் உப்புவெளி பிரதேச சபை இதுவரை 5 ரூபா தொடக்கம் 10 ரூபாவரை அறவிட்டு வந்தது. உப்புவெளி பிரதேச சபையின் கீழ் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இருந்துவந்துள்ள வெந்நீர் கிணறுகளும், அதன் சூழலும் அவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆதாரம் வீரகேசரி 11.10.2010)

இச்சம்பவம் நடைபெற்ற மறுநாளே (6.10.2010) உப்புவெளி பிரதேச சபையினர் தவிசாளர் தங்கவேலாயுதம் காந்தருபன் தலைமையில் கூடி கன்னியா சம்பவம் தொடர்பில் தமது அதிருப்தியை தெரிவித்ததுடன், கண்டனத் தீர்மானமொன்றையும் நிறைவேற்றியிருந்தனர். இவ்வசம்பாவிதங்கள் தொடர்பில் உப்புவெள் பிரதேச சபையின் தவிசாளர் திரு . காந்தரூபன் கிழக்குமாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு பின்வருமாறு முறைப்பாடொன்றை செய்திருந்தார்.


தவிசாளர் தங்கவேலாயுதம் காந்தரூபன் 2006-2010

**5.10. 2010 அன்றைய தினம் மாலை 5.35 மணிபோல் கன்னியாவெந்நீர் ஊற்றுப்பகுதிக்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர்.டீ சில்வா மற்றும் அவருடன் சில அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர். அக்குழுவினரால் பிரதேச சபையால் நிறுவப்பட்டிருந்த ராவணனுக்கும் கன்னியாவுக்குமுள்ள தொடர்பை விளக்கும் வரலாற்றுப் பலகை பிடுங்கியெடுக்கப்பட்டு அக்குழுவால் அவ் விளம்பரப் பலகையும் எடுத்து செல்லப்பட்டிருப்பதுடன் எமது பிரதேச சபை ஊழியரிடமிருந்த சபைக்கு சொந்தமான ஆவணமாகிய பற்று சீட்டுப் புத்தகங்களும் பலாத்காரமாக பறித்தெடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதியானது கடந்த 50 வருடங்களுக்கு மேலாக எமது பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகிறது. அரசாங்க அதிபரின் முறையற்ற மேற்குறித்த செயற்பாடானது எம்மை அவமதிப்பதுடன் உப்புவெளி பிரதேச சபையின் கன்னியாப் பகுதிக்குரிய செயற்பாடுகள் அனைத்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கான உரிய தீர்வினை தாங்கள் பெற்றுத்தராத பட்சத்தில் சபை உறுப்பினர்களாகிய நாங்கள் கிழக்கு மாகாணசபைக்கு முன்பாக உண்ணா விரதம் இருப்போமென முதலமைச்சருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தனர். ஆதாரம். (6.10.2010கடிதம்).


தவிசாளர் இ.விஜேந்திரன்
2011 - 2014

உப்புவெளி பிரதேச சபையினரின் இக்கடிதம் தொடர்பில் அன்றைய கிழக்கு மாகாண முதலமைச்சரோ அல்லது பாராளுமன்ற உறுப்பி-னர்களோ மாகாணசபை உறுப்பினர்களோ சிரத்தைகொள்ளாது பாராமுகமாவே இருந்தனர். அன்றைய கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த திரு. சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆளும் அரசாங்கத்தின் செல்வாக்குப் பெற்ற முதல் அமைச்சராக இருந்துங்கூட இவ்விவகாரம் தொடர்பில் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை கவலைதருகின்ற விடயம் மாத்திரமன்றி வரலாற்று நட்டத்தை ஏற்படுத்தய ஒருவிடயமாகவும் அதுபேசப்படுகிறது.

## தவிசாளர் இ. விஜேந்திரன் (2011 - 2014)

இவ்வசம்பாவிதங்கள் தொடர்பில் எவ்வித கவனமும் எடுக்கப்படாத நிலையில் அடுத்த முயற்சியாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கும் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்துக்கும் உப்புவெளி பிரதேச சபை தவிசாளர் த. காந்தரூபன் தனித்தனியான கடிதங்களை எழுதினார் 09.12.2010 தேதியிட்டு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு அவர் எழுதிய கடிதத்தில்...

**"வெந்நீரூற்றுப் பகுதிக்கு வருகை தரும் மக்களுக்கு உரிய வசதிகளை செய்து கொடுப்பதற்கு ஏதுவாக கன்னியா வெந்நீர் ஊற்றையும் அதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூழவுள்ள காணிகளையும் உப்புவெளி பிரதேச சபைக்கு உரித்தாக்கித் தரும்படி எமது சபையினால் கடந்த காலங்களில் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடக்கப்பட -வில்லை. இந்நிலையில் கடந்த 5.10.2010 தேதியன்று அரசாங்க அதிபரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக உப்புவெளி பிரதேச சபைக்குரிய உரிமம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான தடங்கல்களை நீக்க உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கி வரலாற்றுப் பெருமைமிக்க கன்னியா பிரதேசத்தினை தொடர்ந்து பேணிப்பாதுகாக்கும் பொறுப்பினை எமது பிரதேச சபைக்கு வழங்க ஆவன செய்யும்படி வேண்டுகிறோம்"** என கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேபோன்றே தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுதிய கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டிருந்ததாவது வெந்நீரூற்றுக்கள் உள்ள பகுதிக்காணி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டதற்கான ஆவணங்கள எம்மிடம் உள்ளன. தற்போது வெந்நீரூற்றுப் பிரதேசமானது தொல்பொருள் திணைக்களத்தின் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக எம்மால் அறியக்கூடியதாகவுள்ளது. இப்பிரகடனம் சம்மந்தமாக எதுவித ஆலோச -னையும் எமது பிரதேச சபையிடமோ மக்களிடமோ பெறப்படவில்லை இது கவலை தருகின்ற விடயமாகும் கடந்த 50 வருடகாலமாக எமது சபையின் ஆளுகைக்குள் இருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுப்பிரதேசத்தின் நிர்வாக மேற்பார்வையையும் ஒழுங்குகளையும் மீளவும் எமது சபைக்கு வழங்கும் படியும், கட்டணங்களை அறவீடுசெய்து வந்த பிரதேச சபை தொடர்ந்தும் அறவிடவும் அனுமதியை வழங்குமாறும் உப்புவெளி பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை விடுத்திருந்தார்.

விடுக்கப்பட்ட எந்த கோரிக்கையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப் படாத நிலையில் உப்புவெளி பிரதேச சபையினர் செய்வதறியாது இருந்த நிலையில்தான் தொல்பொருள் திணைக்களம் கன்னியாவை தம்வசப்படுத்திக் கொண்டது. இச்சூழலை தமக்கு சாதகமாக்கிக்கொண்ட வில்கம் விஹாராதிபதி இவ்வளாகப்பகுதிக்குள் விஹாரையொன்றை அமைக்கும் முயற்சியை 2010 ஆண்டு மே மாதமளவில் மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகவே 2009 ஆம் ஆண்டைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான கலாசார இடங்கள், மையப்பகுதிகள், கடல்சார் பிரதேசங்கள், வளங்கொள் நிலங்கள் என்பன, தொல்பொருள் ஆய்வு, வனபரிபாலானம், பௌத்த விகாரை விஸ்தரிப்பு, சுற்றுலாத்துறை, பொருளாதார அபிவிருத்தி, படைத்தள விஸ்தரிப்பு என்ற பெயரால் கையகப்படுத்து நிலை துரிதமாகவும் தீவிரமாகவும் மேற்கொள் ளப்பட்டு வருவது சர்வ சாதாரணமான விடயங்களாக இருக்கின்றன.

எல்லாமே ஒரு சுற்றுவட்டத்தில் இயங்கும் நடவடிக்கைகளாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் ஒரு பக்க விளைவாகவே கன்னியா வும் அதுசார்ந்த பிரச்சினைகளும் நகர்ந்துகொண்டிருக்கின்றன.

கன்னியென்னும் தமிழர்தம் தொன்மை சார்ந்த இடம் கபளீகரம் செய்யப்பட்டது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் பாராளுமன்றத்தில் நீதி அமைச்சின் ஆட்சியுரிமை சட்டத்தின்மீது உரையாற்றும் போது பௌத்த சிங்கள அத்துமீறல்களை கன்னியாவுக்கு வந்து பார்க்குமாறு சர்வதேச சமூகத்திற்கு அழைப்பை விடுத்தபோது பின்வருமாறு கூறினார்.



சரித்திர ரீதியாகவும் தலைமுறை தலைமுறையாகவும் தமிழ் இந்துக்களுக்கு இருந்துவரும் மத கலாசார ரீதியான உரிமைகளை மூர்க்கத்தனமாவும், கொடூரமாகவும் மறுக்கும் வகையில் கன்னியா வெந்நீர ஊற்றுப்பகுதியில் மேற்கொள்ளப்படும் பௌத்த சிங்கள அத்துமீறலை அட்டகாசங்களை நேரடியாக சர்வதேசமே வந்துபாருங்கள். அண்மைக்காலத்தில் கிடைத்த தகவலின்படி, மூன்றுக்கு மேற்பட்ட விடயங்கள் நடந்தேறியுள்ளன. பௌத்த வணக்க ஸ்தலங்கள் ஒரு பௌத்த சிங்களக் குடிமகன் கூட வாழா இடத்தில் புதிதாகத் தோன்றுகின்றன. இதன் நோக்கம் என்ன? ஏன் செய்யப்படுகின்றது? சிங்கள, பௌத்த மக்கள் வாழாத வடக்கு, கிழக்குப் பகுதிகளில் புத்தர் சிலைகள் புதிதாக வைக்கப்படுகின்றன. இது ஏன் நடக்கிறது? மிக உயர்வாக போற்றப்படும் இந்து கலாசார இடங்கள் பலவந்தமாக பறிக்கப்படுகின்றன. நான் ஒரு குறிப்பிட்ட உதாரணத்தை கூற விரும்புகின்றேன். திருகோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில் ஏழு சுடுதண்ணீர்க் கிணறுகளைக் கொண்ட கன்னியா வெந்நீர் ஊற்று உள்ளது. இந்த வெந்நீரூற்றின் சரித்திரத்தை விளக்க விரும்புகிறேன். சிவபெருமானின் தெற்கு உறைவிடமாக தட்ஷணகைலாயம் எனப் புராணங்களில் சுட்டப்படும் திருகோணமலை கோணேஸ்வரர் கோயிலுக்கு பெரும் வரலாற்றுப் பிரமுகரான இராவணன் சென்றான். அங்குள்ள லிங்கத்தில் மனதைப் பறிகொடுத்த அவன் அந்த லிங்கத்தை அப்பாறையிலிருந்து வெட்டியெடுத்து தனது தாயாரின் வணக்கத்துக்காக எடுத்துச் செல்ல விரும்பினான். அப்படி அவன் பாறைகளை வெட்டிய பகுதிகளை இன்றும் கோணேஸ்வரத்திற்கு சென்றால் அதன் வலதுபுறத்தில் காணப்படும் இராவணன் வெட்டாக தரிசிக்க முடியும். இராவணனின் செயலால் கோபமுற்ற சிவன் பாறையைத் தமது காலால் நகர்த்தி அழுத்தவே அவன் அதில் சிக்கிக் கொண்டான். இராவணனின் தாயார் இதைக் கேள்விப்பட்டு, இராவணன் இறந்தான் என நினைத்து அதிர்ச்சியில் உயிரிழந்தார். ஆனால் இராவணன் இறக்கவில்லை. அவனால் சிவலிங்கத்தை எடுத்துச் செல்ல முடியவில்லை. அவ்வளவே அவன் சிவனைப் பிரார்த்தித்து தன்னை மன்னிக்க வேண்டினான். சிவன் மன்னித்தார். இராவணன் தனது தாயாருக்கு 31 ஆவது நாள் கிரியையைச் செய்ய விழைந்தான். அவன் கன்னியா என்று அழைக்கப்படும் இடத்துக்குச் சென்று தனது ஈட்டியால் குத்தி ஏழு இடத்தில் தோண்டினான். இதுவே திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்றுக் கிணறுகளின் தோற்றுவாய்.

அங்கு ஒரு பிள்ளையார் ஆலயம் உள்ளது. பல தலைமுறையாக, பல நூற்றாண்டுகளாக இந்து, தமிழ் மக்கள் தங்களின் நெருங்கிய உறவுகளின் 31 ஆவது நாள் கடமைகளை நிறைவு செய்ய அங்கு செல்வது வழமை.

இன்று புத்தரின் சிலைகள் அங்கு நிறுவப்பட்டுள்ளன. நான் நேரில் போய்ப் பார்த்துள்ளேன். ஒருதடவை இந்த பிரதேச பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நான் கடிதம் எழுதினேன்.அவர் அந்த வேலையை நிறுத்தினார். அந்த நேரத்தில் அங்கு புத்தரின் சிலை எதுவும் இருக்கவில்லை.ஆனால் இப்போது புத்தரின் சில சிலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. புத்த சிலைகள் உள்ள இடத்தின் பக்கமாகவே வெந்நீரூற்றுக்கு போகவேண்டிய வகையில் ஒரு பாதையும் அங்கு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வெந்நீரூற்றை சூழவுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியை சேர்த்து நீங்கள் கையகப்படுத்தியுள்ளீர்கள். வெந்நீரூற்றுக்கான பழைய பாதை மூடப்பட்டு புதிய பாதை அமைக்கப்படுகிறது. இவையெல்லாம் ஏன் நடக்கின்றன? பிள்ளையார் ஆலயம் சீரழிக்கப்பட்டுள்ளது. பிள்ளையார் இப்பொழுது தற்காலிக கொட்டகை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளார். ஆகவே சிலர் தங்களின் சில உள்நோக்கங்களை செயற்படுத்தும் வண்ணத்தில் ஒரு திட்டத்தை ஆக்ரோஷமாக முன்னெடுக்கின்றார்கள் என்பது தெளிவு. இது இந்துக்களின் மத கலாச்சார உரிமைகளை மூர்க்கத்தனமாக, கொடூரமான முறையில் மறுக்கும் போக்காகும். இராவணன் காலத்திலிருந்து ஆற்றிவந்த தமது 31ம் நாள் நிகழ்வுகளை நிறைவேற்றும் உரிமையைக் கூட சுயாதீனமாக, சுதந்திரமாக இன்று செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நான் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளை திருகோணமலையின் கன்னியாவுக்கு நேரடியாக வந்து நிலமைகளை கண்டறியுமாறு வேண்டுகோள் விடுத்து அழைக்கின்றேன்.( ஆதாரம் வீரகேசரி 11. 8 .2014.)

இந்த கெடுபிடிகளிலிருந்த நாம் உணர்ந்து கொள்ளக்கூடியது.....

(1) புனித தலம் என நீண்டகாலமாகவே பூஜிக்கப்பட்டு வந்த கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் பௌத்த விகாரையொன்றின் உதிப்பு, எமது பூர்வீகத்தை கபளீரகம் செய்துவிட்டதாப் பேசப்படுவது.

(2) கன்னியா வளாகத்தின் உரிமம் சம்பந்தமாக எமது அசமந்தப் போக்கினால் நாம் அதனைப் பறிகொடுத்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

(3) கன்னியா வெந்நீர் ஊற்றை வில்கம் விகாரையோடு இணைக்கும் முயற்சியாக, புதிய பாதையொன்று நிர்மாணிக்கப்பட்டு கன்னியா வெந்நீர் ஊற்று அடங்கலாக கிளை விகாரை வில்கம் விகாரையுடன் இணைக்கும் மறைமுக முயற்சியை எம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தொல்பொருளாய்வு, வனபரிபாலனம், சுற்றுலா என்ற மாய மந்திரங்களால் நாம் துரத்தப்பட்டுகொண்டிருக்கிறோம் என்பதே மறைமுகமான உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னியாவின் இன்றைய யதார்த்தம்.


கன்னியா வெந்நீர் ஊற்றின் இன்றைய யதார்த்த நிலை எம்மை பீதிகொள்ள வைக்கிறது என்பதைவிட ஆத்திரத்தை உண்டாக்கி நிற்கின்றது என்பதை அங்கு சென்று வருகின்றவர்கள் உணர முடியும். தொல்பொருள் காவலர்கள் என்ற வகையில் பார்வையாளருக்கான நுழைவுச் சிட்டைகளை வழங்குகிறார்கள். தமிழ் சூழலும் இந்துமதப் பாரம்பரியங்களும் சூழ்ந்திருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுச் சூழல் இன்று மாற்று இனத்தவர் வேற்று மதத்தவரின் அதிகார மையமாக விளங்குகின்றது. விஹாரைக் குருவின் வண ஓதல். புதிதாக அமைக்கப்பட்ட விகாரைக்கான மஹாாவம்ஷ, சூளவம்ச விளக்கங்கள், வியாக்கியானங்கள் தருதல் நுழைவாசலில் நிற்கும் பௌத்த குருமாரின் காட்சிகள் தமிழ் மக்களுக்கு வெப்பத்தையும் வேகத்தையும் மூள வைக்கிறது.

வனவளமும், கமுகம் சோலையும், இலந்தை மரமும், விளாங் காடுகளும் ஓங்கிவளர்ந்து பொலிவையும் அழகையும் தந்த கன்னியாவில் இன்று காணக்கூடாத காட்சிகளும் ஆதிக்கங்களும் நம்மை கவலை கொள்ள வைக்கின்றன.

அண்மையில் எடுக்கப்பட்ட தரவுகளின்படி இந்த மாவட்டத்துக்கே சொந்தமில்லாத இரத்தினபுரி, காலி, குருநாகல், மாத்தறை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களின் 68 கடைகள் கன்னியா நுழைவாசலில். இதில் சுமார் 5 கடைகள் மாத்திரமே தமிழ் பிரஜைகளுக்கு சொந்தமானவை. நாளாந்தம் 500க்கும், 600க்கும் மேற்பட்ட மக்கள் கன்னியா வெந்நீர் ஊற்றைத் தரிசிக்க வருகின்றார்கள். விடுமுறைக் காலத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் பார்வையிட வருகிறார்கள். இதில் 100ற்கும் மேற்பட்டவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள். பெறப்படும் அனைத்து வருமானங்களும் தொல்பொருள் திணைக் களம் என்ற வகையில் நம் மாவட்டத்தைவிட்டு வெளியே செல்கின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தில்கூட, தமிழ் மக்களின் பூர்வீக இடங்கள் விடுவிக்கப்படாமல் உள்ளது என்பதற்கு கன்னியா நல்லதொரு உதாரணம். கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி (29.02.2016) மாவட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கன்னியாவில் தற்போது அமைக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்கள்

செயலகத்தில் கூட்டப்பட்ட மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனார்த்தன் கன்னியா வெந்நீர் ஊற்று உரிமை சம்பந்தமாக ஆவேசமான கேள்வியை எழுப்பினார். சுமார் 50, வருடங்களுக்கு மேலாக உப்புவெளிப் பிரதேச சபையின் நிர்வகிப்பின் கீழ் இருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியை 2010 ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது. அதை மீண்டும் உப்புவெளி பிரதேச சபையிடம் ஒப்படைக்க மாவட்ட இணைப்புக்குழு ஆவன செய்ய வேண்டுமென எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மாவட்ட அரசாங்க அதிபர் புஸ்பகுமார, இது தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயமா - கையால் அவர்களின் அனுமதி பெற வேண்டும். இதற்குரிய ஏற்பாடுகளை மாவட்ட இணைப்புக்குழு முன்னெடுப்பின் எதிர்வரும் ஆண்டு வெந்நீர் ஊற்றுப்பகுதியை, உப்புவெளி பிரதேச சபை வசம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க முடியுமென அரச அதிபர் விளக்கமளித்தார். ஒரு அரச அதிபரால் கையகப்படுத்தப்பட்ட கன்னியா வெந்நீரூற்றுப்பிரதேச பிரச்சனைக்கு இன்னொரு அரசாங்க அதிபரால் தீர்வு காணமுடியாத நல்லாட்சி அரசாங்கத்தின் மீது இன்னும் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியா வெந்நீரூற்றின் இன்றைய நிலை பற்றி பாராளுமன்றத்தில் 7.3. 2017 கேள்வியெழுப்பிய முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய டக்ளஸ் தேவானந்தா 1957 ஆம் ஆண்டுமுதல் உப்புவெளி கிராமோதய சபையால் பராமரிக்கப்பட்டு வந்துள்ள நிலையில் இந்த அரசினால் உப்புவெளி பிரதேச சபையிடம் ஒப்படைப்பதாக வாக்குறுதி வழங்கப்பட்ட கன்னியா வெந்நீர் ஊற்றுப்பிரதேசம் எப்போது ஒப்படைக்கப்படும் என்பதை அறியதத்தர வேண்டும். இந்தப்பகுதியை அண்டியதாக அமையப்பெற்றிருந்த பழமை வாய்ந்த பிள்ளையார் கோவில் இருந்த பகுதிக்குரிய காணியின் உரிமங்கள் சட்ட ரீதியாக தனியார் வசமுள்ள நிலையில் இக்கோவிலை மீள அமைப்பதில் வேறு ஏதும் தடைகள் உள்ளனவா என கேள்வி எழுப்பியிருந்தார் டக்ளஸ்.

பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட மேற்படி கேள்விக்கு உத்தியோக பூர்வமாக பதிலளித்த கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரிவசம் கன்னியாவில் அனுராதபுர கால தொன்மங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள பிள்ளையார் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்ய முற்பட்டபோதே மேற்படி அடையாளங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என மிக மோசமான ஆதாரமற்ற பொய்யொன்றை பதிலாக கூறியிருந்ததார்.

இது தொடர்பில் விஷேட அறிக்கையொன்றைவிடுத்த ஐ.ம.கா. பொதுச்செயலாளர் எஸ். குமரகுருபரன் இவ்வாறு தெரிவித்திருந்தார். இன வாதிகள் வரலாற்றை திரிபு படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். காலகாலமாக கன்னியா வெந்நீர் ஊற்றுஎன்பது இந்துக்கோயிலுடன் கூடிய இந்துக்களின் வரலாற்று அடையாளமாக இருந்தது என்பதை திருகோணமலையின் முதல்வர் தமிழினத்தின் தலைவர் இரா.சம்பந்தன் அறிவார். எனவே கன்னியாவின் இந்து பாரம்பரியத்தைகாக்கும் பொறுப்பு சம்பந்தருடையது என தெரிவித்துள்ளார். (வீரகேசரி.27. மே. 2017.)

•••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம்

**2013** நவம்பர் 26 ஆந் திகதி காலையில் ஒரு இளைஞனிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அந்த அழைப்பு பதட்டத்துடன் கூடிய சந்தோஷத்தைத் தந்தது. "கங்குவேலியிலுள்ள அகத்தியர் ஸ்தாபனத்திற்கு செல்லவிருக்கின்றோம். நீங்களும் வருகிறீர்களா?" என்ற வினாவுடன் மறுமுனைக் குரல் இருந்தது. எங்களை அழைத்த அந்த இளைஞனின் ஆர்வம் எனக்கு ஆச்சரியம் தந்தது. அந்த இளைஞன் வேறு யாருமில்லை ஹேமச்சந்திரா அருண்.

வரலாற்றுப் புகழும், புராண மகிமையும் இலக்கிய பதிவும் பெற்ற கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்துவிட வேண்டுமென்ற அளவற்ற ஆர்வம் காரணமாக அதை யாரால் செய்ய முடியுமோ அவரை அழைத்துக்கொண்டு போய் அவர் கையாலேயே அந்த ஆலயத்தைப் புனரமைத்துவிட வேண்டுமென்ற தீவிரம் அந்த இளைஞனிடம் காணப்பட்டது.

கடந்த முப்பது வருட கால யுத்தக் கொடுமைகளால் அழித்தொழிக் கப்பட்ட ஆலயங்கள் திருகோணமலை மாவட்டத்தில் பலவுள்ளன. அதில் ஒன்றுதான் வரலாற்றுப் புகழும், தலபுராணமும், இலக்கிய புகழும் கொண்ட திருக்கரைசையம்பதியென்று அழைக்கப்படுகின்ற அகத்தியர் ஸ்தாபனமாகும்.

மூதூர் தேர்தல் தொகுதியில் கங்குவேலிக் கிராமத்திலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தொலைவில் கங்கைக் கரையை அண்டிய ஒரு குக்கிராமத்தில் இந்த ஆலயம் அமைந்திருக்கின்றது. அகத்திய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட சிவாலயம் என திருக்கரசை புராணமும் வடமொழிப் புராணங்கள் கூறும் சிவன் - பார்வதி திருமணம் பற்றிய கதையோடும் இவ்வாலயம் புகழ்ந்துரைக் -கப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் அகத்தியர் ஸ்தாபனம் பல சிவன் கோவில்களைக் கொண்ட ஒரு புண்ணியஸ்தலம். அகத்தியர் ஸ்தாபனம், கங்குவேலி சிவன் கோவில், மல்லிகைத்தீவு சிவன் கோவில் என்பன இப்பிரதேசத்திலுள்ள தொண்மை கொண்ட சிவாலயங்கள் ஆகும். இந்த சிவாலயங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை எனக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியர் ஸ்தாபனத்திலிருந்து சுமார் நான்கு கிலோமீற்றர் தொலைவில் மகாவலி கங்கை வந்து விழும் காரணமாக செழுமை கொண்ட நிலப்பரப்புக்கள், வயல்வெளிகள், அடர்ந்த காடுகள் கொண்ட ஒரு அழகான பிரதேசமாக இது விளங்கி வந்துள்ளது. ஆடி அமாவாசை தினத்தில் மூதூர் பிரதேசக் கிராமங்களை சேர்ந்த மக்கள் மற்றும் திருமலை மாவட்ட இந்துக்கள் விரதத்தை அனுஸ்டிக்க ஒன்றுகூடி கங்கையில் நீராடி தமது புனிதக் கடமையை மேற்கொள்வார்கள். அத்தகைய அகத்தியர் ஸ்தாபனம் 1983 ஆம் ஆண்டுக்குப் பின் அயல் கிராமத்தவரின் அட்டூழியங்களால் தொன்மை சான்ற சிலைகளான முருகன் சிலை, நந்தி சிலை திருடப் பட்டதுடன் அகத்தியரால் வழிபட்டதாகக் கூறப்படும் சிவலிங்கம், பலிபீடம், திரிசூல வைரவர் சிலை அமைக்கப் பட்டிருந்த கற்றூண்கள் உடைக்கப்'பட்டுள்ளன. சுமார் 2000 வருடங்களுக்கு மேற்பட்ட தொண்மை கொண்ட வட்டக்கற்கள், ஆலயத் தூண்கள், வடிவக்கற்கள் கூட அயற் கிராமத்தவரால் திருடப்பட்டுள்ளன.

அகத்தியர் ஸ்தாபனத்தைச் சுற்றி சுமார் 150 குடும்பங்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்கள் 1985 ஆம் ஆண்டு அயற் கிராமங்களின் தொந்தரவு, அடாவடித்தனங்கள் காரணமாக இடம்பெயர்ந் தார்கள். பருவ காலங்கள் வருகின்ற போது அகத்தியர் ஸ்தாபனத்தைச் சுற்றி அண்டியுள்ள வயல்களுக்கு சென்று சேனைப் பயிர்ச்செய்கைகளை செய்து வந்தபோதும், 2006 ஆம் ஆண்டுகளுக்குப் பின் இவர்களுக்குத் தமது குடியிருப்புக்களுக்கோ வயல்களுக்கோ சென்றுவர முடியாத நிலை ஏற்பட்டது.

யுத்தம் முடிந்த பின் அகத்தியர் ஸ்தாபன ஆலய பரிபாலன சபையினர் (29.11.2009) அகத்தியர் ஸ்தாபனத்தை பார்வையிட சென்ற போது ஆலயம் துவாம்ஷம் செய்யப்பட்டிருந்ததென பரிபாலன சபைத் தலைவர் வேலுப்பிள்ளை தவராஜா தெரிவித்தார்.

இவையெல்லாம் இந்த சேதங்களின் விளைவுகள் பற்றி ஆலயப் பரிபாலன சபையினரால் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரும் முயற்சியில் (கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி) ஹேமச்சந்திரா அருணின் முன்னெடுப்பினால் 2013 நவம்பர் 20 ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபரை ஆலய பரிபாலன சபை தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுப்பிள்ளை தவராஜா, செயலாளர் ம.மதிவதணன், பொருளாளர் கணேச மூர்த்தி சகிதம் சந்தித்து எடுத்துரைக்கப்பட்டதற்கமைய அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர்.டி.சில்வாவின் உடனடி நடவடிக்கையாக 2013 நவம்பர் 26 ஆம் திகதி அகத்தியர் ஸ்தாபனத்தைப் பார்வையிட சென்றபோது அழைத்துச் செல்லப்பட்ட குழுவில் ஹேமசந்திரா அருண், மூர்த்தி ஐயா (எஸ்.திரு.ஞானசம்பந்த மூர்த்தி) ஊடகவியலாளர்கள் உட்பட அகத்தியர் ஸ்தாபன பரிபாலன சபைத் தலைவர் வே.தவராஜா எனப் பலரும் அடங்கி இருந்தார்கள்.

கங்குவேலி என்னும் தமிழ்க் கிராமத்தைக் கடந்து அழகான வயல்வெளிக்கு நடுவில் அமைந்திருக்கும் கங்குவேலி ஆதிசிவன் ஆலயத்திற்கு நாங்கள் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு ஆலய பரிபாலன சபையினர் எம்மை அன்போடு வரவேற்றார்கள். இவ்விடத்தில் ஒன்றை ஞாபகப்படுத்திக்கொள்வது நன்று. இராணுவ அதிகாரியான அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர்.டி. சில்வா பௌத்தராக இருந்தபோதும் ஆலயத்திற்குள் பயபக்தியோடு நுழைந்து கற்பூரம் ஏற்றி சிவனை வழிபட்ட விதம் எமக்கு ஆச்சரியத்தைத் தந்தது.


இந்த ஆலயத்தில் எமக்கு இரண்டு விதமான ஆன்மீக ஆச்சரியங்கள் காத்துக்கிடந்தன. ஒன்று இந்த ஆலயத்தின் உட்புற வீதியின் மூலஸ்தானப் பக்கத்துக்கு எதிரே (மேற்கே) சிறிய அளவு கொண்ட லிங்கமும் அதைச்சுற்றி ஏனைய தெய்வச் சிலைகளும் காணப்பட்டன. இதைப் பார்த்த அரசாங்க அதிபருக்கு இதன் வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டது. அகத்தியர் ஸ்தாப -னத்தை வழிபட ரிஷி ஒருவர் லிங்கம் ஒன்றைத் தன்னுடன் கொண்டு வந்திருந்தார். (காலம் அளவிடப்பட முடியாத காலம்) அவர் கங்குவேலி ஆதிசிவன் ஆலயத்தில் தங்கியிருந்து விட்டு இவ்விடத்திலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அகத்தியர் ஸ்தாபனத்துக்கு செல்வதற்காக அதிகாலை யில் எழுந்து தான் உடன் கொண்டுவந்த லிங்கத்தைத் தூக்கியுள்ளார். லிங்கம் வைக்கப்பட்ட இடத்திலிருந்து நகரவேயில்லை. "அடம்ப லிங்கம்" என அழைக் -கப்படும் மேற்படி லிங்கம் நூற்றாண்டு கணக்காக அந்த இடத்திலேயே உள்ளது. கனவில் வந்து கூறியதற்கமைய அந்த அடம்பலிங்கம் அவ்விடத்தில் வைத்து ஆயிரக்கணக்கான வருடங்கள் கங்குவேலி மக்களால் வழிபடப்பட்டு வருகின்றது என்ற கர்ண பரம்பரைக் கதையொன்றை எமக்கு ஆலய பரிபாலன சபையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர். கங்குவேலி ஆதிசிவன் ஆலயம் என்று அழைக்கப்படும் வரலாற்றுப் புகழ்கொண்ட இந்த ஆலயத்தைச் சுற்றி கங்குவேலி மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடக் கூடிய விடயம். இதில் கவலை கொள்ளப்பட வேண்டிய விடயமென்னவென்றால், அடிக்கடி இந்தக் கிராமத்தின் மீது விஷமிகளின் இனக் கொடூரம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தது மாத்திரமல்லாமல் இவ்வாலயமும் 1983, 1985,1987, 1990, 1998 ஆகிய காலப்பகுதிகளில் இனவாதிகளால் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில் இவ்வாலயத்தின் மீது ஆகாயக் குண்டுத் தாக்கு -தல்களும் மேற்கொள்ளப்பட்டதென மக்கள் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் இன்னுமொரு தகவலையும் எடுத்துக் கூறினார்கள். **நீலப்பளை** என்னும் கிராமம் பேரின சமூகத்தினால் கையகப்படுத்தப்பட்டாலும் அங்கு எமது எச்சங்கள் என்று சொல்லப்படுகின்ற நீலப்பளை பத்தினி அம்மன் ஆலயமொன்று இருக்கின்றது. இது கங்குவேலி சிவன் ஆலயத்தின் பரிபாலனத்தின் கீழ் இருந்து வந்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் பத்தினி அம்மன் வழிபாடு புகழ் பெற்ற காலத்தில், இவ்வாலயம் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென கூறினார்கள். நாம் கங்குவேலியில் இருந்து அகத்தியர் ஸ்தாபனத்தை நோக்கிப் புறப்பட்டோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குவேலி ஆதிசிவன் ஆலயத்திலிருந்து அகத்தியர் ஸ்தாபனத்தை நோக்கிப் புறப்பட்ட போது அகத்தியர் தளத்துக்குச் செல்வது இவ்வளவு கஷ்டமாக இருக்குமென்று நாங்கள் கொஞ்சங் கூட யோசிக்கவில்லை.


குறிப்பிட்ட ஒரு சந்தியிலிருந்து மகாவலி கங்கை அணைக்கட்டின் ஊடாக மூன்று கிலோ மீட்டர் தூரத்துக்கு மேலாக பயணிக்க வேண்டியிருந்தது. மழை வேறு. மண் அணைக்கட்டாக இருக்கின்றது. அணையினூடாக செல்வது கடினமெனப்பட்டது.

மகாவலி கங்கை அணையால் எமது வாகனம் கவனமாகவும் கஷ்டமாகவும் ஓடிக்கொண்டிருந்த போது ஒரு பக்கம் நிறைந்த காடும், மறுபுறம் பரந்த வயல் வெளிகளும் காணப்பட்டன. வயல்கள் விதைக்கப்பட்டும் இருந்தன. எங்களுடன் வந்த அகத்தியர் தாபன ஆலய பரிபாலன சபைத்தலைவர் வேலுப்பிள்ளை தவராஜா எம்மிடம் கூறினார். இந்த வயல்கள் எல்லாம் (படுகாடு) பூர்வீகமாக தமிழ் மக்களுக்குச் சொந்தமானது. கடந்த இரு தசாப்த காலத்துக்கு மேலாக இப்பகுதிக்கு எம்மால் வரமுடியவில்லை. இப்பொழுது இப் பிரதேசத்திலுள்ள 800 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் தெஹிவத் -தையைச் சேர்ந்த பேரினச் சமூகத்தால் கையாளப்பட்டுள்ளன. இந்த வயல்வெளிக்கு அருகிலுள்ள கிராமம் நீலாப்பளை. அங்கும் பேரின சமூகமே வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், அதற்கு அடுத்த கிராமமான தெஹிவத்தைக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் குழுவொன்று அடாவடித் தனமாக வந்து தமிழ் விவசாயிகளுக்கு சொந்தமான காணிகளை கையகப்படுத்தியிருக்கி -றார்கள். இந்த அடாவடித்தனங்களுக்கு தலைமை தாங்குபவராக ஒரு பௌத்த குருவே காணப்படுகிறார். கடந்த ஒரு மாத காலத்துக்கு முன் கங்குவேலி வாசிகள் ஏழு பேர் 'படுகாடு' என்று அழைக்கப்படும் தமது வயல்களைப் பார்க்க வந்த போது இந்தக் கும்பலால் கடுமையாகத்தாக்கப்பட்டு, அதில் நால்வர் கடுங் காயங்களுக்கு ஆளாகினார்கள். பூர்வீகமான சொந்தக் காணிகள் இருந்தும் அந்தக் காணிகளுக்கு வரமுடியவில்லை. பயிர் செய்ய முடியவில்லையென தனது கவலையை தெரிவித்தார் தவராஜா.

அகத்தியர் ஸ்தாபனத்திற்கு செல்வதற்கு சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு முன்பாக இடிபாடுடைய ஒரு ஆலயத்தைப் பார்த்தோம். தென்னங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிடுகால் வேயப்பட்ட ஒரு ஓலைக்கொட்டில் சரிந்து போய்க்கிடந்தது. நாங்கள் தவராஜாவிடம் வினாவினோம், அவரோ புதுக் கதைபோல் இன்னு மொரு விளக்கத்தை தந்தார். இந்த ஆலயம் 'மகாவலி அணைக்கட்டு தீர்த்த விநாயகர்' என்று அழைக்கப்படும். இதனது வரலாறும் தொன்மை கொண்டது. அகத்தியர் ஸ்தாபன சிவன் தீர்த்தமாட வரும்போது இதில் தங்கிச் செல்லும் ஒரு மரபுண்டு. இதை புனருத்தாரணம் செய்வதற்காக கொட்டிலைப் போட்டோம். யானைகளின் அட்டகாசத்தால் கொட்டில் சரிந்து விட்டது. இப்பொழுது இவ் ஆலய எல்லைக்குள் போக நாங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. வனபரிபாலன இலாகா இப் பிரதேசத்தைப் பிடித்து எல்லைக்கல் போட்டுவிட்டது. அதனால் தான் எங்களால் போக முடியவில்லை. இவ்வாறு பல பிரதேசங்களில் எல்லைக் கல் வன பாரிபாலனப் பகுதியால் போடப்பட்டு பாரம்பரியமான நிலங்கள் எமது மக்களுக்கு இல்லாது ஆக்கப்பட்டுவிட்டது எனக் கவலையோடு தெரிவித்தார்.

நாங்கள் அகத்தியர் வளாகத்துக்குள் நுழைந்தபோது பல அதிச -யங்கள் எங்களை வரவேற்றன. பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட அந்த ஆலயத்தின் மூலஸ்தான சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. (லிங்கம் இருந்தும் பீடம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னைய தொன்மையானது). அகத்தியர் தாபனத்துக்கென அமைக்கப்பட்ட மண்டபம் துவாம்சம் செய்யப் -பட்டிருந்தது. ஆதிமூலமாக இருந்த இடத்திலிருந்து பெயர்த்தெடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடைக்கப்பட்ட லிங்கம்

சிவலிங்கம் பீடத்துடன் வேறு ஓர் இடத்தில் வைக்கப்பட்டி ருந்தது. பிரதான லிங்கம் நான்குக்கு மேற்பட்ட துண்டுகளாக உடைக்கப்பட்டி -ருந்தது.

சிவலிங்கத்தையும் லிங்க பீடத்தையும் பார்க்க வந்த அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரி.ரி. ஆர். டி. சில்வா உடைக்கப்பட்டிருந்த லிங்கத்தின் ஓரிரு துண்டுகள் காணாமல் போயிருந்ததைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். அரச அதிபருக்கு ஆலய நிர்வாக சபையினர் ஒரு விடயத்தை தெரிவித்தார்கள். இந்த ஆலயத்தின் மூலஸ்தானம் இருந்த இடம் தற்பொழுது கொட்டில் அமைக்கப்பட்டிருக்கின்ற இடம் என சுட்டிக்காட்டியதுடன் மூலஸ்தானம் அமைந்த இடத்திலிருந்து இந்த பீடத்தை பெயர்ந்தெடுப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டோம். மிகவும் வித்தியாசமான முறையில் லிங்க பீடம் காணப் படுகிறது. வேறு பிரசித்திபெற்ற எந்த ஆலயங்களிலும் காணப்படாத வகையில் இதன் லிங்க பீடம் (ஆவுடையார்) அமைந்திருக்கிறது என ஆலய பரிபாலன சபையினர் விவரித்தனர். நாங்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்தோம். லிங்க பீடம் (ஆவுடையார்) லிங்கம் சாதாரணமான முறையிலேயே வைக்கப்படுவது வழக்கம். ஆனால், இங்கே நிலத்தின் கீழ் பாகத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆவுடையார்


(ஆட்டுக்கல்போல்) பீடத்தில் பொருத்தப்பட்டிருக்கிறது என அவர்கள் விவரித்தார்கள். அவ்வாறு பொருத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினால்தான் இந்த ஆலயத்தின் பெறுமதிமிக்க சிலைகளையும் கற்றூண்களையும் சந்திரவட்டக் கற்களையும் திருட வந்தவர்கள் (லிங்கத்தைப் பெயர்த் தெடுக்க முடியாத நிலையில்) ஆத்திரம் கொண்டு உடைத்து சின்னாபின்னப் படுத்தியுள்ளனர் என கவலையுடன் தெரிவித்தனர். ஆனால், திருட வந்தவர்கள் இங்கிருந்த காலத்தால் காணமுடியாத முருகன் சிலை, நந்தி சிலை போன்றவற்றை திருடிச் சென்றுவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

2009 ஆண்டு டிசம்பர் மாதம் திருக்கரைசையம்பதியுறை சிவலிங்கத் தலை சீவப்பட்டும் ஆலயம் துவாம்ஷம் செய்யப்பட்டு முருகன் உள்ளிட்ட சிலைகள் களவாடப்பட்டும் இருந்தன. சில சிலைகள் உடைக்கப்பட்டு இருந்ததுடன் பழமைவாய்ந்த கட்டிடமும் தகர்க்கப்பட்டி ருப்பதைக் கண்டு அதிர்ந்து போயுள்ளனர் கங்குவேலி மக்கள்.

அகத்திய மாமுனி தென்கையிலையான திருக்கரைசையம்பதி வந்து சிவனை பிரதிஷ்டை செய்து வழிபட்டு சிவனின் திருமணக் காட்சியைக் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயம் இதுவாகும். ஆடி அமாவாசை தினத்தில் கரைசை சிவனார் அருகிலுள்ள மகாவலி கங்கை கிளை நதியில் தீர்த்தம் ஆட எழுந்தருள்வார். கொட்டியாரப் பற்று என அழைக்கப்படும் மூதூர் மற்றும் ஈச்சிலம்பற்று பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கங்கைக் கரையில் கூடி தீர்த்தம் ஆடுவர்.

இத்தனை சிறப்புமிக்க அகத்திய மாமுனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவன் ஆலயமும் அதனைச் சூழவுள்ள உலகின் இரண்டாவது மருத்துவப் பல்கலைக்கழகமும் அமையப்பெற்றதுடன் சிவபக்தரான அகத்தியர் மருத்துவம் முதலானவற்றை தமது சீடர்களுக்கு இங்கு வைத்து போதித்ததாகவும் வரலாறு உண்டு. இத்தகைய சிறப்புமிக்க ஸ்தாபனத்தின் பூர்வீகத்தை அழிக்கும் முயற்சியாகவே சிலைகள் சின்னாபின்னப்படுத்தப் பட்டு, தொன்மைமிகு சிலைகள் திருடப்பட்டு, ஆதிகோவில் அழிக்கப்பட் - டுள்ளது. (ஆதாரம் : வீரகேசரி (13.12.2009)

அகத்தியர் ஸ்தாபனத்தின் லிங்க பீடத்துக்கு முன்னால் சதுர வடிவில் அமைந்த கல்லொன்று நிலத்தில் பதிக்கப்பட்டிருந்தது. அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊன்றிக் கவனித்தோம். அந்த சதுரக்கல்லில் இரு பாதங்கள் மிகத் தெளிவாகத் தெரிந்தன. இது அகத்திய முனிவரின் திருவடிகள் என ஆலய பரிபாலன சபையினர் எமக்குத் தெளிவுபடுத்தினர். அதற்கு முன்புறமாக நாம் அழைத்து வரப்பட்டோம். அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தின் வாசலின் உட்புறமாக நீளமான தூண் வடிவில் திரிசூலம் பதிக்கப்பட்ட வைரவர் காவல் கல் ஒன்று காணப்பட்டது. திரிசூலம் மிக தெளிவாகத் தெரியும் வண்ணம் அந்தக் கல்லில் பதிக்கப்பட்டிருந்தது. அதன் பின் முன்வாசலுக்கு வந்தோம். அந்த வாசலில் சந்திரவட்ட வடிவில் ஒரு கல்லிருந்தது. அதை சந்திரவட்டக் கல்லென்று குறிப்பிட்டார்கள். இக்கல் போல் பல கற்கள் இருந்தன. எல்லாம் களவாடப்பட்டுவிட்டன என்று தெரிவித்தனர்.

அகத்தியர் ஸ்தாபனத்தின் சிவலிங்கம் அமைந்திருந்த அருகிலுள்ள கொட்டிலுக்கு அழைத்துச்சென்று இதுதான் ஆதியிலிருந்த மூலஸ்தானம் என்று குறிப்பிட்டார்கள். போடப்பட்டிருந்த கொட்டில் சரிந் திருந்தது. யானைகளின் அட்டகாசத்தால் கொட்டகை சிதைக்கப்பட்டுவிட்டது என்று கூறினார்கள். அரசாங்க அதிபரும் மூதறிஞர் மூர்த்தி ஐயாவும் ஆதிகால மூலஸ்தானம் இருந்த இடமெனக் குறிப்பிட்ட இடத்திற்குள் நுழைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் ஆச்சரியப்படக்கூடிய விடயமென்னவென்றால் மூலஸ்தானம் ஏலவே இருந்த இடம் எனக் காட்டப்பட்ட இடத்துக்குள் நுழைந்த அரசாங்க அதிபர் நாலு பக்க திசைகளையும் நோட்டமிட்டார். மிகக் கூர்மையாகத் தரையைப் பார்த்தார். ஒரு சில விநாடிக்குள் இந்த இடத்தில் தான் ஆதி மூலஸ்தானம் இருக்க வேண்டுமென சுட்டிக்காட்டியபோது அங்கு நின்றவர்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். இவ்வளவு ஞானபூர்வமாக எப்படி இவரால் அடையாளம் காண முடிந்தது மூலஸ்தானத்தையென நாம் வியப்படைந்து நின்றோம். அரசாங்க அதிபரோ. ஆலய பரிபாலன சபையினரை அழைத்து கற்பூரத்தை ஏற்றி வழிபட்டார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் வேலுப்பிள்ளை தவராஜாவிடம் வினவினோம். "நீங்கள் ஏன் ஆதியிலிருந்த மூலஸ்தான இடத்திலிருந்து லிங்கத்தைப் பெயர்த்தெடுத்து இன்னுமொரு இடத்தில் மண்டபம் கட்டி வைத்தீர்கள்" எனக் கேட்டோம். அவர் எமக்களித்த பதில், "ஞானிகளும் தவசிகளும் இந்தக் கோயிலை நோக்கி வந்து தவமிருப்பது வழக்கம். தியானம் செய்யக்கூட வருவார்கள். அவர்கள் தியானிப்பதற்காகவும் தவம் செய்வதற்கு ஏற்றதாகவும் மண்டபத்தைக் கட்டினோம். ஏற்கனவே ஆதி மூலஸ்தானம் இருந்த இடம் சிதைந்து போய்விட்டது அதற்கு இன்னுமொரு காரணமென விளக்கமளித்தார். அவரின் கருத்துப்படி அகத்தியர் ஸ்தாபனத்தை நோக்கி பலர் வந்து போவதாகத் தெரிய வந்தது. குறிப்பாக ஞானநிலை, தவநிலை வேண்டுவோர் இவ்வாறு வந்து போவதாக அறிய முடிந்தது.

இந்த இடைவேளையின் போது ஆலய பரிபாலன சபையினரால் நான் தனியாக அழைக்கப்பட்டேன். ஆலயம் அமைந்திருப்பதற்கு மேற்குப் புறமாக சுமார் 80 மீற்றர் தூரத்துக்கு அப்பால் நான் அழைத்துச் செல்லப்பட்டேன். போகும் வழியெல்லாம் கடையப்பட்ட கற்றூண்கள், பெரிய பெரிய கற்றூண்கள், சிறிய சிறிய கற்றூண்கள், இருக்கைகள் , வட்டக்கற்கள், பெரிய வட்ட இருக்கை. உழுந்து அரைக்கும் திரிகை போன்ற கற்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக காணப்பட்டன.

இதைவிட சிவாலயமொன்றை ஞாபகப்படுத்தும் வகையில் சைவ சின்னங்கள் பல காணப்பட்டன. இவை பல நூற்றாண்டுகளைக் கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கள், சின்னங்கள் என்பதை என்னால் ஊகிக்க முடிந்ததே தவிர அனுமானிக்க முடியவில்லை.

சின்னங்கள் பரந்து கிடந்த இடம் ஒரு சோலையாகக் காணப்பட்டது. அதைச் சுற்றி ஏராளமான வில்வ மரங்கள் செழுமை குன்றி காணப்பட்டன. என்னை அழைத்துச் சென்ற ஆலய பரிபாலன சபையினர் "இந்த இடந்தான் அகத்திய முனிவரின் சோலையோடு கூடிய ஆச்சிரமம் அமைந்திருந்த இடம். ஆச்சிரமம் மாத்திரமல்ல, அகத்திய முனிவர் தமது சீடர்களுக்குப் பாடம் புகட்டிய பல்கலைக்கழக வளாகம் அமைந்த இடம். இந்த வட்டக்கல்லில் அமர்ந்து கொண்டு முன்னால் அமைந்திருக்கும் வட்டவடிவமான கல்லில் மாணவர் அமர்ந்திருக்க சீடர்களுக்கு போதனை செய்துள்ளார்".

உலகத்தின் இரண்டாவது பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட இடம் இதுவாக இருக்க வேண்டுமெனவும் ஒருவர் கூறினார் .

அகத்தியர் ஈழத்தில் பல்லாண்டுகள் வாழ்ந்துள்ளார் என்பதை பல நூல்களிலிருந்து அறிய முடிகிறது. அதுமட்டுமன்றி, திருமங்கலாயச் சிவன் கோவில், அகத்தியர் ஸ்தாபனம், திருக்கரசை சிவன் கோவில், அகத்தியர் ஸ்தாபனத்துடன் இணைந்த வைத்தியசாலை, திருகோணமலை வில்லூன்றி விநாயகர், பெரிய குளம் ஆகியவற்றை சான்றாகக் கொள்ளலாம். (ஆதாரம் : பேரறிஞர் க.பாலசுப்பிரமணியம் முத்தூர் அகத்தியர்)

மகாவலி கங்கைவெளியில் அகத்தியர் ஸ்தாபனத்தின் இடிபாடுகள் கருங் கல்லில் பொறிக்கப்பட்ட அகத்தியரின் பாதச் சுவடுகள், கற்றூண்கள், படிக்கட்டுகள், செங்கற்கள் , வேலைப்பாடுகள் அமைந்த கருந் தூண்கள் என்பனவற்றுடன் அகத்திய லிங்கம் அமைந்துள்ள கோயில் தலமடு ஆகியவை சிற்றாற்றின் கரையிலிருந்து மகாவலி கங்கைக்கரைவரை சுமார் 6 கிலோமீற்றர் தூரம் இருந்துள்ளது எனக் கூறப்படுகிறது.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் 25 அடி தூரம் வரை கருங்கற்களால் அமைந்த பாதை காணப்பட்டது. பாதையின் முடிவில் அகத்தியலிங்கம் இருந்துள்ள இடத்தில் நின்றே அரசாங்க அதிபர் கற்பூரம் ஏற்றி வழிபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியர் தினந்தோறும் அகத்தியலிங்கத்தில் சிவபூசை செய்து வழிபட்டு வந்துள்ளார். சிவபூஜையை முடித்துக்கொண்டு தான் அமைத்த மருத்துவப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு போதனை செய்து வந்துள்ளார். இந்த பல்கலைக்கழகத்திலிருந்து பலவேறு கலைகளை அவர் போதித்து வந்திருப்பதுடன் அகத்தியர் ஸ்தாபனம் பல்கலைகளையும் போதித்து வந்த ஒரு கல்வி நிறுவனமாக இருந்திருக்க வேண்டுமெனவும் ஊகிக்க முடிகிறது. மருத்துவ போதனைகளை தனது சீடர்களுக்கு போதித்து வந்துள்ளமைக்கு ஆதாரமாக அம்மி, குளவிகள் போன்ற கருவிகளையே நாம் கண்டதாக குறிப்பிட்டோம். திருக்கரசை புராணம் அகத்தியர் ஸ்தாபனத்தை கல்வி நிறுவனம் என்றே எடுத்துக் காட்டுகின்றது. அதனைப் பின்வரும் செய்யுளால் அறியலாம்.

**"இந்த வண்ண அநந்த காலம் இயன்ற நன்மறை யாகமம் புந்தி செய்து மடந்தை பங்குள புனிதர் பூசனை பண்ணியே"**

எனக் கூறுகிறது. ஆலயத்தின் இடிபாடுகளைப் பார்த்த அரசாங்க அதிபர் ஆலய பரிபாலன சபையினரிடம் "ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பியுங்கள். அதற்கு வேண்டிய உதவிகளை செய்கிறேன்" என்று கூறினார். இதேவேளை ஆலயத்தைச் சுற்றி வேலி போடப் பட்டிருந்தது. அதைப் பரிபாலன சபையினர் அரசாங்க அதிபரிடம் சுட்டிக் காட்டிய போது அந்த வேலியை அகற்றிவிட்டு ஆலயத்தைத் துப்பரவு செய்யுங்கள் என்று அதிபர் குறிப்பிட்டதுடன் அங்கிருந்த ஒரு கிணற்றை பரிபாலன சபையினர் சுட்டிக்காட்ட அதையும் பார்வையிட்டார்.

இந்தக் கிணற்றுக்கு அப்படியென்ன விசேடம் இருக்க முடியுமென நாம் உதாசீனமாக நடந்துகொண்டோம். ஆனால் அரச அதிபரும் மூர்த்தி ஐயாவும் பரிபாலன சபையினரும் நீண்ட நேரமாக அந்தக் கிணற்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அருகே சென்ற போது பரிபாலன சபையினர் ஒரு விடயத்தை ஆச்சரியமாக குறிப்பிட்டார்கள். இந்தக் கிணற்றில் நீர் எடுத்து சமைப்போமாக இருந்தால் ஐந்து நாட்களுக்கு மேல் அந்த உணவு கெடாமல் இருக்கிறது. இது என்ன ஆச்சரியமென்று தெரியவில்லை என்றார்கள். அத்துடன் இன்னுமொரு குறிப்பையும் சொன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




னார்கள். இந்த நீரை அள்ளிக்கொண்டு போய் திருகோணமலை நகரிலும் பரீட்சித்துப் பார்த்திருக்கிறோம். "நீர் கெடா நிலையே காணப்பட்டது" எனக் குறிப்பிட்டார்கள். அங்கிருந்த எல்லோரும் நீரை ஆவலாக அருந்திப் பார்த்தோம்.

அகத்தியர் ஸ்தாபனத்தின் வாசலில் ஒரு வில்வமரம் காணப்பட்டது. அதைச்சுற்றி புற்று வளர்ந்திருந்தது. மரத்தை அண்ணார்ந்து பார்த்தோம். குருவிச்சைக் கொடி மரம் முழுவதும் படர்ந்திருந்தது. அரசாங்க அதிபர் ஆலய பரிபாலன சபையினரிடம் குறிப்பிட்டார். "இந்த வில்வமரம் தெய்வீக மரம். இதன்மேல் குருவிச்சைக் கொடி படர்ந்திருப்பது அபசகுனம். வெட்டிவிடுங்கள்" எனக் கூறிக்கொண்டிருந்தார் அரசாங்க அதிபர். அங்கு வந்திருந்த இராணுவ வீரர் ஒருவர் தனது கத்தியினால் கொடியை அறுத்தெடுத்துக் கொண்டார். அகத்தியர் ஸ்தாபனம் ஆரம்ப காலங்களில் இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டிருக்கிறது. பல சமயங்களில் மகாவலி கங்கை பெருக்கெடுத்து இவ்வாலயத்தைச் சிதைத்துள்ளது. இருப்பினும் இங்கிருந்த அல்லது வாழ்ந்த மக்கள் காலந்தோறும் ஆலயத்தைப் பராமரித்து வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பல காலங்களில் ஆலயத்தைப் பராமரித்து வந்தபோதிலும் இயற்கை அழித்தவை போக எஞ்சியிருப்பவை வேறு காரணங்களினாலும் அழிக்கப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது. இந்த ஸ்தாபனத்தை சுற்றி பல்வேறு மரபுவழிபட்ட குடிகள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு பல்வேறு அடையாளங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அழகான வயல்வெளிகள், அடர்ந்த காடுகள் அவற்றை இணைக்கும் பாதைகள் பழமைகொண்ட குடிசைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் பல்வேறு அடையாளங்கள் எம்மைப் பிரமிக்க வைத்தது.

அகத்தியர் ஸ்தாபனமென்பது ஆலயமும் மருத்துவக் கல்வி நிறுவனமும் மூலிகைத் தோட்டமும், நோயாளர்களுக்கு வைத்தியம் செய்யும் மருத்துவ இடமாகவும் ஞானிகளும் ரிஷிகளும் வந்து தியானிக்கக்கூடிய கங்கைக்கரையும் அடர்ந்த சோலைகளும் கொண்ட ஒரு பெரிய வளாகமாக இருக்கவேண்டுமென எமது கற்பனையில் ஊறிக்கொண்டிருக்கிறது. அரசாங்க அதிபரும் நாமும் திரும்புவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தோம். அந்த நாள் 2013 நவம்வர் 26 ஆக இருந்தமை எங்களுக்கு பல்வேறு ஞாபகங்களை ஊட்டிக்கொண்டிருந்தது. அங்கு வைக்கப்பட்டிருந்த ஆலமரக் கன்று ஒன்றை வருகை தந்தமைக்கு ஞாபகார்த்தமாக நடவேண்டுமென எல்லோரும் பிரியப்பட்டார்கள். கன்று நடுவதற்குரிய இடத்தைத் தெரிவதில் அரசாங்க அதிபர் ஆர்வம் காட்டினார். திசையைப் பார்த்தார். கோயிலைப் பார்த்தார். சோலையாக இருந்த இடத்தை நோட்டம் விட்டார். பின்பு தானே இடத்தைத் தெரிவுசெய்து ஆலம்மரக் கன்றை நட்டு வைத்தார். அப்பொழுது “ஆல்போல் தளைத்து” என்ற பழமொழி ஞாபகத்துக்கு வந்தது. மீண்டும் திரும்பினோம்.

வரலாற்று சிறப்புமிக்கதும் அகத்திய மாமுனிவர் பிரதிஷ்டை செய்து வழிபட்ட சிவலிங்கப் பெருமானை மூலமூர்த்தியாகக் கொண்டதும் அகத்திய மாமுனிவருக்கு திருமணக் கோலம் காட்டியதும் ஈழத்திலே தோன்றிய திருக்கரசைப் புராணத்தை தலபுராணமாகக் கொண்டதும் உலகிலேயே “அகத்தியர் ஸ்தாபனம்” எனும் நாமத்தோடும் விளங்கும் கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனத்தின் ஆலய நிர்மாணப்பணி மேற்கொள்ளப்பட்டு 2016ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் நாள் மஹாகும்பாபிஷேகம் நடந்தேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஹாகும்பாபிஷேக நிகழ்வு

கன்னியா வெந்நீரூற்றின் அதிகார கையகப்படுத்தலுக்குக் காரணமாக இருந்த அரசாங்க அதிபர் ரி.ரி.ஆர்.டி.சில்வா அவர்கள் தனது பரிகார முன்னெடுப்பாக இவ்வாலயத்தை புனரமைக்கவேண்டுமென்ற ஆசீர்வதிப்பானது நிறைவேறியமை மகிழ்வு தரும் விடயமாகும்.

பட்டினமும் சூழலும் பிரதேச சபை
பொது நூலகம்
உப்புவெளி
1.07.46

Uppuveli Public Library
0010746

**இராவணதேசம்**
திருகோணமலை மன்னரின்
வரலாற்றுப் பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14/02/2022
~~1698~~
12/04/2023
( 800)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமலை நவம்

திருமலை நவம் திருகோணமலை மண்ணின் கலை இலக்கியத் துறையில் மட்டு மல்ல, கல்வித் துறையிலும் மிகவும் பிரபல்யமான பெயர். ஆசிரியர் - அதிபர் என்ற தொழில் சார் சேவைகளுக்கு அப்பால் திருகோணமலை மண்ணின் கலை இலக்கிய வளர்ச்சிக்கும் ஈழத்து இலக்கியப் பரப்பில் அதன் பங்களிப்பை முன்னிறுத்தி செயற்படுவதிலும் நீண்ட காலமாக உழைத்து வருபவர்.

கவிஞர், சிறுகதையாளர், விமர்சகர், நாடக நெறியாளர், ஆய்வாளர். ஊடகவியலாளர் என பன்முக ஆளுமை கொண்ட ஒரு கலைஞராக விளங்குவதால் தான் சார்ந்த அத்தனை துறையிலும் தனது தேடலை விசாலித்துள்ளார். முப்பது வருட கால ஆய்வின் மூலம் திருகோணமலை மண்ணின் கலை இலக்கியம் தொடர்பான நூலை வெளியிட்ட திருமலை நவத்தின் இரண்டாவது ஆய்வு நூல் இதுவாகும்.

வரலாற்றை பேசுதலில் ஒரு வகையினதான தொன்மங் களுக்கூடாக பயணித்தல் புராண இதிகாசங்களுக்கூடாக வரலாற்றை பதிதல் என்று நிலைகளுடன் சேர்த்து வரலாற்று தகவல்களையும் ஆதார பூர்வமாக கொண்டு இவ்வாய்வைச் செய்துள்ளார்.

இந்த ஆய்வு நூலை எல்லோராலும் எழுதி விட முடியாது. இந்த மண்ணின் மணத்தையே இரத்தமும் சதை யுமாக ஏன் உயிர் மூச்சாகவும் கொண்ட ஒருவரால் தான் முடியும். அந்த வகையில் தன் பெயரோடு மண்ணின் பெயரையும் இணைத்துக் கொண்ட ஓர் உன்னத படைப்பாளி திருமலை நவத்தால் மட்டுமே இது முடிந்திருக்கிறது.

**கவிஞர். தாகம் - வி. மைக்கல் கொலின் BBA**

**(ஆசிரியர் - மகுடம்)**

9 789554 044005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org